
திருமந்திரக் கதைகள் - 3
கே.வி.குணசேகர
P. Yalini

## என்னுரை

திருமூலர் திருமந்திரத்தில் உலகம், உயிர், உடல் பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறார். கடவுள் வணக்கம், குடும்ப உறவு அதை எவ்வாறு வைத்தல் வேண்டும். உடலிலுள்ள உள்ளுறுப்புக்களின் தொகை, அவற்றின் தொழிற்பாடு, அவற்றின் தோற்றம், அவை தொழிற்படும் முறை, நோய்கள், நோய்கள் ஏற்படுவது எப்படி, அதைத் தீர்ப்பது எப்படி, நன்மக்களைப் பெறுதல், மக்களின் முன்னேற்றம், சிவன் இருக்கும் இடங்கள், சிவனும் சிவையும் கூடியிருப்பதால் ஏற்படும் நன்மைகள், காலநிலை மாற்றம் என்ற பல விடயங்களை இதில் அடக்கியுள்ளார். இதனைக் கணனி மயப்படுத்தித் தந்தும், படங்களை வடிவமைத்தும் தந்த செல்வி. ப.யாழினிக்கு நன்றிகள். மீண்டும் நாலாவது தந்திரத்துடன் சந்திப்போம்.

திருமந்திரக் கதைகள் - 03

மூன்றாம் தந்திரம்

வீராகமம்

1. அட்டாங்க யோகம்

**531.** **உரைத்தன வற்கரி ஒன்று மூடிய**
**நிரைத்த இராசி நிறைமுறை எண்ணிப்**
**பிரைச்சதம் எட்டும் பேசியே நந்தி**
**நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே.**

“சிவனடியார்களே, மூச்சை எடுத்தலும், விடுத்தலும் தடுத்தலுமாகிய உயிர்ப்புப் பயிற்சியுடையவர்கள் ஏனையோர் போலன்றி பதினாறையும் உள்ளிழுக்கப் பழகி விடுவர். ஏனையோர் பதினாறை விடுத்துப் பன்னிரண்டையே உள்ளிழுப்பர். அதன் பின் பயிற்சியுடையவர்கள் அதன் விடுத்தலும் எடுத்தலுமின்றி தடுத்தலாகவே நிற்பர். எண்பெரும் யோக முறைகளையும் எடுத்தியம்பிய நந்தி தீரகற்றலும் நன்நெறியாற்றலும் ஆகிய செய்முறைகளை அறநெறியின் படி வகுத்தருளியுள்ளான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**532. செய்த இயம நியமஞ் சமாதிசென்**
**றுய்யப் பராசக்தி உத்தர பூருவ**

**மெய்த கவச நியாசங்கள் முத்திரை**

**எய்த வுரைசெய்வன் இந்நிலை தானே.**

‘‘சிவனடியார்களே, திருவருளால் தீயவற்றை அகற்றியும் நன்மைகளைச் செய்தும் வருவோர் நொசிப்பாகிய சமாதி நிலையை அடைவர். திருவருள் உத்தரமாகிய பின்பும் பூவுருவமாகு முன்பும் நடப்பாற்றல் வனப்பாற்றலாக மாறுதல் வேண்டும். அப்பொழுது ‘சிவயநம’ என நின்றது. சிவயசிவ என வரும் உறுப்புத் தொழுதற்குரிய திருமுறைத் திருப்பதிகம் திருவங்க மாலைத் திருப்பதிகமாகும்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**533. அந்நெறி இந்நெறி என்னாதட் டாங்கத்**

**தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்**

**நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்**

**புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.**

‘‘சிவனடியார்களே, அந்நெறி இந்நெறி என்று தடுமாறாது அகத்தவமாகிய எட்டு உறுப்புகள் கொண்ட யோகநெறியில் சென்று சமாதியாகிய நொசிப்பின் கண் நிலைபெற்று நில்லுங்கள். இத்தகைய நன்நெறிக்கண் செல்பவர்களுக்கு ஞானமாகிய திருவடியுணர்வு எளிதில் கிடைக்கும். அத்தகையோன் ஊனடைந்த உடம்பில் புகுவர். அந்நெறி இந்நெறியென்று எண்ணாது அகத்துவமாகிய யோகத்திற்கு வேறுபட்ட வழிகளைப் பயன் தருவன என்று கருதாது நல்ல அகத்துவ நெறியில் நில்லுங்கள்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**534. இயம நியமமே எண்ணிலா ஆதனம்**

**நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரஞ்**

**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**

**அயமுறும் அட்டாங்க மாவது மாமே.**

‘‘சிவனடியார்களே, தீயவற்றை அகற்றல், நல்லவற்றைச் செய்தல், அளவிலா இருக்கை, வளி நிலை, தொகை நிலை, பொன்றை நிலை, நினைத்தல், நொசிப்பு என்னும் வழிமுறைத் தவ நிலை பயிலுதல் வேண்டும். இயமம் என்பது தீயவற்றை அகற்றுதல். நியமம் என்பது நல்லவற்றைச் செய்தல். ஆதனம் என்பது இருக்கை. பிராணாயாமம் என்பது வழிநிலைஇ பிரத்தியாகாரம் தொகை நிலை. தாரணை பொறை நிலை. திப்பானம் நினைத்தல். சமாதி நொசிப்பு’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2. இயமம்
தீத கற்றல்.

**535. எழுந்து நீர்பெய்யினும் எட்டுத் திசையுஞ்**

**செழுந்த ணியமங்கள் செய்மினென் றண்ணல்**

**கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே**

**அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.**

‘‘சிவனடியார்களே, திருவருளை அள்ளி வழங்குகின்ற பவளக்குன்றைப் போன்ற குளிர்ந்த சடையை உடையவர் சிவபெருமான். அவன் ஆலமர் செல்வனாக வீற்றிருக்கும் போது தனது திருவடிகளை மறக்காது தொழுத சனகர், சனந்தவர், சனாதவர், சனற்குமாரர் ஆகிய நால்வருக்குத் திருவருள் புரிந்தவன். எண் திசைகளிலும் மழை பெய்வதற்குக் காரணம் முன்பு நீங்கள் செய்த நன்மைகளேயாம். அதனால் மேலும் தொடர்ந்து தொண்டுகள் செய்யுங்கள் என்று சிவபெருமான் கூறியுள்ளார். கடுமையான தீமையில்லாத உழைப்பால் வந்த ஊதியம் தீதின்றி வந்த பொருளாகும். அப்பொருள் அறத்தையும் இன்பத்தையும் தேடித்தரும். அதனால் அறமும் இன்பமும் எந்நாளும் வந்து சேர நீதியான் முறையில் பொருள் தேட வேண்டும்.’’

‘‘சிவனடியார்களே, நாம் முயற்சி செய்தல் வேண்டும். அம்முயற்சி மற்றவர்களைப் பாதிக்காது இருத்தல் வேண்டும். கதிரேசனுக்கு உதவியாளனாகவும், நண்பனாகவும் இருப்பவன் நல்லைநாதன். அவன் ஒரு பெரும் விவசாயி. ஒரு போதும் அவன் பதர் நெல்லைச் சேர்த்துக் கட்டமாட்டான். கலப்படம் செய்யமாட்டான். மொத்த வியாபாரிகள் பொருள் வாங்க வந்தால் களவு செய்யாது பொருட்களைச் சுத்தமாகக் கொடுப்பான். அதனால் வியாபாரிககள் போட்டி போட்டு அவரது பொருட்களைக் கொள்வனவு செய்வர். குமாரசாமி எல்லாவற்றிலும் கலப்படம் செய்வான். அதனால் அவனது பொருளை வியாபாரிகள் வாங்க மாட்டார்கள். குமாரசாமி ஒரு நாள் வந்து,‘‘நல்லைநாதா, எனது பொருட்களை வியாபாரிகள் கொள்வனவு செய்கிறார்களில்லை. நான் நேர்மையாகச் செயற்பட்டாலும் என்னை நம்புகிறார்களில்லை. அதனால் சுத்தமான பொருட்களை உன்னிடம் தருகிறேன். அதை விற்றுத் தா’’ என்றான்.

‘‘அதற்கு நல்லைநாதன் சொன்னான்,‘‘குமாரசாமி, நாம் செய்த நன்மைகளால் தான் மழை பெய்கிறது. அந்த மழை தீமை செய்யும் விவசாயிகளை அழிக்கிறது. மழை பெய்தாலென்ன, பெய்யாவிட்டால் என்ன எனக்கும் கதிரேசண்ணைக்கும் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் எமது

தூய்மையான உழைப்பு. தூய்மையாக இருந்து சிவனை வழிபட வேண்டும். தூய்மையாக முயற்சி செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் சிவன் ஒரு போதும் எமக்கு நட்டத்தைத் தரார். அதனால் அறமும் இன்பமும் பெருகும். எம்மிருவருக்கும் எக்குறைகளும் இல்லை. நீயும் எம்மைப் போல் வாழ். எல்லா இன்பமும் உனக்குக் கிடைக்கும்'' என்று சொன்னவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**536. கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்**

**நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**

**வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்**

**இல்லான் இயமத் திடையின்நின் றானே.**

''சிவனடியார்களே, உயிர்களைக் கொல்லாதவன், பொய் சொல்லாதவன், உயிர்களுக்குத் துன்பம் செய்யாதவன், உயிர்களைக் கொல்பவர்களுக்குத் துணைபோகாதவன், அடக்க முடையவன், நடுநிலையாளன், எல்லோருக்கும் கொடுத்து உண்பவன், குற்றங்கள் செய்யாதவன், திருடாதவன், காமம் இல்லாதவன் இவர்கள் இமயமலையில் வீற்றிருக்கின்ற சிவனுக்கு விருப்பமானவர்களாவர்.''

''குமாரசாமி, சிவபெருமான் பதினொரு அருஞ்செயல்களைச் சொல்லியிருக்கிறார். நீ அதில் ஒன்றையாவது செய்துள்ளாயா..? மனிதன் முயற்சியின் போது நேர்மையாக நடந்து கொண்டால் ஊரும் மெச்சும், உலகமும் மெச்சும். அதனால் சிவனும் விரும்புவார். நீ தீயசெயல்கள் அனைத்தையும் செய்வதால் உன்னை ஊரும் உலகும் இகழ்கிறது. சிவனது திருப்பார்வையும் உனக்கில்லை. அதனால் தான் நீ துன்பப்படுகிறாய். நீதியில்லாத ஒரு செயலை விடு. அதன் பின் ஒவ்வொரு செயலையும் விடுவாய். உயிர்கள் மீது இரக்கப்படு. அவற்றிற்குத் துன்பம் செய்யாதே. உயிர்களுக்குத் துன்பம் செய்வாரோடு சேராதே. அப்படி வாழ்ந்து பார். சில மாதங்களில் உனது நிலை மாறும்'' என்று கூறியவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

3. நியமம்
   நன்றாற்றல்

**537. ஆதியை வேதத்தின் அப்பொரு ளானைச்**

**சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்**

**பாதியுள் மன்னும் பராசக்தி யோடுடன்**

நீதி யுணர்ந்து நியமத்த னாமே.

“சிவனடியார்களே, எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பவன் ஆதி என்ற சிவபெருமான். செந்தமிழ் மறையும் அதன் பொருளுமாய் விளங்குபவனும் அவனே. சுடும் தீயாக இருப்பவனும் அவனே. தன் திருமேனியில் ஒரு கூறை பெண் கூறாக அமைத்தவனும் அவனே. அறிவுப் பேரொலியாய் உள்ளவனும் அவனே. திருவருளாள் இவ்வுண்மையை உணர்ந்தவன் நீதியை உணர்ந்தவனாவான்.”

“சிவனடியார்களே, குமாரசாமி சொன்னார், “நான் பல்கலைக்கழகம் சென்று படித்தவன். நீயும் கதிரேசனும் மழைக்குக் கூடப் பாடசாலையின் கூரையின் கீழ் ஒதுங்காதவர்கள். எனக்குப் புத்தி சொல்ல வருகிறீர்கள்” என்று ஆத்திரப்பட்ட போது நல்லைநாதன் சொன்னார், “குமாரசாமி, பல்கலைக்கழகப் படிப்பு உயிர்களைக் கொலை செய்யச் சொன்னதா..? இல்லை களவெடு பொய் சொல் என்று சொன்னதா? கதிரேசன் சிவனடியார். சிவனே எல்லாம் என உணர்ந்தவர். சிவன் சொன்ன நீதிப்படி நடப்பவர். சிவனின் ஒரு பகுதியான பெண் நீதி எனப் போற்றப்படுகிறது. நீதியை உணரக் கற்கத் தேவையில்லை. அது பிறப்பால் வரும். மிருகங்கள், பறவைகளைப் பார் அவை பல்கலைக்கழகம் சென்றனவா. தமது மருத்துவத்தைத் தாமே செய்கின்றன. அதை விட மனிதரில் இல்லாத அரிய பல குணங்கள் அவற்றில் உண்டு. அது சிவனின் கொடை” என்று கூறியவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

538. தூய்மை அருளுண் சுருக்கம் பொறைசெவ்வை

வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை

காமங் களவு கொலையெனக் காண்பவை

நேமியீ ரைந்து நியமத்த னாமே.

“சிவனடியார்களே, உள்ளத்தூய்மையும் உடல் தூய்மையும், அருளோடு வாழுதலும், உணவைச் சுருக்குவதும், பொறுமை, செம்மை, வாய்மை, மானம், களவு, காமம் கொள்ளல், கொலை செய்யாமை ஆகிய பத்துப் பண்புகளும் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளாகும்.”

“சிவனடியார்களே, நல்லைநாதன் இப்பத்துக் குணங்களையும் கடைப்பிடிப்பவன். அவன் மிகமிக அமைதியாகவும், பொறுமையுடனும் சொன்னான்,“குமாரசாமி சிவன் பத்து நற்குணமுடையவர்களாக வாழ்ந்தால் தன் திருவடி நிழலை அடையலாம் என்று சொல்லியிருக்கிறார். பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதர்களும் அவற்றைப் பின் பற்றி வாழ வேண்டும். அண்மையில் நீ ஒரு பெண் மீது

காமம் கொண்டு அவளிடம் அடிவாங்கினாய். ஒரு மனைவியோடு சிவன் நினைவாக வாழ்வதே இல்வாழ்க்கை. அதுவும் மகவின் பொருட்டே கூடுதல் வேண்டும். பல முறை கூடுவது காமக் கூட்டம். அருவப் பொருளில் அன்பு செய்வது காதல். உருவப் பொருளில் அன்பு கொள்வது காமம். காதல் உயிரோடு கலந்தது. காமம் உடலோடு கலந்தது. உடல் தளர்ந்தால் காமம் அழிந்து விடும். உயிரும் மனமும் அழியாதது. இதைப் படித்த உன்னால் உணர முடியவில்லையா..? என்று கேட்டவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**539. தவஞ் செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்**

**சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி**

**மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து**

**நிலம்பல செய்யின் நியமத்த னாமே.**

''சிவனடியார்களே, பிறஉயிர்களுக்குத் துன்பம் செய்யாமை தவம் எனப்படும். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுவது செபம். சிவனை நினைத்தாலாகிய மகிழ்வும் முப்பொருளுண்மையைக் கைக்கொள்வதாகிய சமயப் பற்றும், சிவனடியார்களுக்கு உள்ளதைப் பகிர்ந்து கொடுக்கும் தானமும், சிவனைப் பற்றுடன் வழிபடும் விரதமும், செந்தமிழ்த் திருமுறைகளை ஓதுதலும், ஓதுவித்தலும், கேட்டலும் கேட்பித்தலும், வேள்விகள் ஐந்தையும் செய்தலும், திருவைந்தெழுத்தை ஓதுதலும், அகப்பூசையும், சிவன் தான் தனது உறவு என்று எண்ணும் ஆகிய பத்தும் நன்றாற்றலுக்கு வித்தாகும்.''

''சிவனடியார்களே, மேற்சொன்ன பத்துச் செயல்களையும் செய்வோர் சிவனின் அன்புக்குப் பாத்திரமாவர். அவர்களை யாராலும் எதுவும் செய்ய முடியாது. நல்லநாதன் கதிரேசனைப் பற்றியும், சிவனைப் பற்றியும் உயர்வாகப் பேசித் தன்னைத் தாழ்த்திப் பேசியது குமாரசாமிக்கு அவமானத்தைக் கொடுத்தது. அதனால் பழிவாங்க நினைத்தான். அவரைத் தாக்க யாரும் முன்வரார். அப்படி முன் வந்து தாக்கினாலும் மக்களுக்குத் தெரிந்தால் கொன்று விடுவார்கள் என்று நினைத்து ஒரு மந்திரவாதியிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவர் மீது ஏதாவது கொடிய பேயை ஏவி விடும்படி சொன்னான். மந்திரவாதி அதற்குச் சம்மதித்து ஒரு கொடிய பேயை ஏவி விட்டான். அது சில நிமிடங்களில் துடித்துப் பதைத்து ஓடி வந்து சொன்னது,''அவன் பெரும் சிவபக்தன். சிவன் அருளிய பத்துக் கடமைகளையும் விதிமுறை தவறாது செய்பவன். அவன் அணிந்திருக்கும் சிவசின்னங்களும் அவன் ஓதும் பஞ்சாட்சரமும் அவனை

அணுகவிடாது தடுக்கின்றன. மீறிச் சென்றால் உன்னையும் என்னையும் ஏவச் சொன்னவனையும் அழித்து விடும் என்று கூறியதாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

4. ஆதனம்
இருக்கை

**540. பங்கய மாதி பரந்தபல் ஆதனம்**

**அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்**

**சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்**

**தங்க இருப்பத் தலைவனு மாமே.**

''சிவனடியார்களே, ஆசனம் என்பது மிகவும் முக்கியமானது. இருக்கை சரியில்லாவிட்டால் உடலில் பல உபாதைகள் தோன்றும். மனக்குழப்பம் உண்டாகும். அதனால் செய்ய நினைத்த செயலைச் செய்ய முடியாத நிலை உண்டாகும். அதனால் தான் சைவசமயம் இருக்கைக்கு மிகமுக்கிய இடம் கொடுத்துள்ளது.''

''சிவனடியார்களே, தாமரை இருக்கை முதலாக இருக்கைகள் பல திறப்படும். அவற்றுள் எண்பேரிருக்கை தான் சிறப்பானது. அது குற்றம் குறை இல்லாதது. எல்லோராலும் இலகுவில் வடிவமைத்துக் கொள்ளக் கூடியது. இதைச் சுவத்தியம் என்பர். சுவத்தியம் என்பது தொடைக்கும், முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்கால்களையும் செலுத்தி அமர்ந்திருப்பது. எனது குரு தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு இவ்வாறு அமரச் செய்தே பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசிப்பார். இவ்வாறு இருப்பின் நெடுநேரம் உடல் உபாதையின்றி இருக்கலாம். இது மனதிற்கு நிம்மதியையும், மகிழ்ச்சியையும் மனம் அலை மோதாத தன்மையையும் கொடுக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**541. ஓரணை யப்பத மூருவின் மேலேறிட்**

**டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்**

**சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்**

**பார்திகழ் பத்மா சனமென லாகுமே.**

''சிவனடியார்களே, பத்மா சனமாகிய தாமரை இருக்கை இரண்டு கால்களையும் மாற்றித் தொடை மேல் உள்ளங்கால் மலர்ந்திருக்குமாறு வைத்திருத்தல். பின் மலர்ந்த கால்களின் மேல் இருகைகளையும் கோர்த்து

மலர்ந்திருக்குமாறு வைத்தல் வேண்டும். நன்றாக நிமிர்ந்து நேர்முகமாக நோக்குதல் வேண்டும். இதுவே பத்மாசனமாகும். இதைச் சில காலம் ஒழுங்காகச் செய்து வந்தால் பரீச்சமாகி விடும். இதன் மூலம் இரத்தம் உடலெங்கும் நிதானமாக ஓடும். முள்ளந்தண்டு நிமிர்ந்திருப்பதால் கூன் ஏற்படமாட்டாது. பொதுவாக இருக்கைகள் யாவும் மக்களின் தேக ஆரோக்கியத்துக்காக வகுக்கப்பட்டவை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

542. துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து

அரிய முழந்தாளி லங்கையை நீட்டி

உருசி யொடுமூடல் செவ்வே யிருத்திப்

பரிசு பெறுமது பத்திரா சனமே.

''சிவனடியார்களே, பத்திராசனமாவது வலக்காலை வெளித்தோன்றுமாறு இடத்தொடை மேல் வைத்து இரண்டு முழந்தாள்களிலும் அங்கைகளை மேல் நோக்குமாறு அமைத்து நீட்டி உடம்பை செவ்வையாக நிமிர்த்தி வைத்திருத்தல் பத்மா சனமாகும். இதனால் மனம் ஒன்றுபடும். சிவநினைவைத் தவிர வேறு எந்த நினைவுகளும் வராது. உடலின் தளர்ச்சி நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும். செய்யும் பயிற்சியின் வேகம் அதிகரிக்கும்.''

''சிவனடியார்களே, நம் முன்னோர் சிவனின் அருளால் பெற்ற நன்மைகளைப் பிறரும் பெறவேண்டும் என்பதற்காக எழுதி வைத்துள்ளனர். அதை இன்றுள்ளோர் தாம் தாம் அதைச் செய்கிறோமென இறுமாப்படைகின்றனர். எனது குருவிடம் நோயாளிகள் மனக்குழப்பமுற்றோர், குடும்பப் பிரச்சினையுள்ளோரெனப் பலரும் வருவார்கள். ஒரு நாள் ஒரு மேலதிகாரி வந்து, ''சுவாமி என்னால் நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. மனதில் வெறுப்புத் தோன்றுவதால் வேலைத்தலத்திலும் வீட்டிலும் பெரும் பிரச்சினைகள் உண்டாகின்றன. அதை நீக்க வழிவகை செய்யுங்கள்'' என்று இரந்தார். குருபத்மாசனம் செய்யும் முறையைக் காட்டிக் கொடுத்து, அதைத் தினமும் செய்யுமாறும் செய்யும் போது பஞ்சாட்சரமந்திரத்தை மனதில் நினைக்கும் படியும் கூறினார். சிலநாட்கள் கழிய அவ் அதிகாரி மகிழ்வுடன் வேலை செய்யத் தொடங்கினார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

543. ஒக்க அடியினை யூருவில் ஏறிட்டு

முக்கி யுடலை முழங்கை களில்ஏற்றித்

தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்

குக்குட ஆசனங் கொள்ளலு மாமே.

‘‘சிவனடியார்களே,பாதங்கள் இரண்டையும் மாற்றித் தொடையின் மேல் ஏறுமாறு செய்தமைத்து உடம்பின் பளுவை முழங்கை தாங்குமாறு அமைத்து அசைவின்றியிருத்தல் கோழியிருக்கையாகும்.’’

‘‘சிவனடியார்களே, இருக்கைகள் பல. அவற்றுள் எட்டு இருக்கைகள் சிறந்தனவாகும். அவ் எட்டு இருக்கைகளிலும் மாறி மாறி இருந்து சிவனது மந்திரத்தை ஓதுவது சிறப்பானது. அந்த அதிகாரி தனது மனக் குழப்பம் அகன்றமையால் மிகவும் மகிழ்வடைந்து தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆச்சிரமத்திற்கு வரத்தொடங்கினார். இருப்பினும் அவருக்கு கால்களில் ஒரு நோ இருந்தது. அதை குருவுக்குச் சொன்ன போது அவர் அவருக்குக் கோழி இருக்கையைக் கற்றுக் கொடுத்தார். அதன் பின் அவர் சில மாதங்களுக்குக் கோழியிருக்கையில் இருந்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தார். சில நாட்களில் அவரது நோ மாறியது. அதை அறிந்த அவருடன் வேலை செய்யும் பலர் குருவிடம் வந்து ஆசி பெற்றுச் சென்றனர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

544. பாத முழந்தாளிற் பாணி களை நீட்டி

ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்

கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்

சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே.

‘‘சிவனடியார்களே, முழந்தாளின் மேல் பாதத்தை வைத்து அவற்றின் மேல் கைகளை நீட்டிப் பார்வையை மேல் நோக்கிப் பார்த்து, கண்கள் மூக்கின் நுனியைப் பார்க்குமாறு இருத்தல் வேண்டும். இதைச் சிங்காசனம் என்பர். இதனால் சுவாசம் சீர்பெறும், மனஒடுக்கம் ஏற்படும். வீண் நினைவுகள் மனதிலிருந்து விலகும். ஒரு நாள் அந்த அதிகாரி தனக்குக் கீழ் வேலை செய்யும் ஒருவரை அழைத்து வந்து குருவுக்குச் சொன்னார்,‘‘குருவே இவர் காரணமின்றிப் பயப்படுகிறார் தன்னை யாரோ தாக்க வருவதாக நினைக்கிறார். அதனால் இவரது குடும்பம் நிம்மதியின்றித் தவிக்கிறது’’என்றார். அவரைச் சிங்காசனத்தில் அமர்த்திப் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். பின் அதைப் பல மாதங்கள் செய்யுமாறு பணித்தார். சில மாதங்களுள் அவரது நோய் முற்றாகக் குணமானது. மக்கள் இன்பமாகவும் சுகமாகவும் வாழ்வதற்காக எமது சமயம் தன்னாலான முழுப்பணிகளையும் செய்கிறது. அதைப் பலர் தவறாகப் புரிந்து கேவலமாக நடந்து கொள்கின்றனர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

545\. பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி

சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்

உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்

பத்தொடு நூறு பலஆ சனமே.

“சிவனடியார்களே, பத்திரம் முதல் சுகாதனம் ஈறாகச் சொல்லப்படும் இருக்கைகள் ஏழும் மேலானதாகச் சொல்லப்படும் மாமுது ஆசனமும் சேர இருக்கை எட்டாகும். இவற்றுடன் சொத்திரம் சுகாசனம் என்ற இரண்டையும் சேர்த்தால் இருக்கைகள் பத்தாகும். இப்படியே இருக்கைகள் அளவில்லாதன. திருமூலர் அருளிய இருக்கைகள் எட்டாகும். இருப்பினும் பிறர் கூறியவையும் பின் நாளில் சேர்க்கப்பட்டன. இது எழுவகை மதங்களுள் ஒன்றாகிய உடம்படல் எனப்படும்.”

“இருக்கைகள் நூற்றுக்கு மேல் உண்டு. ரிசிகளும், முனிவர்களும் தமக்கேற்றவாறு இருக்கைகளை அமைத்துள்ளனர். எனினும் திருமூலர் கூறிய இருக்கைகள் எட்டும் மிகவும் பழைமையானவை. அத்துடன் சிவனருளால் அவர் கூறியவை. அதனால் சிவனடியார்கள் திருமூலர் கூறிய எட்டு இருக்கைகளிலும் இருந்து சிவனை நினைத்து பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிப் பயன் பெறுங்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 5. பிராணாயாமம்

### வளி நிலை

546\. ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்

உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு

மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்

பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.

“சிவனடியார்களே, ஐம்பொறிகளுக்கும் தலைவன் உடலில் தங்கியிருக்கும் உயிராகும். அதனால் உடலை ஐவர் வாழும் ஊர் என்றனர். அவ்வூருக்குத் தலை மகன் மனம். ஆருயிரை உய்யுமாறு கொண்டு செல்லும் குதிரை ஒன்று உண்டு. குதிரை என்பது உயிர்ப்பு என்பதும் பிராண வாயு என்பதும் ஒன்றேயாகும். உண்மையான அகப் பயிற்சி உடையவர்களுக்கு அக்குதிரை அடங்கி நடக்கும்.

முறையான பயிற்சி இல்லாத தீயவர்களுக்கு அக் குதிரை அடங்காது. துள்ளிக் குதித்து ஆர்ப்பரித்து அவரைத் துன்பக் குழியில் தள்ளி விடும்.''

''சிவனடியார்களே, உடம்பில் நிலை கொண்டிருக்கும் ஐம்பொறிக்கும் தலைவன் உயிராகும். உயிரோடு சேர்ந்த உடலை ஆட்டிப்படைப்பது மனம். மனத்தைப் பயிற்சிகளால் கட்டுப்படுத்தாது விட்டால் அது கடிவாளம் இல்லாத குதிரையைப் போலச் செயற்படும். எனது குருவிடம் வந்த அதிகாரியான நடேசனுக்கு வயது ஐம்பது. அவர் மேலதிகாரியாக இருந்ததால் அங்கு வேலை செய்வோரும் மக்களும் அவரை மதித்தனர். அவரின் கீழ் ரேவதி என்ற பெண் வேலை செய்தாள். அவள் நல்ல அழகி. அவள் மீது இச்சை கொண்ட நடேசன் அவளை அடைய முயற்சித்தான். அவளும் அவரின் போக்கிற்குச் சாதகமாக நடந்து தனது தேவைகளைப் பூர்த்தி செய்தாள். இதனால் பெரும் பிரச்சினை உருவானது. குரு அவற்றைப் பக்குவமாக எடுத்துக் கூறி அவரது மனச் சஞ்சத்தை நீக்கினார். மனம் கட்டுப்பாடாக இருந்ததால் நீதி நியாயங்களை எடுத்துரைத்துத் தீயவற்றைத் தடை செய்யும் மனம் கட்டுப்படாவிட்டால் பெரும் தீமைகளை உண்டாக்கும். அதற்காகத் தான் சைவசமயம் பல பயிற்சிகளை முன்வைத்துள்ளது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**547. ஆரிய நல்லன் குதிரை இரண்டுள**
**வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை**
**கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்**
**வாரிப் பிடிக்க வசப்படுந் தானே.**

''சிவனடியார்களே, குதிரையைச் செலுத்தும் ஆரியனாகிய மனம் நல்லவன். குதிரையாகிய இருப்பு இரண்டு வகையானது. ஒன்று வலப்பால் நாடி. மற்றது இடப்பால் நாடி. இவற்றைப் பிங்கலை, இடைக்கலை என்பர். அவ் உயிர்ப்பினை விடுத்தலும் எடுத்தலும் ஆகிய செயல்களைப் போலத் தடுத்தலைத் தடுக்க முடியாது மயங்குகின்றனர். நன்நெறியோடு வாழ்ந்தால் திருவருள் கை கூடச் சிவகுரு எழுந்தருளி வந்து ஆட்கொள்வார். சிவகுருவின் திருவருளைப் பெற்றால் அக்குதிரையாகிய உயிர்ப்பினை வசப்படுத்துதல் எளிதாகும்.''

''சிவனடியார்களே, மனம் தான் நன்மைக்கும், தீமைக்கும் முதற் காரணியாகும். திருவருள் வசப்பட்ட மனம் தீயவற்றை நாடாது. திருவருள் வசப்படாத மனம் நல்லவற்றைச் செய்யாது. தீயனவே அதற்கு நல்லவையாகத் தெரியும். ஒரு பெண் சிரித்தால் திருவருள் வசப்பட்டவன் அவளைத் தாயாக எண்ணுவான். திருவருள்

வசப்படாதவன் அவளைக் காமக் கிளத்தியாக எண்ணுவான். நடேசனுக்கும் அது தான் ஏற்பட்டது. ரேவதியின் சிரிப்பில் மயங்கியதால் அவரால் அலுவலகத்திலும் வீட்டிலும், சமூகத்திலும் நல்லபடி நடந்து கொள்ள முடியவில்லை. அதனால் தீயவற்றையே செய்தார். பின் குருவிடம் வந்த போது பயிற்சியால் தனது மானத்தை மாற்றிக் கொண்டார். குருவின் உபதேசம் திருவருளை உணர்த்தியதால் திருந்தினார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

548. புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்

கள்ளுண்ண வேண்டாம் தானே களிதருந்

துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்

உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே.

''சிவனடியார்களே, பறவையிலும் பார்க்க மிக விரைவாகச் செல்லும் மனமாகிய குதியினைச் சிவகுருவின் அருளால் மனம் களிப்படையும். மனம் களிப்டைய கள்ளை உண்ணத் தேவையில்லை. அந்தத் திருவருள் மனத்தைக் களிப்படையச் செய்யும். துள்ளி விரைந்து நடக்கச் செய்யும். சோம்பல் வராது தடுக்கும். திருவருள் கைவரப் பெற்றவர்கள் நிம்மதியுடனும், மகிழ்வுடனும் வாழ்வர்.''

''சிவனடியார்களே, இப்போது நடேசன் தினமும் வருகிறார். அவர் சொன்னார், ''அதிகாரம் இருந்ததாலும், பணம் இருந்ததாலும் மனம் போனபடி வாழ்ந்தேன். அதனால் பெரும் துன்பங்கள் உண்டானது. பணம் அழிந்தது. நிம்மதியும் மகிழ்ச்சியும் தொலைந்து போனது. சிவகுருவின் அருளால் இப்போது எனது நினைவுகள் யாவும் சிவனைப் பற்றியிருப்பதால் நிம்மதியாகவும், மகிழ்வாகவும் வாழ்கிறேன் என்றார்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவசத்துடன் கூறினார்.

549. பிராணன் மனத்தோடும் பேராதடங்கிப்

பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை

பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்

பிராண னடைபேறு பெற்றுண்டீர் நீரே.

''சிவனடியார்களே, பிராணனாகிய உயிர்ப்பு சிவகுருவினால் மனத்துடன் பொருந்தி அடங்கியிருக்குமானால் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. உயிர்பானது வலப்பால். இடப்பால் நாடிகளாகிய பிங்கலை இடைக்கலைகளில் மாறிமாறிப் போய்

வருமானால் பிறப்பும், இறப்பும் தொடர்ந்து கொண்டிருக்கும். மனம் ஒரு போதும் அடங்காது. அது எதற்கும் கட்டுப்படாது. வெறிபிடித்த நாய் போல் அலைந்து கொண்டிருக்கும். அதனால் வலப்பால் இடப்பால் நாடிகள் இயங்கிக் கொண்டிருக்கும். இவை உலக நடைமுறையைச் சிந்திக்காது தான் நினைத்தபடி மனத்தை செயற்பட வைக்கும். உயிர்ப்பு சிவகுருவினால் ஆட்கொள்ளப்பட்டுத் திருவருள் மயமாகிவிட்டால் மனம் அடங்கி உயிர்ப்புடன் பொருந்தி விடும். அப்படிப் பொருந்தினால் பிறப்பு, இறப்பு என்பன இல்லாமற் போய்விடும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**550. ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்**

**ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்**

**ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்**

**மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே.**

''சிவனடியார்களே, வளி நிலையாகிய மூச்சுப் பயிற்சி பற்றி இப்பாடல் கூறுகிறது. ஏறுதல் பூரகம். ஆறுதல் கும்பகம். ஊறுதல் இரேசகம். பூரகம் என்பது உள்ளிழுத்தல். கும்பகம் அடக்குதல். இரேசகம் வெளிவிடுதல். இப்பயிற்சிக்கு சிவ சிவ என்னும் செந்தமிழை நான்கு முறை கணித்துத் தூய்மையான காற்றை உள்ளிழுத்தல் வேண்டும். அது போலச் சிவ சிவ என்பதினைப் பதினாறு முறை கணித்துத் தூய காற்றை உள் இழுத்தல் வேண்டும். அது போலச் சிவ சிவ என்பதனை பதினாறு முறை கணித்து இரண்டு மூக்கையும் அடைத்து உள்நிறுத்த வேண்டும். பின் சிவ சிவ என எட்டு முறை கணித்து வலது மூக்கைத் திறந்து வெளிவிடுதல் வேண்டும். இம்முறைப் படி இடது மூக்காலும் செய்தல் வேண்டும். இவ்வாறு தன்னால் இயன்றவரை செய்தல் வேண்டும். இப்பாடலில் திருமூலர் மூச்சுப் பயிற்சி பற்றி விரிவாகக் கூறியுள்ளார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**551. வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**

**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**

**வளியினும் வேட்டு வளியனு மாமே.**

''சிவனடியார்களே, அகப்பயிற்சியால் உயிர்ப்பினை வாங்கி உந்தியில் அடக்கினால் முதுமை உடலில் காணப்பட்டாலும் மனதிலும், பலத்திலும் காணப்பட்டது. இளமைப் பண்பு தோன்றி உடலை வனப்பாக்கும். இது பயிற்சியின் சிறப்பால் ஏற்படும்.

அது ஏனைய மக்களையும் தூண்டி அப் பயிற்சியை மேற்கொள்ள வைக்கும். இது கைகூடச் சிவகுருவின் திருவருள் கூட இருத்தல் வேண்டும். இதனால் விண்ணிலும் பறக்கும் தன்மை உண்டாகும். இதன் மூலம் திருமூலர் சிவகுருவின் திருவருள் கிடைக்கப்பட்ட மென்மைத் தன்மையுடையவன் விண்ணிலும் பறப்பான் என்று கூறுகிறார். சிவகுருவின் திருவருள் வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**552. எங்கே இருக்கினும் பூரி இடத்திலே**

**அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை**

**அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்**

**சங்கே குறிக்கத் தலைவனு மாமே.**

''சிவனடியார்களே, நீங்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் இடமூக்கு வழியாக உயிர்ப்பினை பதினாறு மாத்திரையளவு எடுத்தலாகிய பூரகத்தைச் (உள்ளிழுத்தல்) செய்தல் வேண்டும். செய்த பின் தடுத்தலாகிய கும்பகத்தை அறுபத்தி நான்கு மாத்திரையளவு செய்தல் வேண்டும். பின் விடுத்தலாகிய இரேசகத்தை முப்பத்திரண்டு மாத்திரையளவு செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் அகத்துவப் பயிற்சியால் சங்கு முதலிய ஒலிகள் பத்தும் உணர்வினுள் ஒலிக்கும். அகத்துவம் பயின்றாருள் இதைச் செய்வோர் தலை சிறந்தவராவர்.''

''சிவனடியார்களே, கதிரேசன் எங்கு சென்றாலும் இதைச் செய்வார். அவரது வயலிலும், தோப்புக்களிலும், தோட்டங்களிலும் இதற்கென ஒரு இடத்தை ஒதுக்கி வைத்துள்ளார். விதைப்புக் காலங்களில் அங்கு அவர் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அவர் அங்கு செல்வார். அவருக்கு வயது எண்பது. மிகமிக இளமையாக இருக்கிறார். சிவனை நினைக்கும் போதெல்லாம் அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்வு தனக்கு ஏற்படுவதாகக் கூறுகிறார். இப்பயிற்சி உடலை இறுக்கி மனதை இளமையாக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**553. ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்**

**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை**

**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்**

**கூற்றை யுதைக்குங் குறியது வாமே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பினை அகத்துவப் பயிற்சியால் மேலெழும்படி செய்து இடது மூக்கு வழியாகவும், வலது மூக்கு வழியாகவும் இருமுறை எடுத்தலாகிய பூரித்தலைச் செய்ய வேண்டும். அங்ஙனம் உள்ளெடுக்கும் காற்றை அருளால் தடுத்தலாகிய கும்பகத்தைச் செய்யும் போது மேற்சொன்னவாறு முறைமைக் கணக்கைக் கைக் கொண்டொழுகுபவர்கள் அரியவராவர். இவர்களுக்குச் சிவபெருமானின் திருவருளால் மரணத்தைத் தடுக்கும் நிலையுண்டாகும். இவர்கள் சிவசிவ நான்கு மாத்திரை உள்ள நல்ல தொடரை நாவால் உரைப்பர். அதாவது உயிர்ப்பினை விடுவதற்கு நான்கு முறையும், எடுத்தற்குப் பதினாறு முறையும் தடுத்தற்கு எட்டு முறையும் ஆக நவின்று பயில்வர். இதனால் வரும் நற்பயன் இயல்பாகவே உயிர்ப்புப் பயிற்சியால் தானாக எழும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**554. மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்**
**பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து**
**மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே**
**ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே.**

“சிவனடியார்களே, மேல் என்று சொல்லப்படுவது தலை, கண்கள், காதுகளாகும். கீழ் என்று சொல்லப்படுவது கால்களும், விரல்களுமாகும். நடு என்று சொல்லப்படுவது நெஞ்சு, கொப்பூழ் முதலியனவாகும். இவை நிலையுமாறு உயிர்ப்பினை உள்ளிழுத்தல் வேண்டும். இதைப் பூரித்தல் என்று சொல்லப்படும் உள்ளே இழுத்த உயிர்ப்பான காற்றை உடனே வெளிவிடாது மெதுவாக வெளியிடல் வேண்டும். சிவபெருமான் மீது பேரன்புடன் அடி வயிற்றில் தடுத்தலாகிய கும்பகத்தைச் செய்து வாழ்ந்து வந்தால் சிவபெருமானின் திருவருளைப் பெறலாம்.”

“உயிர் மூச்சு என்பது காற்று. பிராணன் என்பதும் காற்று. காற்றை அளவோடு உள்ளே எடுத்து பிரமாணப் படி வெளியேற்ற வேண்டும். மனிதன் பிறந்த காலத்தில் இருந்து இன்று வரை மனித உயிர் எங்கே இருக்கிறது என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய விஞ்ஞானக் கருவிகளால் கூட அதைப் படம் பிடிக்க முடியவில்லை. எத்தனையோ இலட்சம் மைல்களுக்கப்பால் உள்ள கோள்களில் நடைபெறுபவற்றைக் கண்டுபிடிப்பதாகக் கூறும் விஞ்ஞானிகள் தனக்குள் உள்ள உயிரைக் காணாதது வியப்பளிக்கிறது. திருமூலர் உயிர் எது என்று கூறியுள்ளார். காற்றுத் தான் உயிர். அதன் ஓட்டம் நின்றால் உடல் மரணித்துவிடும்” என்று கதிரேசன் சொல்வார். இது உண்மை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**555. இட்ட தவ்வீ டிளகா திரேசித்துப்**

**புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்**

**கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து**

**நட்டம் இருக்க நமனில்லை தானே.**

“சிவனடியார்களே, வீடாகிய உடல் தளர்ச்சியுறாது வளர்ச்சியடைய வேண்டுமானால் பத்து வகையான நாடிகளிலும் உயிர்ப்பினை உண்டாக்க வேண்டும். அங்ஙனம் எடுத்து வீணாகக் கழியும் உயிர்ப்பினையும் மலக்காற்றையும் தடுத்து நிறுத்தலாகிய நட்டத்தினைப் புரிவோரிடம் யமன் வரமாட்டான். இது பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட கணக்காகும். ஒருவன் தன் மூதாதையர் தேடிய சொத்தைச் செலவு செய்யாமல் தன் உழைப்பை அதனோடு சேர்த்து வருகிறான். தனது உழைப்பிலேயே தானதர்மம் செய்வதோடு தனது செலவையும் பார்த்துக் கொள்கிறான். அவனது செயலைக் கவனிக்காத ஒருவன் அவன் தன் மூதாதையரின் சொத்தைச் செலவு செய்கிறான். அது முடிந்திருக்கும் என்று தப்புக் கணக்குப் போடுவது எவ்வளவு பிழையோ அவ்வளவு பிழையானது அகத்தவமாகிய யோகப் பயிற்சி உடையவனிடம் யமன் போவது.”

“அன்று வாழ்ந்த ரிசிகளும் ஞானிகளும் யோகப் பயிற்சி செய்தமையால் தான் பல சித்திகளைப் பெற்றனர். நீண்ட காலம் உயிர் வாழ்ந்தனர். நோய் நொடிகள் எவையும் அவர்களை அணுகவில்லை. நான் எனது மூதாதையர் தேடி வைத்த சொத்துக்களைப் பயன்படுத்தவில்லை. கடும் முயற்சி செய்து பொருள் தேடி எனது பிள்ளைகளைக் கற்பித்தேன். ஊரவர்களுக்கு உதவிகள் செய்தேன். அதனால் எனது உடல் உரம் பெற்றது. யோகாசனம் செய்வதால் மனம் ஒருமைப்பட்டு நிம்மதியாகவும், மகிழ்வாகவும் இருக்கிறது. இப்படியானவர்கள் இளமையாக இருப்பார்கள். அவர்களைக் கவர யமனால் முடியாது. யோகப் பயிற்சி உயிர் மூச்சான காற்றைச் சமநிலைப்படுத்துவதால் காற்றோட்டம் திடீரென்று அதிகரிக்கவோ குறையவோ மாட்டாது. அதனால் மரணம் தாமதமாகும்” என்று கதிரேசன் கூறுவார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**556. புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை**

**நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்**

**உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்**

**புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.**

“சிவனடியார்களே, உள்ளிருந்து புறப்பட்டு வெளியே சென்று மீண்டும் உள்ளே செல்லுகின்ற உயிர்ப்பினை மூச்சுப் பயிற்சி முறைப்படி தடுத்துப் பின் உள் நிறுத்தி சிவனின் அருளால் தூய்மையாக்கி வாழ்வாரின் உடல் பொன்மயமாகும். அத்துடன் உயிர்க்குயிராய் உயிரோடு கலந்து நிற்கும் சிவபெருமானும் உடலை விட்டுப் போகான். அதனால் அவனுக்கு உடலாகிய ஆருயிரும் போகாது. ஆருயிர் நிற்பதால் உடலும் கெடாது.”

“சிவனடியார்களே, உயிர் மூச்சான காற்றை உள்ளே இழுத்து வெளிவிடும் மூச்சுப் பயிற்சியை முறையாகச் செய்யும் கதிரேசன், நல்லைநாதன், ரவீந்திரன் ஆகியோரின் உடலைப் பாருங்கள். அது பொன்னைப் போலப் பளபளக்கிறது. முகம் எவ்வேளையிலும் அன்று மலர்ந்த தாமரைப் பூவைப் போலுள்ளது. இனிமையான பேச்சும் கருணையான பார்வையும் அன்பான உள்ளமும் அவர்களிடம் இருப்பதால் அவர்கள் இளமையாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் மூச்சுப் பயிற்சியே. மூச்சுப் பயிற்சி செய்வோரின் உள்ளத்தில் சிவபெருமான் நீங்காது இருப்பதால் அவர்களைக் கவர யமன் கூட வரமாட்டான். மூச்சுத் தான் உயிர். அது பயிற்சியால் சீராக இருந்தால் உடலை விட்டுப் போகாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**557. கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்**

**ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்**

**நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்**

**கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே.**

“சிவனடியார்களே, உடலின் கண் வீற்றிருக்கும் பிங்கலை, இடைகலை என்னும் கலப்பால் இடப்பக்கத்து நாடியூடாக உயிர்ப்பு பன்னிரண்டு விரல் அளவில் ஓடுதலும்,மீளுதலும் புரியும். அப்பன்னிரண்டு விரளளவில் எட்டு விரலளவு எடுத்துக் கொண்டு மிகுதி நான்கு விரளவு வீணாக வெட்டி அவை வாழ்நாட்கள் என்று எண்ணாது போக்கி விடுவர். அந்நான்கு விரளளவும் தினமும் அகத்தே கூட்டிக் கொள்வதால் மிகப் பெரும் வைப்பாகத்திகழும். அது மேலும் பயிற்சியால் பெருகி மூலபண்டாரம் மிகும். மிகவே அவ் உயிர் திருநீறு, சிவமணி அணிந்து சிவசிவ என்றும் செந்தமிழ் மறையை ஓதி உணரும். ஓதி உணர்ந்த உயிர்களை கூற்றுவன் நெருங்கப் பயப்படுவான்.”

“சிவனடியார்களே, சில நாட்களுக்கு முன்பு கதிரேசன் மூச்சுப் பயிற்சி செய்து முடிந்ததும் சிவனை நினைத்துக் கொண்டிருந்தார். அவரது உணர்வுகள் அடங்கி விட்டன. மரம் போல விறைத்துப் போயிருந்த கதிரேசனைக் கண்ட அவரது மனைவி நல்லைநாதனை அழைத்து அவரைக் காட்டினாள். நல்லைநாதன் சொன்னார்,“அம்மா, அவர் மூச்சுப் பயிற்சியில் ஈடுபட்டுச் சிவ நினைவாக இருக்கிறார். திருநீறும், உருத்திராட்சமாலையும் சிவசிந்தனையும் உடைய ஒருவரை யமன் நெருங்கப் பயப்படுவான். கவலை கொள்ளாதீர்கள்” என்று சொல்லிய சில நிமிடங்களில் விழித்தெழுந்த கதிரேசன் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்,“அம்மா, சிவனோடு அவர் இருப்பதால் சிவலோகத்திலும் அவருக்கு வேலை இல்லை. சிவலோகத்தில் இருப்பதால் யமனும் வர அஞ்சுவான்” என்று நல்லைநாதன் கூறினவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**558. பன்னிரண் டானை பகல்இர வுள்ளது**

**பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்**

**பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்**

**பன்னிரண் டானைக்குப் பகல்இர வில்லையே.**

“சிவனடியார்களே, வெளியே செல்லும் உயிர்ப்பு மாத்திரை பதினாறுள் நான்கு மாத்திரை வீணாகக் கழிந்து போக அகத்தே பன்னிரண்டு மாத்திரை தங்குகிறது. அது உயிர்ப்பினைக் கழிப்பதற்காகவே தங்குகின்றது. இவை ஆருயிர்க்கு அடங்குதல் நன்று. அலை அடங்கினால் நாளெல்லை. விழிப்பு, உறக்கம், தோற்ற ஒடுக்கம், அறிவு, அறியாமை எனப்படுகின்ற பகல் இரவுகள் இல்லை. அவ் யானையினை அடக்கும் முறைகளைப் பாகனாகிய உயிர் அறியாது. அதனை ஆருயிர் அறிந்தால் பகல் இரவு இல்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 6. பிரத்தியாகாரம்
## (தொகை நிலை)

**559. கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற்**

**கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்**

**பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை**

**இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே.**

“சிவனடியார்களே, பொறிகளது உணர்வுகளை எல்லாம் புலத்தில் வாழாமல், ஒரு வழிப்படுவது தொகை நிலையாகும். அதாவது சிவபெருமானை உணர்வுகளால் உணர்ந்து கொள்வது. அவ்வாறு சிவபெருமானை அகத்தே வைத்துப் பூசிக்கப் பூசிக்க அவனது எண்குணப் பெருக்கமும் எண்மையிற் காணலாம். தொன்மைக்காலத்திலிருந்தே பழம் தமிழ் மறையை விரும்பி அனுபவிக்கும் சிவபெருமானை நாமும் அகத்தே கண்டு இன்புறலாம்.”

“பழங்காலத்திலிருந்து திருமுறைகளில் விருப்பம் கொண்டவன் சிவபெருமான். நாயன்மார்களைப் பாடச் சொல்லிக் கேட்பான். நாயன்மார்களின் தேவார திருவாசகங்களில் மயங்கி அவர்கள் கேட்டவற்றை உடனே கொடுப்பவன். அத்தகைய சிவபெருமானை மனதுள்ளே தியானித்தபடி திருமுறைகளைப் பாடினால் அவன் மனமுருகி வேண்டியவற்றைத் தந்தருள்வான். உணர்வுகள் கட்டுப்பட்டால் தான் இந்த நிலை உண்டாகும். அதனால் தான் நான் தினமும் செந்தமிழ்த் திருமுறைகளை ஓதுகிறேன். நீயும் ஓதிப் பயன் பெறு” என்று கதிரேசன் நல்லைநாதனுக்குக் கூறினார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**560. நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்**
**தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்**
**தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்**
**கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே.**

“சிவனடியார்களே, கொப்புழுக்குப் பன்னிரண்டு விரல் அளவில் கீழே உள்ளது மூலாதாரம். அம் மூலாதாரத்தை தொழிற்படுத்தும் மந்திரம் ஓம் என்பதேயாகும். இம்மறையை உச்சரித்து நிலை நிறுத்தல் வேண்டும். அதைப் பலர் அறிந்திருப்பதில்லை. திருவருளால் அதனை அறிந்தபின் சிவபெருமானை அன்புடன் அழைக்க வேண்டும். அப்படி அழைத்தால் அவன் வெளிப்பட்டு உள்ளத்தில் குடி கொண்டருள்வான். மூலாதார எழுத்துக்கள் வ,ச,ஷ,ஸ என்பனவாகும்.”

“சிவனடியார்களே,கதிரேசனது உதவியாளரான நல்லைநாதன் குடிப்பவன். அது கதிரேசனுக்குத் தெரியாது. ஒரு நாள் நல்லைநாதனின் மனைவி வந்து தனது கணவன் குடித்து விட்டுத் தன்னைத் தாக்குவதாகச் சொன்னார். கதிரேசன் நல்லைநாதனை அழைத்துச் சொன்னார்,“குடிப்பதால் பல கெடுதல்கள் உண்டாகும். அது மூலாதாரத்தைத் தாக்கும். மூலாதாரம் நல்ல முறையில் செயற்படவேண்டுமானால் சிவனை நினைத்து ஓம் என்ற மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும். தினமும்

பக்தியோடு உச்சரித்தால் சிவன் உள்ளத்தில் வந்தமர்வான். அதன் பின் தீயவற்றைச் செய்ய மனம் இடங்கொடாது. அது உன்னால் முடியாவிட்டால் இங்கே வராதே. மூலாதாரம் பாதுகாக்கப்படல் வேண்டும். அது பாதிக்கப்பட்டால் பல்வேறு விதமான நோய்கள் உண்டாக்கும். அதைத் தொழிற்படவை. உனது பிரச்சினைகள் தீரும். பொறிகளை ஒரு நிலைப்படுத்துவது ஓம் என்ற செந்தமிழ் மந்திரம். பொறிகள் ஒரு நிலைப்பட்டால் தான் வாழ்வு சிறக்கும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**561. மூலத் திருவிரல் மேலுக்கு முன்நின்ற**

**பாலித்த யோனிக் கிருவிரல் கீழ்நின்ற**

**கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்**

**ஞாலத்த நாபிக்கு நால்விரற் கீழதே.**

''சிவனடியார்களே, மூலாதாரத்திற்கு இரண்டு விரல் மேலும் குறிக்கு இருவிரல் கீழும் உள்ள இடம் வட்டக்குண்டலியாகும். அக்குண்டலியின் ஆற்றலால் உணர்வினுள் எழும் சுடர் செஞ்சுடராகும். அச்சுடர் உச்சியில் உள்ள துளை வரை செல்லும். மேலும் அச்சுடர் கொப்புழுக்குக் கீழ் நான்கு விரல் அளவில் பரவியிருக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**562. நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்**

**நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்**

**மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்**

**தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே.**

''சிவனடியார்களே, மூக்கின் கீழ்ப்பகுதியில் இருந்து பன்னிரு விரல் அளவு தள்ளியிருப்பது நெஞ்சு. அவ்விடத்தில் சிவபெருமானை இருத்த வேண்டுமானால் கொல்லாமை, ஐந்தடக்கல், பொறுமை, இரக்கம், நல்லறிவு, மெய்த்தவம், அன்பு ஆகிய எட்டு மலர்களால் அர்ச்சித்துத் திருவைந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். அப்படிச் செய்து வந்தால் பெரும் சித்திகளும் பெரும் யோகங்களும் வந்து சேரும்.''

''சிவனடியார்களே, இலைகளாலும், பூக்களாலும் சிவபெருமானை வழிபட முன் தமது உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளல் வேண்டும். கதிரேசனைப் பாருங்கள் அவர் உயிர்கள் மீது கருணை கொண்டவர். வயதான பசுக்களையும், எருதுகளையும் விற்பனை செய்யாது பாதுகாத்து வருகிறார். அவர் மாமிச வகைகளை

உண்பதில்லை. அவரது புலன்கள் கோடை காலத்தில் பாயும் ஆற்றைப் போல அடங்கியிருக்கும். பொறுமையும், இரக்கமும் உள்ளவர். அவர் அதைப் பயன்படுத்திப் பலர் அவரை ஏமாற்றிய போதும் அவர் ஏமாறுவதில்லை. நல்ல அறிவுள்ளவர். மெய்யான தவத்தைச் செய்பவர். உயிர்களிடத்து அன்பு கொண்டவர். அதனால் அவர் செய்யும் செயல்களெல்லாம் வெற்றியாகின்றன. யோகவானான அவரிடம் வருடம் பிறந்தன்று கைவிசேசம் பெற்றால் பணம் தாராளமாக வரும் என்று மக்கள் நம்புகிறார்கள். அவரைக் கொண்டு விதைப் பித்தால் விளைச்சல் பெருகும் என்று விவசாயிகள் நம்புகின்றனர். அவரைக் கொண்டு ஏடு தொடக்குவித்தால் பிள்ளைகள் நன்றாகப் படிப்பார்கள் என்று பெற்றோர் நம்புகிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் அவரது வாழ்க்கை முறை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**563. சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடிற்**

**கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்**

**நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்**

**ஓதுவ துன்னுடல் உன்மத்த மாமே.**

''சிவனடியார்களே, எண் வகைப் பூக்களால் அர்ச்சனை செய்வோரின் உள்ளத்தில் பிறைக் கீற்றுப் போலச் சுடர் ஒன்று தோன்றும். அப்படித் தோன்றினால் அதுவே நற்றவம் ஆரும். அதைத் திருவருளோடு சேர்த்து வாழுங்கள். அப்படி வாழ்ந்தால் கண்டத்தில் நிலவொளி தோன்றும். அப்படித் தோன்றினால் உடல் பொன்போல மிளிர்ந்து சிவன் வசப்படும். நினைப்பெல்லாம் சிவன் நினைப்பாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**564. மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு**

**மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு**

**வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு**

**காலத்தை வெல்லுங் கருத்திது தானே.**

''சிவனடியார்களே, நன்றாக நிமிர்ந்திருந்து வேறு சிந்தனைகள் இன்றி உயிர்ப்பினை அடக்கி (காற்றை) மூலத்துளையை அழுத்தி அடைத்தல் வேண்டும். அதன் பின் உச்சித் துளையாகிய நடுநாடியின் முடிவிடமான மேலைத் துவாரத்தின் மேல் மனத்தை வைத்தல் வேண்டும். இதனால் இந்திரியம் உடலெங்கும் பரவும். அந்நேரம் கண்களை இமைக்காது விழித்திருத்தல் வேண்டும். இந்நிலையில் புறத்தே

நாட்டமின்றி, உறக்கமின்றி, மனதை அடக்கியிருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் மரணத்தை வெல்லலாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**565. எருவிடும் வாசற் கிருவிரன் மேலே**

**கருவிடும் வாசற் கிருவிரற் கீழே**

**உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்**

**கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே.**

"சிவனடியார்களே, மலவாசலுக்கு இரண்டு விரல் மேலேயும், குறிக்கு இரண்டு விரல் கீழும் உள்ள இடம் குண்டலினியாகும். அந்நிலையில் திருவருளை திருவுருவாகக் கொண்டு நிகழும் பேரறிவும் பெரும் பிழம்பு ஒன்றும் சேர்ந்து ஒன்றாகத் தோன்றும். அதை அருளாக உணர்ந்து கொண்டார்க்குக் கருவாகிய பிறப்பினை விடுவிக்கும் அச்சிவப்பிழம்பு வெளிப்படக் கலந்து விளங்கி நின்று அருளுவான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**566. ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்**

**பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்**

**கரைத்துணர் வுன்னல் கரைதல்உள் நோக்கல்**

**பிரத்தியா காரப் பெருமைய தாமே.**

"சிவனடியார்களே, திருவருளால் துன்புறுத்தும் உபாதியாகிய மாயையை, பெரும் சோதிப்பிழம்பான சிவபெருமானை வேறு பிரித்தறியும் ஆருயிரை, மாயையிலிருந்து பிரித்துச் சிவத்துடன் சேர்க்க நினைத்தல், சேருமாறு அகத்தவத்தால் கரைத்தல், உணர்வினுள் நோக்கல் அருஞ் செயல்கள் தொகை நிலையாகிய பிரத்தியாகாரம் எனப்படும். மாயையோடு பிணைக்கப்பட்டிருக்கும் ஆருயிரின் பிணைப்பை நீக்கி அதைச் சிவத்துடன் சேர்த்து வைத்தல் பிரத்தியாகாரம் எனப்படும். இதற்குத் திருவருளுடன் கூடிய அகத்துவம் புரிதல் வேண்டும்.''

"சிவனடியார்களே, உலக பந்தங்கள் தான் மாயை. ஆசை, அவா, விருப்பம் என்ற பற்றுக்களோடு கூடிய ஆருயிரை அப்பற்றுக்களை நீக்கச் செய்து என்றும் பேரின்பத்தைத் தரும் சிவபெருமானின் திருவடி நிழலில் சேர்ப்பதே அகத்தவம். இது சிவபெருமானை அடைய மிகவும் சுலபமான வழி'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**567. புறப்பட்ட வாயு புகவிடா வண்ணந்**

**திறம்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்றால்**

**உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே**

**புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே.**

“சிவனடியார்களே, வெளியே செல்லும் நான்கு வரல் அளவுள்ள வாயுவைப் போகவிடா வண்ணம் உறுதிப்பட உள்வந்து நின்றால் ஆருயிர் அங்கே நிலை பெற்று நிற்கும். சிவபெருமானும் நீங்கிப் போகமாட்டான். உள்ளம் உறுதிப்பட்டு நின்றால் சிவன் உள்ளத்தை விட்டு நீங்க மாட்டான்.”

“சிவனடியார்களே, உள்ளே எடுத்த காற்றை அது உடனே வெளியே செல்லாமல் எடுத்தது போல அளவாக வெளியே விடல் வேண்டும். அவ்வேளையில் சிவபெருமானை மனதுள் நினைத்தால் மனதுள் இருக்கும் சிவபெருமான் மனதை விட்டு நீங்காது மனதுள்ளேயே இருப்பார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 7. தாரணை
(பொறை நிலை)

**568. கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி**

**வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்**

**காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு**

**வாணாள் அடைக்கும் வழியது வாமே.**

“சிவனடியார்களே, தாரணை என்பது பொறை நிலை. பொறை நிலை என்பது மனதை ஒரு முகப்படுத்தல். புலன்களால் அவதிப்படும் மனதைத் திருவருளின் உதவியோடு கட்டுப்படுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்திய பின்பு நடுநாடி வழியாகத் திருவருளை உற்று நோக்கதல் வேண்டும். அப்படி நோக்கினால் கண் காது முதலிய பொறிகள் காண்பதும், கேட்பதும் நிகழும். இது வாழ்நாளை முடிவு பெறாமல் தடுக்கும் வழியாகும்.”

“சிவனடியார்களே, பொறிகளுள் கண்ணும் காதும் தான் சலனத்தை உருவாக்குவது. ஒரு அழகான பொருளைக் காணும் கண் அதை அடைய முயற்சிக்கும். இனிமையான குரலைக் கேட்கும், காது அதை ரசிக்க முற்படும். கண்ணுக்கும் காதுக்கும் அழகையும் இனிமையும் எடுத்துரைப்பது மனம். மனம்

ஆசைப்படுவதை அடைய முயல்வதால் தான் திருவருள் மனதை விட்டு வெளியேறுகிறது. மெய்யான சிவனடியார்கள் மனதை ஒருமுகப்படுத்தித் திருவருளை மனதை விட்டு வெளியேறாது பாதுகாப்பர். எனது குரு எவ்வேளையிலும் கண்களை மூடியிருப்பார். அடியார்கள் அவர் முன் வந்தால் அதை உணர்ந்து திருவருளால் அவர்களது நிலையை உணர்ந்து பரிகாரம் செய்வார். இந்த நிலை கதிரேசனுக்கும் உண்டு. கண்களை மூடி செவியைக் கட்டுப்படுத்தினாரென்றால் இக் கிராமத்தில் நடைபெறப் போவதைச் சொல்வார். இது அவனது மனதில் சிவபெருமான் வீற்றிருப்பதால் நிகழ்கிறது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**569. மலையார் சிரத்திடை வானீர் அருவி**

**நிலையாரப் பாயும் நெடுநாடி யூடே**

**சிலையார் பொதுவில் திருநட மாடுந்**

**தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே.**

''சிவனடியார்களே, மேருமலையின் உச்சியில் இருந்து அருள் வெளியினூடாக பாய்ந்து வரும் மழைநீர் அமிழ்தை ஒத்தது. இத்தூய நீர் ஆருயிர்களுக்கு என்றும் தேவையானது. இது நாள் முழுவதும் இருத்தற் பொருட்டு நிலையாகப் பொழியும். திருவருள் நடுநாடி வழியாகச் சென்று வெளிக்கண் நிகழ்த்தும். அவ்வேளை சிவபெருமானின் திருக்கூற்றை எளிதாகக் காணலாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**570. மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை**

**மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை**

**ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்**

**பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.**

''சிவனடியார்களே, திருவருளுக்குரியவள் மேலை நிலத்தில் பெண். இமயமலை அரசனின் மகளான உமாதேவியாரே சிவனது சக்தி. திருவருளைத் திருமேனியாகக் கொண்ட சிவபெருமானை எழுப்புதல் வேண்டும். அத்துடன் திருவருளுடன் கூடச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவ்வுயிர் என்றும் இளமையாக இருக்கும்.''

“சிவனடியார்களே, வேதகப் பெண்பிள்ளை என்பதன் அர்த்தம் வேறு பாட்டைச் செய்பவள் என்பதாகும். மூர்த்தியை எழுப்புதல் என்பது குண்டலினியை எழுப்புவதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**571. கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி**
**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி**
**மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்கு**
**உடையாமல் ஊழி இருக்கலு மாமே.**

“சிவனடியார்களே, உயிர்ப்புப் பயிற்சியால் மூலவழியை அடைத்து உயிற்காற்றை எழுப்பி, புருவ நடுவை நோக்கியவாறு இருந்தால் பேரின்பம் உண்டாகும். அதன் பின் கொக்குப் போலப் பொறுமையாக நிற்றல் வேண்டும். அப்படி நின்றால் திருவருள் கைகூடும். நிலையான வாழ்வு கிடைக்கும். பல ஊழிகாலம் திருவருளோடு வாழலாம்.”

“சிவனடியார்களே, எதற்கும் பொறுமை அவசியம். கொக்குத் தான் நினைத்ததை அடையப் பொறுமையாக இருப்பது போல ஆருயிர்களும் பொறுமையாக இருந்தால் சிவனை அடையலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.”

**572. கலந்த உயிருடன் காலம் அறியில்**
**கலந்த உயிரது காலின் நெருக்கங்**
**கலந்த உயிரது காலது கட்டிற்**
**கலந்த உயிருடல் காலமும் நிற்குமே.**

“சிவனடியார்களே, திருவருள் ஆருயிர்களுடன் கலந்து நிற்கும் நிலைமையினைக் காலத்துடன் பார்த்து உணரல் வேண்டும். உணர்ந்தால் பெறி புலன்களுடன் கலந்துணரும் தன்மை கைவிடப்படும். கைவிடவே கடை வாயைக் கட்டி இடைவாசல் நோக்கி இனிதிருக்கச் சிவபெருமான் உள்ளத்துள்க் கலந்து வெளிப்பட்டு அருள்வான். அந்த அருளால் சிவத்துடன் கலந்த உயிர் அவ்வுடலில் நெடுநாள்த் தங்கி நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**573. வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு**

வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே.

“சிவனடியார்களே, மேன்மையான ஞானம் கைவரப் பெற்றவர்கள் மௌன நிலையில் இருப்பார்கள். அவர்கள் வாய்திறக்க மாட்டார்கள். அத்தகைய தூய உள்ளமுடையவரின் உள்ளத்தில் செம்மணி போலச் சிவன் வீற்றிருப்பார். வாய் திறந்து பேசுவோர் உயிர்ப்பினை வெளியிட்டுத் துன்பப்படுவர். இவர்கள் பிறவிப் பயனை அடையாத கோழைகளாவர்.”

“சிவனடியார்களே, பிறவியின் பயன் இறைவனை அடைதலாகும். மோன நிலை ஏற்பட்டால் தான் சிவனை அடைய முடியும். அந்நிலை ஏற்பட்டவர்கள் பேசமாட்டார்கள். மௌனமாக இருக்கும் அவரின் உள்ளத்தைச் சிவன் பூரணமாக நிரப்புவதால் அவர்களால் எதையும் நினைக்க முடியாது. நினைத்தால் தான் பேசலாம். இறுதிக் காலத்தில் எனது குரு மௌனியாக விட்டார். அதனால் அவரிடம் எதிர் காலம் பற்றிக் கேட்க வந்த சிலர் அவர் முதுமை அடைந்து விட்டார் என்றனர். சிலர் நோயாளியென்றனர். இப்படி ஒவ்வொரு காரணத்தைச் சொன்னார்கள். அவர்களின் நினைவுகள் நடைபெறாததால் தாம் நினைத்தபடியே பேசினர். அது உண்மையல்ல. அவர் மேலான நிலையில் இருக்கிறார் என்று புரியாதவர்களுக்குப் புரிய வைக்க முடியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

574. வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழுசா லேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையே.

“சிவனடியார்களே, உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு ஆங்காரத்தாற் செலுத்தப்படும் உயிர்ப்பைப் புறத்தே செல்லவிடாது தடுக்க வேண்டும். அவ்வாறு தடைசெய்யாவிட்டால் அவ்உயிர்ப்பு மனதைப் புலன்களோடு சேர்த்துத் துன்புறுத்தும். அவ்உயிர்ப்பைத் தடுத்து நிறுத்தும் வலிமையுடைய மனத்தையுடையவர் அவ் உடம்பின் கண் பல ஊழி வாழ்வர். ஏழு சாளரங்களான செவிகள் இரண்டு மூக்குத்துவாரம் இரண்டு, கண்கள் இரண்டு வாய் ஒன்று. வாய்கள் இரண்டு. அவை எழுவாய் என்றும் குதம்.கருவாய் என்றும் குறி. இவற்றோடு கூடிய உடல் காமம், வெகுளி, மயக்கங்களாகிய குப்பைகளை விலக்கிச் சுத்தமாக இருக்கும். அதை அன்பு

கொண்டு தூய்மையாக்கி அருள் விளக்கேற்றித் துன்ப இருளை நீக்க வேண்டும். அதில் குடியேறும் சிவபெருமான் என்றுமில்லாத இன்பத்தைத் தந்தருள்வான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**575. நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனால்**
**இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்**
**வரம்பினைக் கோலி வழிசெய்கு வார்க்குக்**
**குரங்கினைக் கோட்டை பொதியலு மாமே.**

``சிவனடியார்களே, ஆங்காரத்தால் செலுத்தப் பட்டிருக்கும் காற்றுக்கள் பத்தாகும். அவை, உயிர்க்காற்று,மலக்காற்று, தொழிற்காற்று, நிரவுக் காற்று, தும்மற் காற்று, விழிக்காற்று, கொட்டாவிக் காற்று, இமைக்காற்று, வீங்கற் காற்று'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**576. முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்**
**பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்**
**முன்னுறு கோடி உறுகதி பேசிடில்**
**என்ன மாயம் இடிகரை நிற்குமே.**

``சிவனடியார்களே, முன்னம் பிறந்தவர் அனைவரும் இறந்தொழிந்தனர். பிறப்புண்டேல் இறப்பும் உண்டு. அவர்கள் மணவாழ்க்கை துன்பமானது என்பதை நிலை நாட்டினர். இத்தன்மையானது திருவடிப்பேற்றைக் கனவிலும் நினையாது நனவிலும் கனவிலும் மீண்டும் மீண்டும் பிறந்து மணவாழ்க்கையில் சிறந்து வாழ வேண்டும் என்று நினைக்கும் புல்லறிவாளர்களுக்குச் சொல்லப்பட்டது. நல்லறிவாளர் மணவாழ்க்கையை நல்லபடி வாழ்ந்து கொண்டே திருவடிப்பேற்றைப் பெறுவர். அவர்கள் மீண்டும் பிறக்கச் சிவனை வேண்டார். அவர்களது மணவாழ்க்கை திருவடி நினைவான வாழ்க்கையாகும். பிறந்தவர் இறவார் என்பதற்கு ஆதாரம் உண்டா? அழிகின்ற உடல் ஒரு போதும் நிலைபெறாது''

``சிவனடியார்களே, மனைவியோடு கூடி வாழும் வாழ்க்கை இன்பமானது என்று நினைத்து அவ்வாழ்க்கை பல காலம் நீடிக்க வேண்டும் என்பதே புல்லறிவாளர்களது விருப்பமாகும். குமாரசாமி போன்றோர் நெடுநாள் வாழ விரும்புகிறார்கள். ஆனால் கதிரேசன் இன்பமான வாழ்வென்று சொல்வது துன்பம்

மிகுந்தது. எனது இனத்தவர் ஒருவர் புற்றுநோயால் அவதிப்பட்டார். அதன் துன்பத்தைத் தாங்க முடியாது யமனே என்னை அழைத்துச் செல் இனி பிறப்பு வேண்டாம் என்று அழுகிறார். நான் பலத்துடன் இருக்கும் போதே சிவன் என்னை அழைத்துச் செல்ல வேண்டும் என்று சிவனைப் பிரார்த்திக்கிறேன். பிறப்பவர்கள் இறப்பது திண்ணம். அதற்கு முன் சிவநினைவோடு வாழ்ந்து சிவனை அடைய வேண்டும் என்பதே கதிரேசனது பிரார்த்தனை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**577. அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்துப்**

**பொருத்தஐம் பூதஞ்சத் தாதியிற் போந்து**

**தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்**

**தரித்தது தாரணை தற்பரத் தோடே.**

''சிவனடியார்களே, ஆற்று வெள்ளம் கரையை அரித்துப் பாழாக்குவது போல புலப் பொருட்கள் உடலை அரித்துப் பாழாக்குகின்றது. மெய்கள் ஒன்றில் இருந்து ஒன்று தோன்றுவது போல ஒடுங்கும். உலகம் நிலையற்றது. சிவன் ஒருவன் தான் நிலையானவன் என்ற உண்மை புரிந்தவர்களுக்கு உலகப் பற்று இல்லாமற் போகும். உடலைப் பூதத்தில் ஒடுக்குதல் வேண்டும். பூதத்தை எண்ண முதலிய அகப் புறக்கலன்களில் ஒடுக்குதல் வேண்டும். சொல்லப்பட்ட மானாதிகளை மூலப் பகுதியில் ஒடுக்குதல் வேண்டும். ஆருயிரைச் சிவத்தில் ஒடுக்குதல் வேண்டும். இதுவே பொறை நிலையாகிய தாரணையாகும்.''

''சிவனடியார்களே, ஐம்புலன்களால் அரிக்கப்பட்ட உடலை பூதங்கள் ஐந்தையும் புலன்களில் ஒடுக்கி, புலன்களை அந்தக் கரணங்கள் நான்கில் ஒடுக்கி, அந்தக் கரணங்களை மாயையில் ஒடுக்கி மாயையை ஆன்மாவில் ஒடுக்கி, ஆன்மாவைச் சிவத்திலும் ஒடுக்கல் வேண்டும். கதிரேசன் ஏழை எளியவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வார். அவர் தர்மம் செய்யும் போது கணக்குப் பார்ப்பதில்லை. அதனால் மக்கள் அவரைப் போற்றினர். இதைப் பிடிக்காத குமாரசாமி அவர் புகழுக்காகக் கொடுக்கிறார் என்றான். இது தெரிந்தும் அவர் கவலைப்பட்டதில்லை. ஒரு நாள் நல்லைநாதன் குமாரசாமி சொல்வதைச் சொல்லி அதற்கு ஏதாவது செய்யும் படி கூறினான். அதற்குக் கதிரேசன் சொன்னார்,''யார் எதையும் சொல்லட்டும். நான் சிவனுக்குக் கணக்குக் கொடுப்பவன். ஆற்றங்கரையில் நிற்கும் ஆலமரம் பல விழுதுகளை விட்டிருந்தாலும் காலப்போக்கில் அது சாயும். அது போன்றது தான் மனித வாழ்வு. பிறப்பவன் இறந்தே தீருவான். இறக்கும் முன் பொருளாசையை நீக்கித் திருவருளைப் பெற முயற்சித்தல் வேண்டும். இன்று இருப்பவர்

நாளை இருப்பார் என்பதற்கு ஆதாரம் என்ன? என்று கேட்டவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 8. தியானம்
## (நினைதல்)

**578. வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்**

**பொருவாத புந்தி புலன்போக மேவல்**

**உருவாய சத்தி பரத்தியான முன்னுங்**

**குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே.**

''சிவனடியார்களே, ஆருயிர்கள் சிவநினைவுடன் ஓங்கும் பண்பு தியானமாகும். ஐம்பூதங்களும், ஐம்புலன்களும், காரணம் நான்கும் மாயையும், ஆருயிருயிருமாகப் பதினாறு மெய்களையும் ஒன்று சேர்ப்பது தியானம். இயல்பாகவே புத்தி புலன்களால் வரும் பற்றுக்களை விட்டுக் கடந்து நிற்க வேண்டும். இந்நிலை சக்தி பரத்தியான நிலையாகும் சிவகுருவை நினைத்தல் சிவத்தியானமாகும். இது உருவத்தியானம், அருவத்தியானமென இருவகைப்படும். இவை அகத்தியானமாகிய யோகத்தின் கூறாகும்.''

''சிவனடியார்களே, தியானம் மனதை ஒரு நிலைப்படுத்தும். மனம் எந்நேரமும் எவற்றையாவது சிந்தித்துக் கொண்டே இருக்கும். இதனால் தீமைகள் தான் உண்டாகும். தீயவற்றை நினைத்துத் துன்பப்படுத்துவதை ஒரு நிலைப்படுத்துவது தியானம். தியானத்தின் போது ஐம்பூதங்களும், ஐம்புலன்களும் அந்தக் கரணங்களும் சீவன் ஆகியன புத்தியில் ஒடுங்கும்.''

''சிவனடியார்களே, நல்லைநாதன் தனது மனைவியை குடித்து விட்டு வந்து துன்பப்படுத்துவான். அதனால் கதிரேசன் அவனை அழைத்து வந்து தன்னுடன் அமர்த்தித் தியானம் செய்யுமாறு பணித்தார். ஆரம்பத்தில் மனம் குழம்பிய அவன் பின் சிவனை நினைத்துக் கொண்டு கண்களை மூடியபடி பஞ்சாட்சர மந்திரத்தைச் சொன்னான். சில நாட்களில் அவனது மனம் அமைதி அடைந்தது. மேலும் சில மாதங்களில் அவன் தீயசெயல்கள் செய்வதை வெறுத்தான். அதன் பின் குடும்பம் மகிழ்ச்சியாக வாழ்ந்தது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**579. கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்**

**பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு**

**அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்**

**புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.**

“சிவனடியார்களே, ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, காது ஆகியவற்றின் செயற்கையால் ஓசை உண்டாகும். இவ்ஓசையைச் சொல்லாக்கி அச்சொல்லின் பொருளை உணர்த்துவது திருவருள். திருவருளை நினைத்தால் அண்ணாக்கின் உள்ளாக எல்லையின்றி எங்கும் பரந்துள்ள பேரொளியைக் காணலாம். அப்பயிற்சியால் நம்மை வருத்தும் பிறப்பு, இறப்புக்களைத் தவிர்க்கலாம். இத்தகைய பழம் பொருள் திருவருளாகும்.”

“சிவனடியார்களே, முதலில் வெறுப்புடன் தியானத்தில் அமர்ந்த நல்லைநாதனின் மனம் அதில் லயிக்கத் தொடங்கியது. மனம் தீயவற்றை எண்ணாது விட்டது. உயிர்கள் இன்பம் அனுபவிக்கவே சிவபெருமானால் படைக்கப்பட்டன என்ற எண்ணம் உண்டாகிவலுப் பெற்றது. அவனுக்குக் கதிரேசனின் புத்திமதிகள் மகிழ்ச்சியைக் கொடுத்தன. அதனால் அவன் தியானத்தில் ஈடுபட முன் அது பற்றிக் கேட்பான், “நல்லைநாதா, எமது புலன்கள் ஐந்தும் சேர்ந்து சொற்களை உண்டாக்கிப் பொருளையும் தெரிந்து கொள்ளப் பரம் பொருளாக திருவருள் உதவி செய்கிறது. சிவனை நினைத்துக் கொண்டு தியானத்தில் ஈடுபட்டால் சிவன் சோதிப் பிழம்பாக உணர்வுகளுக்குள் நுளைந்து காட்சி தருவான். அதனால் மனதை அடக்கிச் சிவனின் பாதங்களில் சமர்ப்பி என்றார்” சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**580. ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்**

**கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்**

**விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்**

**பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே.**

“சிவனடியார்களே, அதன் பின் கதிரேசனுடன் நல்லைநாதன் தியானத்தில் ஈடுபடுவான். அவர் அன்று சொன்னார், “நல்லைநாதா புருவநடுவை உற்றுப் பார். மெய்யுணர்வு ஒளி வெளிப்படும். கண்களை மூடி அகக்கண்ணால் பார். உன்னால் பார்க்க முடியாவிட்டால் திருவைந்தெழுத்தை ஓது. மனம் ஒரு நிலைப்படாவிட்டால் எதுவும் நடைபெறமாட்டாது. சோதி வெளிப்பட்டால் திருவருள் வெள்ளம் போலப் பாய்ந்து வரும். அப்போது முழுமுதற் கடவுளான சிவபெருமானைக் கண்டு களித்துப் பேரின்பம் காணலாம்” என்பார். நல்லைநாதனின் உள்ளத்தில் ஒரு சிறுபொறி போலத்

தோன்றிய சோதி வளர்ந்த போது அதனுள் சிவனின் உருவம் தெரிந்தது. இதற்குக் காரணம் மனமாகும். மனம் நினைப்பதைச் செயற்படுத்தும் படி நெருக்கடி கொடுக்கும். முன்பு கள்ளைக் குடி என்று நெருங்கிய மனம் திருவருளின் துணையால் அதை மறந்து சிவனைக் காண வேண்டும் என்று விரும்பியதால் தான் இது சாத்தியமானது. எதை நினைக்கிறோமோ அதுவாவோம் என்று உபநிடதம் கூறுகிறது. இது உண்மை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**581. ஒருபொழு துன்னார் உடலோ டுயிரை**

**ஒருபொழு துன்னார் உயிருட் சிவனை**

**ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை**

**ஒருபொழு துன்னார் சந்திரப் பூவே.**

''சிவனடியார்களே, நல்லைநாதன் குடிக்கும் நாட்களில் தான் நடந்து கொண்ட முறைகளைத் தனது நண்பர்களுக்குக் கூறுவான். குடித்து விட்டு பிறருடன் சண்டையில் ஈடுபடுவது. பெண்களோடு சல்லாபமிடுவது நல்லவர்களைப் பரிகசிப்பது என்பவற்றைச் செய்தேன். அப்போது நான் திருவருளைப் பற்றி எண்ணுவதில்லை. உடல் உயிர்ப்பைப் பண்பை உணர்ந்ததில்லை. சிவனை நினைப்பதில்லை. அவனுடைய மகிமையை உணர்ந்ததில்லை. பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்ததில்லை. உச்சித்துளையில் சிவனருளால் தோன்றும் தூய தாமரைப் பூவை நினைத்ததில்லை. அதனால் என்றும் துன்பம் தான். இப்போ சிவனது நினைவால் தியானம் செய்யும் போது முன்பு செய்தவற்றை நினைத்து வருந்துகிறேன் என்று சொல்கிறானாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**582. மனத்து விளக்கினை மான்பட ஏற்றிச்**

**சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி**

**அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட**

**மனத்து விளக்கது மாயா விளக்கே.**

''சிவனடியார்களே, அன்றொரு நாள் நல்லைநாதன் எனது குருகுலத்திற்கு வந்தான். அவன் இதற்கு முன்பு வருவதில்லை. அன்று பலர் இருந்தமையால் அவன் தனிமையாக இருந்தான். எல்லோரும் சென்றதும் என்னருகில் வந்த அவன் சொன்னான், ''சுவாமி, எனது வாழ்நாளை வீண்நாளாக்கி விட்டேன். எனது முதலாளி எனது

தீயசெயல்களைக் கண்டு இரங்கி எனக்குப் புத்திமதிகள் கூறியதால் நான் திருந்தி விட்டேன். திருவருள் என்ற விளக்கை எனது உள்ளத்தில் கதிரேசன் ஏற்றி வைத்தார். அவர் சொல்வார்,“நல்லைநாதா, திருவருளின் துணையோடு மனத்துள் விளக்கை ஏற்று. நல்லபடி சிவநினைவுடன் தியானம் செய்து ஏனைய கருவி கரணங்களை வழிப்படுத்தி அவ்விளக்கைத் தூண்டினால் காமம் அகலும். வெகுளி மயக்கங்கள் நீங்கும். அப்பொழுது மனத்து விளக்கு மாயாவிளக்காகும். அதனால் தீவினைகள் யாவும் அழியும்” என்றவர். நான் தினமும் தியானத்தில் ஈடுபடுவதால் தீய செயல்கள் யாவும் நீங்கி விட்டன. நான் ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தேன். அதனால் தினமும் வீட்டில் பிரச்சினை. அப்பெண்ணின் வீட்டார் பலமுறை என்னைத் தாக்கியுள்ளனர். நான் தியானம் செய்யத் தொடங்கிய பின் அவையெல்லாம் திருவருளால் அகன்று விட்டன. இப்பொழுது நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன். எனக்கு வேலையில்லாத நேரங்களில் ஆச்சிரமத்திற்கு வந்து தொண்டுகள் செய்ய விரும்புகிறேன்” என்று சொல்லுமளவிற்குத் தியானம் அவனை மாற்றி விட்டது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**583. எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்**

**கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை**

**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிற்**

**கண்ணாடி போலக் கலந்துநின் றானே.**

“சிவனடியார்களே, எண்ணாயிரம் ஆண்டுகள் யோகம் செய்தாலும் சிவபெருமானைக் கண்டறிய முடியாது. பற்றற்று மனதால் நினைத்து, திருவருளை உணர்ந்து யோகநிலையில் இருந்தால் எம்முடன் கலந்து தன்னைக் காட்டுவான். நாம் கண்குளிரக் காணலாம். கண்ணாடியைப் பார்ப்போர் தன்னையும் கண்ணாடியையும் காண்பர். அது போல ஆருயிர்கள் சிவபெருமானைக் காணும் கண்ணால் தன்னையும் கண்டு கொள்வர். என்பதை ஆரம்பத்தில் உணராத நல்லைநாதன் கதிரேசனின் கண்டிப்புக்காகத் தான் தியானம் செய்வது போலக் காட்டினான். கதிரேசன், நல்லைநாதன் தன்னைச் சமாளிக்கவே அவ்வாறு நடந்து கொள்கிறான் என உணர்ந்து சொன்னர், “நல்லைநாதா உன்னைத் திருத்த வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். நீ ஒழுங்காகத் தியானம் செய்த பின் முன்போலவே நடந்து கொள்கிறாய். இவ்வாறு நீ எண்ணாயிரம் வருடங்கள் தியானம் செய்தாலும் சிவனைக் காணாமாட்டாய். அதனால் உனது துன்பங்களும் தீராது. உனது நடைமுறையை மாற்று விருப்புடன் எதையும் செய். குடிக்கும் போது விருப்புடனும், மகிழ்வுடனும் குடிப்பதைப் போல தியானம்

செய்யும் போதும் மகிழ்வுடனும், விருப்புடனும், நம்பிக்கையுடனும் செய். இல்லாவிட்டால் எழுந்து போ. நான் உன்னை வற்புறுத்தவில்லை என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**584. நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**

**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை**

**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை**

**தேட்டமும் இல்லை சிவனவ னாமே.**

''சிவனடியார்களே, நாட்டங்களான உலக நாட்டம், உடல் நாட்டம் என்ற இரண்டையும் புருவ நடுவுக்கு நேராக உள்ள மூக்கு நுனியில் வைத்தல் வேண்டும். அவ்வாறு வைத்து உயிர்ப்பாகிய மூச்சை அடக்கி அசைவற்று இருந்தால் திருவருள் ஒளி உள்ளத்துள் உண்டாகும். அவ்வொளி காணப்படுமானால் உடம்புக்கு எந்த வாட்டமும் ஏற்படாது. அத்துடன் உடம்புக்கு அழிவும் ஏற்படமாட்டாது. உயிர்ப்புப் புறம் செல்வதாகிய ஓட்டமும் இல்லை. புறப்புலன்களுக்கான நாட்டமும் ஏற்படமாட்டாது. தன்முனைப்பில்லை. எவ்வகையான வேட்கைகளும் இல்லை. அவனே சிவனாவன்.''

''எமது ஆச்சிரமத்திற்குத் திருநாவுக்கரசு என்ற சிவனடியார் அடிக்கடி வந்து தியானத்தில் ஈடுபடுவார். அவரது மனைவியும், பிள்ளைகளும் தியானஞ் செய்வதற்கு இடையூறாக இருப்பதால் அவர் அடிக்கடி வருவார். மரநிழலில் அமர்வார். அவர் உயிர்ப்பாகிய மூச்சை அடக்கி மூக்கு நுனியைப் பார்த்து அசைவற்று இருந்தால் அவர் திருவருளோடு ஒன்றிக் கலந்து விட்டார் என்று அர்த்தம். மரநிழலில் இருந்தால் மழை பெய்வது கூட அவருக்குத் தெரியாது. சுற்றுவட்டாரத்தில் நடைபெறுவது எதுவும் தெரியாது. தானாக எழுந்து வரும் போது அவரது உடல் மழையில் நனைந்த தன்மை தெரியாது. அந்த மழையில் இரண்டு நாள் நனைந்தாலும் அவரது உடல் பாதிக்கப்படமாட்டாது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**585. நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்டு**

**உயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்**

**துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்**

**பயனிது காயம் பயமில்லை தானே.**

“சிவனடியார்களே, கண்களை நடு மூக்கின் மேல் வைத்து சிவனை நாடுக. உயர்ந்தெழுத்து புறத்தே போகும் உயிர்ப்பினை உள்ளே ஒடுக்குக. பிறப்பெடுத்தமையால் வந்து சேர்ந்த துன்பங்களை நீக்குமாறு சிவனை வேண்டுங்கள். உங்கள் துன்பம் நீங்கும். அதனால் உடம்புக்கு அழிவு உண்டாகாது. அதுவே வாழ்வின் பெரும் பயனாகும்.”

“சிவனடியார்களே, திருநாவுக்கரசு சில காலங்களின் பின் எமது ஆச்சிரமத்திற்கு வந்து நிலையாகத் தங்கி விட்டார். அவருக்கு நோய்வந்ததில்லை. சில சமயங்களில் குடும்பத்தினரை நினைத்து மனம் கலங்குவார். அப்போது அவர் மூக்கின் நுனியைப் பார்த்தபடி நீண்ட நேரம் தியானத்தில் இருப்பார். தியானம் கலைந்து எழுந்ததும் அவர் சுறு சுறுப்பாகி விடுவார். “குருவே, தியானம் எனது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. இன்று எனது மகன் ஆசிரிய நியமனத்திற்காக நேர்முகப் பரீட்சைக்குச் செல்கிறான். நான் தியானத்தில் இருந்து சிவனுக்கு எனது மகனின் நிலையைச் சொன்னேன். அவனுக்குக் கட்டாயம் வேலை கிடைக்கும்” என்று மகிழ்வுடன் சொன்னவர். சொன்னபடி அவனுக்கு வேலை கிடைத்து விட்டது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**586. மணிகடல் யானை வார்குழல் மேகம்**

**அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்**

**தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்**

**பணிந்தவர்க் கல்லது பார்க்கஒண் ணாதே.**

“சிவனடியார்களே,அகத்தவத்தால் மனதுள்ளே எழும் ஓசை பத்தாகும். அவை மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் முதலியனவாகும். இப்பத்தோசையை ஒத்த ஓசைகள் அகத்துள் எழும். அகத்தவத்தால் சிவனை அடைந்தவர்களுக்கே இவ்வோசை உண்டாகும். இதுவே திருச்சிலம்போசையாகும். ஏனையோர்க்கு இவ்வோசை கேட்காது.”

“சிவனடியார்களே, திருநாவுக்கரசு தியானத்தில் இருக்கும் போது கதைப்பார். உனது காதுகளில் சிவனின் மணியோசை கேட்கிறது என்பார். கடல் ஆர்ப்பரிக்கும் சத்தம் கேட்கிறது என்பார். யானை பிளிறுகிறது என்பார். சிவனை மகிழ்விக்க யாரோ புல்லாங்குழல் இசைக்கின்றனர் என்பார். இடியோசை கேட்கிறது என்பார். கடல் ஆர்ப்பரிக்கும் சத்தம் கேட்கிறது என்பார். வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. மனதிற்கு ரம்மியமாக இருக்கிறது என்பார். சிவத்தலத்தில் சங்கு

முழங்குகின்றது என்பார். சிவன் வீதியுலா வருகிறான். பேரிகை முழங்குகின்றது என்பார். சிவனை வசீகரிக்க யாரோ இனிமையாக யாழ் வாசிக்கின்றனர்'' என்பார். இவற்றைக் கேட்போர் அவை தமக்குக் கேட்கவில்லை என்பார்கள். தியானம் முடிந்து எழுந்தால் அவருக்குத் தான் சொன்னவை தெரியாது'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**587. கடலொடு மேகம் களிறொடும் ஓசை**

**அடவெழும் வீணை அண்டரண் டத்துச்**

**சுடர்மன்னு வேணு சுரிசங்கின் ஓசை**

**திடமறி யோகிக்கல் லாற்றெரி யாவே.**

''சிவனடியார்களே,அன்று திருநாவுக்கரசு தனக்குப் பல்வேறு விதமான ஓசைகள் கேட்கின்றன என்று மகிழ்வுடன் கூறினார். இப்போ சிவனுக்குப் பூசை நடைபெறுகிறது. மணிச்சத்தம் கேட்கிறது. அரோகரா அரோகரா அரோகரா என்று சொல்லிக் கொண்டிருந்தார் பின் கடல் ஆர்பரிக்கும் ஓசை கேட்கிறது என்றும் அதன் பின் இனிமையான புல்லாங்குழலைத் தேவர்கள் இசைக்கின்றனர்'' என்றும் சொல்லி ஆனந்தப்பட்டார். அப்போது அங்கு வந்த வெளியூர் அடியவர் ஒருவர் குருவிடம் வந்து,''இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது போலத் தெரிகிறது. கடல் ஆர்ப்பரிக்கிறது என்கிறார். மணியோசை கேட்கிறது என்கிறார் புல்லாங்குழலைத் தேவர்கள் இசைக்கிறார்கள் என்கிறார். அவை யாருக்கும் கேட்கவில்லை. இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்றவர். அதற்குக் குரு சொன்னார், ''அடியவர்களே, அறியாமல் எதையும் பேசக்கூடாது. அவர் அகத்தவத்தின் மூலம் திருவருள் கைவரப் பெற்றவர். அதனால் தான் அவர் தியானம் செய்யும் போது அவ்வொலிகள் கேட்கின்றன. திருவருள் கைவரப்பெற்ற புண்ணியவான்களுக்குத் தான் கேட்கும். மற்றவர்களுக்குக் கேட்காது'' அதனால் தான் நான் சிவனடியார்களுக்கு அதைத் தெரிவிக்கின்றேன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**588. ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்**

**பாசம் இறங்கப் பரிந்துயி ராய்நிற்கும்**

**ஓசை யதன்மணம் போல விடுவதோர்**

**ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே.**

“சிவனடியார்களே, வெளியூரில் இருந்து வந்த அந்த அடியவரால் அதை நம்பமுடியவில்லை என்று அவரது முகம் காட்டியது. அதை உணர்ந்த குரு கேட்டார்,“உங்களால் அதை நம்பமுடியவில்லையா..? சமயம் என்பது நம்பிக்கை. கடவுள் இருக்கிறார். அவர் தான் மாயையின் உதவியோடு உலகையும் உலகில் வாழும் மக்களையும் படைத்தவர். உலக விரிவும் இயக்கமும் ஓசையால் இயங்குகின்றன. உலகம் மக்களின் மனதில் இருந்து துன்பப்படுகிறது. அதை அகற்றவே முதற் காரணமாகிய மாயையில் இருந்து படைக்கப்பட்டது. இவ்வுண்மையை உணரவல்லவர் தான் ஆண்டவனை நம்புபவர்களாவர். உலகில் நாம் காணாத பொருட்கள் பலவுள்ளன. அதற்காக நாம் அவை இல்லை என்று சொல்ல முடியுமா? நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள். இங்கு நடைபெறுபவற்றை யாரோ சொல்லக் கேட்டு நம்பியதால் தானே வந்தீர்கள். நீங்கள் பைத்தியக்காரன் என்றவர் பெரும் தனதந்தவர். அவரைப் பார்த்தால் அப்படித் தெரிகிறதா? மெய்யடியார்கள் காண்பதும், கேட்பதும் சிவசொருபங்கள். அவர்கள் தாம் கண்டதைக் கண்டபடி கூறுவார்கள். கூறும் போது நாம் அதைக் கேட்கவேண்டும். அது அவர்களுக்கு நினைவிராது” என்று குரு சொன்னவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**589. நாத முடிவிலே நல்லாள் இருப்பது**
**நாத முடிவில்நல் யோகம் இருப்பது**
**நாத முடிவிலே நாட்டம் இருப்பது**
**நாத முடிவில்நஞ் சுண்ட கண்டனே.**

“சிவனடியார்களே, ஓசை முடிந்த இடத்தில் தான் திருவருள் வெளிப்படும். நாத முடிவில் தான் யோகம் இருக்கும். நாத முடிவில் நாட்டம் கொண்டால் நீலகண்டனாகிய சிவனைக் காணலாம். சிவனடியார்களே, சிவன் நாத வடிவானவன். நாதப்பிரியன். இசையை வடிவமைத்து அதனுள் நாதப் பிரவாகமாக இருப்பவன். அதனால் நாத முடிவும் அவன் தான். வெளியூர்ச் சிவனடியார்ருக்குச் சிவனைப் பற்றி எதுவும் தெரியாது. அதை அறிந்து கொள்ளத்தான் அவர் ஆச்சிரமத்திற்கு வந்தவர். ஆச்சிரமத்தில் பக்தர்கள் நடந்து கொள்ளும் முறைகள் அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தன. அத்துடன் நிகழ்வுகளை அவரால் நம்பமுடியவில்லை. “நாதத்தின் முடிவில் எப்படித் திருவருள் வெளிப்படும்” என்று கேட்டார். சில விடயங்களுக்குப் பதில் கூறமுடியாது. அதை நம்ப வேண்டும். செயற்பாட்டால் விடைபுரியும். அயலூரிலே எந்தக் கணக்கைக் கேட்டாலும் விடை சொல்லக் கூடிய ஒரு கணித மேதை இருந்தார். அவரைச் சோதிக்கவென வந்த ஒருவர் பிழையான ஒரு கணக்கைச் சொன்னார். அது

பிழையானது என்று அந்தக் கணித மேதைக்குத் தெரியும். அதனால் ஒரு விடையைச் சொன்னார். கேள்வி கேட்டவர் அது பிழையென்றார். பிழையென்றால் அதை நிறுவுங்கள்'' என்றார் மேதை. அவராலை நிறுவமுடியவில்லை. அப்படியானது தான் இதுவும். விதண்டா வாதத்தை விட்டு விட்டு நம்பினால் எல்லாம் நடக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**590. உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துந்**

**துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி**

**அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்**

**கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே.**

''சிவனடியார்களே, அகத்தே மூல முதலில் தோன்றும் ஆறு நிலைகளிலும் அது போல, அகத்தே காணப்படும் திங்கள் முதலிய ஐந்து விளக்கங்களிலும் பேரொளி உண்டாகும். அகத்தே தோன்றும் ஆறு நிலைகளாவன மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சம்,மிடறு, புருவ நடு, அது போல அகத்தே காணப்படும் விளக்கங்களாவன திங்கள், ஞாயிறு, தீவிளக்கு, பரவெளி இந்தப் பதினொரு இடங்களிலும் திருவருளின் துணையால் பேரொளி உண்டாகும். அவற்றால் ஆணவ வல்லிருள் அகலும். புலன் எனப்படும் பூதங்கள் முதலிய தன்மாத்திரைகள் ஐந்தினுள் சிறந்தது ஓசை. அது ஒடுங்க வேண்டும். அது ஒடுங்கினால் கொன்றை மாலை அணிந்த சிவனது திருவடியை அடையலாம். புற ஓசைகள் அடங்கியதும் அகவோசை தோன்றும்.''

''வெளியூரில் இருந்து வந்த அந்த அடியவரின் முகத்தில் சந்தேகரேகைகள் இருந்தன. அதை அகற்ற வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது,''அடியவரே உமக்கு ஐந்தாறு வயதில் பிள்ளை இருக்கா?'' என்று கேட்டேன். அவர்,''ஆம் என்றார். ஒரு சிறுவன் தொலைக்காட்சியில் மிருகங்கள் கதைப்பதைப் பார்க்கிறான். அவனது ஆசிரியரும் மிருகங்களைப் பற்றிய கதைகள் கூறும் போது மிருகங்கள் கதைப்பதாகக் கூறுகிறார். அவன் தனது நாயைக் கதைக்கும்படி கேட்கிறான். அது கதைக்காததால் அவன் கவலைப்படுகிறான். அதற்குக் காரணம் அவனது வயது. வயது செல்லச் செல்ல அது கதை என்பது அவனுக்குப் புரியும். அது போல உமக்கும் சமய அனுபவம் போதாது. புராணக் கதைகளை வாசியுங்கள் என்றேன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

591. பள்ளி அறையிற் பகலே இருளில்லை

கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்

ஒள்ளி தறியிலோ ரோசனை நீளிது

வெள்ளி அறையில் விடிவில்லை தானே.

‘‘சிவனடியார்களே, பள்ளியறையில் எப்பொழுதும் பேரொளிப் பெருவிளக்கு ஒளிர்ந்து கொண்டிருப்பதால் அது ஒரு போதும் இருளடைவதில்லை. அந்த விளக்கை யோகிகளும், ஞானிகளும் காண்பார்கள். ஞானத்தில் ஞானத்தைக் கண்டவர்கள் யோகிகளும் ஞானிகளும். இவர்களின் உடல்கள் சுடுகாட்டில் எரிக்கப்படுவதில்லை. இடுகாட்டில் புதைக்கப்படுவதில்லை. கல்லறையில் அடக்கப்படுதல் இல்லை. திருவருளின் அருளால் சிவனின் திருவடி நிழலை அடைந்தவர்கள் என்றும் அப்பேரொளியில் கலந்திருப்பதால் அவர்களுக்கு ஒரு போதும் இருள் இல்லை. இருள்மலமான ஆணவம் அவர்களைப் பற்றாது. ஞானிகளதும் யோகிகளது உடல்கள் இயல்பாகவே ஐம்பூதங்களுடனும் கலந்து கொள்ளும்.’’

‘‘இதிலும் அந்த வெளியூர் அடியாருக்குச் சந்தேகமேற்பட்டது. ஐம்பூதங்களால் ஆனது உடல். ஞானிகளது உடலில் ஐம்பூதங்களும் பாலும் நீரும் போலக் கலந்திருக்கும். அவற்றைப் பிரிக்க முடியாது. அது போல ஐம்பூதங்களும் பிரிவின்றிக் கலந்திருப்பதால் அவை வேறு வேறாகாது ஒன்றாகி விடும். ஏனையோரது உடல் ஐம்பூதங்கலானாலும் நீரும் எண்ணெயும் போல உயிருடன் இருக்கும் போதே கலக்காதிருக்கும். அதனால் அவை தனித்தனியாக இருப்பது போலவே கலக்கும்’’ என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறினார்.

592. கொண்ட விரதங் குறையாமற் றானொன்றித்

தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு

மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்

பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே.

‘‘சிவனடியார்களே, உயிர்ப்புப் பயிற்சியால் அகத்தவ நோன்பைக் குறைவின்றிச் செய்தால் திருவருளுடன் ஒன்றாகும் நிலை தோன்றும். அதன் பின் உயிர்ப்பு நடு நாடி வழியாக மேலேறிச் செல்லும். அப்படிச் செல்லும் நிலைக்குட்பட்டவரே அகத்தவ யோகிகளாவர். அவர்களுக்கு சூரியன், சந்திரன், தீ ஆகிய மூன்றும் ஒப்ப வளரும். அப்படி வளர்ந்தால் உயிருக்கு அழிவில்லை. உடம்பும் ஊழி ஊழியாக நீங்காது’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

593. அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே.

“சிவனடியார்களே, புறத்தும் அகத்தும் காணப்படும் அவ் ஒளி மண்டலங்கள் மூன்றையும் அவரவரே கட்டிக்காக்கும் தேவராவர். அவ்வொளி மண்டலங்கள் அத்தேவர்களுக்கு உரிமையாக அமையும். ஏனையவர்களுக்கு அவை துணைக்கருவிக் கூட்டமாக அமையும். அம்மூன்று ஒளி மண்டலங்கள் ஞாயிறு, திங்கள், தீ என்பனவாகும். இம்மூன்றையும் கட்டிக் காப்பவர்கள் அவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

594. இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப்பெரும் பாசத் துருவிடு மாகில்
இளைப்பின்றி மார்கழி ஏற்றம தாமே.

“சிவனடியார்களே, ஆணவ வல்லிருள் உடலில் இருந்தால் உடல் இளைக்கும். தோன்றும் ஒளி மண்டலங்களான சூரியன், சந்திரன், தீ மூன்றும் ஒற்றுமைப்பட்டு அன்பினால் உணர்ந்து ஆராய்ந்தால் இளைப்பு அகலும். திருவருளைத் துணை கொண்டு ஆராய்தல் வேண்டும். இதற்கு ஏற்ற மாதம் மார்கழியாகும். மார்கழி மாதத்தில் திருவாதிரைத் திருநாள் வருவதால் அது புனிதமான மாதமாகும். இத்திருவாதிரை மாதம் சிவனுக்கு விருப்புடைய மாதமாகும். உலகத் தோற்றத் தொழில்கள் முடிவடைவதலும் பின் தோன்றலும் இத்திருவாதிரைத் திருநாளில் தான். அத்துடன் அகத்தவத்தினருக்கு அகத்தே புதிய புதிய நிகழ்வுகள் உண்டாவதும் இம்மாதத்தில் தான்.”

“அந்த வெளியூர் அன்பர் கேட்டார்,“குருவே, ஆணவ வல்லிருள் உடலைச் சார்ந்தால் உடல் இளைக்கும் என்கிறீர்கள். அதை எப்படிக் கண்டு பிடிப்பது.”

“அடியவரே, எமது உறுப்புக்கள் அனைத்தையும் காட்டும். முகமும், கண்களும் இரக்கம், அன்பு, திமிர், கோபம் என்பவற்றைக் காட்டுவது உங்களுக்குத் தெரியாதா..? எமது ஊரில் கதிரேசன் என்றொருவர் வாழ்கிறார். அவரை எப்படியானவர்,

ஏழையா பணக்காரனா என்று வெளியூரவர் கண்டு கொள்ளமாட்டார்கள். அவரது பேச்சில் இருந்தும், செயல்களிலிருந்தும், முகத்திலிருந்தும் அவர் எப்படியானவர் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவரிடம் பல்வேறு உதவிகளைப் பெற்றவர் அருணாசலம். அவருக்கு முன்னால் தோளில் சால்வை போடமாட்டார். செருப்பணியமாட்டார். புகைப்பிடிக்கமாட்டார். அவரது பிள்ளைகள் இருவர் வெளிநாட்டுக்குச் சென்றதால் பணம் வந்தது. அவர் யாரையும் மதிப்பதில்லை. தோளால் சால்வையை எடுத்ததில்லை. எல்லோருக்கும் முன்னால் புகைப்பார், மதுபானம் அருந்துவார். மதிப்பில்லாமல் கதைப்பார். அதைப் பற்றி ஊரவர் கதைத்தால் கதிரேசன் சொல்வார்,''நான் எனக்கு முன்னால் தோளில் சால்வை போட வேண்டாம் என்று சொல்லவில்லை. புகைக்க வேண்டாம், குடிக்க வேண்டாம் என்றும் சொல்லவில்லை. அவற்றைச் செய்யும் படியும் சொல்லவில்லை. சுயநலம் முன்னதைச் செய்தது. ஆணவம் பின்னதைச் செய்கிறது'' என்றார். இது தான் வல்லிருலான ஆணவத்தின் இயல்பு'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**595. முக்குண மூடற வாயுவை மூலத்தே**

**சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்**

**தக்க வலமிடம் நாழிகை சாதிக்க**

**வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே.**

''சிவனடியார்களே,முக்குணங்கள் ஆருயிரை மூடியிருக்கும். அது அகல உயிர்ப்பை மூலத்தில் முறைப்படி பிடித்தல் வேண்டும். பின்பு வலப்பால், இடப்பால் நாடி வழியாக மாறி மாறிப் பயிறல் வேண்டும். குறித்த நாழிகைவரை அகத்தே தடுத்தல் வேண்டும். அப்படிச் செய்தால் உயிர்நிலையாகிய உடம்பைச் சிவபெருமான் நிலைப்பித் தருள்வான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**596. நடலித்த நாபிக்கு நால்வழரன் மேலே**

**மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே**

**கடலித் திருந்து கருதவல் லார்கள்**

**சடலத் தலைவனைத் தாமறிந் தாரே.**

''சிவனடியார்களே, அழகான கொப்பூழுக்கு நான்கு விரல் மேலும் இதழ் விரித்த வாணியாகிய ஓசை பிறக்கும் இடத்திற்கு இரு விரல்கள் கீழுமாக அலையற்ற கடல்

போல அசைவற்றிருக்கும் சிவபெருமானை வணங்குதல் வேண்டும். அப்போது வணங்குவோர் தன்னையும் சிவனையும் அறிந்தவராவர். சிவகுருநாதருக்கு ஒரேயொரு மகள். அவர் கதிரேசனின் மைத்துனர். கதிரேசனின் பிள்ளைகள் சிவகுருநாதனின் ஆனந்திக்கு முறை மாப்பிளைகள். சாதம் பொருந்தாமையால் அவளைத் தனது பிள்ளைகளுக்குச் செய்ய அவர் விரும்பவில்லை. ஆனால் அதைப் பற்றி சிவகுருநாதன் அவருடன் பேசியதில்லை. அவர் வழமை போல தினமும் கதிரேசனின் வீட்டிற்கு வந்து போவர். ஒரு நாள் கதிரேசனின் மகனிடம் வைத்தியராக கடமை புரியும் அரவிந்தனுக்கு ஆனந்தியைத் திருமணம் செய்து வைத்தார். அப்பொழுது சிவகுருநாதர் சொன்னார், ‘‘எனது மைத்துனன் சிவனையும் தன்னையும் அறிந்தமையால் தான் ஊர் மக்களின் துன்பங்களைத் தீர்க்கிறார் என்று’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**597. அறிவா யசத்தென்னு மாறா றகன்று**

**செறிவான மாயை சிதைத் தருளாலே**

**பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி**

**நெறியான அன்பர் நிலையறிந் தாரே.**

‘‘சிவனடியார்களே, திருவருளால் மெய்யுணர்வு பெற்றவர்கள் முப்பத்தாறு மெய்களும் நிலையற்றனவென்று உணர்வர். அப்படி உணர்ந்து கொண்டால் மாயைப் பற்று விலகும். அப்போது அவர்கள் பேரருளில் சாரும் தன்மையை அறிவர். இவர்கள் தான் முழுவதையும் உணர்ந்தவர்கள். பற்றுக்கள் அகல அகலத் திருவருளின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்லும். அகன்றால் அவர்கள் முழுமையானவர்களாவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 9. சமாதி
(நொசிப்பு)

**598. சமாதி யமாதியிற் றான்செல்லக் கூடும்**

**சமாதி யமாதியிற் றானெட்டுச் சித்தி**

**சமாதி யமாதியில் தங்கினோர்க் கன்றே**

**சமாதி யமாதி தலைப்படுந் தானே.**

‘‘சிவனடியார்களே, தீயவற்றை அகற்ற வேண்டும். நல்லவற்றைச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் செயல்கள் அற்றுச் சமாதி நிலை உண்டாகும். எனது குரு ஆச்சிரமம் அமைத்து அதில் குடி வந்த போது ஒரு சிலர் மட்டுமே அவருடன்

கூட இருந்தனர். நானும் அதன் பின்பு தான் ஆச்சிரமத்திற்கு வந்தேன். துயர துன்பங்களுடன் ஆச்சிரமத்திற்கு வரும் அடியார்களுக்கு வேண்டிய அனைத்தையும் எனது குரு செய்து கொடுப்பார். தேவார திருவாசகங்களை அச்சிட்டுக் கொடுப்பார். சமய விளக்கங்களைக் கொடுப்பார். யோகம் தியானம் முதலியவற்றைக் கற்பிப்பார். மக்களிடம் தீயபழக்கங்கள் இருந்தால் அவற்றை அகற்றுவார். ஏழை எளியவர்கள் தொழில் செய்வதற்கு உதவிகள் பலவும் செய்வார். உயிர்க் கொலைகளைத் தவிர்ப்பார். தியானம் செய்வார். இதனால் அவர் சமாதி நிலைக்காட்பட்டார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**599. விந்தும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்**

**சந்தியி லான சமாதியிற் கூடிடும்**

**அந்த மிலாத அறிவின் அரும்பொருள்**

**சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.**

''சிவனடியார்களே, நடுநாடியாகிய மேருவின் கண் விந்தும் நாதமும் ஒடுங்கினால் திருவருள் வெளிப்படுதலாகிய சமாதி நிலை உண்டாகும். அவ்வேளையில் சிவபெருமானின் வர்ணிக்க முடியாத வனப்புப் பேரொளி தோன்றும். இது சமாதி நிலையாகும். பற்றுக்கள் முழுவதையும் நீக்கி, சிவநினைவுடன் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து மக்களின் சமயப் பற்றை அதிகரிக்கச் செய்து வாழ்பவர்கள் சமாதி நிலையை அடைந்தவராவர். அவர்களுக்கு உலகில் நடைபெறும் எதுவும் தெரியாது. எதுவும் கேட்காது. எதையும் உணரவும் முடியாது. சிவனோடு உறவு கொண்டு கதைத்துச் சிரித்து விளையாடுவார்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**600. மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு**

**மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை**

**மன்மனத் துள்ளே மகிழ்ந் திருப்பார்க்கு**

**மன்மனத் துள்ளே மனோலய மாமே.**

''சிவனடியார்களே, மனம் அருவுடலில் நின்று புறத்தேயுள்ள பொறிகளில் பொருத்துவது போல அகத்தில் கரணத்திலும் பொருந்தும். அதனால் அது பொருந்து மனம் எனப்பட்டது. அத்தகைய மனம் எங்குண்டோ அங்கெல்லாம் உயிர்ப்புப் புடைப் பெயர்ச்சியும் உண்டு. மனதில் சலனமில்லாத விடத்து உயிர்ப்பின் அசைவும்

இருக்கமாட்டாது. சிவனது திருவடிகயைப் பற்றிய மனம் அசையாத மனமாகும். அப்படியான மனமுடையாரின் மனம் ஒடுங்கச் சிவன் தனது திருவடியைக் கொடுப்பான்.''

''மனம் சலனமற்றிருந்தால் அதாவது பற்றுக்களற்று இருந்தால் அது அசையாத மனமாகும். எந்தப் பற்றும் மனதைப் பாதிக்காது. சிவனைப் பற்றிய நினைவில் அம் மனம் பூரணமாக மகிழ்ந்திருக்கும். இப்படியான மனம் ஒடுங்குவதற்குச் சிவன் தனது திருவடியைக் கொடுப்பான். சிவனது திருவடியை அடைந்த மனம் சமாதி நிலையில் இருக்கும். எனது குரு சமாதி நிலையில் இருந்த போது மரக்கட்டை போல இருந்தார். உயிர் மூச்சிலிருந்து தான் அவர் உயிர் வாழ்கிறார் என்று தெரிந்து கொள்வோம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**601. விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்**

**கண்டுணர் வாகக் கருதி யிருப்பர்கள்**

**செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை**

**கொண்டு குதிரை குசைசெறுத் தாரே.**

''சிவனடியார்களே, வற்றாத கிணற்றின் ஊற்றைப் போன்றது திருவருள். அது மலையில் இருந்து பாய்ந்து வரும் அருவியை ஒத்தது. திருவருளின் விளக்கத்தையும் எல்லையில்லாத பெருவெளியையும் கண்டு அவை தான் மெய்யுணர்வு என்று கருதுபவர்களுக்கு உயிர்ப்பு புறப்பட்டுச் சென்று புருவ நடுவின் உச்சியில் நிற்கும். அங்கு மனமாகிய குதிரையின் கடிவாளத்தை இழுத்துக் கட்டுபவன் சிவபெருமான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**602. மூல நாடி முகட்டல குச்சியுள்**

**நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்**

**மேலை வாசல் வெளியுறக் கண்டபின்**

**காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே.**

''சிவனடியார்களே, மூலாதாரத்தில் உள்ள நடுநாடியில் முக்கட்டு உண்டு. படைப்போன், காப்போன், துடைப்போன் ஆகியோரின் ஒளியுண்டு. இவற்றை முறையே பிரமக் கிராந்தி, விட்டுணு கிராந்தி, உருத்திரக் கிராந்தி என்று அழைப்பர். புருவ நடுவின் உச்சியில் கண், நாக்கு, மூக்கு, செவி என்னும் நான்கு வாயில்களும் ஒன்று சேரும். அவற்றின் நடுவில் திருவருளின் நினைவுடன் இருந்தால் உச்சித் துளை

வாயிலை வெளியுறக் காணலாம். அம்மேலை வாசலைக் கண்டவன் கனவிலும் காலன் வருவான் என்று நினைக்க மாட்டான். சிவஒளிக்குள் இருப்பவனைக் காலனால் எதுவும் செய்ய முடியாது. சமாதி நிலையில் இருப்பவனது உயிர் சிவனை அடையும். ஏனைய உயிர்கள் யமனால் கவரப்பட்டுப் பிறப்புக்கள் எடுக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**603. மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு**

**கொண்டிட நிற்குங் குடிகளும் ஆறெண்மர்**

**கண்டிட நிற்குங் கருத்து நடுவாக**

**உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.**

''சிவனடியார்களே, மண்டலங்கள் ஐந்து. வரைகள் பன்னிரண்டு. இவற்றை இடமாகக் கொண்டு நிற்கும் தெய்வங்களைக் குடிகள் என்பர். அவர்களும் அறுவரும் எண்மருமாவர். இவற்றைக் கண்டுகளிக்கத் திருவடி இன்பம் உதவும். நிலாவும் பதநிலைகளை விலக்கி விடும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன மண்டலங்களாகும். இவற்றிற்கு முறையே மூலம், கொப்பூழ், மேல் வயிறு, நெஞ்சு, மிடறு என்பன நிலைக்களங்களாகும். வரைகள் பன்னிரண்டு. இவற்றுள் நிலைக்களத் தெய்வங்கள் ஆறு'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**604. பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்**

**தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து**

**நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்**

**தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே.**

''சிவனடியார்களே,உடம்புக்குள்ளே பூட்டப்பட்டு அடக்கப்பட்ட உயிர்ப்பை மேலே செல்லவிடாது கொப்பூழில் அடக்கி வைத்தல் வேண்டும். எண்ணங்களை அதில் அடக்கினால் தோட்டத்து மாம்பழம் போல இனிக்கும்.''

''சிவனடியார்களே, காற்று உடம்பின் உள்ளே சென்று வெளியே வருவது இயல்பான செயல். அதைச் சகல சீவராசிகளும் செய்கின்றன. திருவருளின் துணையோடு சிவனை அடைய விரும்புவோர் உயிர்ப்பை மேலே செல்லவிடாது தொப்பூழுள் அடக்குதல் வேண்டும். மேற்செல்லும் காற்று வெளியேறிவிடும். அதை அடக்கினால் சமாதிநிலை உண்டாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**605. உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்**

**கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்**

**அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்**

**திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே.**

“சிவனடியார்களே, திருவருளின் அனுக்கிரகத்தால் உயிர்ப் பயிற்சியால் தன் உண்மை நிலையை உணரும் பக்குவம் உண்டாகும். தேவர்கள் இதை உணராது அமிர்தத்தை உண்டால் நீண்ட காலம் வாழலாம் என்று நினைத்து பாற்கடலைக் கடைந்து அமுதை எடுத்துண்டனர். உண்ட போதும் அவர்கள் எல்லோரும் மாண்டனர். ஆனால் உயிர்ப்புப் பயிற்சியால் நடு நாடி வழியாக அளவிட முடியாத பெருமைகளை உடைய மனம் உச்சித்துளை ஏறித்திருவடி அமிழ்தை உண்ண முடியாதவர்கள் அத்தேவர்கள்.”

“சிவனடியார்களே, சிவபெருமானின் மிகச் சிறந்த படைப்புத் தான் மனிதன். அவன் தன்னையும் உணரான். தனது பெருகளையும் உணரான். சிவனையும் உணரான். தேவர்கள் மிக உன்னதமானவர்கள், பெருமைக்குரியவர்கள் என்பதெல்லாம் பொய். உண்மையான அமிர்தத்தைக் குடிப்போர் திருவருளின் துணையுடன் உயிர் மூச்சை அடக்கித் தியானம் செய்பவர்கள் தான். அவர்கள் தான் மரணமில்லாத வாழ்வை வாழ்வார்கள். அவர்கள் திருவடி நிழலை அடைந்து என்றும் இன்பமாக வாழ்வர். தேவர்களுக்கு இது தெரியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**606. நம்பனை யாதியை நான்மறை யோதியைச்**

**செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை**

**அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்**

**கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் அனைத்திற்கும் நம்பிக்கையுள்ளவனாகவும், ஆதியாகிய நடப்பாற்றலை உடைய சோதி வடிவானவனாகவும், உள்ளிருந்து எழுப்பி ஓதுவிக்கும் சோதியாக உள்ளவனும், செம்பொன்னைப் போன்ற சுடருடையபதுமான சிவபெருமானை அடைதற்பொருட்டு அவனது திருவடி மீது பேரன்பு செலுத்த வேண்டும். வேட்கைகளை ஒதுக்கி விட வேண்டும். அவ்வாறு செய்பவர்கள் சிவனது திருவடியை அடைவார்கள்.”

“சிவனடியார்களே, சிவனடியை அடைவது மிகமிகச் சுலபமானது. விருப்பு வெறுப்பில்லாது சிவனை நினையுங்கள். அவன் தான் உலகில் நம்பிக்கைக்குரிய ஒருவன். அவன் மீது அன்பு வைத்தால் போதும் அவன் எல்லா உதவிகளையும் செய்வான். பஞ்சாட்சர மந்திரத்தை ஓதியவாறு நிம்மதியாக ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டால் அவனது நினைவுகள் மனதுள்ப் பெருகும். அப்போது மூச்சுப் பயிற்சி செய்தல் வேண்டும். ஆரம்பத்தில் ஆசைகளோடு போராடுவோர்க்கு அது சிரமத்தைக் கொடுக்கும். அதைக் கவனியாது கவனத்துடன் பயிற்சி செய்தால் சாவா மருந்தான அமிழ்தத்தைக் குடிக்கலாம். தேவர்கள் அதை நினையாது பெருஞ் சிரமப்பட்டு மேருமலையால் அமிழ்தைக் கடைந்து குடித்த போதும் அசுரர்களால் துன்பப்பட்டனர். பெருஞ்சிரமப்படாது பணம் செலவு செய்யாது இருந்த இடத்தில் இருந்து கொண்டே சிவனை அடையலாம். இது தேவர்களைப் போல மனிதர்களுக்கும் புரிவதில்லை” என்று கதிரேசன் ஆச்சிரமத்திற்கு வரும் போதெல்லாம் கூறுவார். பணம் பொருள் எதுவும் செலவு செய்யாது இலகுவாகச் சிவனை அடையும் வழி இது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**607. மூலத்து மேலது முச்சது ரத்தது**

**காலொத் திசையிற் கலக்கின்ற சந்தினில்**

**மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற**

**கோலத்தின் கோலங்கள் வெவ்வெறு கொண்டதே.**

“சிவனடியார்களே, மூலத்திற்கு மேலாக முக்கோணமும் நாற்கோணமும் உள்ளன. உயிர்ப்புக்கள் ஒத்துப் பொருந்தினால் சந்திரன் புருவ நடுவில் தோன்றுவான். அழகிய அருள் வடிவில் வெவ்வேறாகக் காணப்படும்.”

“சிவனடியார்களே, நாம் பகலில் பற்பல எண்ணங்களை எண்ணுகிறோம். ஒரு காதலன் தனது காதலியை முத்தமிட விரும்புகிறான். ஆனால் அதைச் செய்யப் பயம். அவன் அது பற்றிப் பல நூல்களில் வாசித்துள்ளான். இரவு அவை கனவாக வருகின்றன. அதுவும் இன்பம் தான். நனவில் நடப்பதைப் போன்ற இன்பத்தைக் கொடுக்கும். சிவனடியார்கள் எந்நேரமும் சிவநினைவில் இருப்பதால் அந்நினைவு யோகப் பயிற்சி செய்யும் போதும் தியான நிலையில் இருக்கும் போதும் தோன்றும். எனக்குச் சிவனை ஒருமுறை கட்டித் தழுவ வேண்டும் என்ற ஆசை. ஒரு நாள் நான் தியானத்தில் இருக்கையில் சிவன் வந்தார். என்னைக் கட்டித் தழுவினார். ஆகா! என்ன இன்பம். கழுத்தில் மாலையாக இருந்த நாகம் என்னை முத்தமிட்டது. அப்படிப் பல நாட்கள் நான் விரும்பியபடி சிவனுடன் உறவாடினேன். கனவுகள் வருவது போல

நனவில் சிவனது தோற்றங்கள் வரும். இதை ஒவ்வொருவரும் அனுபவித்தால் தான் தெரியும் என்று கதிரேசன் கூறுவார்''என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**608. கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று**

**சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்**

**பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்**

**தற்பர மாகத் தகுந்தண் சமாதியே.**

''சிவனடியார்களே, ஒருவரது எண்ணங்கள் செயற்பாடற்று தழல் வழியே சென்றால் திருவுள்ள நோக்கால் எல்லாவற்றையும் படைத்தருளிய சிவபெருமானைக் காணலாம். அவனைக் கூடும் திருவடிவுணர்வு கைகூடும். அத்துடன் சிவபெருமானின் திருவடியில் அமர்ந்திருக்கும் பேறும் உண்டாகும்.''

''சிவனடியார்களே, எண்ணம் தான் வாழ்வு என்று கதிரேசன் கூறுவார். குமாரசாமியின் மனைவி பத்தினி. அவள் தனது கணவனைத் தவிர வேறு எவரையும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. யாரோ ஒருவன் வேண்டுமென்றே அவள் கன்னியாக இருக்கும் போது ஒருவனைக் காதலித்தவள். பெற்றோர் வற்புறுத்தி உன்னைச் செய்து வைத்தனர் என்று கூறிவிட்டான். இது அவன் குமாரசாமி மீதுள்ள பகையால் கூறியது இதைப் புரியாத குமாரசாமி தனது மனைவி எப்படி எப்படியெல்லாம் நடந்திருப்பாள் என்று எண்ணுபவை யாவும் அவனது கனவில் வரும். சாதாரண ஒரு மனிதனுக்குக் கனவில் நினைத்தவை வருமென்றால் எல்லாம் வல்ல சிவபெருமானை நினைப்பவர்களுக்கு அவர்கள் நினைப்பதைப் போலச் சிவன் வரமாட்டானா? வீண் எண்ணங்களும், கற்பனைகளும் வரும் போது, பற்றற்றுத் தன்னை அர்ப்பணித்து நினைப்பவர்களின் மனதில் சிவன் தோன்றுவான். அவர்கள் நினைத்ததை முடிப்பர் என்று கதிரேசன் கூறுவதில் அர்த்தம் உண்டு''என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**609. தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்**

**வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளுங்**

**குலைப்பட் டிருந்திடுங் கோபம் அகலுந்**

**துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே.**

''சிவனடியார்களே, திருவருள் வழி நின்றால் உயிர் மூச்சை நடுநாடியிற் செலுத்தாது தடுத்து நிறுத்தும் குண்டலினி சக்தி சிவனை மறைக்காது வெளிப்படுத்திக்

காட்டும். சினம் அகலும். திருவருளால் நிறைந்த மனம் தராசின் முள்ளுப் போலச் செயலாற்றும். இவை நடைபெறுவது திருவருளால் ஆட்கொள்ளப்பட்டவர்க்கே.''

''சிவனடியார்களே, இளம் வயதில் கற்காததாலும் வயதின் காரணமாகவும் கதிரேசன் தீயசெயல்களைச் செய்பவர்களோடு சேர்ந்து தானும் தீயசெயல்களைச் செய்து வந்தார். தந்தையின் விருப்பப்படி தீயசெயல்களைச் செய்யாது விட்ட போது தான் அவருக்கு அதன் தார்ப்பரியம் புரிந்தது. ஒரு முறை ஒருவனை அவர் தாக்கி விட்டார். அது பெருமையாக அவருக்கு இருந்தது. தந்தையின் சொற்படி அவர் திருந்திச் சிவநினைவான போது ஒருவன் அவருக்கு அடித்து விட்டான். இதுமுன் வினை என நினைத்து அவர் பேசாமல் அவனை மன்னித்து விட்டார். அவர் திருவருள் வழிநின்ற போது அவரிடம் இருந்த தீய பழக்கங்கள் யாவும் அற்றுப் போய் விட்டன. முன்பு அவர் அடித்தவன் மிகவும் ஏழை. அவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டு விட்டு அவனது பிள்ளைகளது கல்விச் செலவைப் பொறுப்பேற்றார். அவனது பிள்ளைகள் நல்ல உத்தியோகத்தில் உள்ளனர். திருவருள் எல்லாம் தரும் என்று கதிரேசன் சொல்வர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**610. சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்**

**ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்**

**ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்**

**ஆதி அடிபணிந் தன்புறு வாரே.**

''சிவனடியார்களே, இயற்கைப் பேரொளிப் பிழம்பாக நிற்கும் சிவபெருமானும் ஆதியும் திருவருளும் ஆருயிரும் தானே தானாகச் சேர்ந்தமையால் சிவமானார்.''

''சிவனடியார்களே, சிவமும் சக்தியாகிய உமையும் ஆன்மாவின் இருபக்கங்களிலும் நிற்கும் நிலை சிவயசிவா என்பதாகும். இதில் ய என்பது ஆருயிரைக் குறிக்கிறது. இரண்டு பக்கமும் சிவமும், ஆதியாகிய சக்தியும் பாதுகாப்பாக இருப்பதால் அதனுடன் சேர்ந்துள்ள ஆருயிரும் சிவத்துடனும் ஆதியுடனும் கலந்து விடுகிறது. எப்போதும் சிவனும் சக்தியும் ஆருயிர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து உதவுவர். இதை ஆருயிர்கள் உணர்வதில்லை. உணர்ந்த உயிர்கள் உயிர்மூச்சுப் பயிற்சி மூலம் தியானத்தில் இருந்து அதை உணர்ந்து கொள்வர். அதனால் அவர்கள் சிவமயமாகி விடுகின்றனர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**611. சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்**

**சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்**

**சமாதிதா னில்லை தானவ னாகிற்**

**சாமதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே.**

“சிவனடியார்களே, சமாதி நிலையில் இருப்பவர்களுக்கு பல யோகங்களும் பல தழுவல்களும் ஏற்படும். அவை மந்திரத் தழுவல், ஞானத் தழுவல், கருமத் தழுவல் முதலியன திருவடி நினைவில் ஏற்படும். அப்போது சிவன் சிவனருளால் சிவமாக்கப்பட்ட நிலையில் சமாதியில் நிட்டையின்றியே எட்டெட்டுச் சித்தியும், உவமையில்லாக் கலைஞானம் அறுபத்து நான்கும் திருவருளால் தாமே வந்து சேரும். இது தான் உச்ச நிலை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 10. அட்டாங்க யோகப்பேறு

### இமயம் (தீதகற்றல்)

**612. போதுகந் தேறும் புரிசடை யானடி**

**யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்**

**ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடு**

**மாதுகந் தாடிடு மால்விடை யோனே.**

“சிவனடியார்களே, அம்மை மகிழ ஐந்தொழில்களையும் தன்னுள் அடக்கிப் பெருங் கூத்தாடும் சிவபெருமான் ஆருயின் செயற்பாட்டினை அறிந்து அவ் ஆவி விரும்பியதை முடித்துக் கொடுப்பான். இப்படியானவர்கள் அமராபதிக்குச் செல்வர். இவர்கள் இமயம் முதலிய எட்டு யோகங்களிலும் சித்தி பெற்றவர்கள், “சிவனின் அருள் இருந்தால் வாழும் பூவுலகிலேயே அமரர்களைப் போல வாழலாம். நான் சிவசிந்தையுடன் எந்த வேளையிலும் இருப்பதால் தேவர்களைப் போலவே வாழ்கிறேன். எனக்கு எந்தக் குறையையும் சிவன் வைத்ததில்லை. எனக்குக் குறைகள் ஏற்படின் நான் தியானத்தின் போது முறையிடுவேன். அது நீங்கி விடும். என்னைப் போலப் பலா் வாழ்கிறார்கள். ரவீந்திரன், நல்லைநாதன் போன்றோர் என்னை விடச் சிறப்புடன் வாழ்கின்றனர்” என்று கதிரேசன் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## நியமம்

## (நன்றாற்றல்)

613. பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்

கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு

முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்

தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே.

''சிவனடியார்களே, சிவபெருமானது திருவடியை அவனது திருவருளாலே பற்றிப் பிடித்துப் பேரன்பு பூண்டு தொழுது பொருளையும், புகழையும் சேர்த்து இடையறாது எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்குச் சிவமுனிவர்கள் ஒன்று கூடி வந்து சிவஉலகிற்கு அழைத்துச் செல்வர்,''சிவனை வணங்குவோர் நல்ல முறையில் தொழில் செய்து அதன் வருமானத்தின் மூலம் தானதர்மங்கள் செய்து, அதனால் வரும் புகழை அடைதல் வேண்டும். அதற்காகத் தான் நான் ஒழுக்கமாக வாழ்கிறேன். தர்மமான முறையில் பொருள் சேர்க்கிறேன். தானதர்மங்கள் செய்கிறேன். இவையெல்லாம் சிவத்தொண்டுகள். சிவத்தொண்டின் மூலம் வரும் புகழ் சிவனைச் சார்ந்த பின்பும் பூவுலகில் தங்கி நின்று பேசப்படும். இதற்கு உதாரணம் நாயன்மார்களும் சிவத்தொண்டர்களும். திருஞானசம்பந்தரின் திருமணத்திற்கு வந்த அனைவரையும் சிவன் அழைத்துச் சென்றமை இதற்குச் சான்றாகும்'' என்று கதிரேசன் சொல்வார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## ஆதனம்
## (இருக்கை)

614. வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்

திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்

தருந்தண் முழவங் குழலும் இயம்ப

இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே.

''சிவனடியார்களே, அகத்தவத்திற்கு வேண்டிய எட்டு உறுப்புக்களுள் ஒன்றான இருக்கைப் பேறு பெற்றார் வருந்தித் தவம் செய்துள்ளாரை ஒப்பர். அத்துடன் வானவர்களின் அரசரையும் ஆளும் பெருமையையும் அமராபதிக்குச் சென்று பெறுவர். அதை யாவரும் எடுத்துச் சொல்லிப் புகழ்வர். பெருமை தரும் மத்தளத்தையும் புல்லாங்குழலையும் வாசிக்கச் சிவபெருமானின் திருவருள் இன்பத்தைப் பொருந்தி அருந்தி மகிழ்வர். திருவருளின் இன்பத்தை அனுபவிப்பர். திருவருளால் முயன்று

இருக்கைத் தவம் செய்த பெரும் பயனால் வானார்களின் அரசனையும் ஆளும் தகுதி பெறுவர்,“எம்மைப் படைத்த சிவன் பூவுல இன்பங்களையெல்லாம் தர்மமான முறையில் அனுட்டித்து அகத்தவம் செய்வோர் வானவர் அரசனைக் கூட அடக்கியாளும் வல்லமை உள்ளவர்களாவர் என்று புராணங்கள் கூறுகின்றன. பூவுலக இன்பங்களாவன சிவநினைவுடன் வாழுதல். சிவனடியாரைப் போற்றுதல், திருத்தொண்டுகள் செய்தல், அகத்தவம் செய்தல் முதலியன இவற்றைச் செய்வோர் திருவருளின் அருளால் பூமியிலும் இன்பமாக வாழ்வர். அதன் பின்பு சிவனடியைச் சேர்ந்து அங்கும் பேரின்பமாக வாழ்வர். இது நிகழ வேண்டுமானால் திருவருள் கைகூட வேண்டும். இவர்கள் பிறந்தது முதல் ஊழிக் காலம் வரை சிவனின் நிழலில் இன்பமாக வாழ்வர். ஏனையோர் மதுவும், மாமிசமும், மாதுவும், பணமும் தான் இவ்வுலக இன்பம் என்றெண்ணி அவற்றை அடையப் பிரயத்தனப்பட்டு இங்கும் துன்பமடைகிறார்கள். பிறக்கும் ஒவ்வொரு பிறவியிலும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்” என்று கதிரேசன் சொல்வது உண்மை” கதிரேசன் சொல்வது உண்மை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பிரணாயாமம்

(வளி நிலை)

**615. செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்**

**கும்பத் தமரர் குழாம்வந் ததிர்கொள்ள**

**எம்பொற் றலைவன் இவனா மெனச்சொல்ல**

**இன்பக் கலவி இருக்கலு மாமே.**

“சிவனடியார்களே, அகத்தவப் பயிற்சியின் உறுப்பாகிய உயிர்ப்பு முறை கைகூடியவர். செம்பொற்சோதியான சிவபெருமானின் திருவடி நிழலை அடைவர். அப்படி அடையும் போது கும்பல் கும்பலாகத் தேவர்கள் வந்து வரவேற்பர். அவர்கள் இவன் தான் எமது தலைவன் என்று போற்றிப் புகழ்வர். சிவபெருமானுடன் கலந்து இன்பமாக இருப்பர்.”

“சிவனடியார்களே, மண்ணுலகில் பிறக்கும் மனிதர்களின் செயல்தான் அவர்களை விண்ணவர்களாக உயர்த்துவது. அந்த உயிர்ப்பைப் பெற விரும்புவோர் மண்ணுலகத்தில் சிறப்பாக வாழவேண்டும். அப்படி வாழ்பவர்கள் விண்ணுலகம் சென்றால் விண்ணவர்கள் மகிழ்வுடன் கூட்டம் கூட்டமாக வந்து வரவேற்பர். அவர் தான் விண்ணவர் தலைவன் என்பர். இதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் கடின

உழைப்பு பணம் பொருளைத் தருவதோடு அருளையும் தரவேண்டும். எமது ஊரில் சிவசிதம்பரம் என்றொரு தனவந்தன் இருந்தார். அவர் தருமவான். அவரிடம் பல வர்த்தக நிறுவனங்கள் இருந்தன. அவற்றிலிருந்து வருமானம் முழுவதையும் சிவச்செலவாகச் செலவு செய்வார். கோவில்கள் கட்டுவார். பாடசாலைகள் கட்டுவார். ஏழைகளுக்கு உதவி செய்வார். அவரில்லாமல் ஊரில் எந்த நிகழ்வும் நடவாது. அவர் தேவர்களைப் போல வாழ்ந்தவர். அவர் இறந்து ஐம்பது வருடங்கள் கழிந்து விட்டன. அவரது பெயரைத் தாங்கிய பல பொது நிறுவனங்கள் ஊரில் உண்டு. அவர் பெரும் சிவபக்தர். தியானம் செய்வார். அகத்தவமும் செய்வார். நான் நினைக்கிறேன் இன்று அவர் சிவபெருமானின் திருவடி நிழலில் இன்பமாக இருப்பாரென்று'' என்று உணர்ச்சி வசப்பட்டார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பிரத்தியாகாரம்

(பொறை நிலை)

**616. சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்**

**ஆரிவன் என்ன அரனாம் இவனென்ன**

**ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்**

**காருறு கண்டனை மெய்கண்ட வாறே.**

''சிவனடியார்களே, தொகை நிலையாகிய பிரத்தியாகார வழியில் நிற்பவர், சிவபெருமானின் திருவுருவை எய்திச் சிவஉலகம் செல்வர். அப்படிச் செல்லும் போது எண்புலக் காவலர்கள் இவன் யார் என்று வினாவுவர். தேவர்கள் அவர் யாரென உணர்ந்து மகிழ்வுடன் வரவேற்று வணங்குவர். கறுத்த கண்டத்தையுடையவனை அருளால் கண்ட உணர்வை அடைவர். அத்தகைய அரன் திருவுருவாய் விளங்குபவரைக் காண்பர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தாரணை

(பொறை நிலை)

**617. நல்வழி நாடி நமன்வழி மாற்றிடுஞ்**

**சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை**

**இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்**

**பல்வழி எய்தினும் பார்வழி யாமே.**

"சிவனடியார்களே, பொறை நிலையாகிய தாரணை வழிச் செல்வோர் நல்வழியை நாடுபவர் ஆவார். அவர் யமனது வழியை மாற்றியவராவார். ஆருயிர்களுக்கும், தேவர்களுக்கும் வேண்டுவனவற்றைக் கொடுக்கும் அயன், அரியின் நிலைக்குட்பட்டவராவர். ஏனையோர் பல்வேறு இடங்களில் இருந்தாலும் பிறப்புக்கும், இறப்புக்கும் உட்பட்டு நிலத்தின் கண் துன்பப்படுவர்."

"சிவனடியார்களே, நல்லவற்றைச் செய்து தீயவற்றைக் கனவிலும் எண்ணாதவர்கள் திருவருளைத் துணையாகக் கொண்டு வாழ்வார்கள். அவர்கள் வாழும் போது மண்ணுலகில் பல சிறப்புக்களைப் பெறுவர். தீமைகள் செய்யாததால் அவர்களை மக்கள் தெய்வமாக நினைப்பர். அவர்களை யமன் நெருங்கமாட்டான். ஏனென்றால் அவர்கள் சிவஉலகில் வாழ்பவர்கள். அவர்கள் தேவர்களால் போற்றப்படுவர். அயனதும், அரியினதும் நிலையைப் பெற்று மதிப்புடனும், புகழுடனும் வாழ்வர். அதற்காக மனிதர்கள் பற்றற்றுச் சிவனைத் தொழல் வேண்டும்" என்று சிதம்பரப் பிள்ளை கூறுவார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## தியானம்

## (நினைதல்)

**618. தூங்கவல் லார்க்கும் துணையேழ புவனமும்**

**வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்**

**தேங்கவல் லார்க்கும் திளைக்கும் அமுதமுந்**

**தாங்கவல் லார்கட்கும் தன்னிட மாமே.**

"சிவனடியார்களே, நினைவு நிலையாகிய தியான வழியில் சிவபெருமானைத் தவத்தால் நினைத்து அவனது அருளாணையைப் பெற்றுப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் என்ற நான்கு தொழிலையும் செய்யும் நிலையினராவர். அயன், அரி, அரன் ஆயிரம் கண்ணன் ஆகிய நால்வரும் முறையே ஏழ்புவனம் படைக்க வல்லார், பற்கடலில் தூங்க வல்லார், துடைத்து அசையாது நிற்க வல்லார், அடைத்து அமுதம் தாங்க வல்லவராவார். இவர்களது நிலைகள் சிவபெருமானை நினைத்துத் துதித்தமையால் வந்தமைந்தவையாகும்."

"சிவனடியார்களே, எனது குரு சொல்வார் தேவர்களும், அயன் முதலிய நால்வரும், இந்திரனும் சிவபெருமானை நினைத்துத் தியானஞ் செய்தமையால்

அப்பேறுகளைப் பெற்றனர் என்று தெரிந்தும் பலர் அதைச் சிந்திக்காது தீயசெயல்களைச் செய்து மீண்டும் மீண்டும் பிறந்து துன்பப்படுகிறார்கள். சிற்றின்பங்களை நாடாத சிவனைத் தியானம் செய்து பேரின்பத்தைப் பெறுங்கள்'' என்று எமது ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்களுக்குச் சொல்வார். ஆனால் அவர்கள் அதை நம்பாது தினமும் தமது வாழ்வு வளம் பெறவேண்டும் என்றே விரும்புகிறார்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சமாதி

(நொசிப்பு)

**619. காரிய மான உபாதியைத் தான்கடந்**

**தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற**

**வாரிய காரண மாயத் தவத்திடைத்**

**தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே.**

''சிவனடியார்களே, நொசிப்பு நிலையாகிய சமாதி நிலையில் இருப்போர் மூலமலமான ஆணவத்தின் காரியமாகிய ஏழுவகைத் துன்பங்களையும் நீக்கியவர்களாவர். வினை முதற் காரணம் ஏழையும் தன்னுள் அடக்கியவராவர். நீண்ட காலமாக வருந்திய துன்பநிலைகளை விலக்கிளவராவார். தவப்பேற்றால் சிவபெருமானைச் சார்ந்து சமாதி நிலையடைந்தவராவர். மூல மலத்தால் வரும் துன்பங்கள் ஏழு. அவை மயக்கம், மதம், அவா,கவலை உட்சூடு, வாட்டம், வியப்பு என்பனவாகும். அத்துன்பத்தைப் போக்கும் வினை முதற்காரண நிலையும் ஏழு'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

11. அட்டமா சித்தி
(எண்பெரும் பேறு)
பரகாயப் பிரவேசம்

**620. பணிந்தெண் திசையும் பரமனை நாடித்**

**துணிந்தெண் திசையுந் தொழுதெம் பிரானை**

**அணிந்தெண் திசையினும் அட்டமா சித்தி**

**தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே.**

“சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடிகளை நினைத்து அதை அடைந்தவர்கள் அட்டமா சித்திகளையும் அடைந்தவர்களாவர். அவர்கள் சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுளென உணர்ந்தவர்கள். அத்துடன் அவர்கள் எண்புலன்களிலும் சென்று எண்பெரும் பேற்றினை நிலைநாட்டியவராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**621. பரிசறி வானவர் பண்பன் அடியெனத்**

**துரிசற நாடியே தூவெளி கண்டேன்**

**அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி**

**பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே.**

“சிவனடியார்களே, எல்ல உலகங்களில் வாழும் உயிரினங்களின் இயல்பையும் அறிபவன் சிவபெருமான். அவனது திருவடியைத் திருமுறைகளைப் பாடித் தொழுதேன். திருச்சிற்றம்பலம் என்னும் செந்நெறியைக் கண்டேன். காமம், வெகுளி, மயக்கம் என்றும் முக்குற்றங்களும் அகன்றன. அட்டமா சித்திகள் கைவந்தன. அளவிட முடியாத பேரருளைப் பெற்றேன். பிறப்பையும், இறப்பையும் அறுத்து என்னைத் தன்னோடு சிவன் சேர்த்துக் கொண்டான்.”

“சிவனடியார்களே,சிவபெருமான் உலகெங்கும் நடைபெறுவதை இருந்த இடத்தில் இருந்து கொண்டே அறிந்து கொள்வான். அது போல உயிர்கள் மனதில் நினைப்பதையும் அறிவான். இது பலருக்குப் புரிவதில்லை. தவம் செய்வோர், தியானம் செய்வோர் தம் மனதிற்குள்ளேயே சிவனை நினைத்து ஐந்தெழுத்தை ஓதுகிறார்கள். அதை அறிந்து செயற்படும் சிவன் மனதால் செய்யும் தீயசெயல்களையும் அறிவான். ஒருவர் செயல்கள் மூலம் தான் அதிக பாவம் செய்கிறார்கள். தாம் நினைப்பது யாருக்கும் தெரியாது என்று நினைத்து மகிழ்கிறார்கள். ஆனால் அது சிவனுக்குத் தெரியும். நினைவுகளில் கொடியது காமம். அது எதையும் செய்யவிடாது. எனது உபதேசத்தைக் கேட்ட எனக்கு வேண்டிய ஒருவர் என்னிடம் வந்து தனது மனம் அமைதியடைவதில்லையென்றும் தியானம் செய்ய முடியவில்லை என்றும் கூறினார். அவரை விசாரித்த போது அவருக்கு ஒரு குடும்பப் பெண்ணுடன் தொடர்பிருப்பது தெரிந்தது. சிவன் நினைப்பதையும் அறிந்து தண்டனை கொடுப்பவன் என்று அறிந்த பின் அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. நான் சொன்னேன்,“அடியவரே, தன் கணவனை விரும்பாது ஏதோ ஒரு காரணத்துக்காக உம்மை விரும்பும் அவள் இன்னும் ஒருத்தரை விரும்பமாட்டாள் என்பதற்கு என்ன ஆதாரம் உண்டு. வீணாகப் பாவம் செய்யாது திருந்துங்கள்” என்றேன். ஒரு வாரத்தின் பின் வந்த அவர்,“சுவாமி நீங்கள்

சொன்னது உண்மை. அவள் பலருடன் தொடர்பு கொண்டுள்ளாள். அதனால் இப்போ எனக்கு அவளின் நினைவு வருவதில்லை'' என்றார். அதனால் சிவனடியார்களே எண்ணங்களாலும் பாவம் செய்வதை நிறுத்திச் சிவனை ஆராதியுங்கள். அவன் நீங்கள் நினைத்தவற்றையெல்லாம் கொடுப்பான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**622. குரவன் அருளிற் குறிவழி மூலன்**

**பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்**

**தெரிதரு சாம்பவி கேசரி சேரப்**

**பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே.**

''சிவனடியார்களே, சிவகுருவின் செவியறிவித்தற்படி திருவருள் துணையுடன் உயிர்த்துடிப்பு நடுநாடியின் கண் செல்லும் துன்பினை உணர்க. அதைத் தெரிய உணர்த்தும் சாம்பவி கேசரி முத்திரை மேற்கொள்ளச் சிவநிலையும் எண் சித்தியும் வந்து சேரும். அதாவது சாம்பவி என்னும் கையடையாளப் பயிற்சியும், கேசரி என்றும் கையடையாளப் பயிற்சியும் ஒன்று சேர நெஞ்சில் உள்ள சிவனிடம் எண்ணத்தையும் உயிர் மூச்சையும் ஒடுக்கி அடங்கியிருக்கச் செய்யும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**623. காயாதி பூதங் கலைகால மாயையில்**

**ஆயா தகல அறிவொன் றனாதியே**

**ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால்**

**வீயாப் பரகாயம் மேவலு மாமே.**

''சிவனடியார்களே, காயம் முதலாகச் சொல்லப்படும் பூதம்கலை காலம் மாயை முதலியவற்றில் பற்றுக் கொள்ளாது. சிவபெருமானது திருவடியைக் கூடினால், திருவருள் வெளியில் சேர்வது இலகுவானது.''

''சிவனடியார்களே, உடல் ஐம்பூதங்கள் கலை காலம் மாயை ஆகியவற்றை விரும்பி மனிதன் அழிகிறான். நிலம், நீர் முதலியவற்றிலும் காலத்திலும் மாயா காரியங்களிலும் மனதைச் செலுத்தாது சிவனின் நினைவுகளால் மனதை ஈடுபடுத்தினால் திருவருள் வெளியில் உலாவ முடியும். மனிதர்கள் மாயா காரியங்களில் தான் முழுமூச்சுடன் ஈடுபடுகிறார்கள். விவசாயி ஒரு முறை அமோகமாக விளைச்சலைக் கண்டதும் கடன்பட்டு நிலத்தை வாங்கிப் பயிரிடுகிறான். அதில்

நட்டமேற்படுகிறது. அதனால் உள்ளதும் இல்லாமற் போகிறது. உலகம் மாயத்தோற்றத்தை உடையது. ஒருவர் வியாபாரத்தில் அதிக லாபமடைந்தால் மற்றவர்கள் தாம் செய்யும் தொழிலை விட்டு விட்டு வியாபாரத்தில் முதலீடு செய்கிறார்கள். அது வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. அதனால் செய்வதைச் சோர்வின்றிச் செய்யுங்கள். சிவநினைவுடன் செய்யுங்கள் வெற்றியுண்டாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**624. இருபதி னாயிரத் தெண்ணூறு பேதம்**

**மருவிய கன்ம மாமந்த யோகந்**

**தருமிவை காய உழைப்பாகுந் தானே**

**அருமிரு நான்காய் அடங்குமா சித்திக்கே.**

''சிவனடியார்களே, ஒருவர் விரும்பிச் செய்யும் செயல்கள் கர்ம யோகம் எனப்படும். அ∴து இருபதினாயிரத்து எண்ணூறு வேறுபாடுகளைக் கொண்டது. இது உடம்பால் செய்யப்படுவது. உழைப்பினால் நிறைவு பெறுவது. இவை அனைத்தும் எண்வகைப் போகத்துள் அடங்கும்.''

''தனது இன்பங்களுக்காகவும் தானதர்மம் செய்து மகிழவுமே கர்மயோகம் உண்டாகப்பட்டது. ஒவ்வொருவரும் தம் உடலை வருத்தி உழைக்க வேண்டும். உடல் வருத்தம் ஊதியம் கிடைத்ததும் மாறிவிடும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**625. மதிதனில் ஈராறாய் மன்னுங் கலையின்**

**உதய மதுநா லொழியவோ ரெட்டுப்**

**பதியுமீ ராறாண்டு பற்றறப் பார்க்கில்**

**திதமான ஈராறு சித்திக ளாமே.**

''சிவனடியார்களே, திங்கட்கலையாகிய இடப்பால் மூக்கின் வழியும், இனம் பற்றி ஞாயிற்றுக் கலையாகிய வலப்பால் மூக்கின் வழியும் விடுத்தலாகிய உயிர்ப்புப் பன்னிரண்டு விரளளவு வெளியே செல்லும். சென்ற அவ் உயிர்ப்பில் நான்கு விரளளவு வெளியே வீணாகி விடும். எஞ்சிய எட்டு விரல் அளவே உள்ளே தங்கும். இதைவிடுத்து உள்சென்ற பன்னிரண்டு விரளவு மூச்சும் வெளியேறாது தங்கினால் எண் சித்திகளும் உண்டாகும்.''

“சிவனடியார்களே, உள்ளே சென்ற மூச்சு வெளியே வருவது சாதாரண நிகழ்வு. உள்ளே சென்ற மூச்சு வெளியே செல்லாமல் உள்ளேயே தங்கினால் எண் சித்திகளும் கிடைக்கும். இதற்குச் சிவநினைவுடன் பயிற்சி எடுத்தல் வேண்டும். பயிற்சி எதையும் செய்ய வைக்கும். எண்சித்திகளையும் பெறும் ஆருயிர் சிவநிழலில் கலந்து நிற்கும் பெரும் பாக்கியத்தைப் பெறும். பெரும் சிரமப்பட்டுச் சிற்றின்பம் பெற்றுத் துன்பப்படும் உயிர்கள் படிப்படியாக முயற்சி செய்து எண்சித்திகளையும் பெறலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**626. நாடும் பிணியாகு நஞ்சனஞ் சூழ்ந்தக்கால்**

**நீடும் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்**

**பீடொன்றி னால்வாயாச் சித்திபே தத்தின்**

**நீடுற் றுரங்கேட்டல் நீண்முடி வீராறே.**

“சிவனடியார்களே, ஒருவனுக்கு நோய் வந்தால் இன சனங்கள் கூடுவர். கலையுணர்வுகளும், அவ்வுணர்வைத் தரும் கல்வியும், அவற்றால் வரும் திறமைகளும், நுண்ணுணர்வு ஆகியன திறமையினால் வந்து சேருவன அல்ல. அவை சிவகுரு அறிவுறுத்தும் செவியறிவுறுத்தலால் ஏற்படுவன. யோகப் பயிற்சியின் பேரெல்லை பன்னிரு ஆண்டுகளாகும்.”

“சிவனடியார்களே, நோய் வந்ததும் உறவினர்கள் கூடுவதைப் போல ஒருவருக்குவரும் தகுதி தராதரங்கள் அவர்களது முயற்சியால் வந்தவையல்ல. சிவகுருவின் அனுக்கிரகத்தால் வந்தவை என்றுணர்ந்தால் தீவினைகள் வராது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**627. ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்**

**தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ்**

**சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை**

**தாழான ஒன்பதிற் றான்பர காயமே.**

“சிவனடியார்களே, யோகப் பயிற்சியினை ஏழு ஆண்டுகள் இடைவிடாது செய்தால் பெருங்காற்றையும் எதிர்த்து நெடுந்தூரம் நடந்து செல்ல முடியும். எட்டு ஆண்டுகள் பயிற்சி செய்தால் நரை திரை தோன்றாது. ஒன்பது ஆண்டுகள் பயிற்சி செய்தால் தூமாயை உடம்பாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

628. ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்

ஏர்வொன்று மேலேழ் பன்னொன்றில் ஈராறாம் எண்சித்தி

சீரொன்று மேலேழ் கீழேழ் புவிச்சென்று

ஏரொன்று வியாபியாய் நிற்றல்ஈ ராறே.

“சிவனடியார்களே, பத்தாண்டுப் பயிற்சியினால் திருமுறைச் சிவதீக்கை வாயிலாகத் திருவருளின் அருளால் வழிபடப் பெறும் திருநீல கண்டப் பெருமானுக்கு ஒப்பானவராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

629. தானே அணுவுஞ் சகத்துத்தன் நொய்ம்மையும்

மானாக கனமும் பரகாயத் தேகமுந்

தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையும்

ஆனாத வுண்மையும் வியாபியு மாம்எட்டே.

“சிவனடியார்களே, இத்திருப்பாடல் மேற்சொன்ன எண்பெரும் பேறுகளையும் கூறுகிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

630. தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்

வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை

யங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்துமிக்

கோங்கிய வரமுத்தி முந்திய வாறே.

“சிவனடியார்களே, ஆவியோகப் பயிற்சியால் அணுவாக நின்று பல உயிர்களோடும் செறிந்து அவற்றை அழித்த காலத்தும் அதற்கு மாறுதல் இல்லை. எல்லா இடங்களிலும் உயிர்களிலும் கலந்து தோன்றினாலும் ஒப்புயர்வில்லா வீடு பேற்றிற்கு முன்னேறும் வழியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

631. முந்திய முந்நூற் றறுபது காலமும்

வந்தது நாழிகை வான்முத லாயிடச்

சிந்தை செயச்செய மண்முதல் தேர்ந்தறிந்

**துந்தியுள் நின்று வுதித்தெழு மாறே.**

“சிவனடியார்களே, அறுபது விநாடிகள் ஒரு நாழிகை. ஒரு நாளுக்கு நாழிகை அறுபது. ஒரு பகலுக்கு நாழிகை முப்பது. அம்முப்பது நாழிகையும் ஐம்பூதங்களுக்கும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பூதத்திற்கும் ஆறு நாழிகைகள். எனவே ஒவ்வொரு பூதங்களுக்கும் முன்னூற்று அறுபது விநாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அக்காலம் அவ்வப் பூதங்களின் பெயரால் அழைக்கப்படும். உதாரணமாகக் காலை ஆறு நாழிகைகளும் வான்காலமாகும். அப்படியே மற்றனவுமாகும். இது தோற்றமுறை எண்ணி மண் முதலாக தேர்ந்தறியின் அஃது ஒடுக்க முறையாகும். இவ்வாறாகவே இரவு முப்பது நாழிகையும் அமைக்கப்பட்டுள்ளது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**632. சித்தந் திரிந்து சிவமய மாகியே**

**முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்**

**சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்**

**சித்தம் பரத்தில் திருநடத் தோரே.**

“சிவனடியார்களே, எண்ணங்கள் புலன்களாகிய சுவையொளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றை நாடாது சிவத்தின் மேல் நாட்டம் கொள்ளுமானால் அது சிவமயமாகும். இங்ஙனம் அமைவதற்குத் திருவுருவ வழிபாடு வகை செய்யும். அத்திருவருள் வழிபாட்டுள்ளும் அம்பலவாணர் வழிபாடே பெரிதும் ஒத்த திருவுருவமாகும். அதன் வலது திருக்கரத்தில் காணப்படும் உடுக்கை படைத்தலைக் குறிக்கும். வலப்பாகத்தில் காணப்படும் வான் நிலைக்காதுப் பொறியுள்ள திருக்கை காத்தலைக் குறிக்கும். வளி நிலைத் தோல் பொறி இடப்பால் திருக்கையில் அங்கி துடைத்தலைக் குறிக்கும். தீ நிலை நோக்குப் பொறி தூக்கிய திருவடி அருளலைக் குறிக்கும். நீர்நிலை நாக்குப் பொறி இம்முறை யான் ஐம்பொறியளவிலும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்துத் துற்றறியும் ஐம்புலனும் ஒன்டொடி கண்ணே உள என்பது போன்ற நுகர்வு உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**633. ஒத்தஇவ் வொன்பது வாயுவும் ஒத்தன**

**ஒத்தஇவ் ஒன்பதின் மிக்க தனஞ்சயன்**

**ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட**

**ஒத்த வுடலும் உயிரும் இருந்தவே.**

“சிவனடியார்களே, பத்து நாடிகளுள் நடுநாடி தவிர்ந்த ஒன்பது நாடிகளிலும் ஒன்பது காற்றுக்களும் கூடியிருக்கும். நரம்பென்பதே நாடியாகும். இவை பத்து நாடிகள், இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடுநரம்பு, உள்நாக்கு நரம்பு, வலக்கண் நரம்பு, இடக்கண் நரம்பு, வலச்செவி நரம்பு, இடச்செவி நரம்பு, எழுவாய் நரம்பு. இவற்றை முறையே இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிருவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு எனவும் அழைப்பர். இவற்றுள் வீங்கற் காற்றாகிய தனஞ்சன் நடுநரம்பில் தங்கும்.”

“சிவனடியார்களே, பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த திருமூலர் மனிதனின் அத்தனை தேவைகளையும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் உடல் உறுப்புக்களையும் அவற்றில் உண்டாகும் நோய்களையும் குறிப்பிட்டுள்ளார். இது சிவனருளால் நடைபெற்றது” என்று கதிரேசன் கூறுவதைக் கேட்டுள்ளேன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**634. இருக்குந் தனஞ்சயன் ஒன்பது காலில்**
**இருக்கும் இருநூற் றிருபத்து நான்கில்**
**இருக்கு முடலி லிருந்தில வாகில்**
**இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே.**

“சிவனடியார்களே, வீசும் காற்று ஏனைய காற்று ஒன்பது போல இருக்கும். இருநூற்று இருபத்து நான்கு உலகங்களிலும் வாழும் உயிர்களின் உடலில் வீசும் காற்று செம்மையாக நிற்கும். இக்காற்று வெளிப்பட்டு விட்டால் உடல் வீங்கி வெடித்து விடும்.”

“எமது ஊரில் சிவராசா என்ற சித்த வைத்தியர் வாழ்கிறார். அவர் நாடியைப் பிடித்துப் பார்த்து என்ன நோய் உடலில் உள்ளது என்று கூறுவார். சென்றவாரம் நல்லையாவின் உடல் வீக்கமடையத் தொடங்கியது. சிவராசா அவரின் உடலைத் தொட்டுத் தடவி நாடி பார்த்தார். அவர் எதுவும் பேசவில்லை. நல்லையா இளைஞன். திருமணமாகிச் சில மாதங்களே கழிந்திருந்தன. அதனால் அவர் வெளியே வந்து கதிரேசனுக்குச் சொன்னார்,“அண்ணை வீசுங் காற்று மெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருக்கிறது..” என்று கூறும் போது கதிரேசன் சொன்னார். மிகவும் ஆபத்தான நிலை. வீசுங்காற்று முழுமையாக வெளியேறினால் வீங்கிய உடல் வெடித்து விடுமல்லவா” என்றார். சிவராசா எதுவும் சொல்லாமல் சில கணங்கள்

நின்றார். பின் சகல ஆயத்தங்களையும் செய்யுங்கள் என்றார்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**635. வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்**

**வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்**

**வீங்கிய வாதமுங் கூனு முடமதாம்**

**வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே.**

''சிவனடியார்களே. வீசும் காற்று குறைவடைவதால் எண்ணற்ற நோய்கள் உருவாகும். அதனால் வீசும் காற்றை உடலில் அதிகரிக்கச் செய்யத் தியானம் செய்யுங்கள். சிவநினைவுடன் செய்தால் வீசும் காற்று வெளியேறாது. நல்லையாவுக்கு முப்பது வயது. பணக்காரன். நன்றாக உண்டு கொழுத்துள்ளான். கதிரேசன் அவனது உடலைப் பார்த்து விட்டு உயிர் மூச்சுப் பயிற்சி செய் என்றவர். அப்போது அவன் நான் பட்டதாரி ஆசிரியன். பாடசாலைக்குச் செல்லாத கதிரேசன் எனக்குப் புத்திமதி கூறுகிறார். அவரின் பேச்சைத் தெய்வ வாக்காக நினைப்பவர்கள் பலர். அவர்களை மாதிரி முட்டாள் என்று என்னையும் நினைத்து விட்டார்'' என்றவன். திருவருள் கைவரப் பெற்ற எவனும் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவான். இப்போ மழை பெய்யும் என்று காலநிலை அவதான நிலையம் கூறினால் கடும் வெயில் எறிக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

636 கண்ணில் வியாதி யுரோகத் தனஞ்சன்
கண்ணில் வாணிகன் காசமவனல்லன்
கண்ணிற் கூர்மன் கலந்தில னாதலாற்
கண்ணிற் சோதி கலந்ததும் இல்லையே

''சிவனடியார்களே, வீசும் காற்றின் மாறுபாட்டால் கண்களில் பல்வேறு விதமான நோய்கள் உண்டாகின்றன. விழியில் ஓடும் காற்றுத் திரிவுபடுதலால் தான் இந்நோய்கள் ஏற்படுகின்றன கருஉற்பத்தி என்ற பாடலில் கணவனும் மனைவியும் உறவு கொள்ளும் போது தாயின் வயிற்றில் மலமும் சிறுநீரும் நிரம்பியிருந்தால் பிள்ளை குருடாகப் பிறக்கும் என்பதை அறிந்தீர்கள். சிறுநீரும் மலமும் நிறைந்திருந்தால் வீசும் காற்றுச் செல்ல இடமிராது.வீசும் காற்றால் தான் ஒருவன் திறமை சாலியாகயும் இன்னொருவன் மந்தானாகவும் பிறக்கிறான். அதனால் தான் திருமூலர் தியானத்தையும் யோகப்பயிற்சியையும் முன்வைக்கிறார். இதனால் உடல் ஆரோக்கியமடைவதோடு சிவனின் திருவருளும் கிடைக்கும். இதைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் தான் துன்பப்படுகிறார்கள். பாடசாலையில் கற்கும் பதினைந்து வயதுச் சிறுவனான அகிலக்குத் தீடிரெனப் பார்கவைக் குறைபாடுஏற்பட்டது. அவர்கள் சுதேச வைத்தியத்தை நம்பாது ஆங்கில வைத்தியர்களை நாடினர். அதனால் சுகப்டாடாமையால் கதிரேசனிடம்சென்று ஆலோசனை கேட்டனர். சிவபக்தரும் சிவனின் திருவருளைப் பெற்றவருமான கதிரேசன் அவர்களைச் சிவபக்தரான சிவராசாவிடம் செல்லும்படி கூறினார்.

சிவராசா அகிலனின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டுஇ“நல்ல வேளை இப்போதாவது வந்திர்கள்.அகிலனின் விழிக்காற்று மாறுபாடு அடைந்துள்ளது. மருந்து எவையும் தேவையில்லை.கவனிக்காது விட்டால் பார்வையை முற்றாக இழக்க நேரிடும்.சிவனைத்தியானித்து அகத்தவம் செய்யுங்கள்.மூச்சுப் பயிற்சியும் செய்யுங்கள.” என்று கூறி என்னிடம் அனுப்பி வைத்தார். இப்போது அகிலன் முற்றாகக் குணமடைந்து விட்டான் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

637 நாடியின் ஓசை நயனம் இருதயந்
தூடி யளவுஞ் சுடாவிடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந்தாரே

“சிவனடியார்களே, நாடித்துப்பின் ஒசையை கண்கள்மூலமும் இதயத்தின் மூலமும் கண்டுகொள்ளலாம். இவ் வோசையை ஆண்டன்இ அரிஇ அயன் என்ற மூவரும் இடையறாது உணர்ந்திருப்பர். இவர்கள் தூமாவையில் உள்ளார்கள். ஒருவர் தனது நாடியின் துடிப்பை கண்கள் மூலமாகவும் இதயத்தின் மூலமாகவும் அறியலாம். அது சீராக இருந்தால் தான் உடலும் நோயின்றிச் சீராக இருக்கும். நாடித்துடிப்பில் வித்தியாசம் ஏற்பட்டால் களைப்பு உண்டாகும். வியர்க்கும், உடல்பலவீனம் ஆகும்.தலைசுற்றும். இதுவும் வீசும் காற்றில் திரிவு ஏற்படுவதால் உண்டாவது. அதை இருதநோய் என்று நினைத்துப் பயப்படாது வைத்தியரிடம் செல்லவேண்டும். பித்தம்,வாயு அதிகாரித்தாலும் இவ்வறான அறிகுறிகள் தென்படும். இதற்கு அகத்தவமும் மூச்சுப்பயிற்சியும் தேவை. வைத்தியரின் சொற்படி அளவாக முதலில் செய்ய வேண்டும். பின் படிப்படியாக அதிகாரித்தல் வேண்டும். முன்னைய காலத்தில் முனிவர்கள்,ரிஷிகள் பல காலம் நோய்யின்றி வாழ்ந்தமைக்கு இதுவே காரணமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

638 ஓன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி ஒடுங்காவல் லார்க்கு
ஒன்பது காட்சி யினை பல வாமே.

“சிவனடியார்களேஇ ஒன்பது துவரங்களை உடைய இப் பிண்டமாகிய உடலுள் வீசும் காற்றுத் தவிர்ந்த ஏனைய ஒன்பது காற்றும் புகும்.ஒன்பது நாடிகளையும் சீர் செய்ய வல்ல யோகப்பயிற்சி செய்வோர் உண்மையை உணர்ந்தவல்லவர்கள். அவர்கள் இந்த நாடிகள் சேரும் நாற் சந்தியைச் சிவனின் அருளால் கண்டு கொள்வர். அவர்களின் அகத்தே எழுப்பபடும் ஒசைகள் எல்லாம் அவர்களைக்குக் கேட்கும். செவிமுதலிய ஒன்பது பிண்டமாகிய உடலில் ஒன்பது காட்சி வாயில்கள் பெறும் உணர்வுகள் எத்துணையுன்றி அளவிறந்து தோன்றும்.”

“சிவடியார்களேஇ இவ்வுணர்வுகள் மாறுபாடைந்தாலும் அவர்களுக்குத் தோன்றும். அதனால் அதைச் சீர் செய்ய உணவு வகைகளை மாற்றியமைப்பர். யோகசனத்தையும் மூச்சுப் பயிற்சியையும் உடல் நிலைக்கேற்ப மாற்றியமைப்பர். கதிரேசன்இ உலகநாதன்இ ரவீந்திரன் போன்றவர்கள் அகத்தவத்தில் ஈடுபடுபவர்கள். அவர்களது உடலில் எந்த நோய்களும் இல்லை. நோய் ஏற்பட்டாலும் அதைச் சீர் செய்து விடுவார்கள். எண்பது வயது கடந்தும் கதிரேசன் கண்ணாடி போடாது வாசிக்கிறார் தொழில் செய்கிறார். அதற்குக் காரணம் அவரது வாழ்க்கை முறையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

639 ஓங்கிய அங்கிக்கீழ் ஒன்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் எழுந் தரித்திட
ஆங்கது சொன்னோம் அரு வழி யோர்க்கே

“சிவனடியார்களேஇ இந்தத் திருமந்திரப்பாடல் திரிபுக் காரணியைக் கூறுகின்றது. அகத்தவம் செய்வோர்க்கே மூலத்தீயின் கீழ்ச் செல்லுமாறு நடு நாடியைச் செலுத்தி வலப்பால் நரம்பின் வழிவரும் உயிர் மூச்சினை இடப்பால் நரம்பின் வழி ஓடச் செய்வர் அவ்வாறு செய்யும் அகத்தவத்தார் அறிஞர் என உலகங்கள் ஏழும் போற்றும்.”

“சிவனடியார்களேஇ அகத்தவத்தின் மூலம் எதையும் செய்யலாமெனச் செய்து காட்டியவர்கள் நாயன்மார்கள். திருஞானசம்பந்தரின் ஒரு சில செயல்களைச் சொல்கிறேன். நெருப்பிலிட்ட ஏடு எரியவில்லை.நீரில் விட்ட எடு எதிர்திசையாகச் சென்றது. இது அற்புதம் என்று சொல்லப்பட்டாலும் அவர் அகத்தவவிமையால் ஏடுகளைப் பார்த்தார். அவ் ஏடுகள் அவரின் வலிமையான பார்வையால் வலிமை பெற்றன. அதனால் அவை நெருப்பபையும் நீரையும் எதிர்த்தன. மூலத் தீயின் கீழ்ச் செல்லுமாறு நடு நாடியைச் செலுத்தி வலப்பால் நரம்பின் வழி வரும் உயிர் மூச்சினை இடப்பால் நரம்பின் வழியோடச் செய்யும் அகத்தவத்தினா் இதைச் செய்யலாம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

640 தலைபட்ட வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
தலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே

“சிவனடியார்களேஇ அகத்தவம் செய்வோர் சிவபெருமானின் திருவருளின் அருளால்கட்டுற்ற பிணைமான் போல் தராசு நுனிபோல் உயிர் மூச்சை சமனுறவைப் பின் தமக்கும் பிறருக்கும் பயனுடையவர்களாக வாழ்வர். விற்பனை செய்யவும் உணவாக பயனுறவும் உதவும் வித்தைப்போன்றவர்கள் இவர்கள்.”

“சிவனடியார்களேஇ சிவனது அருளைப் பெற்றோர் தீக்குள்ளும் இருப்பர். அதற்குக் காரணம் அவர்கள் அகத்தவம் செல்வதேயாகும். அவர்கள் சிவனின் அருளால் உயிர் மூச்சைச் சமனாக் வைப்பர். உயிர் மூச்சைச்சமனாக வைப்பதன் மூலம் தனக்கும் மக்களுக்கும் பயன் தரக் கூடிய பல செய்யல்களைச் செய்யலாம். இதை நாயன்மார்கள் செய்துகாட்டியுள்ளனர். சுந்தரர் ஆற்றில் இட்டபொன்னைக் குளத்தில் எடுத்தமை இதற்கும் சான்றாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

641 ஓடிச்சென் றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாதம் எழுப்பபுவர்
தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே

“சிவனடியார்களேஇதிருவளின் துணையால் செய்யும் அகத்தவப் பயிற்சியால் உணர்வினுள் ஓடிச் சென்று ஒப்பில்லாத பெரும் பொருளான சிவபெருமானைக் காணலாம். அவ்வாறு கண்டவர் தனது நாடியின் உள்ளே அகவொலியை எழுப்புவர். தனது நெற்றியின் புருவ

நடுவில் காணப்படும் தேனமுதினைத் தேடி உண்பர். உடம்பின் உள்ளே ஆறு பகையும், புலன்கள் ஐந்தும் நின்று பெரும் துன்பங்களை எப்போதும் கொடுத்தும் கொண்டே இருக்கின்றன. அதைச் சிவனது கருணையினால் வெல்லுதல் வேண்டும். வென்றால் அப்பகைவர் அழிந்து போவர்."

"சிவனடியார்களேஇஎந்த ஒரு மனிதனுக்கும் பகைவர்கள் ஐவர் இருப்பார்கள். அவர்களது பகைகயைச் சிவனால் மட்டும் தான் நீக்க முடியும். ஐம்புலன்களும் செய்யும்கொடுமை தாங்க முடியாதது என்பதை அறிந்தவர்கள் சிவனைத் தஞ்சமடைவர். அதனால் அவர்கள் நாடியின் உள்ளே அகவொலியை எழுப்புவர். சிவனின் அருளால் செய்ய முடியாதவை எவையும் இல்லை என்று கதிரேசன் சொல்வார் அது உண்மை." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

642 கட்டிட்ட தாமரை ஞானத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
தட்டிட்டு நின்று தனங்கனி னூடுவோய்ப்
பொட்டிட்டு நின்று பூரண மானதே

"சிவனடியார்களேஇ கட்டமைந்த தாமரை நாளத்தை ஒத்த நடு நாடி வழியாகச் செல்லும் உயிர்ப்புடன் உணர்வும் செல்லும் போது ஒன்பது என்னும்அளவினைக் கொண்ட திருவருலாற்றலுடன் கூடுவர். அவ்வாற்றல்களுடன் மேல்லேறிப் புருவ நடுவின் கண் செல்லுதல் வேண்டும். சென்றால் அங்கு நிறைந்த தேனமுதைநுகர்ந்து இன் புறலாம். இதுவே நிறைவானது."

"சிவனடியார்களேஇ உயிர்ப்புடன் உணர்வும் சேர்த்து சென்றால் ஒன்பது ஆற்றல்களுடன் கூடித் திருவருளின் துணையோடு சிவபெருமான் என்ற தேனமுதைக்கண்டு மகிழ்ந்து உண்டு சுவைகாலம். இது அகத்தவத்தை மேற்கொள்பவர்களுக்கே பொருந்தும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

643 பூரண சக்தி எழுமுன் றறையாக
ஏரணி கன்னியர் எழுநூாற்றைந் தாக்கினர்
நாரணன் நான்முக னாகிய ஐவர்க்குங்
காரண மாகிக் கலந்து விரிந்ததே

"சிவனடியார்களேஇ முழுநிறை ஆற்றல் நிலைக் களத்தை இருபத்தொரு அறைகளாக்கினர். அவற்றுள் தங்கும் கன்னியர் அவற்றை எழுநூற்று ஐந்து ஆக்கினர். இக் கன்னியர் நாராயாணன் முதலாகச் சொல்லப் பெறும் ஐந்து தொழிற்கடவுளருடனும் கலந்து அவர்களை இயக்கி எங்கும் விரிந்து நின்றனர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

644 விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை
கரந்தன் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு விடத்தினில் ஒடுங்கே

"சிவனடியார்களேஇ திருவருளாற்றல் உலகில் வாழும் உயிர்க்களுக்குத் தாரகம் எனப்படும். மீநிறைவாய் இருப்பவள். மீநிறைவு என்பது வியாபகமாய் இருத்தலைக் குறிக்கும்.இவ்வாற்றான வியாபகமான நிலை உலகினை இயக்கும் நிலையாகும். இந்நிலையில் அத்ததிருவருள் சிவனிடத்தில் வியாபகமாய் நிற்பவள். அதனால் இம் மங்கையை விரிந்துமஇ குவிந்தும்

விளைந்த மங்கை என்பர். அவ் அருள் மீண்டும் வெளிப்பட்டால் உலகம் தோன்றும். அவ்அருள் சிவத்தின் கண் ஒடுங்கும். அருள் ஒடுங்கினால் பூதங்களும் ஒடுங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

645 இடையொரு பிங்கலை என்னும் இரண்டும்
அடைபடு வாயுவும் ஆறியே நிற்குந்
தடையவை யாறெழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே

“சிவனடியார்களேஇ இடப்பக்க வலகப்பக்க மூக்குத்துவாரங்களினூடாகச் சென்று உள்ளுறையும் உயிர்ப்பு ஆறி அடங்கி நிற்கும். தடைகளான செருக்குஇ சினமஇ சிறுமைஇ இவறல்இ மாண்பிழந்த மானம் மாணாவுகை ஆகியன ஒடுங்கும். புருவ நடு வில் தோன்றும் குளிர்ந்த நிலா மண்டவத்தின் ஒளிக்குள் அடங்கி வளர்கின்ற மின்னற் கொடியின் ஆற்றலில் ஒடுங்கும்.”

“சிவனடியார்களேஇ உயிர் மூச்சின் திரிபால் தான் பல்வேறு விதமானநோய்கள் உண்டாகின்றன. இரு மூக்குத் துவாரங்கள் வழியாகச் செல்லும் காற்று தடைகளைத் அடக்க வேண்டும். அடங்கியவர்கள் பிற உணர்ச்சிகளுக்கு ஆட்படாது கல்லுப் போல இருப்பார்கள்.நல்லை நாதனின் தகப்பனுக்கு வயது எழுபது. திடீரென்று இறந்து விட்டார். நல்லை நாதனுக்குத் தந்தை மீது பாசம் அதிகம். எனினும் பிறந்தவன் இறந்தே திருவான் என்று திருவருளால் அறிந்தவர் அவர். அதனால் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து விட்டு உடலைத் தகனம் செய்துவிட்டு அவரது நினைவாக நூறு மாணவர்களுக்கு வருடா வருடம் கற்றல் உபகாரணங்களை வாங்கிக் கொடுக்க விரும்பினார். குமாரசாமியின் தந்தை ஐம்பது வயதில் இறந்தவர்.அவரிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தன.அவர் இறக்கும் வரை குமாரசாமிக்கு அதைக் கொடுக்கவில்லை. குமாரசாமி ஒரே மகனாகையால் சொத்து முழுவதும் அவனுக்கே சேர்ந்தது. அந்த மகிழ்ச்சியைக் கொண்ட அவன் மதுபானவகைகளை வாங்கித் தானும் குடித்துத் தனது நண்பர்களுக்கும் கொடுத்துக் கொண்டாடினான். இதற்குக் காரணம் நல்லைநாதனது உயிர்ப்பு அடங்கியமையாகும். குமாரசாமியின் உயிர்ப்பு அடங்கதாதல் செருக்குச்இ சினம்இசிறுமை ஆகியவற்றால் தலை கால் புரியாது நடந்தான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

646 ஒடுங்கி ஒருங்கி உணர்ந்தங் கிருக்கில்
மடங்கி அடங்கிடும் வாயு வதனுள்
மடங்கி அடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட கூத்தனை நாடுகின் றேனே

“சிவனடியார்களேஇ மனதை ஒடுக்கி ஒரு தன்மைப்பட்டு உணர்ந்து திருவருளோடு சேர்ந்திருந்தால் அதனுள் உயிர்ப்பும் அடங்கி விடும்.”

“சிவனடியார்களேஇ குமாரசாமியின் இரத்த உறவினன் நல்லைநாதன். குமாரசாமி தனது தந்தை இறந்தமையைத் தினமும் கொண்டாடினான். அதனால் கவலை கொண்ட நல்லை நாதன் குமாரசாமியின் வீட்டுக்குச் சென்றான். அங்கே குமாரசாமியின் நண்பர்கள் குடித்துக்கொண்டிருந்தனர். அதனால் குமாரசாமியுடன் கதைத்தால் அவர்களும் கதைப்பார்கள் பின்பு தேவையில்லாத பிரச்சினைகள் பலவும் வரும் என்று நினைத்துத் திரும்பினான்.அதைக் கண்ட குமாரசாமிஇ“நல்லைநாதாஇ உபதேசம் செய்ய வந்தாயா?இப்போ தான் நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். எவ்வளவு சொத்தை வைத்திருந்தவர் எனக் கொரு மோட்டார் வண்டி வாங்கித்தரவில்லை. இப்ப நான் வாங்கியுள்ளேன் என்று கூறிய படி வந்தான்.”

இவ்வழியால் சென்றமையால் வந்தேன். நீ போய் நண்பர்களுடன் கதை." என்று கூறி விட்டுச் சென்ற நல்லை நாதனின் மனம் நிலை தடுமாறித்தவித்தது அதனால் அவன் கதிரேசனிடம் சென்றான். கதிரேசன் அவன் கூறியதைக் கேட்டு விட்டுச் சொன்னார்இ"நல்லை, மனம் ஒடுங்கித்திருவருளில் அடங்காதவர்கள் இப்படித்தான் செய்வார்கள். மனச் சுமையைச் சிவனிடம் ஒப்படை என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

647 நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
தேடி யுடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிட்டு
மாடி ஒரு வகை மணி விளக் கானதே

"சிவனடியார்களேஇ நடு நாடியின் உள்ளே திருவருளுடன் சேர்ந்த உடம்புள் பகையாக இருக்கின்ற மெய் வாய் கண் மூக்கு செவி என்றும் ஐவரையும் அடக்க அவ்வுடம்பு பெருமையுடைய அருளுடம்பாகும்."

"சிவனடியார்களேஇ கதிரேசனது பதில் சரியாக இருந்தாலும் குமாரசாமி செய்வது தவறு அதைக் கண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊரில் உள்ள பலர் அதைப் பின்பபற்றுவர் என்று நல்லைநாதன் கவலைப்பட்டார். அதை உணர்ந்த கதிரேசன் சொன்னார்,"நல்லை நாதா நடு நாடியின் உள்ளே திருவருளுடன் சேர்ந்த உடம்பாயிருந்தால் அவ்வாறு செய்யாது, திருவருள் கொதித்தெழும் புலன்களைத் தனது சக்தியால் அடக்கி விடும். சிலராது உடம்புள் இரத்தமும் சதையும் தான் உள்ளது.திருவருள் இல்லை. அதனால் மனம் அடங்காது. எல்லாம் தெரிந்த உனக்கு இது தெரியாதா?" என்று கதிரேசன் கேட்டவர்"என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்

648 அனிமாதி சித்திக னானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத் தனையெங்கும் தானாத வென்றெட்டே

"சிவனடியார்களேஇத் திருப்பாட்டு எண் பேறுகளைத் தொகுத்துக் கூறுகிறது. அணுவில் நேர்மை, பெருமையில் நேர்மை, பருமையில் நேர்மை. பிசகாத நேர்மையால் விரும்பியதை அடையலாம்."

"சிவனடியார்களேஇ நேர்மையாக வாழ்பவர்கள் விரும்பிய எல்லாவற்றறையும் அடையத்திருவருள் உதவி செய்யும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

649 எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடு
மொட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டான் மிதியுண்ண வும்வரு மேலதே

"சிவனடியார்களேஇ எண் வகை யோகத்தால் எண் பேறு பெற்ற உயிர்ப்பை அடக்கிக் கொண்டால் நடு நாடி வாழியாக மூலத்தீயைச் சூரிய மண்டலமாகிய நெஞ்சத் தாமரை மேற்செலுத்தலாம்.அதனால் புருவநடுவாகிய திங்கள் மேன்மையடையும்."

“சிவனடியார்களேஇ திருவருள் கைவரப் பெற்றவர்களுக்குக் கவலைகள் இராது. அப்படியிருக்க நல்லைநாதன் கவலைப்பட்டதைக் கண்ட கதிரேசன் சொன்னார்.” நல்லைஇ எண் வகை யோகத்தால் எண் பேறு பெற்ற உயிர்ப்பை அடக்கித் திருவருள் கைவரப் பெற்ற நீ கலங்குவது எனக்கு வியப்பைத் தருகிறது.உலகம் பல்வேறு வகைப்பட்டது. எமது கிராமத்தின் கிழக்கு பகுதி உவர் நிலம். தெற்கும் உதவாதது மேற்குப் பகுதி செந்நிறம்.பொன் கொழிக்கும் நிலம். அருகருகே இருக்கும் நிலத்தில் எவ்வளவு வேறுபாடு. அப்படியிருக்க மனிதர்கள் எல்லோரும் நல்லவாராக இருப்பரென்று எப்படி எண்ணுவாய்? குமாரசாமியின்தந்தைக்குச் சிவன் கொடுத்த வாழ்வு அது. உனக்கு மனம் ஆறா விட்டால் அவருக்கு வேண்டிய கடமைகளைச் செய் என்றவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

650 சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்
சித்திகள் எண்சித்தி தானாந் திரிபுரை
சக்தி அருள்தரத் தானுள வாகுமே

“சிவனடியார்களேஇஅகத்தவத்தால் வரும் எண் வகைப் பேறுகளைப் பெறுவது மட்டுமல்லாமல் பல வகையான அறிவுகளையும் பெறலாம்.”

“சிவனடியார்களேஇ அகத்தவத்தால் அறுபத்து நான்கு பேறுகளைப் பெறலாம். அத்துடன் பலவகையான அறிவுகளையும் பெறலாம். கதிரேசன் பாடசாலைக்குச் சென்றவரல்ல. அகத்தவம் செய்பவர்.அவர் அறுபத்து நான்கு சித்திகளையும் பெற்றாரோ தெரியாது. ஆனால் பல்திறப்பட்ட அறிவைப் பெற்றுள்ளார். ஊரில் உள்ளவர்கள் மட்டுமல்ல வெளியூரவர்களும் கிணற்று நிலையம்இ வீட்டு நிலையம் பார்ப்பதற்கு அவரைத் தான் அழைத்துச் செல்கின்றனர். அவர்இத்தனை அடிக்குள் நீர்வரும் என்று கூறினால் அவர் கூறிய படிநீர்வரும். சிவ குருநாதன் வீடு கட்டுவதற்கு நிலையம் எடுத்துத்தரும்படி கதிரேசனைக் கேட்டான். அவர் ஒருவருடம் பொறுத்துக் கொள் என்றாவர். அதை விரும்பாத அவன் வேறோரு சாத்திரியைக் கொண்டு நிலையம் எடுத்து வீடு கட்டத்தொடங்கினான். மூன்றுவருடங்களாகியும் அது ஒப்பேறவில்லை.இப்படி எத்தனையோ விதமான அறிவு கதிரேசனுக்கு உண்டு.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**அணிமா நுண்மை**

651 எட்டிவை தன்னோ டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே.

“சிவனடியார்களேஇ அன்பு அறிவு ஆற்றல் ஆகிய மூன்றும் இயல்பாகவே விளங்கும் சிவனை இடையறாத நினைப்பால் தம்முள் அடக்கியவர்கள் சித்தர்கள்.”

“சிவனடியார்களேஇ நீங்காத நினைப்பால் திருவளோடு கலந்தவர்கள் சித்தர்கள்.அவர்களுக்கு வேறு எந்த நினைப்பும் வராது. சிவ உலகில் வாழ்பவர்கள் அவர்கள். எவ்வேளையிலும் மனதுள்ச்சிவனைக் காண்பார்கள் எண் பேறுகளும் பெற்றவர்கள். இப்படியானவர்களின் வாய்ச் சொல் சிவனது சொல்லாகவே இருக்கும். அவர்கள் இருக்கும் இடங்களில் மக்களும் இருப்பார்கள். அவர்கள் பேசமாட்டார்கள். பேசினால் சிவனைப் பற்றியே பேசுவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

652 மந்திர மேறு மதியாறும் வைமாற்றிக்

கந்தாய் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காய மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் அணிமாதி யாமே

“சிவனடியார்களேஇ புருவ நடுவின் மேலே ஏறுகின்ற திங்கள் ஞாயிறு ஆகிய இடப்பால் வலப்பால் உயிர்ப்பை மேல் உள்ளதைக் கீழாகவுமஇ கீழ்உள்ளதை மேலாகவும் மாற்ற வல்லவர்கள் சித்தர்கள். இவையாவும் யோகப் பயிற்சியால் வந்தது. இவை நுண்மையாகிஅணிமா என்னும் சித்தியால் கிடைத்தவை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

653 முடித்திட்டு வைத்துமுயங்கிலோ ராண்டில்
அணிந்த அணிமாகை தானாம் இவனுந்
தனிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே

“சிவனடியார்களேஇ அகத்தவமான யோகத்தில் பொருந்தி இருந்தால் புகழ்ந்து கூறப்படும் அணிமா நுண்மை தானாகவந்து எளிதாக கைக்கூடும். இந் நிலை ஒரு வருடத்தில் கைகூடும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இலகிமா (மென்னம்)**

654 ஆகின்ற வந்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே

“சிவனடியார்களேஇ திருவளின் துணையுடன் முதல் நிலையாகிய மூலதாரத்தில் இருந்து மேலே ஏறும் எல்லா நிலைகளிலும் அத்திருவருள் ஆற்றலே துணையாக நிற்கும். ஐந்து ஆண்டுப் பயிற்சியில் மிக்க மென்மையான இலகிமா கைகூடும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

655 மாலகு லாகிய மாயனைக் கண்டபின்
தானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் பரந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்பொருள் காணுமே

“சிவனடியார்களேஇ பெருமை மிக்க மென்மையான வடிவினை உடைய சிவனைப் பர வெளியில்காணமுடியும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**மகிமா**

**(பருமை)**

656 மெய்பொருள் சொல்லிய மெல்லிய வாளுடன்
தற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே

“சிவனடியார்களேஇ மெய்ப்பொருளான சிவபெருமானின் திருவருளுடன் கூடிய ஓர் ஆண்டினுள் மகிமா நிலையினர்க்கு அழிவில்லாத திருவடியுணர்வை அறிவுறுத்த அந்நிலை கைகூடும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

657 ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்
மேனின்ற காலம் வெளியுற நின்றன
தானின்ற காலங்கள் தன்வழி யாகுமே

“சிவனடியார்களேஇ வாழ்நாள் முழுவதற்கும் துணையாக நிற்கின்ற உயிர்ப்பாகிய ஒளியானது அகத்தேயும் புறத்தேயும் ஒப்பாக இருந்தால் போகின்ற ஆயுட் காலம் நீங்குவதில்லை. அதாவது உள்ளே சென்ற பிராண வாயு உள்ளே அடங்கியதால் அது ஒளியாகி ஆயுட் காலத்தை நீடிக்கும். கழிதற்கென வரையறுக்கப்பட்ட வாழ் நாட்கள் அகத்தவம் செய்வார் நினைத்தபடி நடக்கும்.”

“சிவனடியார்களேஇ எனது குருவார் சொல்வார் அகத்தவத்தைப் பூரணமாகப் பூர்த்தி செய்தவர்களது வாழ்நாள் அவர்கள் நினைத்தபடி இருக்கும். அவர்கள் நினைத்தவுடன் உடலை விட்டு நிங்கிச் சிவனை அடைவர். எனது குரு அப்படித்தான் நடந்து கொண்டார். தனது சீடர்கள் அனைவரையும் பங்குனி மாதத்துப் பௌணமியன்று ஆச்சிரமத்திற்கு வருமாறு கூறினார். எல்லோரும் வந்ததும் அவர்களுக்கு ஆசி கூறிய சில நிமிடங்களில் அவரது உயிர் உடலை விட்டுச்சென்றது. அகத்தவம்செய்வோர் தமது ஆயுளைத் தாமே தீர்மானிப்பர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

658 தன்வழி யாகத் தழைத்திடு ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகம்
தனவழி யாகத் தழைத்த பொருளெலாம்
தன்வழி தன்னரு ளாகிநின் றானே

“சிவனடியார்களே, அகத்தவத்தின் மூலம் ஞானம் வந்து சேரும். திருவடி உணர்வு மேலோங்கும். திருவடியின் வழியில் ஆவி நிற்கும்.அத்தகைய ஆவியின் வழி உலகம் செல்லும்.”

“சிவனடியார்களே, பலர் அகத்தவம் செய்து ஞானம் பெற்று விட்டதாகக் கூறி மக்களை ஏமாற்றிப்பணம் சம்பாதிக்கிறார்கள். அதற்காகப் பல ஏமாற்று வழியைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் சொல்வது நடப்பதில்லை. ஒன்று சொல்ல இன்னொன்று நடக்கும். உண்மையான சித்தர்கள் சிவனடியார்களின் விருப்பத்தை திருவருளின் துணையோடு பூர்த்தி செய்வார்கள். ஒரு முறை பலத்த மழை பெய்தது.சூறாவளியும் வீசியது. மக்களின் இருப்பிடங்கள் சேதமாகின. மக்கள் எல்லோரும் உணவின்றியும் தங்குமிடமின்றியும் அவதிப்பட்டனர். அப்போது அயலூர் வணிகன் ஒருவன் தேவையான பொருட்களுடன் அங்கு வந்து எனது குருவை வணங்கி விட்டுச் சொன்னான்.” சுவாமி தாங்கள் இரவு எனது கனவில் வந்து துன்பப்படும் எமது மக்களுக்கு வேண்டியவற்றை செய் என்றீர்கள். தங்கள் கழுத்தில் நாகம் இருந்தது.சடையில்பிறைச் சந்திரன் இருந்தான்”என்று கூறினான். குரு சிவனுக்குச் சொல்லச் சிவன் சிவபக்தன அந்த வணிகனுக்கு கூறியிருக்கிறார்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பிராத்தி (விரும்பிய செய்தல்)**

659 நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது வேநல்ல பிராத்திய தாமே

“சிவனடியார்களே, மாயா காரிய மெய்களை இயக்கும் மறைப்பாற்றலுடன் காணப்படும் பூதங்கள் யாவும் பொறை நிலையுடன் கூட இருந்தால் ஓராண்டுப் பயிற்சியுடன் எண்ணியவை கட்டாயம் நிறைவேறும்.”

“சிவனடியார்களே, ஐம்பூதங்களையும் யோகப் பயிற்சியால் வென்றவனுக்குத்தான் நினைப்பவற்றைச் செயலாற்றும்வல்லமை உண்டு. எனது குரு தான் நினைப்பவற்றை எமக்குச் சொல்வார். அது நிறைவேறும். ஒரு முறை ஒரு சிவனடியார் தனது பத்து வயது மகனை அழைத்து வந்து அவனுக்கு இருதயத்தில் கோளாறிருப்பதாகக் கூறி அவனைக் காப்பாற்று மாறு கேட்டார். குரு ஒரு வாரம் கழித்து வரும் படி சொன்னார். அவன் மிகுந்த ஏழை.சத்தான உணவு கொடுக்கமையால் தான் அவன் பலவீனமாக இருந்தான். ஒரு வாரத்திற்குத் தேவையான நல்ல சத்தான உணவு கொடுத்து விடும்படி கூறினார். ஒரு வாரத்தால் அவன் வந்த போது எமக்கு முன்பின் தெரியாத ஒருவர் ஆச்சிரமதிற்கு வந்திருந்தார். அவரைப் பார்த்துக் குரு சொன்னார்” உனது வியாபாரநிலையத்தில் தகப்பனுக்கு வேலை கொடு.அவரது மகனுக்கு உடல் தேறும் வரை நல்ல சத்துள்ள உணவு கொடு. காணாமல் போன உனது கப்பல்கள் பாதிப்பில்லாமல் வந்து சேரும் என்றவர்’’என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கரிமா**

**(விண்தன்மை)**

660 ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே

“சிவனடியார்களே, அகத்தவமான யோகப்பயிற்சியால் உண்டாகும் மின்னல் போன்ற ஒளி மூலம் உலகம் முழுவதையும் காணலாம். புருவ நடுவிற் காணப்படும் ஆயிரம்இதழ்த் தாமரைப் பரப்பு முழுவதையும் ஒன்றாகக் காணலாம்.”

“சிவனடியார்களே, எனது குரு சொல்வார் மனதை ஒடுக்கிப்பற்றுக்களை நீக்கிச் சிவனை நினைத்து அகத்தவம் செய்தால் புருவ நடுவில் ஓர் ஒளி தோன்றும். அதில் நிகழ இருப்பவை தெளிவாகத் தெரியும். அவர் சொன்னார்.” இம் முறை மழை பொய்க்கும். ஆனி ஆடி மாதங்களில் பெய்யும் மழை பெய்யாது. அதனால் விவசாயிகள் மழை வரும் என்று நம்பிப் பயிரிடாதீர்கள். ஒரு மாதம் கழிந்த பின் பெரு மழையும் சூறாவளியும் ஏற்படும். அதன் பின் விதையுங்கள்” என்றாவர். அவர் கூறியதை நம்பாத சிலர் விதைத்தனர். மழை பெய்யாததால் பயிர் முளைக்கவில்லை. சிலர் மழை பெய்யத் தொடங்கியதும் அவசரபட்டு விதைத்தனர்.விதை நெல்லை வெள்ளம் அள்ளிச் சென்று விட்டது. குருவினது சொல்லை

நம்பிய மக்கள் மக்கள் மழை பெய்த பின் விளைதத்து நல்ல பயனைப் பெற்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

661 போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன்றிலை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமாகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே

"சிவனடியார்களே, உயிர்ப்பு உள்ளே செல்வதும் வெளியே வருவதும் என்றும் நிலையில்லை. இறப்பும் பிறப்பும் இல்லை. முக்குணத்தில் ஒன்றாகிய ஆணவ மலம் பீடிப்பதில்லை. எனவே முக்குணங்களால் வரும் துன்பங்களும் இல்லை. நடு நாடியிலுள்ள உட்துணை உயிர்ப்பு நிறைந்திருப்பதால் ஒளியாவதும் இல்லை.எந்த விதமான துன்பங்களும் இல்லை."

"சிவனடியார்களே, அகத்தவமுடையவர்களுக்கு எந்தவிதமான இன்பங்களும் இல்லை.அது போலத் துன்பங்களும் இல்லை. திருவளோடு கலந்து இருப்பதால் சிவனைத் தவிர வேறெந்த நினைவுகளும் இல்லை. உடலில் உள்ள உணர்வுகள் யாவும் சிவனுடன் கலந்திருப்பதால் இத்தகைய துன்பங்கள் இல்லை." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

662 அறிந்த பராசக்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குறித்தவை யோராண்டு கூட இருக்கில்
விரிந்தது பாகாய மேவலு மாமே

"சிவனடியார்களே, யோகப்பயிற்சியால் வந்த சித்தியான திருவருளால் பூதங்களின் மாசுகள் அனைத்தும் அகலும். மேலும் ஒறாண்டுப் பயிற்சியால் எங்கும் செல்லவும் விரும்பிய உடலில் புகவும் முடியும்."

"சிவனடியார்களே, திருமூலர் தேவ உலகில் இருந்து வரும் போது வழியில் மாடுகள் அழுது கொண்டிருந்தன. அதைக் கண்ட திருமூலர் அவை ஏன் அழுகின்றனஎனப் பார்த்தார்.மாடுகளை மேய்ப்பவன் இறந்து போனான். திருமூலர் அவனது உடலில் புகுந்தார். பின் தனது உடலை மறைத்து வைத்தார். மாடுகளை உரிய இடங்களில் விட்டு விட்டு வந்த போது அவரது உடலைக் காணவில்லை. மாடு மேய்த்தவனின் உடலோடு தான் அவர் வாழ்ந்தார். யோகப் பயிற்சியால் நினைத்தவற்றைச் செய்ய முடியும். உருமாறலாம். வேறு உடலில் புகலாம். வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பிராகாமியம்**

**(நிறைவுண்மை)**

663 ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வாக்கு
மேலை விளக்கொளி வீடெனி தாநின்றே

"சிவனடியார்களே, எப்பொழுதும் ஒளிரும் முழுமுதற்கடவுளான சிவபெருமானின் பேரொளி, புருவ நடுவில் உள்ள உயிர்களுக்கு உயிராகவுள்ள சிவனின் ஒளிஇ தேவர்கள் கண்ட

உயர்ந்த உலகம் முழுவதும் பரவிய சிவ ஒளி ஆகிய ஒளிகளைக் காணும் யோகப்பயிற்சி உடையவர்களுக்குத் திருவடிப்பேறு எளிதாகக் கிடைக்கும்."

"சிவனடியார்களே, கதிரேசன் யோகப்பயிற்சி செய்வார். முழுமையான சிவபக்தர். அவர் தியானத்தில் இருந்தால் கண்களுக்குள் வர்ணிக்க முடியாத ஓர் ஒளி தென்படுகின்றது என்று எனது குருவுக்குச் சொல்வார். அதற்குக் குரு சொல்வார்." கதிரேசு சிவபக்தர்கள் ஒரு மனதோடு கண்களை மூடித் தியானம் செய்தால் ஒன்றல்ல மூன்று ஒளிகள் தென்படும். ஆரம்பத்தில் சிவன் ஒளியாகத் தெரிவான். பின் புருவ நடுவில் உள்ள சோதி தோன்றும். அதன் பின் சிவபெருமான் சோதிப்பிழப்பாக உலகம் முழுவதும் தோன்றிய காட்சி தெரியும். அடுத்த கட்டத்திற்கு போக உனக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள தென்பார். யாராக இருந்தாலும் பற்றுகள் இன்றி மனதை ஒடுக்கிக் கண்களை மூடுங்கள். ஓர் ஒளி தெரியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஈசத்துவம் (ஆட்சியனாதல்)**

664 நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாங்
கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டையவ் வீசன் தத்துவ மாகுமே

"சிவனடியார்களே, ஐம் பூதங்களையும் ஆட்சி செய்யும் தெய்வங்கள் முறையே அயனஇ அரிஇ அரன், ஆண்டான், அன்னைஇ அத்தன் ஆகியோராவர். இவர்கள்முறையே நாற்றம் முதல் ஐந்திற்குமாம் அன்னைஇ அத்தன்இ சதா சிவன். இவ் உண்மையை உணர்ந்து அவ்வப் பூதங்களின் தன்மையை அவ்வவ் இடங்களில் அமைத்துக் கொண்டால் அனைத்தையும் பெறலாம்."

"சிவனடியார்களே, கதிரேசனுக்கு வயது எண்பது. அவர் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து சிவ சேவை செய்ய விரும்பினார். அது மனைவிக்கும் பிள்ளைக்கும் மனவருத்தத்தைக் கொடுத்தது. அதனால் குருவிடம்வந்து அவரை வீட்டுக்குக் அனுப்புமாறு இரந்தனர். அதனால் குரு கதிரேசனை அழைத்துச் சொன்னார்இ" கதிரேசு நீ பெரும் சிவபக்தன். யாவும் உனக்குத் தெரியும். ஐம் பூதங்களையும் ஆட்சி செய்யும் தெய்வங்களையும் தெரியும். அன்னை அத்தன் சதா சிவப் பெருமானையும் தெரியும். அதனால் நீ வீட்டில் இருந்து கொண்டே யோகத்தில் ஈடுபடலாம். உன்னைத் தடை செய்யவோ குழப்பவோ யாராலும் முடியாது. அதனால் மனைவி பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவது தான் ஒரு சிவனடியாரின் கடமை என்றவா." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

665 ஆகின்ற சந்திரன் தன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே

"சிவனடியார்களே, சந்திரனது குளிர்மையான ஒளியான சிவபெருமான். அதன் குளிர்ச்சியும் அவன் தான். அதன் கலை வளர்ச்சியும் முழுமையும் அவன் தான்."

“சிவனடியார்களே, கண்களால் காணும் பொருட்கள் அனைத்தையும் படைத்தவன் சிவபெருமான். படைத்த பின் அதன் உள்ளே அதுவாய் நிற்பவனும் அவன். இதை உணர்ந்தவன் காலத்தை வென்றவனாவன்.” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

666 தானே படைத்திட வல்லவ னாயிடும்
தானே யளித்தி வல்லவ னாயிடும்
தானேசங் காரத் தலைவனு மாயிடும்
தானே யிலலெனுந் தன்மைய னாமே

“சிவனடியார்களேஇ படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய உடம்பின் கண்செய்யப்படும் முத்தொழிகளையும் எளிதாகச் செய்யும் வலிமையுடையவன் அவன். அவன் தான் முழுமுதற் சிவன்.”

“சிவனடியார்களே, ஊழிக்காலத்தில் எல்லா உயிர்களையும் சங்காரம் செய்து பின் பிறப்பிப்பவன் அவன். இந்த வகையில் அயன் அரி அரன் முதலிய ஐவரையும் சங்காரம் செய்பவன். அவர்களது மண்டை ஒடுகளையே மாலையாகக் கோர்த்துக் கட்டியுள்ளான். அவன் தான் உலகம். அவன் தான் கருவிஇ காரணன். இதை உணர்ந்தவர்கள் தான் சிவனை உணர்ந்தவர்களாவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

667 தன்மைய தாகத் தழைத்த கலையினுள்
பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
வண்மையை தாக மறித்திடில் ஒராண்டின்
மென்மைய தாகிய மெய்பொருள் காணும்

“சிவனடியார்களே, குளிந்த சந்திரனின் கலையினுள் மாறுப்பட்ட பல தன்மைகள் பொருந்திப் பரந்துள்ள ஐம் பூதங்களையும் திருவருளின் துணையால் வளம் பொருந்திய நன்நெறிக்கு வாயிலாக மாற்றிக் கொள்ளல் வேண்டும். அப்படி மாற்றிக் கொண்டால் ஓர் ஆண்டுப் பயிற்சியின் பின் எப்பொருட்கும் சார்பான இயற்கை மென்மைத் தன்மை வாய்க்கும். அந்நிலையில் மெய்பொருளான சிவனைக்கண்டு வழிபடலாம்.”

“சிவனடியார்களே, திருவருளின் துணையோடு ஐம் பூதங்களையும் நன்நெறிக்கு வாயிலாக மாற்றிக் கொண்டால் சிவ தரிசனம் கிட்டும். ஐம் பூதங்களில் நிலத்தையும் நீரையும் வசப்படுத்தி நன்நெறிக்கு வாசலாக அமைத்தல் என்பது இரண்டிலும் உள்ள பற்றுகளைத் துறத்தாலாகும். அவ்விரு பற்றுக்களை துறப்பாவன் ஏனையவற்றை இலகுவாகத் துறப்பான். அவற்றைத் துறந்தால் சிவனைக் காணலாம். என்று குரு சொல்வதை கேட்டுத்தான் கதிரேசன் ஆச்சிரமத்திற்கு வந்தவா்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வசித்துவம்**

**(கவர்ச்சி)**

668 மெய்பொரு ளாக விளைந்தது வேதெனின்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்து உயிர்க்கெலாந்
தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே.

“சிவனடியார்களேஇ திருவருளின் துணையால் உண்மைப் பொருளாக விளங்குவது அருட்பொருளாம் கவர்ச்சி என்று சொல்லப்படும் வசித்துவமாகும்.அதுவே தூய்மை மிகுந்த நற்பொருள். எல்லா உயிர்களையும் இசைந்து இயக்கும் முழுமுதற் சிவமே கவர்ச்சி மிகுந்த

வசித்துவம் ஆகும். வசித்துவம் என்றால் கவர்ச்சி என்று பொருள். அது உயிர்களோடு இசைந்திருந்து இயக்குகிறது. உயிர்களோடு இணைந்திருந்து இயக்குவர் சிவபெருமானே.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

669 தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே

“சிவனடியார்களே, திருவருளின் துணையால் மெய்ப்பொருளாகிய சிவபெருமானை அவன் அருளிய அருட் கண்களால் கண்டால் கண்டவரது மேனி முழுவதும் பொன் நிறமாகும்.திருவடிப் பெறாகிய தன்மை மேலிடும்.நற்கொடியான திருவருள் மேம்படும்.”

“சிவனடியார்களே, சிவபெருமானைச் சிவன் அருளிய ஞானக் கண்களால் கண்டவர்களின் உடல் பொன்னிறமாகும் என்று எனது குரு அடிக்கடி உபதேசம் செய்யும் போது சிவனடியார்களுக்குக் கூறுவார். பெரும்பான்மையான அடியார்கள் அவர் சொல்கிறார் என்பதற்காகக் கேட்பார்கள். அத்துடன் அவரை எதிர்த்துப் பேசவும் மாட்டார்கள். பேசினால் ஏதாவது துன்பம் வந்து விடும் என்ற பயம். காலப் போக்கில் எனது குருவின் மேனி பொன் நிறமாக மாறியது.அதில் ஒரு பூரிப்புஇ பளபளப்புக் காணப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட அயலூரவர்கள் கூட ஆச்சிரமத்திற்கு வந்து குருவிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

670 நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கொடி யாகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னாமே

“சிவனடியார்களே, திருவருளாற்றலைஇடையாறாத தியானத்தால் பெற்றவாஇ அத்திருவருளால் இயங்கப்படும் இருநூற்று இருபத்து நான்கு உலகங்களுக்கு மிகவும் எளிதாகச் சென்று அப்படிச் சென்று வருவார். அப்படிச் சென்று வந்தாலும் அவர் மாயையின் பிடிக்குள் அகப்படமாட்டார்.”

“சிவனடியார்களே, திருவருளைப் பெற்றவர் திருவருளால் இயங்கும் உலகங்களுக்கு நினைத்தவுடன் சென்று வருவார். திருவருளால் இயக்கப்படும் இருநூற்று இருபத்து நான்கு உலங்களுக்கும் அவர் சென்று வருவார். முன்னைய காலங்களில் முனிவர்களும் அரக்கர்களும் அரசர்களும் சென்று வந்தாக நாம் அறிந்துள்ளோம். திருவருளைப்பெற்றவர்கள் சிவலோகத்திற்குச் செல்ல விரும்பினால் தியானத்தில் இருந்தவாறு சிவபெருமானை நினைத்தால் அவர்களது ஆத்மாவைச் சிவன் அழைத்துச் சென்று சிவயோகத்தைக் காட்டுவார். எனது குரு அடிக்கடி தான் சிவலோகதிற்குச் சென்று வருவதாகக் கூறுவார். அவர் சிவனைத் தவிர அங்குள்ள எவற்றை பற்றியும் பேசமாட்டார். அதனால் அங்குள்ள எவற்றிலும் பற்றுக் கொள்ளும் நிலை ஏற்படாது.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

671 காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு வுன்னிடை மெய்த்திடு மானனாய்
நாமரு வும்ஒளி நாயக மானதே

“சிவனடியார்களே, திருவருளைக் கூடிய பின்பு நினைத்த இடத்திற்கு நினைத்தவுடன் செல்லத்தக்க ஆற்றலைத் திருவருள் கொடுக்கும்.”

திருவருவளால் சிவபெருமானது பேராற்றலான திருவருளைப் பெற்றோர் தாம் அடையக் கூடிய பெரும் பாக்கியம் அது என்று உணர்வர்.”

“சிவனடியார்களே, திருவருட்கடாச்சத்தைப் பெற்றோரைச் சிவன் விரும்புவார். அதனால் தான் எழுந்தளிருயிக்கும் தலங்களுக்குச்செல்லலாம். அவர்களை வரவழைப்பார். எனது குரு தியானத்தில் இருந்து மீண்டதும் தான் இந்தத் தலத்திற்குப் போக வேண்டும் என்று சொல்வார். அதற்கு முன்பே தலத்திற்குச் சொந்தகாரர்கள் வாகனங்களுடன் வந்து காத்திருப்பார்கள். இது அடிக்கடி நிகழும் நிகழ்வு. குருவின் எண்ணம் எப்படி உங்களுக்குத் தெரியும் என்று ஒரு நாள் வந்த ஒருவரைக் கேட்டேன் அவர்இ“சிவன் கனவில் வந்து அறிவிப்பார்.” என்றவர் சிவனருள் பெற்றோரைச் சிவன் அழைப்பது புதினமல்ல.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

672 நாயக மாகிய நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயக மாகிய பேரொளி காணுமே

“சிவனடியார்களே, எமக்கு என்றும் மாறாத் தலைவனாகிய சிவபெருமானின் திருவளை உணர்ந்த உயிர்கள் அவ் அருள் வெளியாகிய திருச்சிற்றம்பலம் தான் தனது உறைவிடம் என்று நினைக்கும். விரிந்த கிடக்கும் உலகங்களைக் கண்ட பின் தன் வழிச் செல்லும் போது புகழ் பெற்ற திருவருளாற்றலின் பேரொளியைக் காணும்.”

“சிவனடியார்களே, திருவருள் வசப்பட்ட உயிர்கள் தமது உறைவிடம் திருச்சிற்றம்பலம் என்று நினைத்து அதில் தங்கித் தரிக்கும். அப்போது திருவருளின் மகிமையால் சிவபெருமானின் பேரொளியைக் காணும். அதனால் அது என்றும் அவ்ஒளியிலேயே வாழும். எனது குரு சொல்வார்” கண்களை மூடினால் எங்கும் ஒளியாக இருக்கும். அவ் ஒளிக்குள் சிவனது உருவம் தோன்றும் கண்களைத் திறந்தால் சூரிய ஒளியில் சிவனைக் காணலாம். திருவருள் வசப்பட்டோர் இரவிலும் ஒளியைக் காண்பவர்களாகவே இருப்பார்கள் என்பார். அதைத் கதிரேசன் ஒப்புக்கொள்வார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

673 பேரொளி யாகிய பெரியஅவ் வேட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்
தாரொளி யாகத் தரணி முழுவதுமாம்
ஓரொளி யாகிய காலொளி காணுமே

“சிவனடியார்களே, பெரும் ஒளியாகிய நெஞ்சத் தாமரையை அகத்தவத்தால் பார்த்து அதில் சுடரொளியைக் கண்டவர் உலகம் முழுவதும் நேர்ரொளியாகவும் ஒருங்கு காணும் ஒளியாகவும் உயிர்ப்பொளியாகவும் காணுவர்.”

“சிவனடியார்களேஇநெஞ்சத் தாமரையில் உள்ள ஒளியை அகத்தவத்தால் காண்பவன் உலகம் முழுவதிலும் உள்ள பேரொளியை நேர்ரொளியாகவும் ஒருங்கு காணும் ஒளியாகவும் காண்பான் என்று குரு சொல்வார். அத்துடன் உலகெங்கும் ஒளிமயமான சிவபெருமான்

பேரொளியாக ஒளிர்ந்த கொண்டிருப்பதை அகத்தவத்தின் மூலம் காண்பவன் இருட்டிலும் ஒளியைக் காண்பான்.அவனது நெஞ்சத் தாமரையில் இருட்டாகிய ஆணவம் இராது. அது நீங்கினால் எங்கும் ஒளிமாயமாகும். என்றும் சொல்வார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

674 காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது அக்கொடி நாயகி தன்னுடன்
காலது ஐஞ்நூற் றொருபத்து மூன்றையுங்
காலது வேண்டிக் கொண்டஇவ் வாறே

“சிவனடியார்களேஇ உயிர்ப்புடன் ஆவி சேர்ந்து இயங்கும் போது நிறைந்த திருவளாற்றல் நிறைவடையும். எழுபதினாயிரம் நாடிகளில் ஐந்நூற்று பதின்மூன்றையும் விரவி இயங்கும் உயிர்பிணைத் திருவருள் தன்னாற்றலால் அடக்கி தனது வசபடுத்தும். ஐந்நூற்றில் பதின்மூன்று நாடிகளில் பிராணவாயு வியாபித்திருக்கும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

675 ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிர முந்நூற்றொ டைந்துள
ஆறது வாயிர மாகு மருவழி
ஆறது வாக வளர்ப்ப திரண்டே

“சிவனடியாாகளே, அலை விசுகின்ற அமிழ்ந்த ஆற்றிலே எழுபதினாயிரம் நாடிகள் உண்டு. நுண்ணிய செம்மையான வழிகளை நன்நெறிக்காக செவ்வி வழியாக நினைப்பிப்பது சிவனும் உமையுமான அத்தனும் அம்மையும் செய்யும் பேரருளாலாகும்.”

“சிவனடியார்களே, அமுத ஆறு பெருகும் தலையினுள் அமுதத்தைப் பெருக்குவது அத்தனும் அன்னையுமே.தலை தான் உயிர்களுக்குப் பிரதானம். தலைக்குள்த் தான் உயிர்களின் செயற்பாடுகள் அனைத்தையும் இறைவனும் இறைவியும் படைத்து இயக்குகின்றனர். அகத்தவத்தால் திருவருள் கைகூடினால் தலைக்குள் உள்ள எழுபதினாயிரம் நாடிகளுள்ளும் அமுதமான எண்ணங்கள் பெருகும். அவை தித்திப்பான அனுபவங்களாகக் கொடுக்கும். உயிர்கள் நினைததும் செயற்படுத்தும். பின் அதை நடைமுறைப்படுத்தும் தலையே. தலைக்குள்த் தான் மூளை உண்டு. எனது குரு சொல்வார் பலர் தீய செயல்களை நினைத்து ஆரம்பத்தில் இன்பமடைகின்றனர். அவை பின் துன்பத்ததையே கொடுக்கும். அதனால் இன்பத்தை தரும் சிவனை நினையுங்கள் உங்கள் வாழ்வு சொர்க்கமாகும். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். ஒரு பெரும் வியாபாரி.அவனிடம் கூலிக் காரணக வேலை செய்பவனின் அழகான மனைவி மீது ஆசை கொண்டான். அவளது நினைவு அளவில்லாத பேரின்பத்தை கொடுத்தது அதனால் அவளுக்கும் வேலை கொடுத்தான். பக்கதத்தில் இருந்து அவளை ரசித்து பார்க்க இது வரை கிடைக்காத பேரின்பம் கிடைத்தது. அவ்விடயம் கணவனுக்கும் அவளது சகோதரர்களுக்கும் தெரிய வர அவர்கள் அந்த வர்த்தகனை தாக்கினர். அதைத் தாங்க முடியாத வியாபாரி என்னிடம் வந்து அவளை அடைய வசியம்செய்து தருமாறு கேட்டான். நான் அவனுக்கு நல்வழி கூறிச் சிவனையும் பார்வதியையும் நினைத்து அகத்தவம் செய்யச் சொன்னேன்.இப்போ அவன் சிவனையும் பார்வதியையும் நினைப்பது பேரின்பம் என்கிறான். அதனால் நல்லவற்றை நினைத்து அமுத ஆற்றில் நீந்துங்கள்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

676 இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதோ டொன்றாய்த்
திரண்டது காலம் எடுதத்தும் அஞ்சே

“சிவனடியார்களேஇ நெருப்பு மண்டிலம் பகலோன், மண்டிலம் என்னும் இரண்டிற்கும் மேலாக விளங்கும் சதா சிவநாயகி என்னும் அரசுத் தலைவி. இடது மூச்சு வலது மூச்சு என்னும் உயிர்ப்பு நிறைந்து நிற்கும் நாடிகளை ஆராய்ந்து சொல்வதானால் இரண்டாலும் வரும் உயிர்ப்பு முதன்மையான ஆயிரத்து ஐம்பத்தொரு நாடிகளில் திரண்டு நிற்கும். கால அளவாகக் கொள்ளத்தக்கது ஐம் பூதத் தொடர்பால் ஐவகைப்பட்ட அறுநூற்று எழுபத்தேழு உயிர்ப்பென்னும் பிராணவாயுவே.உயிர்ப்பு என்பது பிராணவாயு. உடலெங்கும் பரவியுள்ள அக்காற்றே உயிராகும் அதற்கு அரசி சதாசிவநாயகி.” என்றார் சுந்திரமூர்த்தி சுவாமிகள்.

677 அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி
அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது வன்றி இரண்டது வாயிரம்
அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே

“சிவனடியார்களே, புலம் பத்து. அதனால் திருவருளாற்றலுக்கும் முகங்கள் பத்தாயிற்று. அத்தகைய பத்துத் திருமுகங்களை உடைய அம்மையே முதல்வியாவாள். புலமாகிய திசைகள் பத்து. அதனால் அம்மைக்கும் பத்து முகங்கள். அஞ்சுதல்லுடன் கூடிய முகங்கள் ஐந்து. பத்துக் காற்றுக்களும் படைக்கருவிகளாகும். தும்மல் விழி கொட்டாவி இமை வீசுங்காற்றுக்கள் ஐந்தும் நீங்கிய உயிர்க்காற்று மலக்காற்று தொழிற்காற்று ஒலிக்காற்று நிரவுகாற்று ஆகிய உயிர்ப்பு ஐந்தினுள் இடப்பால் வலப்பால் உயிர்ப்பு இரண்டு. ஐயாயிரம் ஆண்டுகள் பயின்று நடுநாடியின்கண் உயிர்ப்பு ஒன்றே.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

679 முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னுறு வாயு முடிவகை சொல்லிடின்
முன்னுறும் ஐம்பத் தொன்றுடன் அஞ்சுமாய்
முன்னுறு வாயு முடிவகை யாமே

“சிவனடியார்களே, திருவருள் ஆற்றலுடன் மேலோங்கும் உயிர்ப்பு ஐம்பத்தாறு ஆகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

680 ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்நூற்று முப்பதொ டொன்பதும்
ஆய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே

“சிவனடியாாகளே, உயிர்ப்பின் அளவானது ஐஞ்நூற்று முப்பத்தொன்பதாகும். இவை ஒப்பில்லாத திருவருள் முதல்வியுடன் வரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

681 இருநிதி யாகிய எந்தை யிடத்து
இருநிதி வாயு இயங்கும் நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுத்தே

“சிவனடியார்களே, சங்க நிதி பதுமநிதி என்கின்ற இரு பெரும் நிதிகள் தான் உலகில் மிகவும் உயர்ந்தவை. பெறுமதி வாய்ந்தவை. மதிப்புள்ளவை. இவற்றிலும் பார்க்கச் சிறந்தது உயிர்ப்பு. அது சிவபெருமானின் கட்டளைப்படி இயங்குவது. அவ் உயிர்ப்பு இயங்கும் சிறந்த நாடிகள் இருநூற்று முப்பத்து மூன்று. அவ்வுயிர்ப்பினை இயக்கும் எழுத்துக்கள் ஐந்து. அவை

முறையே நாதம் விந்து அகர உகர மகரங்கள்.நாதத்தை முதல் ஒலிஇ எனவும் விந்துவை ஒலி முதல் என்றும் கூறுவர். இவற்றை ஒலி வடிவம் என்றும் வரிவடிவம் என்றும் கூறுவர்.”

“சிவனடியார்களே, எனது குரு இடையியே வீதி வீதியாகச் செல்வார். அவர் ஒரு நாள் வீதி வழியாகச் செல்லும் போது ஒருவன் நன்றாகக் குடித்து விட்டு வீதியில் கலகம் செய்து கொண்டிருந்தான். அவனின் அருகிற் சென்ற குருஇ‘‘நாளைக்கு ஆச்சிரமத்திற்கு வா” என்று கூறிவிட்டுச் சென்றார்.அதனால் அவன் பயந்து போனான். நீ செல்லா விட்டால் குரு உன்னைச் சபித்து விடுவார். அவரைப்பற்றி அவதூறாகக் கதைத்த நாகராஜா இப்போ கதைக்க முடியாமல் இருக்கிறான் என்று ஊரவர் செல்ல மறுநாள் அவன் குளித்து நீறணிந்து நடுங்கியபடி ஆச்சிரமத்திற்கு வந்தான்.அவனைக் கண்ட குரு சொன்னார்,‘‘மகனே உலகில் பெரும் நிதியென்பது சங்க நிதியும் பதும நிதியும் தான். அதன் பெறுமதியைக் கணிக்கமுடியாது. அதனிலும் பெறுமதி வாய்ந்தது உயிர்ப்பு. அப்படியா உயிர்ப்பின் பெறுமதியை உணராது வீணாகக் காலம் கழிக்கிறாய். அதை இயக்குவன் சிவபெருமான். அதனால் நீ சிவபெருமானையும் அவமதிக்கிறாய். பெறுமதியான நல்ல செயல்களை செய். உனக்குச் சிவன் நீ விரும்பிய எல்லாவற்றையும் தருவார். உனது நடத்தையால் உனது மகளின் எதிர்காலம் கெட்டுவிட்டது. இனியாவது நல்லதைச் செய். இன்றிலிருந்து ஆச்சிரமத்திற்கு வந்து சிவனை நினைத்துத் தியானம் செய்.” என்று கூறினார். அவன் பயத்தின் நிமிர்த்தம் சில நாள் வந்து தியானம் செய்தான்.அது அவனுக்குப் பிடித்தால் அவன் தினமும் ஆச்சிரமத்திற்கு வந்தான். அவனுடன் அவனது மகளும் வருவாள். ஒரு நாள் ஆச்சிரமத்திற்கு வந்த பெரும் வணிகன் அவளை விரும்பித் திருமணம் செய்தான்.” என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

682 எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத்தொன் பானது நாலாய்
எழுந்துடன் அங்கி இருந்ததில் வாறே

“சிவனடியார்களே, திருவருளாற்றலால் தோன்றும் உயிர்ப்பின் நாடிகள் எழுனூற்று இருபத்தொன்பது. அது பலவாறாக விரிந்து மேம்பட்டு ஒளிமண்டலங்களுடன் நாலாய் ஒன்றியிருக்கும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

683 ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யொத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே

“சிவனடியார்களே, ஆறு நிலைகளிலும் முறைப்படி உயிர்ப்பினை அமைத்தால் உணர்வின் இன்பமான அகச் சுவை தோன்றும். உயிர்ப்பினை அளவுக்குட்படுத்தி உள்ளேஇழுத்து இரண்டு மடங்கு உள்ளடக்கி அமிழ்ந்த மண்டலத்தை பொருந்தும் படியாக மேற் செலுத்தின்இ ஒன்பது ஆற்றல்களாகிய நவசக்திகளும் நின்று இயங்கும் நிலைக் காலத்தைப்

பொருந்தும். அத்துடன் ஆசான் மூலம் ஆசரத் தெரிதல். அனைவர்க்கும் அமையும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

684 சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானாஞ் சகமுகத்
துந்திச் சமாதி யுடையொளி யோகியே

“சிவனடியார்களேஇ தானாகவே உடலில் உள்ளேயும்இ அதற்கு வேண்டிய ஊண் உறையுள் முதலியவற்றிற்கும் நிலைக் களமான உலகிற்கும் உள்ள பற்றுக்களை நீக்கி இறை நிலையில் அடங்கிஅதனால் விளங்கும் திருவருள் என்ற என்ற ஒளியைத் தன்னுள் அடக்கியவரே யோகி ஆவர்.”

“சிவனடியார்களே, சகல பற்றுகளையும் நீக்கியவர் தான் யோகி. எனது குரு தனது இறுதிக் காலத்தில் சமைத்த உணவுகளை முற்றாக ஒதுக்கிவிட்டார். அவர் காட்டில் இருக்கும் இலை குழைகளையும் கிழங்குவகைகளையும் காய் கனிகளையுமே உண்டு வந்தார். அப்பொழுது ஆச்சிரமத்தில் உணவு வகைகளைச் சமைப்போம். அவற்றிற்குச் சுவைகள் எவையும் சேர்ப்பதில்லை. இருப்பினும் அவர் அதைக் கூட உண்ணமாட்டார். “பிள்ளைகளேஇ சுவைகள் சேர்க்க விட்டாலும் நெருப்பில் அவித்தால் ஒரு சுவை வெளிப்படும். அதுவும் வேண்டாம். நான் இறுதிக்காலத்தில் உலகத்தையும் உணவையும் உறையுளையும் வெறுத்து இயற்கையான உணவை உண்டு திருவருளுடன் கலந்து இருக்கப் போகிறேன். அதில் தலையிடாதீர்கள் என்றவர். அதற்கு பிறகு நாம் வற்புறுத்தவில்லை.” என்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

685 அணங்கற்ற மாதல் ஆஞ்சன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுந்தல்
சிணுங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்
நுணங்கற் றிருத்தல் கால் வேகத்து நுந்தலே

“சிவனடியார்களே, கல்வியைக்கற்பது இறைவனது பாதங்களைத் தொழுவதற்காகவே.கல்வியால் எய்தும் திருவடி உணர்வால் ஞானம் வெளிப்படும். அசைவற்றிருந்தல் உயிர்ப் பிணை விரைவாக மேலேற்றவே. அதனால் தான் சிறந்த பயனைப் பெறலாம்.”

“சிவனடியார்களே, கல்வியின் மூலம் தான் எல்லாத்துறைகளிலும் நல்ல பயனைப் பெறலாம். தத்துவங்களை விளங்கிக் கொள்ளலாம். சிவனது பெருமைகளை உணர்ந்து கொள்ளலாம். திருவருளின் பெருமையை உணரலாம். இவற்றை அறியாததால் மக்கள் படும் துன்பங்களை அறிந்து கொள்ளலாம்.திருவருளால் வரும் இன்பங்களை அனுபவிக்கலாம். அதனால் கல்வியை அக்கறையுடன் கற்க வேண்டும் என்று குரு சொல்வார். அவர் ஒரு பட்டதாரி. அரச நிறுவனம் ஒன்றில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிவர். அவர் ஆச்சிரமத்தை அமைத்த போது நிறையக் கற்றார். தான் கற்றதைச் சிவனடியார்க்கு எடுத்துச் சொல்வார். சந்தேகம் தான் கடவுளை அன்னியப்படுத்துகிறது. சந்தேகப்படாதவன் திருவருளை உணர்ந்து கொள்வான் என்பார். யார் எதைக் கேட்டாலும் அதை விளக்கமாகக் கூறக் கூறிய வல்லமை அவரிடம் இருந்தது. அது தான் தான் அடைந்த சிறந்த பயன் என்று சொல்வார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

686 மரணஞ் சரைவிடல் வண்பர காயம்

இரணஞ்சேர் பூமி இறந்தோக் களித்தல்
அரணன் திருவுற வாதன்மு வேழாங்
கானுறு கேள்வி கணக்கறிந் தோனே

“சிவனடியார்களே, தியானத்தாலும் அகத்தவத்தாலும் இறப்பையும் முதுமையும் வெல்லலாம். தனது உடம்பைத் தானே ஒதுக்கி உயிர் நீத்த இன்னொரு உடலில் புகலாம். பொன்மயமானதோர் உலகை மரணமணவர்களுக்குத் திருவருளுடன் அளிக்கலாம். அத்துடன் சிவனது திருவுடலையும். வெண்மை செம்மை கருமை என்னும் மூன்று பண்புகளும் சூரிய ஒளியில் உள்ள ஏழு நிறங்களுடன் கலந்து இருபத்தொரு நிறங்களாகத் தோன்றும். அத்தகைய இருபத்தொரு நிறங்களையும் அடக்கி மறைந்து நின்றருளும் சிவபெருமானை அடைவதற்கு மெய்யுனர்வுக்கணக்குணர்ந்தவரால் தான் முடியும்.’’

“சிவனடியார்களே, மெய்யுணர்வுடையோர் மேற்சொன்னயாவற்றையும் செய்வார்கள். அவர்கள் கணக்கறிந்தவர்கள். எப்போது எதை எவ்வாறு செய்தால் திருவருள் வெளியில் கலக்கலாம் என்ற கணக்கை அறிந்தவர்கள். என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

687 ஒதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணகை காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வாரே

“சிவனடியார்களே, கடலால் சூழப்பட்ட உலகம் முழுவதையும் கால்கள் நோக வலம் வந்தாலும் எந்தப் பயனும் இல்லை. பேரருளால் சிவபெருமானின் அன்புக்குரியவராகிச் சிவனடியார்களைப் பேணி அவர்களது அகப்புற நாட்டம் செய்தால் பெரும் பயன் அடையலாம். அத்தகையவர்கள் ஆருயிர்களின் தலைவனான சிவபெருமான் அமர்ந்து விளங்கும் அகக்கோவிலை உணர்வார்கள்.”

“சிவனடியார்களே,உலகம் முழுவதையும் மக்கள் கூட்டத்துடன் வலம் வருவதல் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. சிவனடியார்களைச் சிவனேனக் கருதி வழிபடுவோருக்குச் சிவன் உள்ளக் கோவிலில் காட்சி தருவார். உலகம் முழுவதிலும் உள்ள திருகோவில்களை வலம் வந்து வணங்குதிலும் பார்க்கச் சிவனடியார்களின் வணக்கம் பயன் தர வல்லது. ஒரு நாள் ஒரு சினவடியார் எமது ஆச்சிரமத்திற்குவந்த போது குரு அழைத்து வந்து அவரது கால்களைக் கழுவித் தூபதீபம் காட்டி அவரது பாதத்தைத் தொட்டு வணங்கிய சில நிமிடங்களில் அவரைக் காணவில்லை. குருவும் நாமும் அவரோடு சேர்ந்து தியானத்தில அமர்ந்தோம். பின் விழித்துபார்த்த போது அவர் இல்லை. வந்தவர் சிவபெருமான் என்று குரு திடமாக நம்பினார். நம்பிகை தான் வாழ்க்கை. நாம் பலவருடங்கள் வாழ்வோம் என்று எண்ணினால் தான் இன்பமாக வாழ்லாம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

688 மூலமுதல் வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஜம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சக்தி பரைபரன் பாதமே

“சிவனடியார்களேஇ ஆறு நிலைகளுக்கும் பிள்ளையார்இ அயன்இ அரிஇ அரன்இ ஆண்டானஇ ஜம் முகன் என ஆறு கடவுளர் சொல்லப்படுகிறார்கள். இவர்களாது பாதங்களை வணங்க வேண்டும். நிறைந்த திருவருளால்இ தொழிலும் அறிவும் ஒளியும் ஒசையும் முடிவிடத்தில் நின்று விளங்கும். அருளாற்றல் பரை என்று கூறப்படும். அதுவே பரனது திருவடி.”

“சிவனடியார்களே, முதலில் வணங்கப்பட வேண்டியவர் பிள்ளையார். அக வணக்கம் செய்யுமுன் பிள்ளையாரை வணங்கி அவரது அருளைப் பெறவேண்டும். பிள்ளையார் முருகனைப் போன்ற சிவனின் அவதாரம். எமது ஆச்சிரமத்தில் இருந்த ஒரு சிவனடியார் சிவனைத் தவிர எவரையும் வணங்கமாட்டேன் என்று ஆணவத்துடன் கூறுவார். அவரது

அகத்தவம் ஒரு போதும் நிறைவடைவதில்லை. அகத்தவத்தை முடிந்தபின் ஏனைய சிவனடியார்களைக் குறை கூறுவார். அவர்களது வணக்க முறை பிழை என்பார். அதனால் பல பிரச்சினைகள் உண்டாகும். இதை அவதானித்த குரு அவரை அழைத்துச் சொன்னார்" அடியவரே எமது ஆச்சிரமத்தை எடுத்துப் பாரும்.ஒவ்வொருவரும் வேலை செய்கின்றனர்.எல்லாவற்றையும் ஒருவரால் செய்ய முடியாது. சிவனின் ஆணைப்படி நான் அவற்றைக் கண்கானிக்கின்றேன். உலகில் ஆறு நிலைகள் உள்ளன. அவ்வாறிற்கும் சிவன் ஒவ்வொருரைப் பொறுப்பாக வைத்துள்ளான்.ஓங்கார முதல்வானான யானைமுகனை வணங்காதத்தால் தேவர்களும் முனிவர்களும் பெரும் தொல்லைகளுக் காட்பட்டனர். இது தெரிந்தும் நீர் குழப்பமடைகிறீர். ஆறு பேரின் அருளாற்றலின் முடிவிடம் பரை.அது சிவனது திருவடி என்பதை ஏன் உணர மறுக்கீறீர். உணர்ந்து பாரும் உமது குழப்பம் தீரும் என்றவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

689 ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி மீரெண் கலைசெல்ல மீதொளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே

"சிவனடியார்களே, நிலைக்கலம் ஆறினையும் காணும் மனவெடுக்கமாகிய யோகத்தினால் அதனைத் தூண்டித் தொழிற்படுத்தும் தெய்வங்காகிய ஆனைமுகன் அயன்இ அரிஇ அரன்இ ஆண்டான்இ ஐம்முகன் ஆகியோரின் துணையுடன் சென்று தான் மேலான திருவருள் ஒன்றாகப் பொருந்தி இருக்கும். சிவத்துடன் பதினாறு கலைகள் பொருந்தியுள்ள திங்கள் மண்டலத்தை அடைந்து ஒடுங்கலாம்."

"சிவனடியார்களே, அச் சிவனடியார் குரு சொன்னதில் திருப்தி அடைய வில்லை. அவர் மீண்டும் மீண்டும் குழம்பிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட குரு சொன்னார்" அடியவரே உமது குழப்பத்திற்குச் காரணம் விளக்கமின்மை. அது போகவேண்டுமானால் சமயக் கோட்பாடுகளைக் கற்கவேண்டும். பிள்ளையாரோடு ஆறு நிலைகலங்களுக்கும் பொறுப்பவர்களின் துணையோடு தான் பதினாறுகலைகளையும் அடக்கியுள்ள சிவபெருமானின் திருவருளை அடையலாம். என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. அதை விளங்காதவர்கள் தான் ஆறு சமயங்களும் வேவ்வேரானவை என்று கூறுகின்றனர். சிவன் தான் தலைவன். அவனோடு கூட இருப்பவை பரிபாலனத் தெய்வங்கள் என்பதை உணராவிட்டால் சிவனை உணரமுடியாது என்றவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

690 மதியமும் ஞாயிறும் வந்ததுடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் றானே

"சிவனடியார்களே, இடமூச்சு, வலமூச்சுக்களை முறைப்படி ஒடுக்கிச் செய்கின்ற அகத்தவத்தோரை தொன்மையானவானவர் வணங்குவர். அவர்கள் தான் மெய்யடியார்கள்.அவர்களுக்கே சிவனின் திருவடிகளை அடைவும் நிலை உண்டாகும்."

"சிவனடியார்களேஇ மனக்குழப்பமுள்ளார்களால் அகத்தவத்தை முறைப்படி செய்ய முடியாது. ஒடுக்கமடையாத மனம் குழப்புவதால் இடமூச்சுமஇ வலமூச்சும் தடைப்படும். இரண்டும் சீராக இருந்தால் தான் அகத்தவத்தை நல்ல முறையில் செய்யலாம். அகத்தவத்தோரை வானவர்களும் வணங்குவர். அவர்கள் தான் மெய்யடியார்கள். அவர்கள் விரைவில் சிவனது திருவடியை அடைவார்கள். உமக்குச் சிவனில் விருப்புண்டு. அதை முறைப்படி செய்தால் தான் உரிய பயன் கிடைக்கும். மனக்குழப்பம் பல்வேறு குற்றங்களை உண்டாக்கும். காலையில் நீர் சமையல் செய்யும் சிவனடியார்களுடன் முரண்பட்டீர். அவர்கள் சிவநினைவுடன் இருந்து தொழிற்படுவதால் பலவற்றை மறந்து விடுவர். இன்று சாம்பாருக்கு உப்புப் போடவில்லை. அதற்குக் காரணம் குருவுக்குச் சுவை பிடிக்காது. அதனால் பல சிவனடியார்கள் உப்புக்கலக்காத உணவுகளையே உண்கின்றனர். இது கூடத்தெரியாத நீர்

சமையல் செய்யும் சிவனடியார்களுடன் முரண்பட்டுள்ளீர். உமக்கு உப்புத்தேவையென்றால் உப்பைச் சேர்த்து உண்ண வேண்டியதுதானே.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

691 கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானாவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு லார்க்கு நமனில்லை தானே

“சிவனடியார்களே, உயிர்ப்பினை ஒடுக்க வல்லவர்களுக்கு எங்கும் உணர்ச்சி பொங்கும். அதனால் அவர் எங்கும் தாமாவார். மணம் கமழ்கின்ற பரவெளியில் தோன்றும் ஆயிரமிதழ்த் தாமரையின் கண் சக்தியையும் சிவத்தையும் உறையச் செய்து உச்சித்தொளை வழியைத் திறக்கும் படியாக உயிர்ப்பை ஒடுக்கி ஐம்பொறிகளையும் பற்றுக் கொள்ளாமல் அகத்தே அடக்கித்தண்டாகிய நடு நாடியில் செலுத்துவோருக்கு யம பயம் இல்லை.”

“சிவனடியார்களே, எதைச் சொன்னாலும் திருப்திப் படாதஅச் சிவனடியாருக்குச் செய்யும் உபதேசம் வீணானது. என்று தெரிந்தும் சிவன் மீது அவர் கொண்ட பற்றுக் காரணமாகக் குரு சொன்னார்.” அடியவரே உயிர்ப்பிணை ஒடுக்கவல்லவர்கள் எங்கும் சிவத்தோடு கலந்து இருப்பதால் அவர்கள் எங்கும் தாமாவர். உயிர்ப்பிணை ஒடுக்கி ஐம் பொறிகளையும் அடக்கி அதைத்தண்டாகியநடு நாடியிற் செலுத்தும்பொறிகளை அடக்கி அதைத் தண்டாகிய நடுநாடியில் செலுத்துவோருக்கு யம பயமும்இ ஏனைய சந்தேகங்களும் எழமாட்டாது. நீரும் பாலும் கலப்பதை போல அவர்கள் சக்தியுடன் கலப்பார்கள். இது கூடத் தெரியாத நீங்கள் அகத்தவம் செய்வது விணானது. எனவே மனக்குழப்பதை நீக்கி ஆறு நிலைக்களங்களுக்கும்உரியவரைகளை வணங்கி ஆசி பெற்று அவர்களின் துணையுடன் திருவருளை அடையுங்கள் என்றவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 12 **அனல் நிலை**

692 காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணவைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே

“சிவனடியார்களே, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் மீது அளவற்ற அன்பைச் செலுத்திக் காதல் கொள்ளுங்கள். சிவபெருமான் அன்பே வடிவமானவர். அதனால் அன்பு செலுத்தி அவனை அகக் கண்ணால் நோக்குங்கள். அப்படி நோக்கி அன்பு செலுத்தும் மெய்யடியார்களுக்கு நெற்றி அமிழ்த்தமாகிய கங்கை பெருகும். அதனால் சிவனின் திருவருள் பெருகி ஆட்கொள்ளும்.”

“சிவனடியார்களே, குரு அச் சிவனடியாருக்குச் சொன்னார். “நீர் சிவன் மீது வைத்துள்ள அன்பு மேலானது. ஆனால் அது முறைப்படிவைக்கப்படல் வேண்டும். பயிருக்கு நீர் பாய்ச்சுவதானால் வாய்க்கால் துப்பரவாகவும் ஒழுங்காகவும் கட்டப்படல்வேண்டும். இல்லாவிட்டால் பயிருக்கு நீர் செல்லாது. அது போன்றது தான் உமது அகத்தவம். சைவ சித்தாந்த நடைமுறைப்படி வழிபடாத அடியார்களுக்கு நெற்றி அமுதமாகிய கங்கை தோன்றாது. அமிர்தமான திருவளின் துணையின்றி எதுவும் நடக்காது. எனவே முறைபடி அகவணக்கத்தைச் செய்தால் உங்கள் மனக் குழப்பங்கள் தீரும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

693 காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையுங்
காக்கலு மாகுங் கலையதி னாறையுங்

காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவங்
காக்கலு மாகுவாகும் வழியிது வாமே

“சிவனடியார்களே,அகக்கலன் நான்கையும்இ அமிழ்ந்த கலை பதினாறையுமஇ உயிர்ப் பிணையும் அடக்கவல்லவர்கள் தான் திருவடி உணர்வில் நம்பிக்கை வைப்பர்.”

“சிவனடியார்களே, எனது குரு, ஒருவருக்குத் தவறான எண்ண முண்டானால் அதைத்தீர்க்காது விடமாட்டார். ஒருவரது தவறான எண்ணம் பலரைக் குழப்பும். ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்கள் சிலர் அவ்வடியாருடன் சேர்ந்து ஆறு நிலைக் கலங்களுக்கு உரிய தெய்வங்களை நம்பமறுத்தனர். அதனால் குரு அவர்களுக்குச் சொன்னார்” அடியார்களே,ஒருவரின் தவறான கருத்து இன்று சிலரைக் குழப்பியுள்ளது. அது சரி செய்யப்படா விட்டால் அதுமேலும் பலரைக்குழப்பும். அகக் கலங்கள்நான்கையும், அமிர்தகலை பதினாறையும், உயிர்ப்பையும் அடக்கினால் தான் திருவடி உணர்வு எற்படும். முரண்பட்ட சிவனடியார்கள் அகத்தவத்தின் போது தமது மனம் ஒரு நிலைப் படுவதில்லை என்று கூறுகிறார்கள். அகக் கலங்களையும் அமிர்தகலைகளையும் அடக்க முடியாதவர்களால் மனதையும்இ அதில் எழும் பற்றுக்களையும் அடக்கமுடியாது. சிவனை நம்புவது போல சைவசித்தாந்த தத்துவங்களையும் நம்ப வேண்டும்.உதாரணமாக பிள்ளையாரைவணங்கக் கூடா தென்றால் அதனால் மனம் குழப்பும். நிம்மதி ஏற்படாது.மனதையும் புலன்களையும் ஒரு நிலைப்படுத்த முடியாது. அதனால் முறைப்படி அகத்தவம் செய்யுங்கள் மனம் அடங்கும். திருவருள் உணர்வு உண்டாரும் என்றவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

694 நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
மலைவற வாகும் வழியிது யாமே

“சிவனடியார்களே, நடு நாடி வழியாகச் செல்லும் உயிர்ப்பு ஒடுங்கி நின்று தூண் போன்று அசையாமலும் ஒளிபோன்று பிரகாசமாகவும் இருந்தால் அமுத கலையிடத்து அம்மை அப்பானாகிய சக்தி சிவம் இணைந்திருக்கும் தோற்ற உணர்வு உண்டாகும். அப்போது மருளானது தெருளாக மாறும். இது தான் அம்மை அப்பனைக் காணும் வழி.”

“சிவனடியார்களே, எனது உபதேசங்களைக் கேட்கும் சிவனடியார்களில் பலருக்கு மனக்குழப்பங்கள் நீங்குவதில்லை. உலகபந்தங்களில் பற்றுடைவர்களுக்கு மனம் அடங்காது. மனதைச் சில நிமிடங்களுக்கு அடங்குங்கள் என்று சொன்னால் பலரால் அடக்க முடிவதில்லை. குடும்பத்துடன் இருங்கள். மனைவியுடன் மகிழுங்கள். தொழில்களைச் செய்யுங்கள். அப்படிச் செய்யும் போது நினைவுகள் இல்லாமல் மகிழ்வு ஒன்றே குறிக்கோள் என்று இருப்பது போலத் தியானம் செய்யும் போது சிவனை அடைவதே குறிக்கோள் என்று நினையுங்கள். சிவ நினைவு மனதை முற்றாக நிரப்பினால் வேறு நினைவுகள் மனதில் எழமாட்டாது. அப்படிச் செய்ய முடியதவர்கள் தியானம் செய்வதாலோ கடவுளை வணங்குதலோ பயன் இல்லை. தியானத்தின் போது நடு நாடி வழியாகச் செல்லும் உயிர்ப்பு அசைவற்றுத் தூண் போல நிற்க வேண்டும். முயற்சி செய்தால் மனதைத் தூண்போல அசைவற்று நிற்கச் செய்யலாம்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

695 புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்ந்த வழியுஞ்
சடையொன்றி நிறைஅச் சங்கா நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே

“சிவனடியார்களே, எங்கும் நீக்கமறக் கலந்த நிற்கும் சிவபெருமானைப் புருவ நடுவில் அமிதம் பொங்கி வழி கிடைத்த விடத்தும் அதைத் தாங்கும் அருளோடுஇ அறத்தின்

தலைவனும் பேரின்பத்தலைவனும்,ஆனேற்றில் வீற்றிருப்பவனுமானஅவ் இறைவனை அகம் புறம் ஒத்து வழிபடல் வேண்டும்.”

“சிவனடியார்களே, அகத்தவத்தால் திருவருள் கூடிய பின்பும் அகத்தவம் செய்தலையும் வழிபடுதலையும் கைவிடக் கூடாது.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

696 இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கனின்ற வாயு வொளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே

“சிவனடியார்களே, மக்கள் தாம் வாழ்ந்து கழித்த நாட்களை அறிவார்களே தவிரஇனித் தாம் வாழும்நாட்களை அறியார். மூச்சுப் பயிற்சியால் வாழ்நாட்களை அதிகாரிக்கப் புறத்துச் செல்லும் உயிர்ப்பினை அடக்கினால் அடக்குபவன் நன்நெறியில் வாழும் தொண்டனாவான். வாழ் நாளும் நீழும்.”

“சிவனடியார்களே, இன்றிருப்பார் நாளை இருப்பரா என்பது சந்தேகமானது. இங்கு வரும் ஒரு சிவபக்தர் மறுநாள் தான் வந்து ஆச்சிரமத்திற்கு வரும் அடியார்கள் தங்குவதற்கு ஒரு மடம் கட்டித்தருவதாக வாக்களித்தார். முதல் நாள் இரவு படுத்தவர் மறுநாள் எழுந்திருக்கவில்லை. சில தினங்கள் செல்ல அவரது மனைவியும் பிள்ளைகளும் வந்த ஆச்சிரமத்திற்கு மடம் கட்டித் தருவதாகக் கூறினர். அவர் ஆச்சிரமத்திற்கு வருகை தரும்போது மூச்சுப் பயிற்சி செய்யச் சிரமப்படுவார். படிப்டியாகச் செய்யுங்கள் என்று சொன்னோம். அவரால் முடியவில்லை. காரணம் அவருக்கு உடலில் சளி அதிகமாக இருந்தது. மூச்சுப் பயிற்சியால் வாழ்நாளை அதிகரிக்கப் புறத்தே செல்லும் உயிர்ப்பிணை அடக்க வேண்டும். அதைச் செய்ய அவரால் முடியவில்லை.”என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

697 சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்
வேதகமாக விளைந்து கிடக்குமே

“சிவனடியார்களே, தொண்டுநெறியை நோக்கி அகத்தவம் செய்யுங்கள். பரவெளியில் காணப்படும் ஆயிரம் இதழ்த் தாமரையின் கண் உயிர்ப்பிணைச் செலுத்தவும். செம்பு முதலியன குளிகையினால் பொன்னாவதைப் போல ஆவியும் சிவனாக விளங்கும்.”

“சிவனடியார்களே, சிவனுக்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய்யுங்கள். அத்தொண்டு நெறியை நினைத்தது அகத்தவம் செய்யுங்கள். நடு நாடி வழியாக உயிரைச் செலுத்துங்கள். அப்போது செம்பு பொன்னாவது போல ஆவியாகிய உயிர் சிவனாகும் இவ்வாறு அடிக்கடி எனது குரு கூறுவார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

698 கிடத்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே

“சிவனடியார்களே, அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பயன்களும் மேலோங்கி நின்றன. உயிர்ப்பு நடு நாடி வழியாகச் சென்றது. பரவெளியில் விளங்கும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரையை ஆவி இடையறாது தொழுதது. பேரொளிஅறிவுப் பிளம்பான சிவன் உயிர்க்குயிராய் நின்றான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

699 தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்

வானோ உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே

"சிவனடியார்களே, தானே முழுமுதலாகத் தோன்றிய அம்மைஇ மெய்யாகிய தத்துவங்களைத் தூண்டி தொழிற்படுத்துவாள். அம்முதல்வியானவள் அடியேனது நெஞ்சத்தில் விளங்க அந்நெஞ்சு அடியேனைக் கொண்டு தூய்மை செய்வித்து ஆட்கொண்டு தன்னை விளங்கி வீற்றிருப்பாள். வானோர் மதிக்கும் விண்ணும் மண்ணும் ஒருங்கீன்ற அம்மையின் திருவடி இன்பத்தைப் பெற்றேன். முத்தியைத் தரும் முதல்வனின் திருவடி இன்பத்தைத் தருவது சிவனது திருக்கோவிலாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

700 திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகல ராரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே

"சிவனடியார்களே, பரந்து செல்லும் உயிர்ப்பாகிய பிராணவாயுவை அடக்கும் முறையினை யாரும் அறிந்திலர். அறிந்த பின் சிவபெருமான் அவ்வுயிர்ப்பின் மேலாக திகழ்ந்து விளங்குவான்." என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்

701 சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதன மாகுங் குருவழிப் பட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே

"சிவனடியார்களே, ஆவிகளின் உண்மை நிலையை ஆண்டவன் அளப்பது இருளை அகற்றுவதற்காகவே. சிவபெருமான் மறைப்பாற்றலாகிய ஆதியின் வீழாது குருவாய் வெளிப்படுவன். அக் குரு வழிபாட்டால் திருவடிப் பெரும்பேற்றைப் பெறலாம்."

"சிவனடியார்களே, பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட் கொள்வதற்காகச் சிவபெருமான் குருவாக எழுந்தருள்வார்.குருவை எவ்வாறு வணங்கி வழிபட வேண்டுமென்று சைவ சித்தாத்தம் கூறுகிறதோ அவ்வாறு நடந்து குருவின் ஆசியைப் பெற்றுச் சிவனது திருவடியை அடையலாம். எனது குரு ஆச்சிரமமமைத்து பல ஆண்டுகள் சென்ற பின்பு ஒரு நாள் ஒரு வேதியர்ஆச்சிரமத்திற்கு வந்தார். எனது குரு அதை அறிந்திருக்கிறார். அதனால் அவரை வரவேற்றுக் குருவாக ஏற்றுக் கொண்டார். தினமும் முறைப்படி அவருக்குப் பூசை செய்வார். சில காலம் சென்றதும் எனது குரு சமாதி நிலை அடைந்தார். அப்போது வந்தவர்,"வந்த வேலை முடிந்து விட்டது என்று கூறினர்.சில நாட்களின் பின் அவரைக் காணவில்லை. யாருக்கும் சொல்லாமல் சென்றவர் குரு சமாதி அடைந்த அன்று வந்து ஆசிர்வதித்து விட்டுச் சென்று விட்டார்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

702 ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆனையே

"சிவனடியார்களே, இயல்பாக உயிர்ப்பானது பதினாறு மாத்திரைகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றுள் நான்கு அகப்புறமாகவும்இபன்னிரண்டு புறமாகவும் ஓடும். இப்பன்னிரண்டும் அகத்துள் அடக்கி விட்டால் அது உயிர்ப்பின் சாதனையாகும். அவ்வாறு அடங்கப்பெற்றோர் அளவில்லாத காலம் நீருள் மூழ்கியிருப்பர். நிலத்தில் புதையுண்டிருந்தாலும் உடல் அழியாது.இது சிவனது திருவருட்பேறாரும்."

“சிவனடியார்களே, ஒரு முறை எனது குரு கீரிமலை புனித தீர்த்தக் கடலில் குளிக்கச் சென்றார்.பல மணி நேரமாகியும்வெளியேவரவில்லை. அதனால் நாம் அதிர்ச்சியடைந்தோம். எனது குரு நீரில் மூழ்க்கிப் பல மணி நேரம் இருப்பவர் எனினும் எனக்குப் பயமாக இருந்தது. எமது ஆச்சிரமத்திற்கு வருவருவர்களில் பலருக்கு நீந்தத் தெரியும். இருவர் சுழியோடிகள். அவர்கள் கடலில் தேடினார்கள். அவர் கடலில் ஆழமான ஒரு பகுதியில் குரு அமர்ந்திருப்பதாகவும் அவரைச் சுற்றிஆயிரக்கான மீன்கள் சூழந்திருக்கின்றன என்று சுழியோடிகள் கூறினர். அதன் பின் பல மணி நேரம் கழித்துக் குரு வெளியே வந்தார். இத்தகையோர் நிலத்தில் புதைந்தாலும் இறக்கமட்டார்கள்.” என்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

703 ஓசையில் எழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டுந்
தேசியும் சேனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே

“சிவனடியார்களே, முழுதற் கடவுளாகிய சிவபெருமான் மீண்டும் உலகைப் படைக்க விரும்பினான். அப்பொழுது தனது அருள் வெளியில் தங்கியுள்ள மாயையையும் திருவருளையும் வெளிக்கொண்டு வந்து தொழிற்படவைத்தான். இம் முறையை அவனே வகுத்து அவனே செயற்படுத்துவான்.”

“சிவனடியாாகளே, சத்தம், பரிசம்இ உருவம் இரசம், கந்தம், சரித்தல், சேர்த்தல் என்பன ஓசைகளாகும். இரசம், உருவம், கந்தம், வெம்மை, தகித்தல் என்பன ஒளிகளாகும். இடகலை, பிங்கலை, தேசி என்பன நாசியில் உள்ளவையாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

13 காரிய சித்தி உபாயம்

704 உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர் தேனே

“சிவனடியார்களே, மனித உடல் திருவடியுணர்வைப் பெறுவதற்காகவே சிவபெருமானால் தரப்பட்டது. அவ்வுடம்பைத் திருவருளின் துணையோடு மெய்யுணர்வினைப் பெற வைத்தல் வேண்டும். அது திருவடி உணர்வின்றி அழிந்தால் உயிர் பயனடையாது.திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுவது தான் உடம்பை நல்வழிப்படுத்தும் முறை. அதனால் உயிருக்கு மேன்மை உண்டாகும்.”

“சிவனடியார்களே, உடம்பு அழிந்தாலும் உயிர் அழியாது. அது மீண்டும் வினைக்கேற்ப பிறப்பெடுக்கும் என்பதை அறிந்தவர்கள் நற்செயல்களைச் செய்து திருவடியுணர்வை வளர்த்துப் பிறப்பில்லாத நிலையை உருவாக்குதல் வேண்டும். அதற்காகத்தான் உடல் படைக்கப்படுகிறது. அறிவு விருத்தியாக்கப்படுகிறது. எமது ஆச்சிரமத்திற்கு வந்த ஒரு குருடன் குருவிடம் சொன்னான்இ” சுவாமி முந்திய பிறப்புகளில் நான் எத்தனையோ பாவங்களைச் செய்தமையால் தான் குருடனாகப் பிறந்தேன். இந்தக் குருட்டு உடலை வைத்துக் கொண்டு நான் என்ன செய்தால் செய்த பழி நீங்கும்.” என்று கேட்டான். குரு சொன்னார்.” அடியவனே பயம் கொள்ளாது தைரியத்துடனும் நம்பிகையுடனும் அகத்தவம் செய். பஞ்சட்சரத்தை முறைப்படி ஓது. இப்பிறப்பிலேயே உனக்கு விமோசனம் கிடைக்கும்.” என்றவர். அவன் ஆச்சிரமத்தில் தங்கி இருந்து குருவின் கட்டளைப்படி வாழ்த்து வந்தான். ஒரு நாள் வெளி நாட்டில் இருந்து வந்த கண் சந்திர சிகிச்சை நிபுணர் அவனது நிலையைப் பார்த்து இரங்கிச் சத்திர சிகிச்சை செய்தார். அவனுக்கு இப்போது கண் தெரியும்.அவன்

சிவனருளால் தான் அது நடந்தது என்று எண்ணி அகத்தவத்தைத் தீவிரமாக மேற் கொண்டு வருகிறான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

705 உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினு குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புக்ளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

“சிவனடியார்களே, பால்திரிபு அடையாமல் இருக்க வேண்டுமானல் பால் வைக்கும் பாத்திரரைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அது போலச் சிவபெருமான் உள்ளத்தில் கோவில் கொண்டிருப்பதால் அது அவன் தந்த உடம்பு என்று நினைத்துப் பேணுகிறேன். இவ் உண்மையை உணராதவர்கள் அதனை நல்ல முறையில் பேணமாட்டார்கள்.”

“சிவனடியார்களே, குருடனாக இருந்து கண்பார்வை பெற்ற சிவகுமாரன் சொல்வான்இ” சுவாமி இது சிவன் தந்த உடல்.இதனுள் சிவன் கோவில் கொண்டிருக்கிறார். அதனால் அதைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உள்ளத்தில் தீய உணர்வுகள் இருக்கக் கூடாது. அதை அகற்றப் பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி ஒத வேண்டும்.மாமிசம் உண்பதோஇமதுபானம் குடிப்பதோ கூடாது. இவ்வளவு காலமும் பிச்சை கேட்டு உண்டேன். அவர்கள் எப்படிச் சமைக்கிறார்களோ தெரியாது. அதனால் நான் முழுமையாக ஆச்சிரமத்தில் இருந்து சிவசேவை செய்ய அனுமதியுங்கள்.” என்றான் குரு சம்மதிதார் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

706 கழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங்
கழற்றிக் மலத்தைக் கமலத்தைப் பூரிந்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழற்றித் தவிர்த்துடல் அஞ்சன மாமே

“சிவனடியார்களே, உயிர்ப்பை உள்ளெடுத்து வெளிவிடும் முறையை முறையாகச் செய்தால் அருள் ஒளி பிரகாசிக்கும். அதனால் மனதைப்பற்றிப் பிடித்திருந்த மலம் அகலும். மலம் அகல நெஞ்சத் தாமரை பொலிவுறும். எழுபத்திராயிரம் நாடிகளிலும் ஒடித்திரியும் வளியை அறிபவர்களுக்கு உடல் துன்பத்தைத்தராது. திருவடி இன்பம் மிகுதியாகத் தோன்றும்.”

“சிவனடியார்களே, அதன் பின் முறையாக எல்லாச் செயல்களையும் சிவகுமார் செய்து வந்தான். அதனால் அவனது உடலில் பொன் போன்ற ஒளி உண்டானது. ஆச்சிரமத்திற்கு வருவோர் அவன் தியானத்தில் இருந்தாலும் அவனது பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டுத்தான் ஆச்சிரமத்திற்கு வருவார்கள். அவன் சொல்வான் எனக்குக் கண் தேவையில்லை. என் இதயத்தாமரையில் கோவில் கொண்டிருக்கும் சிவனைநான் அகக்கண்ணால் மகழ்வுடன் பார்க்கிறேன். இனி ஏன் எனக்குக்கண் என்பான்” என்று கூறினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

707 அஞ்சனம் போன்றுட வையறு மந்தியில்
வஞ்சக வாத தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்கறச் சொன்னோம் நரைதிரை நாசமே

“சிவனடியார்களே, மூச்சுப் பழக்கத்தால் உடல் தூய்மைபடும். காலையில் செய்யும் மூச்சுப் பயிற்சியால் பித்தம் நீங்கும். நடுப் பகலில் செய்யும் மூச்சுப் பயிற்சியால் வாதம் நீங்கும். மாலையில் செய்யும் மூச்சுப் பயிற்சியால் கபம் அற்றுப்போம். இம் மூன்று பயிற்சியையும் செய்து வந்தால். உடலை நோய் தாக்காது உடலில் நரை திரை தோன்றாது.”

“சிவனடியார்களேஇ சிவகுமார் குருடன் மட்டுமல்ல கடும் நோயாளியும் கூட. அவன் மூச்சு விடக் கஷ்டப்படுவான் உண்டது சமிக்காது வாந்தி எடுப்பான். முதுகு கூனி இருக்கும் ஒழுங்காக நடக்க மாட்டான். எனது குரு அவனுக்கு மூச்சுப்பயிற்சியைக் காட்டிக் கொடுத்தார். அகத்தவமுறைகளையும் தியானம் செய்யும் முறைகளையும் காட்டிக்கொடுத்தார். பின் அவன் யோகசானம் பயின்றான். ஐந்து வருடங்கள் அப் பயிற்சியை மேற் கொண்டான். இப்போ அவன் உறுதியான தேகக் கட்டுடன் பல வேலைகளைக் கூடச் செய்பவனாக மாறிவிட்டான். ஆச்சிரமத்தின் பின்னால் நின்ற பெரியதொரு வேப்ப மரம் பட்டு விட்டது. அதை அவன் தறித்து விறகாகக் கொடுத்தி அடுக்கி வைத்திருக்கிறான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

708 மூன்று மடக்குடைப் பாம்பிரன் டெட்டுள
என்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க உடம்பழி யாதே

“சிவனடியார்களே, மூச்சை உள்ளிழுத்தலும், மூச்சை ஒடுக்குதலும் ஆகிய இரண்டையும் குறிப்பால் உணர்ந்தும் எழுத்துக்கள் இரண்டு. அவற்றை உவமையில் காட்டும் பாம்பின் நிலை இரண்டு. அகரமும் உகரமும் எழுத்ததுக்களாகும். பாம்பின் நிலை சிறிது தலை நிமிர்த்தலும், மண்டலித்திருத்தலுமாகும். இவை தமிழ் வரி வடிவ அமைப்பாகும். அத்துடன் மறைமொழியாகவும் உணராலாம். இயல்பாக உள்ள மூச்சு பன்னிரண்டு அங்குலம். இடப்பால் வலப்பால் செல்லும் மூச்சை அடக்கினால் உடல் அழியாது.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

709 நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே

“சிவனடியார்களே, உயிர்ப்பு நூற்றறுபது மாத்திரை. இட மூக்கு வழியாக உள்ளிழுக்க ஆறு நிலைகள். இவற்றின் வழியாக உயிர்ப்பு உள்ளே செல்லும். நடு நாடி வழியாக உயிர்ப்பு மேல் நோக்கிச் செல்ல வரையறுக்கப்பட்ட நூற்றாண்டையும் கடந்து நீண்ட நாள் வாழ்வார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

710 சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி ஆணையே
“சிவனடியார்களே, திருவருளாற்றல் நிறைந்திருக்கும் உடம்பாகிய கோவிலில் உயிர்ப்பை வலது மூச்சினால் நிறுத்தினால் புருவநடுவில் பரவெளி ஒலி கேட்கும்.மத்தியதானத்தில் நாதம் கேட்டும். அப்போது தாளத்திற்கேற்றபடி திருநடனமாடும் சிவன் வெளிப்படுவன். இது நந்தியின் கட்டளையாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

711 திறந்திறம் விந்து திகழு மகார
முறப்பெற வேநினைந் தோதுஞ் சகார
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பெற யோகிக் கறநெறி யாமே

“சிவனடியார்களே, விந்துவாகிய தூமாயையில் இருந்து தோன்றும் அகரமுமஇ மெய்ப்பொருளை நினைத்து ஒதுதலும் மீண்டும் மீண்டும் இடையாறாது மறப்பில்லாது நினைத்தலும் அகத்தவத்தோரின் நெறியாகும்.”

“சிவனடியார்களே, அகத்தவம் செய்வோர் இடைவிடாது மெய்ப்பொருளை நினைத்து ஓதுதல் தொடர்ந்து செய்யப்படல் வேண்டும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

712 உத்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே

“சிவனடியார்களே, கொப்பூழின் கண் தோன்றும் உயிர்ப்பினைச் சிவசிவ என்று நினைத்து உச்சித் தொளையில் நிறுத்திக் கீழ் நோக்கிச் செல்லுங் காற்றைச் செல்ல விடாது மேல்நோக்கிச் செலுத்தினால் செலுத்துபவன் சிவனது தன்மையை பெறுவான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

713 மாறா மலக்குதந் தன்மே விருவிரற்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக்கொன்மின்
ஆறா உடம்பிடை அன்னாலும் அங்குளன்
கூறா உபதேசங் கொண்டது காணுமே

“சிவனடியார்களே, எப்போதும் மலம் இருக்கும் குதத்திற்கு மேல் இரு விரல் அளவைக் கொண்ட குறிக்குக் கீழ் உள்ள இடத்தை உற்றுப் பார்த்தால் மறைப்பில்லாத உடலில் இலிங்க வடிவில் இருக்கும் ஒரு போதும் அழிவில்லாத சிவன் அங்கு வெளிப்படுவான். ஊமையெழுத்து அல்லது பேசா எழுத்தைக் கொண்டே காணவேண்டும்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

714 நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி ஆணையே

“சிவனடியார்களே, திருவருளைப் புகலிடமாகக் கொண்டவர்களுக்கு நரைதிரை மாறிவிடும் இது நந்தியின் கட்டளை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

715 அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிலில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபரயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே

“சிவனடியார்களே, விதைவாயிலாக உடலுறவு படிப்படியாகக் குறையுமிடத்து உயிர்ப்பு அதிகரிக்கும். அதனால் உடம்புக்கு அழிவில்லை. உணவைக் குறைத்து உண்டால் உயிர்ப்பு மிகுந்து தங்கும். அதனால் சிவ இன்பம் அதிகரிக்கும். பொதுவாக உள்ளே செல்லும் உயிர்ப்புப் பத்து விரல் அளவுடையது. வெளியேறும் உயிர்ப்பு பன்னிரண்டு விரல். நடக்கும் போது இருபத்துநான்கு விரல் அமையும். ஓடும் போது நாற்பத்திரண்டு விரலும், உண்ணும் போது பதினெட்டு விரலும்இ உறங்கும் போது ஐம்பது விரலும், உடலுறவின் போது அறுவது விரலுமான உயிர்ப்பு வெளியே செல்லும். ஒரு விரல் ஒரு அங்குலத்தையும் குறிக்கும்.”
“சிவனடியார்களே, உயிர்ப்பு அதிகமாக வெளியேறக் கூடாது. உணவைக் குறைத்தல் வேண்டும். உரிய வயதிற்குப்பின் உடலுறவில் ஈடுபடக் கூடாது. அதிக அளவு உயிர்ப்பு வெளியேறுவதால் உடல் பலவீனம் அடையும். உடல் அழிவடையும். நல்லதொரு

மகப்பேற்றிற்காகத் தான் உறவு கொள்ளல் வேண்டும். அதுவும் நல்ல நாள் பார்த்து. மனைவி கா்ப்பமானால் உறவைத் தவிா்ப்பது நல்லது. சிலா் தவறான வழிகளில் உறவு கொள்வா். அது உடலுக்கு ஆகாது. பயம்இஅவசாரம்இ மற்றும் காரணிகளால் உயிா்ப்பு அதிகாரிக்கும். ஆகவே உயிா்ப்பைப் படிப்படியாகக் குறைத்தல் வேண்டும்." என்றாா் சுந்தரமூா்த்திசுவாமிகள்.

716 பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை
அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலா்க்குழல் மாதராா்
கண்டிச் சிக்குநற் காயமு மாமே

"சிவனடியாா்களே, மூலத்திலுள்ள குண்டலினியின் ஆற்றலை எழுப்பி நடு நாடி வழியாக அடுத்தடுத்துச் செலுத்தினால் உடம்பு பொன் போலாகும். அந்த உடம்பைத் தனது தாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை அழகான கன்னிப் பெண்களுக்கு உண்டாகும்."

"சிவனடியாா்களே, மூச்சுப் பயிற்சியாலும் அகத்தவத்தாலும் ரவீந்திரனது உடல் பொன்னைப் போலப் பளபளக்கும். அவனுக்கு நல்ல குரல் வளம் உண்டு. அவன் சிவன் கோவிலில் காலையிலும் மாலையிலும் வந்து திருமுறைகளைப் படிப்பான். கோவிலுள்ளே மேற் சட்டை அணியாமல் அவன் நின்று பாடும் அழகை ரசிப்பதற்காகப் பலா் வருவாா்கள். அவனது உடலைப் போலத் திடகாத்திரமான உடல் தமக்கும் வரவேண்டும் என்று ஆடவா்கள் விரும்புவா். பொன்னைப்போல பளபளக்கும் உடல் தமக்கும் வரவேண்டும் என்று கன்னிப் பெண்கள் விரும்புவாா்கள். சிலா் அவனைக் காதலிப்பாா்கள்." என்றாா் சுந்தரமூா்த்தி சுவாமிகள்.

717 சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
சுழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
சுழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுங் தெற்றுளும் நிற்றலு மாமே

"சிவனடியாா்களே, மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே எல்லோரும் அஞ்சும் படி சீற்றத்துடன் கவரவரும் யமனைச் சிவனடியாா்கள் கண்டு அஞ்சமாட்டாா்கள். அவா்களிடம் யமன் வந்தால் சிவன் கோபப்படுவாா். என்று யமன் அஞ்சுவான். சிவன் நெற்றியின் நடுவில் முக்கோணமாகவுள்ள தீயுள் இருப்பவன். தோ் போல முக்கோணம் காணப்படுவதால் அதை இரதம் என்பா். சிவபெருமானே துணை என்று இருப்போா் குளிா்ந்த நிழல் பரப்புகின்ற அழகிய மணி மண்டபத்திற்குள் அவனைக் காண்பா்."

"சிவனடியாா்களே, கதிரேசனுக்கு வயது எண்பது. அவா் வெளியே உள்ள நாற்காலியில் இருந்து அன்றைய பத்திரிகையை வாசித்து கொண்டிருந்தாா். அவரது மனைவி அங்கு வந்த போது அவரது உடல் அசைவின்றி விறைத்திருந்தது. அவள் உடனே வைத்தியரான தனது மகனுக்கு அதைச் சொன்னாள். அவா் வந்து அவரது நாடியைப் பாா்த்தாா். அது மிகவும் குறைந்திருந்தது. இந் நிலை அடிக்கடி அவருக்கு வருவது அவனுக்குத் தெரியும். அதனால் அவன் அவரின் அருகே இருந்தான். வெகுநேரமாகியும் கதிரேசன் எழும்பாதால் அவரது மனைவிக்குத் துக்கம் பொங்கியது. அவள் பெருங்குரலெடுத்து அழுதாள். அப்போது எழுந்த கதிரேசன் மனைவிக்குக் கூறினாா்இ''யமனை நினைத்து எல்லோரும் பயப்படுவாா்கள். நான் பயப்படமட்டேன. ஏனென்றால் சிவனடியாரை நெருங்கினால் சிவன் சீற்றமடைவாா் என்று யமனுக்குத் தெரியும். சிவநினைவாக இருந்தேன். சிவன் குளிா்ந்த மலா்சோலையில் அமைக்கப்பட்ட மணிமண்டபத்தில் அமா்ந்திருந்தாா். பாா்த்து ரசித்ததில் நேரம் போவது தெரியவில்லை என்றவா்." என்று கூறினாா் சுந்தரமூா்த்தி சுவாமிகள்.

718 நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான் கண்டவாயுவும் சரீர முழுதொடும்
ஊண்கண்டு கொண்ட உணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே

“சிவனடியார்களே, நெற்றியின் நடுவில் முக்கோணவடிவில் சிவபெருமான் வீற்றிருப்பதை அவனின் அருளால் அடியேன் கண்டேன். அத்துடன் கலைகள் நான்கையும் உயிர்ப்பு ஏழையும் கண்டு களித்தேன். அதனால் திருவடி உணர்வு அதிகரித்தது.
மகாஇ எனக்கு எதுவும் ஆகாது. நான் சிவ பக்தன். அத்துடன் அகத்தவம் செய்பவன். அதனால் கூற்றுவன் எப்போ வருவான் என்று எனக்குத் தெரியும் என்பது உனக்கும் தெரியும். அப்படியிருந்தும் ஏன் மகனைத் தொந்தரவு செய்தாய். அவன் வைத்திய சாலையில் வேலை செய்யும் போது இனிமேல் அவனது வேலையைத் தடைசெய்யாதே. நெற்றியின் நடுவில் சிவபெருமான் வீற்றிருப்பதைக் கண் குளிராக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன். அவ் வேளையில் உயிர்ப்புக் குறையும் என்று உனக்குத் தெரியாதா? என்று மனவருத்துடன் கதிரேசன் கேட்டவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

719 ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
நீகொள்ளின் நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பலகோடி களத்தினால்
ஊழ்கொண்ட மந்திரந் தன்னால் ஒடுங்கே

“சிவனடியார்களே, ஆவிகளை நன்நெறிப்படுத்த உடலிருந்து செயற்படும் மறைப்பாற்றலை வனப்பாற்றலாக மாற்றும் படி சிவனை அன்புடன் வேண்டினால் ஒரு நெல் வித்துப் பல்லாயிரகணக்கான நெல்லாவது போல மீண்டும் மீண்டும் வினைக்கீடாகப் பிறப்பெடுக்கும் நிலை முடிவுறும்.திருவைத்தெழுத்தில் முதல் எழுத்தாகிய பேசா எழுத்தானசிகரத்தில் ஆவி ஒடுங்கும்.”
மகா, என்னைக் கவரக்கூற்றுவன். வரான் எனது ஆவி திருவைத்தெழுத்தில்உள்ள சிகரத்தில் ஒடுங்கும் என்று நம்பியிருக்கிறேன். எனது நம்பிக்கை வீண்போகாது. சிவ நினைவோடு எந்நேரமும் நான் இருப்பதால் யம பயம் எனக்கில்லை என்று கதிரேசன் சிரித்தவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

720 மதிவட்ட மாக வரையந்து நாடி
இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனாற்
பதிவட்டத் துள்நின்று பாலிக்குமாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே

“சிவனடியார்களே, பன்னிருவிரல் வெளியுடைய மதியை எல்லையாகக் கொண்ட புருவ நடுவிலுள்ள ஐந்து நாடிகள் கூடும் இடத்திலிருந்து நீங்கிச் நெஞ்சின் கண் பன்னிரண்டு விரல் உயிர்ப்புடன் கூடியிருந்ததால் சிவன் எழுந்தருளிக்கும் பெருவெளியில் தோன்றும் இன்பத் தேனைப் பருகினேன். பருகியவுடன் உலகப்பற்று நீங்கியது. நீங்கியதும் சிவனது திருவடியில் புகுந்தேன் என்று திருமூலர் கூறுகிறார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

721 உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்ற தறியா தவாறே

“சிவனடியார்களே, தமது ஐம்புலன்களால் வரும் உணர்வுகளின் உண்மை நிலையை உணர்ந்தவர்கள் நற்குணங்கள் ஏழையும் நன்கு அறிவர். மெய்யுணர்வின் முதல் எட்டையும் அடைவர். சிவநிலை ஒன்பதையும் சேர்வர். அடங்காது செல்லும் காற்றுக்கள் பத்தையும்

அடக்குவர். பல காலம் ஒடுங்கியிருப்பர். அக்காலங்கள் கழிந்து சென்றதையும் அறிய மாட்டார்கள்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

722 அழிகின்ற ஆண்டவை ஐயைந்து மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்பது
எழுகின்ற ஈரைம்ப தெண்ணற் றிருந்தே

“சிவனடியார்களேஇ எல்லோரும் போற்றும் உடலுக்கு வரும் கண்டங்கள் பற்றி இப் பாடல் கூறுகின்றது.ஒரு கண்டம் இருபத்தெட்டு வயதில். மறுகண்டம் முப்பத்திமூன்று வயதில். மறுகண்டம் அறுபத்திரண்டு வயதில் மறுகண்டம் நூறு வயதில்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

723 திருந்து தினமத் தினத்தி னொடுநின்று
இருந்தறி நாளொன் றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே

“சிவனடியார்களே, ஒருவருக்கு ஆகாத நாள்களாவான. பிறந்த கிழமை,பிறந்த நட்சத்திரம், பிறந்த நட்சத்திரத்தில் இருந்து முதலாம் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள், எட்டாம் நாள். இந்நாட்களில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். சுப காரியங்கள் எதுவும் செய்யக் கூடாது அமைதியாக இருந்து கடவுளை வழிபடவும்.”

“சிவனடியார்களே, ஒரு நல்ல விளைநிலம் விற்பனைக்கு வந்தது. அன்று குமாரசாமி பிறந்தநாள். நிலத்தை விற்பவன் அவசரப்படுத்தினான். அத்துடன் அது பெறுமதியான நிலம்.அதனால் இரகசியமாகக் குமாரசாமி வாங்க நினைத்தான். காணித்தரகன் மூலம் காணியை வாங்கினான் குமாரசாமி. மறுநாள் எல்லையின் கதிகால் நட்ட போது இருவர் வந்து அக்காணியில் தமக்குப் பங்கிருப்பதாகச் சொல்லிச் சண்டையிட்டனர். அவ் வழக்கு நீதிமன்றில் நடைபெறுகிறது. அவசரத்தில் ஆராயாது வாங்கியதால் அந் நிலை ஏற்பட்டது. ஆறுதலாகப் பிறந்த தினத்தைக் கழித்து விட்டு மறு நாள் காணி அலுவலகத்தில் காணி பதிவைப் பார்த்தபின் வாங்கியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

724 மனைபுகு வீரும் மகத்திடை நாடி
எனயிரு பத்தஞ்சம் ஈரா றதனால்
தனையறிந் தேறட்டுத் தற்குறி யாறு
வினையறி யாறு விளங்கிய நாலே

“சிவனடியார்களே, உடல் மெய் இருபத்துநான்கு. ஆள் ஒன்றுமாக இருபத்தைந்து மெய்யுடன் கூடிய உயிர் பன்னிரண்டு விரல் உயிர்ப்பு முனையினால் தன்னை உணரும். அதை உணர்ந்தோர் உயிர்ப்பினை அடக்குவர். மூல முதலான ஆறுநிலைகளையும் உணர்வர். ஆனால் தாம் கட்டுண்ட வினையைக் காணமட்டார். வெளிச் செல்லும் உயிர்ப்பு நான்கினாலேயே உயிர் நீங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

725 நாலுங் கடந்தது நால்வரும் நாலைந்து
பாலங் கடந்தது பத்திப் பதினைந்து
கோலங் கடந்த குணத்தாண்டு மூலிரண்டு
ஆலங் கடந்ததொன் றாரறி வாறே

“சிவனடியார்களே, உட்கலங்கள் நான்கையும் செலுத்துவோர் நால்வர். உட்கலன்கள் என்பன முறையே அகங்காரம் புத்திமனம் எண்ணம் ஆகும். அதைச் செலுத்துவோர் முறையே அயன்

அரி அரன் ஆண்டான் என்னும் நால்வர். சிவனது நிலை ஒன்பது. அவை பதினைந்து தேய்பிறை நாட்கள்இ பதினைந்து வளர் பிறை நாட்கள். ஆறு நிலைகளில் அரனார் திருவுருவம் கடந்து ஆவிகளுக்கு எண் குணம் அளித்து அருள்பவராவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

726 ஆறும் இருபதுக் கையைந்து மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தொ டாறிவை
கூறு மதியொன் றினுக்கரு பத்தேழு
வேறு பதியங்க ணாள்விதித் தானே

“சிவனடியார்களே, அகத்தவம் செய்வர்களுக்கு உலகில் சாதாரணமாக நடைபெறும் நாட்களைப் போன்று அமையவில்லை. இருபதும் இருபத்தைத்தும் உறழ மூவாயிரமாகும். நமக்கு மூவாயிரம் நாட்கள் சென்றால் அவர்களது நிலைக்கு அவை ஆறு நாட்களாகவே இருக்கும். இத்தகைய நிலையினா் ஒரு சாரார்வேறொருசாராருக்கு நமக்கு நூற்றி அறுபத்தாறு நாட்கள் அவர்களுக்கு ஒரு நாளாகும். மதிவட்டம் வரும் இருபத்தேழு நாட்களும் இவ்வாறு விதிக்கப்பட்டுள்ளது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

727 விதித்த இருபத்தெட் டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
பதித்தெறி பத்தெட்டும் பாரா திகணால்
உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே

“சிவனடியார்களே, இப் பாடலின் உரையை வல்லார் வாயால் கேட்டுணர்வது தான் சிறப்பானது.”

728 முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரண மற்றொன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே

“சிவனடியார்களே, நீண்ட காலம் உயிர்வாழ நினைப்பவர்கள் உயிர்ப்பை அடக்கப்பழகுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் உலகக் கணக்கின் படி வாழ வேண்டிய நிலை உருவாகும். ஒரு சிறு காலம் கூடக் கூடுதலாக வாழ முடியாது. இதைப் பறை போல வெளிப்படுத்தாது சிவ நினைவுடன் பயின்று தம் வாழ் நாளை அதிகரிக்கலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

729 முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனன் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே

“சிவனடியார்களே, உடம்பு நிலைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், அது நிலைத்திருக்க வேண்டிய முறைகளை அறியாது வேறு செயல்களில்ஈடுபட்டால்அவர்கள் மூர்க்கராவர். உடம்பு நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் முலத்தீயின் கண் உயிர்ப்பினை அடங்குதல் வேண்டும். அப்படி அடக்கினால் நிலையில்லாத உலகில் அவ்வுடல் நிலைக்கும்.”

“சிவனடியார்களேஇ எனது குரு நூறுவருடங்கள் கழித்தும் திடகாத்திரமாக இருந்தார். கதிரேசன் இளைஞரைப்போல வேலை செய்கிறார். நல்லைநாதனும் எண்பது வயது கடந்தும்

திடகாத்திரமாக இருக்கிறார். அதற்குக்காரணம் அவர்கள் உடல் நிலைத்திருக்கும் வழியை நன்கு அறிந்தவர்கள் ஆவர்''என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

730 நண்ணு சிறுவிர னாணாக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடும்
உன்னி யுணர்ந்திடும் ஒவியந் தானே

“சிவனடியார்களே, நெற்றியின் நடுவில் இருக்கும் பிரமஇ விஷ்ணுஇ உருத்திரக்கட்டுக்களுக்கும் தலையின் கண் உள்ள திங்கள் ஞாயிறு தீ என்பவற்றிக்கும் இடையே தொடர்புண்டு. இவற்றை ஒவியம் போன்று உள்ளத்தில் பதித்தல் அருள் நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

731 ஒவிய மான வுணர்வை அறிமின்கள்
பாலிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே

“சிவனடியார்களே, உயிர்ப்பு அடங்கி அசைவற்றிருக்கும் நிலையை அறியுங்கள். மீண்டும் பிறப்பதற்கு வாயிலாக இறக்கும் உடம்பினை பெற்ற கொடியவர்கள் இதை அறியமாட்டார்கள். ஞாயிறு திங்கள் தீ என்றும் மண்டிலம் மூன்றும் பரவெளி மணடிடலத்தோடியை உடையன.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

732 தண்டுடன் ஒடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துடல் ஒடுத்திடுங்
கண்டவர் கண்டனர் கானார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின்ற றாரே

“சிவனடியார்களே, உயிர்ப்பினைச் வீணாத் தண்டென்னும் நடுநாடி வழியாகச் செலுத்திப் பிரமாந்திரமாகிய உச்சித் தொளைக் கண் நிறுத்தி அகத்தவம் செய்யோருக்கு ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று மண்டலங்களும் முரண்படாது ஒத்திருக்கும். இம் முறைமையினை உணர்ந்தவர்களே மெய்யுணர்த்தவராவர். இவற்றை உணராதவர்கள் ஊழ்வினைக்கு அகப்பட்டுப் பிண்டமாகிய உயிர் பிரியப் போகிறதே என்று இறக்கும் காலத்தில் துன்பப்படுவர்.”

“சிவனடியார்களே, அகத்தவம் செய்யாதவர்கள் நோய் வந்தால் அதைத் தாங்க முடியாது துன்பப்படுவர். நவராசா என்றொரு பெரும் வர்த்தகர் இருந்தார். பொருள் சம்பாதிக்கும் நோக்குடைய போலிச்சாமியார் ஒருவர் அவருக்கு அற்ப ஆயுள் என்று சொல்லிப் பாரிகார பூசை செய்து பெருந்தொகையான பணத்தைப் பெற்றுச் சென்று விட்டார். அவருக்குச் சிறிய வருத்தம் வந்தாலும் அவர் பயப்படுவார். ஒரு முறை பெரும்நோய் ஒன்று அவருக்கு வந்து விட்டது. தான் இறக்கப் போகின்றேன் என்று நினைத்துத் தனது நண்பர்களையும் இனத்தவர்களையும் அழைத்துத் தனது கவலையை வெளியிட்டார். அடிக்கடி கோவிலுக்கு வந்து தான் நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்று பூசைகள் செய்தார். ஒரு மாதகாலத்துள் மெலிந்து விட்டடார். அவர் கதிரேசனது இனத்தவர். அவருக்கு வயது நாற்பது. கதிரேசன் எண்பது வயது கடந்தும் இளமைகயாக வாழ்கிறார் என்று பெரும்துன்பப்பட்டார். இறப்பென்து நிட்சயிக்கப்பட்து. வாழும் காலம் வரை மகிழ்வுடன் வாழ வேண்டும் என்று பலர் நினைப்பதில்லை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

733 பிணங்கி அழிந்திடும் பேறது கேள் நீ
அணங்குட னாதித்த னாறு விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து

கணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே

“சிவனடியார்களேஇ இறப்புக் காலத்தில் பெருந் துன்பப்படுவோர் தம் வாழ் நாளைச் சூரியன் நாள்தோறும் அளந்து செல்கிறான் என்பதை அறியாதவராவர். அது தெரியாததால் மகிழ்வதற்காக இறைவியால் கொடுக்கப்பட்ட வாழ்வு பாழய்ப் போவதை உணரார். அதனால் எந்நேரமும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.”

“சிவனடியார்களே நவராசா படும்வேதனையை உணர்ந்த கதிரேசன் நவராசாவின் வீட்டுவந்து சொன்னார்இ‘‘நவம்இ வாழ்க்கை வினைக்கிடாக இறைவனால் கொடுக்கப்பட்டது. ஓர் உயிரின் வாழ் நாள்ப் பயன்கள் யாவும் இறைவனால் கருவில் வைக்கப்படுகின்றன. பிறந்த உடல் இறைவனை அடைவதையே இலட்சியமாகக். கொண்டிருத்தல் வேண்டும். இறப்பைத் தீர்மானிப்பவன் இறைவன். சோதிடர்கள் அல்ல. நீ சோதிடனை நம்புவதை விடுத்து இறைவனை நம்பு. ஆச்சிரமத்திற்கு வா. அங்கு வாழ்நாளை நீடிப்பதற்கான பயிற்சிகளைச் சொல்லித்தருவார்கள். அதன் படி வாழ்ந்து உன் வாழ் நாளை நீடித்துக்கொள். அகத்தவம் செய்வோர் தாம் விரும்பியநேரம் உடலைவிட்டு உயிரைப் பிரித்துத்திருவடி நிழலிற் சேர்ப்பர். அது வரை மகிழ்ச்சியாக வாழ்வர். என்று கதிரேசன் சொல்லியதை நவராசா நம்பவில்லை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

734 சுழல்கின்ற வாறின் துணைமலர் காணான்
தழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலாமற்
கழல்கண்டு போம்வழி காணவல் லாக்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே

“சிவனடியார்களே தொடர்ந்து உயிர்களுக்குப் பிறப்பு இறப்பாகிய துன்பங்களைக் கொடுக்கும் செருக்கு, சினம், சிறுமை, இவறல் மாண்பில்லாத மனம்இமாநாவுசை என்றும் ஆறு பகைகளும் அற்றுப்போனால் இறைவனது திருவடிகளைக் காணலாம். காணதவர் தீக்குள் விழுந்து அழிவர். திருவடி நினைவோடு இருப்பவர்களுக்கு உச்சி துளை வழியாக உயிர் அவர்கள் விரும்பிய போது வெளியேறும். அருளைப்பெறும்.”

“சிவனடியார்களேஇ செருக்குஇ சினமஇ சிறுமை போன்ற ஆறு பகைகள் தான் மனிதரைத் துன்பப்படுத்துகின்றன. இவ் ஆறு பகைகளையும் அகற்றா விட்டால் மாறி மாறிப்பிறப்பும் இறப்பும் ஏற்படும். அதனால் உடல்களைத் தீயிலிட வேண்டியநிலை ஏற்படும்.இவற்றைத் தவிர்ந்தால் ஊழிக்காலம் வரை திருவடி நிழலில் மகிழ்வுடன் இருக்கலாம். என்று சிவகுமார் தனக்குத் துன்பங்கள் வரும் போது கூறுவார். ஒரு நாள் குமாரசாமி வந்து,‘‘குருடா, உனக்கு என்ன தெரியும். படித்தாயா?வேத உபநிடங்களைப் பற்றிப்பேசி மக்களைக் கெடுக்கிறாய்’’ என்று சொன்னான். கூட இருந்தவர்களுக்குக் கோபம் வந்தது. சிவகுமார் சொன்னார்இ‘‘கோபம் கொள்ளாதீர்கள். கோபம் கொண்டால் நாம் செய்த புண்ணியங்கள் யாவும் மறைந்து விடும். சினம் செருக்கு மாண்பில்லாத மணம் சிறுமை போன்ற குற்றங்கள் தான் உயிர்களின் பகைவர்கள். யார் எதையும் சொல்லட்டும். அதைச் சிவன் பார்த்துக் கொள்வார். அமைதியாக இருங்கள்’’ என்றவன். இருந்தும் குமாரசாமி வெளியே சென்ற போது கஜேந்திரன் என்ற சிவனடியான் அவனைத் தாக்கிவிட்டான். அவனை அழைத்துச் சிவகுமார் சொன்னார்இ‘‘நீ இளைஞன். வாழ வேண்டியவன். உணர்ச்சி வசப்படாதே. அவன் ஆச்சிரமத்தில் குழப்பம் விளைவித்தால் எடுத்துச் சொல்லாமே தவிரக்கோபப்படக் கூடாது. யாரும் உபதேசங்களைப் பின்பற்றுவது குறைவு. அதனால் தான் இந் நிலை என்று சொன்னவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

735 கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி யவர்ந்திடு மொன்றே

“சிவனடியார்களே சிவபெருமானது பெருமைகளை உணர்ந்தோர் மெய்ப்பொருளை விளக்கும் சாத்திரத்தை ஒதி அதன் வழியில் நடப்பர். அதனால் அவர்களது ஆவி சிவ நினையுடன் இருக்கும்.அதனால் அவ் ஆவி சிவனாகும்.”

“சிவனடியார்களே,கஜேந்திரன் கோபத்தை வெளிக்காட்டவிட்டாலும் மனதுக்குள்ப் பொருமுகிறான் என்று குறிப்பால் உணர்ந்த சிவகுமார் சொன்னான்இ” கஜேந்திராஇ நீஆச்சிரமத்திற்கு வருவது மனதைப் பண்படுத்த. அத்துடன் பற்றுக்களையும் பகைகளையும் அகற்ற. ஆனால் நீ அவற்றை உன் நடவடிக்கையால் அதிகரிக்கிறாய். நல்ல நீரில் சிறிது உப்பைக் கலந்தலும் அது உவர்க்கும். அது போல நல்ல உள்ளத்தில் பகைகள் உண்டானால் அது சிவநினைவைக் கலைத்து விடும். சிவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டுச் சிவனே கதியென்று இரு. காலப்போக்கில் மனம் சாந்தியடையும். திருவடி உணர்வு மேலோங்கும். அதனால் நீ சிவனுமாய் என்று கூறியவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

736 ஒன்றில் வளர்ச்சி உலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு முப்பதுஞ் சேர இருந்திடிற்
குன்றிடைப் பொன்திகழ் கூந்தனு மாமே

“சிவனடியார்களே, நடு நாடி ஒன்றில் உயிப்பைச் செலுத்தும் வல்லமை ஏற்பட்டால் மூன்று நாடிகளிலும் செல்வதால் குறைந்தும் கூடியும் வரும் வாழ் நாள் அதிகரிக்கும். முப்பத்தாறு மெய்களும் பற்றற்ற நிலையில் இருத்தால் அப்படி இருப்பவர்கள் சிவனுமாவார்கள்.”

“சிவனடியார்களேஇஇளம் மனது உண்மைகளை ஏற்றுக் கொள்ளாது. அதனால் சிவகுமார் சொன்னார்,‘‘ஆச்சிரமத்திற்கு வருவோர் துன்பங்களைத் தரும் பிறப்பிறப்புக்ளை இல்லாமற் செய்யவே வருகிறார்கள். ஆச்சிரமத்திற்கு வந்த பின்பும் மனதை அடக்காவிட்டால் உயிர் மூச்சு மூன்று நாடிகளில் செல்லும். அதனால் எப் பயனும் உண்டாகாது. அதை ஒரு நாடியில் செலுதப் பயிற்சி எடுத்தல் வேண்டும். அத்துடன் முப்பத்தாறு மெய்களும் அடங்கிப் பற்றுக்களை அகற்ற வேண்டும். இந் நிலையை விரும்புவோரைத் தவிர்ந்த ஏனையோர் ஆச்சிரமத்திற்கு வருவதால் பயனடையார் என்றவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

737 கூத்தவன் ஒன்றிங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடம்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலைப்பெய்ய யாமே

“சிவனடியார்களே, சிவபெருமான் நெஞ்சமாகிய அனாகதத்தின் கண் இடையறாது இயற்றும் திருக் கூடத்தின் உண்மையை உணர்ந்து தொழுபவர்கள் தான் மெய்யுணர்ந்தவர்களாவர். அவர்கள் பத்து எழுத்துக்கள் சேர்ந்து இருக்கும் இடமாகிய நெஞ்சத்தால் அறிவால் நோக்குவோர்க்கு எட்டுத்திசைகளில் உள்ள பொருட்களும் இயல்பாகத் தோன்றும். அதனால் அவர்கள் மகிழ்ந்து பரவெளியில் விளங்கும் சிவபெருமானைத் திருவருளால் காண்பர். இவ்வாறு காண்பவர்களுக்கு வயது நூறு.”

“சிவனடியார்களே ஒரு நாள் சிவகுமாரன் மிகுந்த துயரத்துடன் குருவிடம் சொன்னான்.”கண்தெரியாத்தால் நான் பெருந்துன்பப்படுகிறேன். நீங்கள் நூறு வயது தாண்டியும் வாழும் வகைகளைக் கூறுகிறீர்கள். சாகும்வகையைக்கூறுவதில்லை.அதைக் கூறுங்கள். என்றான். அதற்குக் குரு சொன்னார். மகனே சாகும் வகைகளைச் சிவன் கூறவில்லை. இன்பமாக வாழும் வகைகளையே கூறியுள்ளார். உனது உடல் உனக்குச் சொந்தமானதல்ல. வினைக்கீடாக உனக்குத் தரப்பட்டது. அந்த வினையைச் சிவபெருமான் தான் நீக்குவார். நீக்கும் வழிகளை உனக்கு உபதேசத்துள்ளேன். வாழ்வு முடிய முன் முடித்தால் வினைகள்

அதிகரித்து அடுத்தடுத்த பிறப்புக்களிலும் துன்பம் ஏற்படுவதைத் தடு அதனால் வினைகளை நீக்கு. இன்பமாக நூறு வருடம் வாழலாம் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

738 சாத்திடு நூறு தலைபெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூச்சுடன் கோடி யுகமது வாமே

"சிவனடியார்களே, மேற்கூடிய படி நூறு ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்தோர். அம் முறையால் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வர். ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தோர் அறிவுத்திறத்தால் ஊழிக்காலம் வரை அதவாது உலகம் அழியும் வரை வாழ்வர்."

"சிவனடியார்களே, ஆயிரம் வருடங்கள் அல்ல உலகம் உள்ளவரை அறிவுத் திறன் உடையோர் வாழ்வார்கள். சங்க காலப்புலவர்கள் இறை நினைவோடு வாழ்ந்தமையால் பல ஆயிரம் வருடங்கள் கடத்தும் வாழ்கின்றனர். ஔவையாரை எடுத்துப் பாருங்கள் அவர் உலகம் உள்ள வரை வாழ்வார். யாருக்கும் சந்தேகமில்லை." என்றாார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

739 உகங்கோடி கண்டும் ஒசிவற நின்று
அகங்கோடி கண்டு எயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்கு
உகங்கோடி கண்டங் குயருறு வாரே

"சிவனடியார்களே, ஊழிகள் கோடி கோடியாகக் கண்ட போதும் பற்றித் திடமாகச் சிவ நினைவுடன் நின்றால் சிவபெருமான் வேறாக கலந்து நிற்பார். இறுதியிடமான சிவபெருமானை அடைந்தவர்கள் தன்முனைப் பற்று சிவபெருமானுடன் கலந்து நின்ற அளவில் கோடி யூகங்களைக் கண்டு மகிழ்வர்."

"சிவனடியாார்களே, சிவனது திருவடிகளை அடைந்தோர் கோடிகோடியாக வரும் யுகங்களைக் கடந்தும் வாழ்வர் என்பதற்கு உதாரணமாக நாயன்மார்களைக் கூறலாம். திருஞானசம்பந்தர் மிகவும் இளையவர்.அவர் சிவனது சோதியிற் கலந்தவர். அவர் கோடி யுகங்களுக்குப் பின்பும் வாழ்வார்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

740 உயருறு வாருல கத்தொடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே

"சிவனடியார்களே, திருவருள் வயப்பட்ட உயர்ந்தவர்களில் சிலர் சாதாரண மக்களைப் போலச் செயற்படுவர். ஆனால் வினைப்பயனில் கட்டுனார். பலர் உலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் நலம் பெற வேண்டும் என்று எண்ணாது சிவநினைப்பின்றி வாழ்ந்து பிறப்புக்களைத் தேடித் கொள்வர். அவர்கள் அம்மையான அங்கயற் கண்ணியை அறியமாட்டார்கள்.''

"சிவனடியார்களே, திருவடியை நினைத்து அகத்தவம் செய்வோர் சிலர் சாதாரண வாழ்வு வாழ்வர். சாதாரண மக்களோடு உறவாடுவர். அதற்கு உதாரணமானவர் கதிரேசன்.யாரும் நம்புவது கிடையாது. ஏதாவது கரும மாற்ற வேண்டுமானால் அவன் தனது மனைவி மூலம் அக்காரியத்தை நிறைவு செய்வான். அவள் பலரின் காம உணர்வுகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைக்குள்ளாவாள் அவளுக்கு உதவி செய்பவர்களையும் ஊரவர் அவளோடு சேர்த்துத் தான் கதைப்பார்கள். அவள் கதிரேசனிடம் சென்று அடிக்கடி உதவி பெறுவாள்.ஆனால் ஊரவர்கள் அதைத் தவறாகக் கருதமாட்டார்கள். அவர் அவளுக்குத் தான்

உதவி செய்யாது தனது மனைவியிடம் கொடுத்தே உதவிகளைச் செய்வார். அவளைப் பார்க்கக் கூட மாட்டார். அதனால் அவர் வினைக்குப் உட்பட மாட்டார்."என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

741 காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே

"சிவனடியார்களே, திருவருளை உணராதார்கள் மாண்டுமாண்டு பிறப்பர். பிறத்தலை விரும்பும் நாணமில்லாதவர்கள் உலக இன்பங்களை நாடி நாட்களைக் கழிப்பர். மெய்ப்பொருளுண்மையை அறியாதவர்கள்பொருட்களின் நிலையாமை அறியாதவராவர்."

"சிவனடியார்களேஇ மெய்பொருளான சிவபெருமானின் திருவடி நிழல் தரும் இன்பத்தை அறியாத அறிவிலிகள் உலகில் காணப்படும் பொருட்களில் அவாக்கொண்டு அதை நாடி அதை அடைந்து பின் அதை இழந்து துன்படுவர். முருகானந்தம் பெரும் செல்வந்தன். எச்சில் கையால் கூடக் காகங்களைக் கலைக்க மாட்டான். ஆனால் தனது இன்பத்திற்காக எவ்வளவு பணத்தையும் செலவு செய்வான். அவனுக்கு மதுபான வகைகளை வாங்கிக் கொடுப்பவன் உலகநாதன் அவனது மனைவி கௌரி. முருகானந்தனின் வாய்க்கு ருசியாகத் தீண்பண்டங்ளைத் சமைத்துக் கொடுப்பவள். கௌரியின் அழகில் மயங்கிய முருகானந்தன் அவளுக்குப் பணத்தை வாரிக் கொடுப்பான். முருகானந்தனின் நண்பன் சுந்தரன்.இருவரும் சேர்ந்து குடிப்பார்கள். சுந்தரத்தின் மீது கௌரி காதல் வசப்பட்டு அவனோடு கூட இருந்தாள். இது முருகானந்தத்துக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவளைத் தடுத்தான். அவள் முருகானந்தனின் தொடர்பை நீக்கியதோடு அவனின் வீட்டிலிருந்த பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றாள். முருகானந்தனுக்குப் பொருள் போனதால் கவலை உண்டாகவில்லை. கௌரி சென்றதால் பெரும் மனச்குழப்பத்துக்குள்ளானான். இப்படியான உலக இன்பங்களில் நாட்டம் கொள்வோர் பிறந்து பிறந்து இறந்து கொண்டேயிருப்பர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

742 கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே

"சிவனடியார்களே, உடலைவிட்டுச் செல்லும் உயிரின் உண்மை நிலையை உணராதவர்கள் திருவருளின் துணையோடு அதைக் காணலாம் என்று எண்ணமாட்டார் அழிந்து போகும் உடம்பினுள்ளே பற்றுக்களின்றி ஆழ்ந்து நோக்கின் என்றும் எப்போதும் நீங்காது உடலிருக்கும் சிவபெருமானைக் காணலாம்."

"சிவனடியார்களே என்றும் எப்போதும் நீங்காது உயிருடன் இருக்கும் சிவபெருமானை மெய்யுணர்வில்லாதவர்கள் காணமாட்டார்கள். முருகானந்தன் கௌரி தான் தனது இன்பப்பொருள் என உணர்ந்து அவளின் நினைவாக அலைந்தான். ஆனால் அவள் அவனை மறந்து பல நாளாகிவிட்டது. உயிரோடு கலந்து என்றும் நீக்கமற நின்று உதவுகின்ற சிவனை அறிய முடியதவர்கள் உயிரின் உண்மையை அறியாதவர்களேயாவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

743 கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
எண்ணுந் திசையுடன் ஏகாந்த ளாயிடுந்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாறிநிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே

“சிவனடியார்களே, முக்கண்ணனான சிருபெருமான் என்றும் பிறவாதவன்.உயிரோடுகலந்து நிற்பவன். எல்லாத்திசைகளிலும் பரந்து நிற்பவன். அவனை உறுதியாக எண்ணின் உயிர் சிவனின் திருவடியை நினைத்து நிற்கும்.இது தான் உலகத்தவர்களுக்கு முடிந்த முடிபாகும். இவ் உண்மையை அறிந்தவர்களே உயர்நதவர்களாவர்.”

“சிவனடியார்களே, முருகானந்தனின் நினைவு தடுமாறியதால் வியாபாரத்தில் கவனத்தை அவனால் செலுத்த முடியவில்லை. ஒரு நாள் அவனது மனைவி ஆரணி அவனை ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தாள். அவனால் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அதனால் அவனுக்குப் பல நாட்கள் சிவனின் மகிமையைப்பற்றியும் பொருட்களின் நிலையாமையை பற்றியும் எடுத்துக் கூறி அகத்தவப் பயிற்சி கொடுத்தேன். ஓரிரு மாதங்களில் அவன் சிவனின் பெருமையை உணர்ந்து கொண்டான். சிவன் என்றும் பிறவாதவன். உயிரோடு காலந்திருப்பவன் எல்லாத்திசைகளிலும் பரந்து நின்று எல்வாற்றையும் அறிபவன் என்று புரிந்து கொண்டான். அதன் பின் அவன் சிவநினைவுடன் வாழத் தொடங்கினான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

744 நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே

“சிவனடியார்களே, திருவருளின் துணையோடு சிவனை நினைத்திருப்பவர்களுக்கு இறப்பில்லைஇ பிறப்பில்லை. அவர்கள் உலகத்தில் வாழும் தெய்வமாகப் போற்றப்படுவர் என்று ரிஷிகளும் ஞானிகளும் கூறியுள்ளனர். சிவ நினைவோடு வாழும் உத்தமர்களது வாழ்வு சொல்லில் சொல்ல முடியாத இன்பங்களை உடையது.”

“முருகானந்தம் எமது ஊரில் வாழும் கதிரேசனது வாழ்வை நினைத்ததுப்பார். அவர் எவ்வளவு மகிழ்வாக வாழ்கிறார். அவரது பிள்ளைகள் பெரு வாழ்வு வாழ்கின்றனர். ஊரில் உள்ளோர் அவரைத் தெய்வமாக வணங்குகின்றனர். அவரது சொல்லை மீறயாராலும் முடியாது. ரிஷிகளும் ஞானிகளும் கூறிய படி சிவனை நினைத்து அவனின் உறவோடு வாழ்கிறார். அவரைப் போல நீயும் வாழ முயற்சி செய்.” என்று கூறினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

745 கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறு மகாரங் சூழல்வழி யோடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே

“சிவனடியார்களே, மெய்ப்பொருள் நூல்களெல்லாம் அகரம் சிவபெருமான் என்றும் உகரம் உயிர் என்று கூறுகின்றன. ஒருவர் தெரிய வேண்டிய உண்மைப் பொருள் இது. இப்பொருட்களின் நாட்டம் நெஞ்சத்தில் நிலை பெற்று நின்றால் மகரமாகிய நாதம் நடு நாடிவழியாக வெளிப்பட உடம்பினுள்ளே ஐந்தொழில் நடக்கும் நிலைக்களமாகிக் கண்ணும் உறைந்திடும்.”

“சிவனடியார்களே, திருவருளால் ஆவிகள் அவனாக விளங்கும் அகரம் சிவன். உகரம் உயிர் மகரம் நாதம் என்ற ஓசை. திருவருளின் ஆற்றலால் உயிர் அவனாக மாறும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

746 அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ னாகுமே

“சிவனடியார்களே, அண்ணலாகிய சிவபெருமான் உயிருடன் கலந்து உறைந்திருப்பதைத்தம்மறிவினால் யாரும் தெரிந்திருக்கமாட்டார்கள். திருவளின் துணையால் அவ் உண்மைமயைத் தெரிந்தவர்கள் அண்ணலாகிய சிவபெருமான் மறைவின்றி அறிவுக்குள் அறிவாய் விளங்கி வெளிப்படுவான்.அப்படி வெளிப்படும் போது அவன் சிவனுக்குள் கலந்து விடுவான். சிவனாகவே திகழ்வான்.”

“சிவனடியார்களேஇ மெய்யறிவு இல்லாதவர்களுக்குச் சிவன் தனது உயிரோடு காத்திருப்பது தெரியாது. ரவீந்திரன் அளவுக்கதிகமாக குழப்பம் செய்யும் மாணவர்களை ஏசவும் மாட்டான்.தண்டிக்கவும் மாட்டான். ஆரம்பத்தில் கேலி செய்வதற்காக அவனுடன் முரண்படுவோரையும் அவன் விலக்கி வைப்பதில்லை. முகுந்தன் என்ற மாணவன் யாருக்கும் அடங்காதவன. ஆனால்ரவீந்திரனைவணங்குவான். அப்போது ரவீந்தரின் சொல்வான்,“முகுந்தாஇ ஒவ்வொரு உயிரிலும் சிவன் கலந்து உறைந்துள்ளான் என்பதை அறிந்தவர்கள் உயிர்களைக் கொடுமைப்படுத்தமாட்டார்கள். நீ என்னை மதிப்பது போல ஏனைய ஆசிரியர்களையும் மாணவர்களையும் மதித்தால் தான் என்னை மதித்தமைக்கான பலன் கிடைக்கும். ஒருவரை அவமதிப்பது சிவனை அவமதிப்பதைப் போன்றது என்று கூறிய பின் முகுந்தன் அனைவரையும் மதித்தவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

747 அவனிவ னாகும் பரிசறி வாரில்லை
அவனிவ னாகும் பரிசது கேள்நீ
அவனிவ னோசை ஒளியினுள் ஒன்றிடும்
அவனிவன் வட்டம தாகிநின் றானே

“சிவனடியார்களே, சிவன் உயிராய் நிற்கும் உண்மை நிலையை மெய்யுணர்வுடையவர்களே அறிவார்கள். ஒசையும் ஒளியும் போலச் சிவனும் உயிரும் கலந்து நிற்கும். அ∴து ஓ மொழியின் கண் அகரம், உகரம், மகரம், ஒளி, ஒசை ஆகியன கலந்து ஒரு வட்டமாய் நிற்பது போல இருக்கும். திருவடிப் பேற்று நிலையில் அவன் சிவனாகும் நிலை உண்டாகும்.”

“சிவனடியார்களே, சிவன் மீது மெய்யுணர்வேற்பட்டுச் சிவநிழலில் இருந்தால் அவன் இவனாவான். இதை அகக்கண்களால் கண்டறிதல் வேண்டும். எனது குரு சொல்வார் அவன் இவனான பின் அவன் சொல்லமாட்டான் நாம் தான் உணர வேண்டும். இது மெய்யுணர்வு இல்லாதவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். மெய்யுணர்வுடையோர் புரிந்து கொள்வார்கள். கதிரேசன் ஆச்சிரமத்திற்கு வந்தால் குருவைச் சிவன் என்பார். அவன் இவனாகி விட்டான் அதனால் ஞானத்துயில் கொள்கிறார் என்று சொல்லிச் சிவனுக்குச் செய்ய வேண்டிய பூசைகளை விதிமுறைப்படிசெய்வார். நான் ஆச்சிரமத்தில் இருந்து அகத்தவம் செய்த போதும் இன்னும் கதிரேசனது நிலையை அடையவில்லை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

748 வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிரலீர்
ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடங் காணலு மாகுமே

“சிவனடியார்களே, நிலைகள் ஆறு வட்டங்களாகும். மேலுள்ள திங்கள் மண்டிலத்தையும் சேர்ந்தால் ஏழு வட்டங்களும் உயிரினில் கலந்திருக்கும். அப்படியிருந்தும் சிவனது பெருமையை உணர்வதில்லை. திருவருளோடு உடலாய் நின்று உணர்ந்திட்டால் சிவபெருமானது நிலையினைக் காணலாம்.”

“சிவனடியார்களே, பூமியையும் ஏனைய உலகையும் உயிர்களையும் படைத்த சிவன் ஆறு நிலைக்கலங்களையும் சந்திரமண்டிலத்தையும் உடலுள் படைத்திருந்ததும் சிவனைப் பல உயிர்களும் அறிவதில்லை. திருவருளோடு கூடியிருந்தால் மட்டுமே அறியலாம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

749 கானலு மாகும் பிரமன் அரியென்று
கானலு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்

கானலு மாகுஞ் சதாசிவ சக்தியுங்
கானலு மாகுங் கலந்துடன் வைத்ததே

“சிவனடியார்களே,சிவபெருமானைப் படைப்போனாகவும், காப்போனாகவும், அழிப்போனாகவும், மறைப்போனாகவும, அருள்ளோனாகவும் காணுதல் வேண்டும். இத் திருவுருங்கள் திருவருளாற்றலுடனும் உயிருடனும் இணைந்திருப்பவையாகும்.”

“சிவனடியார்களேஇ நம்பிக்கை தான் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகும். நோய் வந்து விட்டால் இந்த வைத்தியர் தரும் மருந்தால் எனது நோய் மாறும் என்ற நம்பிக்கையுடன் மருந்தை உண்டால் தான் நோய்மாறும். இல்லாவிட்டால் மாறாது. கதிரேசனை மக்கள் எல்லாவிடயங்களிலும் நம்பியிருப்பர். நல்லைநாதனுக்கு ஒரு பாம்பு தீண்டிவிட்டது வைத்தியர் வந்து மருந்து கொடுத்து விட்டுச் சென்றார். வீட்டார் மிகுந்த கவலைப்பட்டனர். பாம்பு திண்டி வெகுநேரமாகியும் நல்லை நாதனுக்குச் சுயநினைவு திரும்பவில்லை. அதனால் நல்லைநாதனின் மனைவி நம்பிக்கை இழந்து பெருங் குரலெடுத்துக் கத்தினாள். விடயத்தை அறிந்த கதிரேசன் வந்து சிவன் உயிர்களோடு கலந்திருக்கிறான். அவன் கலத்திருப்பதால் அவனது ஐந்தொழில்களுக்குரிய தெய்வங்களும் உருவில் கலந்து நிற்கின்றன. நல்லை நாதன் சிவனடியார். அவனது உயிரைக் கவர யமனால் முடியாது பயப்படாதிர்கள் என்று சொன்னவுடன் நல்லை நாதனின் மனைவியின் கவலை நின்றது. கதிரேசன் அண்ணை சொன்னால் அதன் படி நடக்கும் என்றவள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

750 வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்ககிடில் ஒராறு திங்களாம்
அத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்கொரு திங்களில் ஒசையே

“சிவனடியார்களே, உயிர்போசையானது. உச்சிக்கு நேரே அளவாய்த் தோன்றினால் அது முதன்மை நிலையாகும்.அளவில் மிகுந்தால் ஆறு திங்களில் அகவை முடிவெய்தும். அதுவும் இரண்டும் மடங்களாயின் ஒரு திங்களில் அகவை முடியும்.”

‘‘சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்,‘‘உயிர் பேரையானது. அது உச்சிக்கு நேரே அளவாகத் தோன்றினால் அது முதன்மையானது. அளவில் மிகுந்தால் ஆறு மாதத்தில் உயிர் போய்விடும். அது இரண்டு மடங்கானால் ஒரு மாதத்தில் உயிர்போகும். நல்லநாதனின் உயிர் மூச்சு முதன்மை நிலையில் உள்ளது. அவர் நூற்றாண்டுகள் வாழ்வார். இது சிவனின் ஆணை என்றார்’’என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**751. ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின் கண்**

**ஓசை யிறந்தவர் ஈசனை உள்குவர்**

**ஓசை யிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்**

**ஓசை யுணர்ந்த வுணர்விது வாமமே.**

‘‘சிவனடியார்களே, சிவபெருமான் உயிர்ப்பின் கண்ணும் குருவுருவின் கண்ணும் ஒப்ப விளங்குபவர் உயிர்ப்பை அடக்கியவர்கள் இறைவனின் நினைவாக இருப்பர். அத்தகையவர்களின் நெஞ்சினுள் இறைவன் உயிருடன் ஒன்றித்து மேம்பட்டு விளங்குவன்’’

“சிவனடியார்களே, சிவபெருமான் தன்னை விரும்பித்தன் நினைவாகவே இருக்கின்றவர்களின் உயிரோடும் ஒன்றித்து இருப்பவர். உயிர்ப்பை அடக்கியவர்களுக்குச் சிவபெருமானைத் தவிர்ந்த வேறு எந்த நினைவுகளும் வராது. அவர்களுக்குக் குடும்பத்தில் பற்றில்லை. உலகில் பற்றில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் எதிலும் பற்றில்லை. எல்லாவற்றையும் சிவன் கவனிப்பான் என்று நினைப்பார்கள். கதிரேசனின் மனைவிக்குத் திடீரென்று கடுமையான நோய் வந்தது. ஊரவர் அனைவரையும் நேசித்தமையால் எல்லோரும் வாய்விட்டு அழுதனர். கதிரேசன் சொன்னார், “ஏன் அழுகிறீர்கள் நடப்பது எதையும் யாராலும் தடுக்க முடியாது. மருந்தும் மாத்திரையும் காலத்தை வெல்லாது. படைத்த சிவன் அழைக்கும் போது மகிழ்வுடன் செல்லவேண்டும். எனது மனைவிக்கு எதுவும் நடக்காது” என்றவர். இறைவன் அவர் உயிரோடு கலந்து ஒன்றியிருப்பபதால் யாவும் அவருக்குத் தெரியும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**752. ஆமே அழிகின்ற வாயவை நோக்கிடில்**

**நாமே லுறைகின்ற நன்மை யளிந்திடும்**

**பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்**

**தாமே யுலகில் தலைவனுமாமே.**

“சிவனடியார்களே, வெளியே சென்று அழிந்து போகும் நான்கு விரல் அளவு உயிர்ப்பையும் அடக்கினால், அதை அண்ணாக்கு மேலெழுந்து மூக்கு வழியை அடைக்கும். அப்போது திருவடி உணர்வு கை கூடும். அவ்வுணர்வை அடைந்தோர் செந்நெறித் தலைவராவர்”

“சிவனடியார்களே, கதிரேசன் அப்படிச் சொன்னதும் அழுதவர்கள் அமைதியடைந்தனர். கதிரேசன் மனைவியை நேசிப்பவர். ஊரவர் அவர்களை அம்மை, அப்பன் என்றே அழைப்பர். அப்படியான பிரியாத அன்புள்ளம் கொண்டவர் இவ்வாறு சொன்னால் அது நடக்கும் என்று நினைத்தனர். அன்று மாலை ஆச்சிரமத்திற்கு வந்த அடியவர் ஒருவர் “கதிரேசனுக்கு அந்நிலை எப்படி வந்தது” என்று கேட்டார்,” அடியவரே அகத்தவமும், மூச்சுப் பயிற்சியும் செய்வோர்க்கு வெளியே விடும் காற்றை வெளியே விடாமல் உடலுள் அடக்கும் சக்தி உண்டாகும். அப்படி உண்டானால் அவரால் எதையும் செய்யமுடியும். கதிரேசன் அவ்வாறானவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**753.தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை.**

**தலைவ னிடம்வல மாயிடல் தையல்**

**தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்**

**தலைவ னிடம்வலந் தன்வழி நூறே.**

“சிவனடியார்களே, உயிர்பை இடமூக்கு வலமூக்கு வழியாக முறைப்படி செலுத்துவோர் நெடுநாள் வாழ்வர். அப்படி செய்வோர் குறைவு. அப்பயிற்சி செய்வார்குத் திருவடிடி கை கூடும். இப்பயிற்சியைத் தினமும் ஐந்து நாழிகைகள் செய்து வந்தால் நூறு வயது வரை வாழலாம்.’’

“சிவனடியார்களே, மகாலட்சுமிக்கு எழுபத்தைந்து வயது . அவர் மூச்சுப் பயிற்சியைத் தினந்தோறும் ஐந்து நாழிகைகள் கதிரேசனுடன் சேர்ந்து செய்பவர். அதனால் மகாலட்சுமியின் ஆயுளை அவர் அறிந்தவர். அதனால் தான் அவர் அவ்வாறு கூறினார்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**754.ஏறிய வாறினில் எண்பது சென்றிடுந்**

**தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்**

**ஆறொரு பத்தாய் அமர்ந்த இரண்டைநய்**

**தேறியே நின்று தெளியிவ் வகையே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பானது ஆறுவிரலளவு ஓடினால் ஆயுள் எண்பதாகும். ஏழுதடவை ஓடினால் அறுபது ஆண்டுகள் வாழ்வர்.

“சிவனடியார்களே, உயிர்பு ஓடும் கணக்கை மிக்க அவதானத்துடன் கணித்தால் ஆயுளைக் கணக்கிடலாம். கதிரேசன் உயிர்ப்பைக் கணிப்பிடுவதில் வல்லவர். நாடி பிடித்துப் பார்த்து விட்டு சம்பந்தப்பட்டவரின் ஆயுளைக் கணிப்பார். ஆனால் அவர் அதைச் செய்யமாட்டார். கதிரேசனது இனத்தவர் மார்க்கண்டு அவர் திடீரென்று மயங்கி விழுந்து விட்டார். அவருக்கு அறுபது வயது. ஆசிரியராகக் கடமையாற்றிச் சில தினங்களுக்கு முன் ஓய்வு பெற்றவர். இரத்த உறவினன் ஆகையால் அவரது உயிர்பைப்பார்த்தார். உயிர்ப்பு எழுவிரல் அளவு ஓடியது. அவர் தப்பமாட்டார் என்று அவருக்குப் புரிந்தது. மிகத்தாமதமாக நாற்பது வயதில் அவர் திருமணம் செய்தமையால் அவருக்குப் பிறந்த நான்கு பிள்ளைகளும் படித்துக் கொண்டிருந்தனர். அவர் உயிர்ப்பைப் பார்த்து விட்டு மனைவியின் சகோதரனான நல்லைநாதனுக்குச் சொன்னார் உயிர்ப்பு ஏழுமுறை ஓடுகிறது. உனக்கத் தெரியாதது எதுவும் இல்லை” என்றார். நல்லைநாதன் அதைத்தான் எதிர்பார்த்தார். அப்போது கதிரேசன் சொன்னார், “சிவனைப் பிரார்த்தியுங்கள்” என்ற சொன்னதும் மார்க்கண்டுவின் மனைவி மயங்கி விழுந்தாள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**755. இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்**

**அவ்வகை ஐம்பதே யென்ன அறியலாஞ்**

**செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடன்**

**முவ்வகை யாமது முப்பத்து மூன்றே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பு எட்டுமுறை ஓடினால் நாற்பது ஆண்டுகள் அவர் ஒன்பது முறை ஓடினால் முப்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்வர்”

“சிவனடியார்களே, நல்லைநாதனின் சகோதரியின் மகன் அரவிந்தன். அவன் பிறந்ததிலிருந்து அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு வயது பதினைந்து. நல்லை நாதன் அவனைக் குருவிடம் அழைத்து வந்தார். குரு உயிர்ப்பை நாடி பிடித்துப் பார்த்தார். அது ஒன்பது முறை ஓடியது. நீறுகொடுத்து விட்டு நல்லை நாதனுக்குச் சொன்னார், “அடியவரே, உமது மருமகனுக்கு உயிர்ப்பு ஒன்பது முறை

ஓடுகிறது. அதனால் அவனது ஆயுள் முப்பது மூன்று வருடங்கள். அகத் தவத்துடன் மூச்சுப் பயிற்சி செய்தால் அவன் நூறுவயது வரை வாழ்வான். அதனால் தினமும் மூச்சுப்பயிற்சியைச் சிவ நினைவுடன் செய்யுங்கள்'' என்றார். அவன் தற்போது நாற்பத்தைந்து வயது கடந்தும் வாழ்கிறான். நாதன் என்பவனுக்கு முப்பது வயதில் இருதயநோய் ஆரம்பமானது. அவன் சிவனை நிந்திப்பவன். அவனது தந்தை குருவிடம் அழைத்து வந்த போது அவர் மூச்சுப்பயிற்சி செய்யுமாறு கூறினார். அவனுக்கு அதில் நம்பிக்கை இல்லை. அதனால் அவன் நாற்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**756. மும்மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்**

**எண்மூன்றும் நாலும் இடவகை யாய் நிற்கும் ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடிற்**

**பன் மூன்றொ டீராறு பார்க்கலு மாமே.**

''சிவனடியார்களே, உயிர்ப்பு பத்து எண்வரை ஓடி முடிவுற்றால் ஆயுள் இருபத்தெட்டு ஆண்டுகள். பதினைந்து முறை ஓடி அகன்று நின்றால் ஆயுள் இருபத்தைந்து வருடங்களாகும்''

''சிவனடியார்களே, உயிர்ப்பின் வேகம் குறையக் குறைய ஆயுள் விருத்தியாகும். முழுமையாக உயிர்ப்பை அடக்குவோர் நூறாண்டு காலம் வாழ்வர். அத்துடன் இறந்து பிறவாத நிலையையும் அடைவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**757. பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்**

**ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்**

**போக்கலு மாகும் புகலற ஒன்றெனில்**

**தேக்கலு மாகுந் திருத்திய பத்தே.**

''சிவனடியார்களே, பகல் முப்பது நாழிகையையும் பன்னிரண்டால் வகுத்துக் கூறுகளாக்கிச் சரவோட்ட எண்ணை மேலோதியவாறு பகுத்து ஒழுகுதல் வேண்டும். அது ஒற்றைப்பட வருமானால் அதை இரட்டைப்பட வருமாறு செய்தல் வேண்டும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**758. ஏயிரு நாளும் இயல்புற ஓடிடிற்**

**பாயிரு நாளும் பகையற நின்றிடும்**

**தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடில்**

**ஆயுரு வாறென் றளக்கலு மாமே.**

“சிவனடியார்களே, பொருந்திய இரண்டுநாட்களிலும் இயற்கை முறையாக ஓடினால் அந்த நாட்கள் அகப்பகை, புறப்பகை இல்லாது அமையும். ஓட்டம் இளைத்து மூன்று எண்ணுக்கு வருமானால் ஆராயப்படும் உருவவகையென்று ஆராய்ந்து கூறலாம்.”

“சிவனடியார்களே, அடுத்து வரும் இரு நாட்களும் உயிர்ப்பு இயற்கை முறையாக ஓடினால் அகப்பகையும், புறப்பகையும் அகலும். உயிர்ப்புக் கூடிக் குறைவதாலும், அதிகரிப்பதாலும் தான் ஆணவம் முனைப்புப்பெற்று திமிராக நடக்க வைக்கும். அதனால் மனதுள் பிரவாகிக்கும் மலத்தின் செறிவு அதிகரித்துத்தன் முனைப்புக் கொள்ள வைப்பதால் வீண்சண்டைகள் உருவாகும். சிவநினைவு அற்றுப் போகும். உயிர்ப்புக் குறைவடைந்து சமமாக இருந்தால் ஏற்படும் சிவநினைவு ஆணவத்தின் முனைப்பைக் குறைக்கும். அதனால் தான் என்ற அகந்தை அகலும். அதனால் பிரச்சினைகள் உருவாகத் திருவடியுணர்வு விடாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**759. அளக்கும் வகைநாலும் அவ்வழி யேஓடில்**

**விளக்கும் ஒருநாலு மெய்ப்பட நிற்கும்.**

**துளக்கும் வகையைந்துந் துய்நெறி ஓடில்**

**களக்க மறமூன்றிற் காணலு மாமே.**

“சிவனடியார்களே, அவ் ஓட்டம் நான்காக ஓடினால் அந் நான்கும் மெய்க் கண் பொருந்தி நிற்கும். அவ் ஓட்டம் ஐந்தாக ஓடினால் குற்றம் மூன்றில் முடிவடையும்”.

“சிவனடியார்களே, உயிர்ப்பின் ஓட்டம் நான்காக இருந்தால் அவ்வோட்டம் திருவடி உணர்வுடன் ஒன்றிக்கும். அதனால் பிரச்சினைகள், சிக்கல்கள், சண்டைகள் முக்குற்றங்கள் வராது. திருவடி உணர்வு அவற்றைக் கட்டுப்பாட்டுள் வைத்திருக்கும். உயிர்ப்பு ஐந்தாக ஓடினால் மும் மலங்களும் அதிகரித்துத் திருவடி உணர்வை இல்லாமற் செய்யும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**760. காணலு மாகுங் கருதிய பத்தோடிற்**

**காணலு மாகுங் கலந்த இரண்டையும்**

**காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்**

**காணலு மாகுங் கருத்துற ஒன்றே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பின் ஓட்டம் பத்தாயின் பகை உறவு இரண்டும் ஏற்படும். பதினைந்து ஓடினால் கருத்தில் பொருந்தாத உறவென்று ஏற்படும்”.

“சிவனடியார்களே, உயிர்ப்பின் ஓட்டம் தான் மனித வாழ்வை நிர்ணயிக்கிறது. உயிர்ப்பை அடக்கினால் மனம் அடங்கும். உயிர்ப்பு அடங்காவிட்டால் மனதும் அடங்காது. அதனால் தான் நன்மைகளும் தீமைகளும் உருவாகின்றன. நல்லவர்களும் தீயவர்களும் உருவாகிறார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**761. கருதும் இருபதிற் காணஆ றாகும்**

**கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றாம்**

**கருதும் இருப துடனாறு காணிற்**

**கருதும் இரண்டெனக் காட்டலு மாமே.**

“சிவனடியார்களே, இருபது ஓடினால் அறுவகை நிலைகளும் உண்டாகும். இருபத்தைந்தோடினால் மூவகை நிலைகள் உண்டாகும். இருபத்தாறு ஓடினால் இரண்டு நிலைகள் ஏற்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**762. காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழில்**

**காட்டலு மாகுங் கலந்தெழும் ஒன்றெனக்**

**காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்**

**காட்டலு மாகுங் கலந்தஈ ரைந்தே.**

“சிவனடியார்களே, இருபத்தேழில் கலந்து தோன்றும் ஒருநிலை உண்டாகும். இருபத்தெட்டில் ஏழுநிலைமைகளைக் காணலாம்” என்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

**763. ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்**

**பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்.**

**வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்**

**ஓரஞ்சொ டொன்றொன் றெனவொன்று நாளே.**

“சிவனடியார்களே, இருபத்தொன்பதானால் பத்து நாட்களுக்குள் பகைவரும். முப்பதானான் ஏழு நாட்களுக்குள் பகை ஏற்படும்”.

“சிவனடியார்களே, உயிர்ப்பின் ஓட்டத்தை மூச்சுப்பயிற்சியாலும் சிவ நினைவுடனான அகத் தவத்தாலும் தான் குறைக்கலாம். அது குறைந்தால் எதிரியையும் உற்ற நண்பனாக்கலாம். எமது ஆச்சிரமத்தில் கூலிவேலைகளைச் செய்பவர்கள் சின்னராசாவும் நவரத்தினமும். அவர்கள் சில நாட்களாக வழமைக்கு மாறாக நடந்து கொள்வதைக்கண்ட நான் அதைக்குருவிடம் சொன்னேன். அவர் இருவரையும் அழைத்து நாடி மூலம் உயிர்துடிப்பைக் கணித்தார். அகத்தவம் செய்வோரினதும் மூச்சுப்பயிற்சி செய்வோரினது உயிர்ப்பின் ஓட்டத்தை அடிக்கடி பார்த்தல் வேண்டும். உயிர்ப்பு அதிகமாக ஓடினால் அதைக்குறைப்பதற்கான பயிற்சிகளை வழங்கவேண்டும். சின்னராசாவின் உயிர்ப்போட்டம் இருபத்தொன்பதாக இருந்தது. அதனால் குரு பத்து நாட்களுக்குத் தொடர்ந்து இப்பயிற்சியை மேற்கொள். இல்லாவிட்டால் பெரும்பகை ஒன்ற வந்து சேரும் என்றும்

நவரத்தினத்தின் உயிர்ப்பு ஓட்டத்தைப் பரிசிலித்த குரு அவனது உயிர்ப் போட்டம் முப்பதாக இருந்ததனால் எழுநாட்களுக்கு அவதானமாக இருந்து மூச்சுப் பயிற்சியும் தியானமும் செய்யும்படி கூறினார். அவர்கள் அதைக் கேட்கவில்லை. அவர்கள் இருவரும் சேர்ந்து தோட்டங்களில் திருடுவது வழக்கம். இருவரும் திருடச் சென்றபோது ஊரவர்கள் அவர்களைப் பிடிக்கத்துரத்தினர். சின்னராசா ஓடித்தப்பிவிட்டான். நவரத்தினத்தைப் பிடித்து மரத்தோடு கட்டிய ஊரவர் அவனைத் தாக்கிவிட்டுக் காவல் துறையில் ஒப்படைத்தனர். மூன்றாம் நாள் சின்னராசா அகப்பட்டான்.. காவல்துறையினர் அவனைக் கடுமையாகத் தாக்கினர். உயிர்ப்பின் ஓட்டத்தைப் பொறுத்துத்தான் குணங்கள் அமையும். அதனால் அகத்தவம் செய்யுங்கள் உயிர்ப்புக் குறையும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**764. ஒன்றிய நாள்கள் ஒருமுப்ப தொன்றாகிற்**

**கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகுஞ்**

**சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்**

**மன்றியல் பாகு மனையில் இரண்டே.**

''சிவனடியார்களே, பொருந்திய நாட்களில் முப்பத்தொன்றாகில் கன்றுதல் ஏற்படும். முப்பத்திரண்டு நின்றிடில் இரண்டு நாட்களுள் பொறுமை ஏற்படும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**765. மனையில்ஒன் றாகும் மாதமு மூன்றுஞ்**

**சுனையில்ஒன் றாகத் தொனித்தனன் நந்தி**

**வினையற வோங்கி வெளிசெய்து நின்றால்**

**தனையுற நின்ற தலைவனு மாமே.**

''சிவனடியார்களே, முப்பத்து மூன்றானால் அருளில் ஒன்று படுமென நந்தி அருளினன். தற்செயலற்று அருள் வழி நின்றால் தலைவனைச் சாரும் தனி வழி உண்டாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**766. ஆரு மறியார் அளக்கின்ற வன்னியை**

**ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை**

**ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்**

**ஆரு மறியா அறிவறிந் தேனே.**

“சிவனடியார்களே, அகத்துள்க் காணப்படும் தீயையும் காற்றையும் அளக்கும் முறையையாரும். அறியமாட்டார்கள். அப்பொருட்கள் அழிவன என்பதையும் யாரும் அறியமாட்டார்கள். அடியேன் திருவருளின் துணையால் அவற்றை அறிந்தேன்” என்று திருமூலர் கூறுகிறார். திருவருள்கை கூடினால் அறிய முடியாதவற்றையும் அறிந்து கொள்ளலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**767. அறிவது வாயுவொ டைந்தறி வாய**

**அறிவா வதுதான் உலகுயி ரத்தின்**

**பிரிவுசெ யாவகை பேணியுள் நாடிற்**

**செறிவது நின்று திகழு மதுவே.**

“சிவனடியார்களே, கற்றுடன் கூடிய ஐம்பூதங்களையும் அறிவால் அறிதல் வேண்டும். சிவபெருமானை அகத்தே இருத்திப் பேணி வணங்குதல் வேண்டும். அப்போது அச்சிவன் மனதில் நிறைந்து விளங்குவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**768. அதுவரு ளும்மரு ளான துலகம்**

**பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளும்**

**மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி**

**இதுவருள் செய்யும் இறையவனாமே**

“சிவனடியார்களே, தமது அகத்தில் படிந்த இருள் நீங்குவதற்கு வினைக்கீடாக உயிர்களைப் படைத்தருளும் திருவடிகளைப் புகழ்தேத்துவார்க்குப் பொது நிலை அருளப்படும். தேன் நிறைந்த மலர்களைச் சூடிய இள மங்கையாரின் அனுக்கிரகம் ஏற்படும். இதை அருள்வது இறைவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**769.பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி**

**குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்**

**பழப்பதி யாவது பற்றறும் பாசம்**

**அழப்படி செய்வார்க் ககலு மதியே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் பிறக்க வேண்டுமென்று நந்தி திருவுள்ளம் கொண்டார். அக்குறிப்பினால் மாயாகாரியமாகிய குரம்பையை ஒத்த உடம்பு ஆருயிர்களுக்கு வந்தமைந்தது. இவ்வுடல் தொன்றுதொட்டு வருவது பாசப்பற்றை அறுக்கவே. அதற்குக் கருவியாகவே இவ் உடம்பு வாய்த்தது. பாசப்பற்றுக்களை விலக்கினால் மெய்யுணர்வு உண்டாகும்”.

“சிவனடியார்களே, எல்லோருக்கும் மயாசக்தியான இவ் உடம்பு வந்தமைந்தது வினைகளை அகற்றி இறைவனின் பாதங்களை அடையவே. களவெடுக்கச் சென்ற இடத்தில் அகப்பட்ட சின்னராசாவை மக்கள் கூடி நின்று தாக்கியதை அறிந்த கதிரேசன் அங்கு சென்றார். அவர் சொன்னால் தன்னை விட்டு விடுவார்கள் என்று சின்னராசா நம்பினான் அப்போது கதிரேசன் சென்னார்; “மனிதஉடல் மேலானது. பிறந்திறந்து அல்லற்படும் உயிரை பிறவாது செய்யவே நந்தியெம்பெருமான் உயிர்களைப் பிறப்பிக்க விரும்பினார். அது நிகழவேண்டுமானால் பாசத்தையும் பற்றையும் அகற்ற வேண்டும். அதற்குத் திருவடியுணர்வு உண்டாகுதல் வேண்டும். குரு சொல்லியும் கேளாது வந்தமைக்கான தண்டனையைப் பெற்றுவிட்டாய். உன்னை அடித்தவர்கள் திருவடி உணர்வில்லாதவர்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பாவத்தையே செய்து வினையை அதிகரிக்கின்றனர். உன்னை அவர்கள் தாக்காது காவல்துறையில் ஒப்படைத்திருக்க வேண்டும். அவர்களும் பாசப்பற்றுக்களை அகற்றத்தந்த உடம்பை அலட்சியம் செய்துவிட்டனர்” என்று கூறிவிட்டுச் சென்றார். தன்னை விடுவிப்பார் என்று நினைத்த சின்னராசா மிகுந்த வேதனையடைந்தான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 16. வாரசரம்

**770. வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்**

**ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்**

**வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்**

**தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பின் ஓட்டத்தைச் சரமென்பர். அது வெள்ளி, திங்கள், புதன், கிழமைகளில் இடமூக்கின்வழியாகச் செல்லவேண்டும். சனி, ஞாயிறு செவ்வாய் ஆகிய தினங்களில் வலது மூக்கின் வழியாக ஓடுதல் வேண்டும். வியாழக்கிழமை வளர்பிறையானால் இடமூக்கு வழியாகவும், தேய்பிறை நாளானால் வலமூக்குவழியாகவும் ஓடுதல் வேண்டும்” என்றார் அசுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**771. வெள்ளிவெண் திங்கள் விளங்கும் பதன்மூன்றுந்**

**தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்**

**ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று**

**வள்ளல் நமக்கு மகிழ்துரைத் தானே.**

“சிவனடியார்களே, வெள்ளி, திங்கள், புதன் ஆகிய மூன்று நாட்களிலும் இயல்பாகவே பயிற்சியால் வலமூக்கை விட்டு இடமூக்கின் வழியாக ஓடின் சிறந்த உடம்புக்கு அழிவு வராது என்று சிவபெருமான் அருளியுள்ளார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

772. செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேஎன்னும்

இவ்வாறறிகின்ற யோகி இறைவனே

ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்டு

அவ்வா றறிவார்க்கவ் வானந்த மாமே.

"சிவனடியார்களே, செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் முற்கூறிய முறைப்படி ஒட்டம் அறிபவர் வலமூக்கின் வழியாகச் செலுத்தி அழியாத இன்பத்தை அடைவர்" என்றாபர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

773.மாறி வருமிரு பான்மதி வெய்யவன்

ஏறி இழியும் இடைபிங் கலையிடை

ஊறும் உயிர்நடு வேயுயி ருக்கிரந்

தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே.

"சிவனடியார்களே, திங்கட்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மூச்சின் ஓட்டம் கடக்கவேண்டிய முறைக்கு மாறாக (770) நடந்து ஏறியும், இறங்கியும் நடு நாடியில் புகுவதும் கண்டால் உயிருக்கு ஆபத்து வந்தே தீரும்".

"சிவனடியார்களே, மூச்சானது ஒவ்வொரு நாளும் மேற்சொன்னபடி ஓடுதல் வேண்டும். அதில் மாறுபாடு தோன்றினால் உயிருக்கு ஆபத்து உண்டாகும். தினமும் ஆச்சிரமத்திற்கு வரும் சிவகாமியின் கணவனுக்குத் திடீரென்று தலைசுற்றியது. வியர்த்தது. அதைக்கண்ட சிவகாமி கதிரேசனிடம் சென்றாள். கதிரேசன் வந்து பார்த்தபோது அவருக்கு நிலைமை விளங்கியது. சிவகாமியின் கணவனான பரமசிவன் அரச ஊழியன். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வீட்டில் இருக்கும்போது தான் அச்சம்பவம் நடைபெற்றது. கதிரேசன் சித்த வைத்தியரான சிவராசாவை அழைத்து வரும்படி ஒருவரை அனுப்பச் சிவராசா வந்து பரமசிவத்தின் நாடியைப் பார்த்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை பரமசிவத்தின் மூச்சின் ஓட்டம் கடக்க வேண்டிய முறைக்கு மாறாக நடந்து ஏறியும், இறங்கியும் நடுநாடியிற் புகுவதுமாக இருந்தது. அதைச்சிவராசா கதிரேசனுக்குச் சொல்லக் கதிரேசன் சொன்னார், "அது ஆபத்தானதே...." சிவராசா பதில் கூறாது மருந்தைக் கொடுத்து விட்டு வாசல்வரை சென்றபோது சிவகாமி பெருங்குரலெடுத்துக் கத்தினாள். பரமசிவனின் மூச்சு நின்று விட்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

774. உதித்து வலத்திடம் போகின்ற போது

அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்

**உதித்தது வேமிக வோடிடு மாகில்**

**உதித்த விராசி யுணர்ந்துகொ ளுற்றே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பு அவ்வவ்க் கிழமைக்கேற்றபடி தோன்றி ஓடவேண்டும். அது சிதறி ஓடினால் இறப்பு நேரும். அவ் உயிர்ப்பு அளவில்லாமல் ஓடினால் உடனே இறப்பு நிகழும்’’.

“சிவனடியார்களே, பரமசிவத்தின் சகோதரன் பரமநாதன். சகோதரன் இறந்ததைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்து ஓடிவந்தான். வழியில் வைத்தியர் சிவராசா வந்தார். அவரைக்கண்டதும் அழுதவாறு, “ என்ன நடந்தது’’ என்று கேட்டான். “நாதா இன்று ஞாயிற்றுக்கிழமை. மூச்சின் ஓட்டம் முறைக்குமாறாக ஓடியது. மூச்சு ஓடும்போது மாறி அல்லது சிதறி ஓடினால் உடனே இறப்பு நிகழும். கட்டுப்படுத்த முடியாதளவு அளவில்லாமல் ஓடியதால் இறப்பு உடனே நடந்தது. சிறிது அதிகரித்திருந்தால் கட்டுப் படுத்த இயலாது’’ என்று வைத்தியர் கூறினார்’’ என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**775. நடுவுநில் லாமல் இடம்பலம் ஓடி**

**அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி**

**இடுகின்ற வாறுசென் றின்பணி சேர**

**முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே.**

“சிவனடியார்களே, உயிர்ப்போட்டம் நடுநாடியில் நிற்றல் வேண்டும். அப்படி நில்லாமல் இடம்வலம் ஓடினால் அதனால் இறப்பு நேரும். அவ்வாறு இறப்பினைத்தரும் மூச்சோட்டத்தைச் சிவபெருமானின் திருவடியின் கீழ் நிறுத்தல்வேண்டும். அப்படி நிறுத்தினால் மூலவாற்றல் தோன்றும். திருவருளின் ஒளி உயிருடன் சேர்ந்து விடும்’’.

“சிவனடியார்களே, சிவராசா சொன்னார், “இரண்டு வாரங்களுக்கு முன்பு பரமசிவம் எண்னைச் சந்திக்க வந்தபோது மிகவும் களைப்படைந்திருந்தான். அவனது மூச்சோட்டத்தைக் கணித்துப் பார்த்து அவ்வோட்டத்தில் பிறகு இருக்கிறது. ஆச்சிரமத்திற்கு உடனே வா மூச்சுப் பயிற்சி பற்றி உனக்குக் கூறுகிறேன். அதன்படி நடவென்றேன். அவனுக்கு நான் சொன்னதில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆங்கில வைத்தியரிடம் சென்று மருந்து தீர்வாகாது. அது அந்த நேர நிலையைச் சற்றுக்குறைக்கும். நிரந்தரமான தீர்வு வேண்டுமானால் அகத்தவத்தில் ஈடுபட்டு மூச்சுப் பயிற்சி செய்ய வேண்டும். அப்பயிற்சி மூச்சோட்டத்தைச் சீர் செய்யும். தியானத்தின் மூலம் மனம் அமைதியடையுமானால் மூச்சோட்டம் சீராக இருக்கும். பரமசிவத்தின் அலுவலகத்தில் ஏதோ பிரச்சினை. அது தான் மூச்சோட்டம் மாறுபட்டதற்குக் காரணம். அதை மருந்து தீர்க்காது மூச்சுப்பயிற்சியுள்ளவர்களின் மூச்சோட்டம் இலகுவில் மாறுபாடு அடையாது. அதனால் மரணம் உடனே ஏற்படாது’’ என்று சிவராசா கூறினார்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**776. ஆயும் பொருளும் அணிமலர் மேலது**

**வாயு விதமும் பதினா றுளவலி**

**போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்**

**ஆயுவு நாளு முகுர்த்தமு மாமே.**

“சிவனடியார்களே, அகத்தவத்தோர் ஆராயும் பொருள் முழுமுதற்சிவனேயாவர். அதற்காகச் செய்யும் மூச்சுப் பயிற்சி பதினாறு மாத்திரைகளாகும். மன ஒழுக்கத்தை அருளுபவர் சிவபெருமான். வாழ்நாள்களைக் கூறுபடுத்தி நாள், கிழமை, மாதம், ஆண்டு, முகூர்த்தம் முதலியவற்றிற்குக் காரணமாக இருப்பவருர் சிவபெருமானே”.

“சிவனடியார்களே, அகத்தவம் செய்வோர் சிவனை நினைத்தே செய்கின்றனர். சிவனை அடையப் பயிலும் மூச்சுப்பயிற்சி பதினாறு மாத்திரைகளாகும். மூச்சுப்பயிற்சி செய்வதால் உயிர்ப்புச் சீராக ஓடும். அதில் மாறுபாடு இருக்கமாட்டாது. உயிர்ப்பில் மாறுபாடு ஏற்பட்டால் அதன் ஓட்டத்திற்கு அமைய நோய்கள் ஏற்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 17. வாரசூலம்.

**777. வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்**

**நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்**

**பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்**

**நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே.**

“சிவனடியார்களே, மறைப்பாற்றலின் கைப்படையாகிய சூலம் வரும் வழி இவைகள். திங்கள் கிழமையும் சனிக்கிழமையும் கிழக்குத்திசை. (கீழ்ப்புலம்) செவ்வாயும் புதனும் வடக்காகும். ஞாயிறும் வெள்ளியும் மேற்காகும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**778. தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை**

**அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்**

**துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்**

**மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே.**

“சிவனடியார்களே, வியாழக்கிழமை தென்புலமாகும். எலும்புமாலை சூட்டப்பட்ட முத்தலைவேல் இடப்பக்கத்துக்கும் பின்பக்கத்திற்கும் உறுதுணையாக நிற்பின் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றியைத்தரும். அவ்வேல் வலப்பக்கத்தும் முன்பக்கத்தும் தோன்றுமானால் செய்யும் தொழில்கள் தோல்வியில் முடியும். எடுத்துக் காட்டாக வெள்ளி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய நான்கு நாட்களும் கிழக்கு நோக்கிச்

செல்லலாம். திங்களும் சனியும் வியாழனும் மேற்கு நோக்கிச் செல்லாம்  வியாழனும், வெள்ளியும் ஞாயிறும் வடக்கு நோக்கிச் சொல்லலாம். செவ்வாயும் திங்களும் புதனும் திங்களும் சனியும் தெற்கு நோக்கிச் செல்லல் நன்மையானது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கேசரியோகம்.

**779. கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்**

**அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி**

**விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து**

**நட்ட மிருக்க நமனில்லை தானே.**

''சிவனடியார்களே, இன்ப அமிழ்தாகிய விந்துவை உச்சித்தொளையில் உள்ள குகைக்குள் நிரப்பி வைத்தல் வேண்டும். அது கீழ்நோக்கா ஒழுகி விடாமல் மேல்வாயாகிய அண்ணத்தில் தடுத்து, இடைகலை, பிங்கலை, கழுமுனை, என்னும் மூன்று நாடிகள் கூடுமிடமாகிய அடுப்பில் தடுத்து உண்ணாக்கால் அணைகோலி, விட்டமாகிய புருவ நடுவின் கண்நிறுத்தி கருமூலப்பையான விதையுட்புகாமல் அடைத்து நடு நாடியில் நிற்க வைத்தால் யமன் நெருங்கமாட்டான்''

''சிவனடியார்களே, இன்பத்தைத்தரும் அமிழ்தான விந்துவை ஒழுகவிடாமல் தடுத்து விதைப்பைக்குள் புகவிடாது அடைத்து வைத்திருந்தால் மரணம் நெருங்காது. விதைப்பைக்குள் புகும் விந்து தான் உணர்ச்சி வசப்பட்டதும் வெளியேறும். அது பலவீனத்தைத்தந்து ஆயுளைக் குறைக்கும். அதனால் விந்தை ஒழுக விடல் கூடாது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**780. வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்**

**கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி**

**விண்ணாறு பாயிச்சிக் குளத்தை நிரப்பினால்**

**அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே.**

''சிவனடியார்களே, உயிர்வெளியே செல்லும் சிறந்த வாயில்களாக கண், செவி, மூக்கு, வாய் என்னும் அறியும் கருவிகள் நான்கும் ஒன்று சேரும். அண்ணத்திற்கு மேலிருந்து அமிர்த ஆறு வரும் தொளை கீழ் நோக்கி ஒழுகும் அவ்வொழுக்கு ஆறானால் வீணாகாது உச்சித்தொளையை நா நுனியால் அடைக்க அதை நடுநாடி வழியாகச் செலுத்தி அக்குளத்தில் நிரப்பினால் மேல்நோக்கும் எண்ணம் தோன்றும். அப்படித் தோன்றினால் மருள் மயக்க அழுக்கு அகலும்.''

“சிவனடியார்களே, உயிர் நான் குவழிகளால் வெளியேறும். திருமூலர் பிராணவாயு தான் உயிர் என்கிறார். அத்துடன் ஒன்பது காற்றுக்கள் உடலுள் உள்ளதாகவும் கூறுகிறார். இவ் ஒன்பது காற்றுக்களில் ஏற்படும் மாற்றங்கள் தான் நோய்க்குக் காரணம் என்றும் கூறுகிறார். உயிர் மூச்சான பிராணவாயு தான் மூக்கு வாய் செவி என்ற நான்கு வாயில்களில் ஒன்றால் வெளியேறும். சித்த வைத்தியரான சிவராசா பரமசிவத்தின் உடலைப் பரிசோதித்துவிட்டு உயிர்காதுகளில் உள்ள துவாரம் வழியாக வெளியேறியுள்ளது.” என்று கூறக்கதிரேசன் காதைப் பார்த்தார். அதில் தீரவகம் ஒன்று சுரந்திருந்தது. அதனால் அவர் காதுகளுக்கு இலவம் பஞ்சை வைத்தார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**781. இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்**

**துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்**

**உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்கு**

**இறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே**

“சிவனடியார்களே, இடநாடி, வலநாடி வழியாகக் கீழ் நோக்கும் அமிழ்தினை மாற்றி, உள்நாக்கை வளைத்துத் துதிக்கை போலாக்கி அத் தொளைகளை அடைத்து நடுத்தொளை வழியாக நுகர்வோர்க்கு மரணத்தைப் பற்றிய பயம் உண்டாகாது. நித்திரையைக் குறைத்துக் கொள்பவர்களுக்கும் அவ்வேளையில் சிவபெருமானின் திருவடியை நினைத்துக் கொள்வோருக்கும் இறப்புச் சடுதியாக நேராது”.

“சிவனடியார்களே, உறக்கம் சோம்பலை உண்டாக்கும். அளவுக்கதிகமான உறக்கம் கேட்டை விளைவிக்கும். அளவான உறக்கமே உடலை வலுப்படுத்தும். கதிரேசன் ஒருபோதும் பகலில் உறங்கமாட்டார். பகலில் உறங்கினால் இரத்தம் மாசடையும் என்பார். ஆறுமணித்தியால உறக்கம் நல்ல ஆரோக்கியமான் உடலுக்குப் போதும். சிலர் சிறு சிறு நோய்கள் வந்தவுடன் நித்திரை செய்து உடல் ஆரோக்கியத்தை வளர்க்களமென நினைப்பர். ஆனால் கதிரேசன் சிறு சிறு நோய்கள் வந்தால் அகத்தவம் புரிவார். மூச்சுப்பயிற்சிசெய்வார். அதனால் உடல் ஆரோக்கியம் அடைந்து விட்டதாகக்கூறித் தனது நாளாந்த வேலைகளைச் செய்வார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**782. ஆய்ந்துரை செய்யில் அமுதநின் றூறிடும்**

**வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து**

**நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்**

**பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே.**

“சிவனடியார்களே, செந்தமிழ்த் திருமாமறை முதலியவற்றை ஆராய்ந்தால் அவை நெற்றி அமிழ்வதைப் பற்றிக் கூறியுள்ளதைக் காணலாம். நெற்றியமிழ்ந்து நிலை பெற்றால் செவ்வி வரும். அது வரும் போது மதி மண்டலத்தில் இருந்து திருவடியை நினைக்குமாறும், அவ்வமிழ்வதை விரும்புமாறு கூறுவதுண்டு. அங்ஙனம் கூறுவதே இப் பகுதியின் நோக்கமாகும்.” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**783. நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்**

**சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்**

**மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்**

**சாவதும் இல்லை சதகோடி யூனே**

"சிவனடியார்களே நாக்கின் நுனியால் அண்ண முகட்டில் காணப்படும். உச்சித் தொளையை அடைத்தால் அங்கு உயிருக்குயிறாய் உள்ள சிவன் உறைவார். அகக் கண்ணாகிய திருவருட் கண்ணால் ஆவி முத்தேவரையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் காணும் பாக்கியத்தைப் பெறும். அதனால் உடலுக்கு நூறு கோடி உழியானாலும் அழிவு வராது."

"சிவனாடியார்களே, உடலிலுள்ள உறுப்புக்களில் நாக்குத் தான் ஆக்கத்தையும் அழிவையும் உண்டாக்குகிறது. நாவை அடக்கினால் உலகமே அடங்கும். உடலுக்கும் உயிருக்கும் எவ்வித மனப் பாதிப்பும் ஏற்பட மாட்டாது. நாக்கின் நுனியால் உச்சித் தொளையை அடைப்பவர்கள் ஊழிகள் பல கழிந்த போதும் அழியாமல் இருப்பர். கதிரேசன் நாவை அடக்கியவர். குமாரசாமி நாவை அடக்காதவர். கதிரேசனைக் கண்டால் அனைவரும் கை கூப்பி வணங்குவார்கள். குமாரசாமியைக் கண்டால் பிரச்சினைப்படுவர். ஒருமுறை சிவன் கோவில் திருவிழாவின் போது கலகம் செய்த குமாரசாமிளைய மக்கள் தாக்கிவிட்டு மரத்துடன் கட்டிவைத்தார்கள். அப்போது அவ்வழியாகக் கதிரேசன் வருவதை அறிந்து குமாரசாமியை அவிழ்த்துத் துரத்திவிட்டனர். அங்கு வந்த கதிரேசன் எனக்கு மதிப்புத்தர வேண்டாம். என் நாவுக்கு மதிப்புத் தாருங்கள். நான் சொல்வதைக் கேட்டால் போதும் என்றவர். அதற்குப்பிறகு குமாரசாமியைக் கண்டவுடன் ஊரவர் பாம்பைக் கண்டவர்கள் போல மறைந்து விடுவார்கள். அது குமாரசாமிக்குப் பெரு மகிழ்வைக் கொடுத்தது. அதனால் அவன் வாய்க்கு வந்தபடி கதைத்த போதும் ஊரவர் விலகிச் சென்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**784. ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்**

**வானூறல் பாயும் வகையறி வாரில்லை**

**வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்**

**தேனூறல் உண்டு தெளியலு மாமே.**

"சிவனடியார்களே, உயர்ந்த இடமான நெற்றியின் நடுவில் உடலமிழ்து ஒழுகும். இவ் அமிழ்து தாசன் விந்து. இதனைக் கீழ் நோக்கிச் செல்லவிடாமல் மூச்சுப் பயிற்சியால் உச்சித் தொளைக்கு ஏற்றினால் அது வானமிழ்தாகும். உச்சி உயர்ந்த இடமாதலால் வான் என அழைக்கப்படுகிறது. திருவருளால் இந்நிலையை அடைபவர்களுக்கு தேனுறவாகிய திருவடி இன்பம் உண்டாகும். திருவடி உணர்வாகிய தெளிவும் உண்டாகும்".

"சிவனடியார்களே, ரவீந்திரன் நல்ல அறிவாளி. பட்டதாரி. சொத்துக்கள் உள்ளவன். குணசாலி. இவற்றால் ஊரில் உள்ள பெரும் தனவந்தார்கள் அவனைத் தமது பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர். ஆனால் ரவீந்திரன் விரும்பவில்லை. ரவீந்திரனது உயிர் நண்பன் பகீரதன். பகீரதனுடன் ரவீந்திரன் அவனது வீட்டுக்குச் செல்வது வழக்கம். பகீரதனின் சகோதரி வாணி. நல்ல அழகி. அவளுக்கு ரவீந்திரன் மீது

திவிரமான காதல் உண்டானது. எப்படிச் சொல்லியும் ரவீந்திரனால் அதைப்புரிந்து கொள்ளமுடியவில்லை. அன்று ரவீந்திரன் பகீரதனது வீட்டிற்கு வந்த போது வாணி மட்டுமே இருந்தாள். அவள் அவனைக் கண்டதும் மெய்மறந்து போனாள். செய்வது என்னவென்று தெரியாத நிலை. அதனால் அவள் ரவீந்திரனைக் கட்டியணைத்தாள். ரவீந்திரன் திகைத்துத் திகிலடைந்து போனான். அவனது உடல் கல்லானது. எந்தவித உணர்வும் ஏற்படவில்லை. வாணி எதையோவெல்லாம் செய்து பார்த்தாள். ஒரு பொம்மையைத் தழுவிய நிலை தான் அவளுக்குண்டானது. அதனால் அவள் அவனது உடலைத் தழுவியிருந்த கைகளை எடுத்தாள். ரவீந்திரன் சென்று விட்டான். பின்பலமுறை அவன் வந்த போதும் வாணிக்குச் சலபம் ஏற்படவில்லை. அதற்குக் காரணம், அவன் விந்தை உச்சித் தொளைக்கு அனுப்பியதே'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**785. மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்**

**காலனும் இல்லை கதவுந் திறந்திடும்**

**ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்**

**பாலனு மாவான் பராநந்தி ஆணையே**

''சிவனடியார்களே, மேல்வாயின் உள்ளே காணப்படும் அண்ணாக்காகிய உள் நாக்கில் இரு மூக்கு வழியாகவும் வரும் பிராண வாயுவை வேகமாகச் செல்லும்படி மூச்சுப் பயிற்சி செய்தால், செய்வார்க்கு இறப்பில்லை. அவர்களுக்கு நரைதிரை ஏற்படாது. பயிற்சிக்கு முன் இருந்தாலும் அது பயிற்சியின் பின் மாறிவிடும். இது சிவனது கட்டளையாகும்''

''சிவனடியார்களே, இரு மூக்குத் துவாரங்களினூடாக உள்ளே செல்லுங் காற்றை வேகமாகச் செல்ல வைக்க மூச்சுப்பயிற்சியாளர்களால் முடியும். அவர்களுக்கு நரைதிரை மூப்பு என்பன ஏற்படாது. அது உண்மையானது. ஏனென்றால் அது சிவனின் கட்டளை. கதிரேசனைப் பாருங்கள். அவரது தலைமுடி ஒன்று கூட நரைத்ததில்லை. குமாரசாமியின் மகனுக்கு இருபது வயது ஒருமுடி கூடக் கறுப்பாக இல்லை. மூச்சுப்பயிற்சி செய்வோர்க்குச் சிவனின் அருளால் துன்பங்கள் வருவதில்லை தான் உடலைப் பலவீனப்படுத்துகின்றன. அதனால் உடலில் உள்ள காற்றுத் திரிபடைகிறது. அத்திரிபு பலவீனத்தைக் கொடுக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**786. நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்**

**சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்**

**பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்**

**சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே**

''சிவனடியார்களே, சிவன் என்ற ஆசான் காட்டியவாறு உள் நாக்கினை மேலே ஏற்றி அடைத்தால் நெடுநாள் உலகினில் வாழலாம். வலது மூக்கின் வழியாக வரும் உயிர்ப்பு நெற்றி அமிழ்து முடிவடையாதபடி தடுத்து வைக்கும். அத்தடை நீங்கி வெளியாகும்படி இடையறாது. மூச்சுப்பயிற்சி செய்வோருக்கு வாழ்நாள் அதிகரிக்கும். இப்பயிற்சி செய்யாதவர்கள் பிறவிகள் தோறும் துன்பப்படுவர்''.

“சிவனடியார்களே, மூச்சுப்பயிற்சி உடலை ஆரோக்கியமாக்கி வாழ்நாள் முழுவதும் நோய்களின் துன்பமில்லாமல் வாழவைக்கும்.’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**787. தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்**

**நாவினை நாடின் நமனுக் கிடமில்லை**

**பாவினை நாடிப் பயனறக் கண்டவர்**

**தேவினை யாடிய தீங்கரும் பாமே.**

“சிவனடியார்களே, பாவச் செயல்களைச் செய்தமையால் பிறப்புக்கும் இறப்புக்கும் ஆளாகித் துன்பப்படுவோர், நாவின் நுனியால் உண்ணாக்கில் உள்ள தொளையை அடைக்கும் பயிற்சியான கேசரியோகப் பயிற்சியைச் செய்து வந்தால் நெடுநாள் வாழலாம். அவர்களை நாடியமன் வர மாட்டான். திருமுறைகளை முறைப்படி ஓதிச் சிவ நினைவுடன் வாழ்பவர் சிவனுடன் கூடிப் பேரின்பமடைவர்.’’

“சிவனடியார்களே, வெளிநாட்டில் இருந்து வந்த தொண்டு நிறுவனத்தினர் சிலர் கதிரேசனைச் சந்தித்த போது கேட்டனர். “இளைஞர்களைப் போலச் சுறுசுறுப்பாக இருக்கிறீர்கள். உங்களுக்கு எத்தனை வயது கதிரேசன் சொன்னார், “எனக்கு எண்பது வயது’’ அவர்கள் ஆச்சரியப்பட்டனர்’’ உங்கள் இளமைக்குக் காரணம் என்ன’’ என்று கேட்டதற்கு அவர் சொன்னார், “அகத்தவமும், மூச்சுப்பயிற்சியும் தான் என்று சொல்லி அவற்றைச் செய்யும் முறைகளையும் சொல்லிக் கொடுத்தவர். அவர்கள் இரண்டு வருடங்கள் கழிந்த பின்பு வந்தபோதும் கதிரேசன் முன்பிருந்தபடியே இருந்தார். என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**788. தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்**

**ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்**

**கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட**

**ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே.**

“சிவனடியார்களே, வெறுக்கத்தக்க இவ்வுடம்பை விரும்பத்தக்க உடம்பாக்க விரும்புவோர் கேசரி யோகப் பயிற்சி செய்தல் வேண்டும். இதற்கு நாவின் நுனியை மேல்நோக்கிக் குவித்துக் குண்டலியின் வளைவை நேராக்குதல் வேண்டும். அப்படிச் செய்தால் உடல் கரும்பு போன்று இனிமை உடையதாகி மதிமண்டல அமிழ்தை உண்ணக்கூடிய நிலையுண்டாகும்’’

“சிவனடியார்களே, இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் வந்த வெளிநாட்டவர் கதிரேசன் முன்பைவிட இளமையாகவும் உற்சாகமாகவும் இருப்பதைக் கண்டு வியப்படையவில்லை. ஏனென்றால் அவர்களும் மூச்சுப் பயிற்சி செய்து வருகின்றனர். அவர்களுக்குக் கதிரேசன் கேசரி யோகப் பயிற்சியைச் சொல்லிக் கொடுத்தார்.. அவர்கள் மூச்சுப்பயிற்சியின் மகிமையை வெகுநேரம் புகழ்ந்தனர்’’. என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**789. ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்**

**தேனீர் பருகிச் சிவாய நமவென்று**

**கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்**

**வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே**

"சிவனடியார்களே, மதிமண்டலத்தின் அமிழ்தாகிய ஊனீர் வழியாக உண்ணாக்கை மேலே செலுத்தி அதனால் வரும் திருவருளை அனுபவித்து "சிவயநம" என்னும் ஐந்தெழுத்தை ஓதினால் உச்சித் தொளை அமிர்தமான பேரின்பம் வரும் வழியைத் திருவருள் அமைத்துத் தரும். இது தான் பரவெளிப் பேரின்பம் வரும் வழி" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**790. வாய்த்தறிந்த துள்ளே வழிபாடு செய்தவர்**

**காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்**

**பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்**

**கூய்ந்தறிந் துள்ளுறை கோயிலு மாமே.**

"சிவனடியார்களே, முன் சொன்னபடி அகத்தவம் சொய்பவர்களுக்குச் சிவபெருமான் அவர்களது அறியாமையைப் போக்குவார். அவர்கள் திருவடியுணர்வில் அடங்கி அவ்வடிவாகவே நிற்கத் திருவருள் புரிவார். அத்திருவடி உணர்வில் நிறைந்து சிவனை உணர்ந்து கேசரியோக அடையாளமான தடையினை அமைத்து, அதனால் மலங்களை அகற்றித் திருவடிநினைவுடன் இருப்பவர்கள் சிவனது திருக்கோவிலாவர்"

"கேசரியோகப் பயிற்சியினால் மலங்கள் யாவும் அகலும் இந் நிலையில் சிவ நினைவுடன் இருப்பவர்களது உள்ளம் சிவனது கோவிலாகும். என்று எனது குரு சொல்வார். என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**791. கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்**

**தாயினும் நல்லார் தரணி முழுதுக்குங்**

**காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்**

**தீயினும் தீயரத் தீவினை யாளர்க்கே.**

"சிவனடியார்களே, உள்ளக் கோவிலில் சிவபெருமானைக் குடியிருத்தி வாழ்பவர் எல்லா உலகத்தினருக்கும் தாயைப் போன்றவராவார். நோய்க்கு மருந்து போலத் தீவினையாளருக்கு திருவருள் என்ற மருந்தைக் கொடுப்பவராவர். சிலர் சினத்தாலும் சினத்தவரை நல்வழிப்படுத்தி நன்மை செய்வாராவர். தீவினைகளை எரிப்பதில் தீயிலும் கொடியவராவர்"

"சிவனடியார்களே, கதிரேசனது வாழ்வை நாம் பார்ப்போமயானால் அவர் தினமும் சிவபூசை செய்வதால் தீயகுணங்கள் யாவற்றையும் அகற்றியவர். தாயைப் போல உதவிகள் செய்பவர். தீயவர்கள் தீமை செய்தாலும் அதைப் பொறுத்து அவர்களுக்கு நன்மை செய்பவர். குமாரசாமி தீயவற்றை அஞ்சாது செய்பவன்.

அவன் சிவன் கோவிலில் எப்போதும் முரண்படுவான். கொடியேற்றத்திருவிழாவைச் செய்பவன் குமாரசாமி. அவன் பூசைக்குரிய பொருட்களை ஒழுங்காகக் கொடுக்க மாட்டான். அதனால் கதிரேசன் பூசைக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் கொடியேறு முன்கொடுத்து விடுவார். அது யாருக்கும் தெரியாது. குருக்களுக்கு விலை குறைந்த வேட்டி சால்வை எடுத்துக் கொடுப்பான். சிவனுக்குச் சார்த்தும் பட்டையும் நல்லதாகக் கொடான். அவனிடம் வேலை செய்வோர்க்குக் கூலி கொடான். நாகராசா குமாரசாமியின் தோப்பில் வேலை செய்பவன். அவனுக்குக் கூலி கொடுப்பதில்லை. தேங்காய் கொடுப்பான். அவை கழிக்கப்பட்ட சிறிய தேங்காய்கள். இதை நாகராசா கதிரேசனுக்குச் சொன்னான். கதிரேசன் குமாரசாமியின் தோட்டத்திற்கு ஒரு தேங்காய் வியாபாரியுடன் சென்று குமாரசாமிக்கு முன்னால் கூலிக்காரனுக்குப் பெறுமதியான தேங்காய்களை உரித்து வியாபாரியிடம் கொடுத்து விட்டுப் பணத்தை நாகராசாவிடம் கொடுக்கச் சொன்னார். அப்படித் தினமும் செய்யச் சொன்னார். கதிரேசன் பேச்சை யாரும் தட்ட மாட்டார்கள். அதனால் தினமம் நாகராசாசா தனது கூலியைப் பெற்றான். கதிரேசன் தீமைகளைப் பார்த்துக் கொண்டிரார். அதை எரிப்பதில் தீயிலும் பார்க்க அவர் கொடுமையானவர்'' என்றார் சுந்தர5ர்த்தி சுவாமிகள்.

**792. தீவினை யாளர் தஞ் சென்னியி னுள்ளவன்**

**பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்**

**பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்**

**மாவினை யாளர் மதியிலுள் ளானே.**

''சிவனடியார்களே, பூவால் அர்ச்சிக்கும் சிவனடியார்களுக்குச் அவர் வாழ்கின்ற திருவாரூராய் இருப்பர். தீயை வளர்த்துச் சிவபூசை செய்வோர்க்கு அவர்கள் வழிபடும் அருவுருவமாகத்திகழ்வர். திருமுறைகளை இராகத்துடன் பாடி வழிபடுபவர்களுக்கு அவர்களது மதிமண்டலத்தில் உணர்வுக்குள் உணர்வாய்த் தோன்றுவர். அகத்தவம் செய்வோர்க்கு புத்திக்குள் தோன்றுவர்''.

''சிவனடியார்களே, சிவனைப் பூவால் அர்ச்சிக்கலாம். தீப தூபம் காட்டி வழிபடலாம். திருமுறைகளைப் பாடி வழிபடலாம். யோக முறையாலும் வழிபடலாம். எவ்வாறு வழிபட்டாலும் அவர் புத்திக் குள்த் தோன்றித் துன்பங்கள் வராது காப்பார். கதிரேசன் குமாரசாமியிடம் செல்லுமுன் சிவனைப் பூக்களால் அர்ச்சித்தார். திருமுறைகளைப் பண்ணுடன் பாடிவிட்டுத் தான் சென்றார். அவர் எப்படிச் சென்றார். என்ன செய்தார் என்பது அவருக்குத் தெரியாது. அவர் வீட்டுக்கு வந்தபின், ''நல்லபாடம் கற்பித்தீர்கள்'' என்ற சொன்ன போது அவர் சொன்னார், ''பலர் அப்படித் தான் சொல்கிறீர்கள். நான் எதுவம் செய்யவில்லை. எனது புத்திக்குள் வந்த சிவனே அதைச் செய்தவர்'' என்றவர் சந்தரமூர்த்தி சவாமிகள்.

**793. மதியி னெழுங்கதிர் போலப் பதினாறாய்ப்**

**பதிமனை நூறுநூற் றிருபத்து நாலாய்க்**

**கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி**

**எதிர்மலை யாமல் இருந்தனன் தானே.**

“சிவனடியார்களே, அகத்தவம் செய்வோரது உடம்பினுள்ளே திங்களின் கலைக் கதிகள் பதினாறு இருக்கும். அது போல் பதினாறு இதழ்கள் உள்ள மிடற்றிடம் மனையொக்கம். மூலம் கொப்பூழ் , மேல்வயிறு நெஞ்சு வரையுள்ள ஞாயிறு தீ இவற்றின் கதிர்கள் இருநூற்று இருபத்துநான்காகும். இவை ஊரொக்கு புருவ நடுவில் காணப்படும். அருள்க்கதிர்கள் அளவில் அவற்றைப் பரப்பி ஆவி மயங்காவண்ணம் ஆண்டவன் இருந்தனன். அதனால் ஆவியும் மயங்காதிருந்தது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**794. இருந்தனள் சத்தியு மக்கலை சூழ**

**இருந்தனள் கன்னியு மந்நடு வாக**

**இருந்தனள் மானேர் முகநில வார**

**இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே.**

“சிவனடியார்களே, சக்தியும் கன்னியுமாகிய திருவருள் அருட்கதிர்கள் சூழும் இடத்தில் நடுவாக இருந்தனர். மான் போல் விழிகளும், மதிபோல் திருமுகமும் உள்ள திருவருள் அருளமுதம் பொழிந்து இருந்தனள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**795. பொழிந்த இருவெள்ளி பொன்மண் ணடையில்**

**வழிந்துள் ளிருந்தது வான்முத லங்கும்**

**கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்**

**கொழுந்தது வாகுங் குணமது தானே**

“சிவனடியார்களே, திருவருளால் பொலிந்து விளங்கும் வெண் நிறமான அமிழ்து பொன் நிறமான மண்போல மூலத்தில் சேர்ந்தால், அங்கு பெருகி வழிந்து உடம்பெங்கும் நிறைந்திருந்து உறுதிதரும் வான் முதலான ஐம்பூதங்களின் கூட்டாகிய உடம்பில் கழிவு ஏற்படாது. அப்படிக் காக்க வல்லார்க்கு உடம்பு கொழுந்து போல என்றும் பொலிவுடன் இருக்கும். இதுவே கைக்கொள்ளத்தக்க உயர்ந்த நிலை யாரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**796. குணமது வாகிய கோமள வல்லி**

**மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்**

**தனமது வாகிய தத்துவ ஞானம்**

**இனமது வாக இருந்தனன் தானே**

“சிவனடியார்களே, இறைவனோடும் இறைவியோடும் மனம் கலந்திருந்தால் உயிருக்குப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க எழுந்தருளுவான்”.

“சிவனடியார்களே, மனம் எவ்வேளையிலும் பரபரத்துக் கொண்டே இருக்கும். அதன் வேகம் எண்ணத்தைப் பொறுத்தது. கோவிலுக்குச் செல்லவேண்டும் என்று நினைக்கின்ற வேகத்தில் அது தேவருலகத்திற்கும் சென்று வந்து விடும். எதைக்கண்டாலும் ஆசைப்படும். ஒருநாள் ஒரு அடியவர் வந்து சொன்னார், “கதிரேசன் எனது இனத்தவர். அவர் தியானத்தில் இருந்தால் வெளியே குண்டு போட்டாலும் கேளாது. ஆனால் என்னால் அமைதியாகவோ நிம்மதியாகவோ ஒரு நிமிடம் தியானத்தில் ஈடுபட முடியவில்லை. மனதை அடக்குவது எப்படி?” என்று கேட்டார். அவருக்கு ஒரு மனைவி இருந்தாள். ஓர் ஆசை நாயகியும் இருந்தாள். அவர்களுடன் பிரச்சினைப்பட அவரால் முடியவில்லை. நான் சொன்னேன், “ஆசைகளைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் மனைவியை மட்டும் நேசியுங்கள். வேறு எண்ணங்களை மனதில் உருவாக்காதீர்கள். இறைவனையும் இறைவியையும் கதிரேசனைப்போலப் பிரார்த்தியுங்கள். அப்படிப் பிரார்த்தித்தால் இறைவனும் இறைவியும் உங்கள் மனத்தில் குடியேறுவார்கள். அவர்கள் மனதில் தீயஎண்ணங்கள் உருவாக விடமாட்டார்கள் என்று கூறினேன்”. என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**797. இருந்த பிராணும் உள்ளே எழுமாம்**

**பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய**

**விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்**

**மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே.**

“சிவனடியார்களே, மூலத்தில் இருந்த உயிர்ப்பான பிராணன் நடு நாடியினுள் மேலெழும். அப்படி எழுந்து ஆயிரம் இதழ்தாமரையான பரவெளியில் செல்ல எண்ணும். அவ்வாறு செலுத்தி பூவுடன் பொருந்த வைத்தால் மதிமண்டலம் மலரும். அதன் காரணமாக நெடுநாள் உலகில் வாழலாம்”

“சிவனடியார்களே, அந்த அடியவர் சொன்னார், “சுவாமி. எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. ஒருநாள்க் கழிவது ஒருயுகம் போல இருக்கிறது. இதை விலக்குவது எப்படி...?”,

“அடியவரே, ஒவ்வொருவரும் தேவையில்லாத சிந்தனைகளுக்குட்பட்டுச் சிவனை மறக்கிறார்கள். உயர்ந்தவர்கள் அகத்தவம் செய்து மூச்சுப் பயிற்சிமூலம், மூலத்தில் இருக்கும். உயிர்ப்பை நடுநாடிக்குக் கொண்டு சென்று பரவெளிக்கு அதைச் செலுத்தி மதிமண்டலத்தை மலரச் செய்கிறார்கள். அதனால் தான் தான் அவர்கள் மகிழ்வுடன் நெடுநாள் வாழ்கிறார்கள். கதிரேசனின் மகிழ்வான வாழ்வுக்கு அது தான் காரணம். அவரைப் போல அகத்தவம் செய். மூச்சுப் பயிற்சியை எடு. என்று சொன்னேன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**798. மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்**

**கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்**

**பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்**

**குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே**

“சிவனடியார்களே, தீமண்டலமாகிய மூலத்தில் உயிர்ப்பு ஒட்டியாணக்கட்டு என்னும் உண்மையினை ஆசான் அறிவிக்கும் முத்திரை வழியாக உள்ளே கண்டு கீழ்ப்பகுதியினை அடைத்தல் வேண்டும். (மூலத்துவாரத்தை) அப்படி அடைந்தால் மேல் வீடாகிய பரவெளிக்குள்ளே அருள் ஒளி தோன்றும். தோன்றினால் சிவபெருமான் அவ் ஆவிக்கு அருட்காப்பு அருள்வான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**799. ஒழிகின்ற வாயுவுங் உள்ளே அமருங்**

**கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்**

**வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்**

**பழகின்ற காலத்துப் பையகற் றீரே.**

“சிவனடியார்களே, வெளியே செல்லும் உயிர்ப்பு செல்லாது அகத்தே தங்கினால், அவ் உயிர்ப்புச் செல்லாமையால் வீணாக வாணாள் உறுப்பாகிய உயிர்ப்பினைக் காக்கும். மதியமிழ்தம் மூலத்திடத்து வழியாமல் நடு நாடியின் உள்ளேயுள்ள துளையினூடாகச் சென்றால், பயிற்சியில்லாது பழிக்கப்படுகின்ற குண்டலினிப்பாம் பின் படத்தினை அடைதல் கூடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**800. பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின்**

**மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்**

**கையினுள் வாயுவுக் கதித்தங் கெழுந்திடின்**

**மையணி கோயில் மணிவிளக் காமே.**

“சிவனடியார்களே, பையாகிய உடம்பினுள்ளே படி என்னும் நிலமெய்க்குரிய முத்திரையாகிய கதவினால் அடைத்தால் உடம்பினுள் நன்றாக விளங்கும் ஒளியுடையதாகிய உயிர்ப்பு தன் வசமாகும். அவ் உயிர்ப்பு ஒலித்துக் கொண்டு மேலெழும். மேலெழுந்தால் அருள் மழையாகப் பொழியும். பரவெளிக் கோவிலின் செம்மணி விளக்கமாகிய இறைவன் காணப்படுவன்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**801. விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி**

**நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே**

**வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்**

**சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே.**

"சிவனடியார்களே, கழுத்திலும், கொப்பூழிலும் விளங்குகின்ற உயிர்ப்பை மேல்நோக்கி எழுப்புவதற்குக் கழுகுத்தினைச் சுழுக்குவதாகிய சாலத்திரை முத்திரை ஒட்டியாப் பிணிப்பு முத்திரைகளை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு ஆக்கினால் சாலத்திரையால் மெய்யமிழ்ந்து கீழ் வழியாது தடைப்படும். ஓட்டியாணப் பிணிப்பால் உயிர்ப்பு அடங்கும். இந்நிலை ஏற்பட்டால் நெற்றி மண்டிலம் வாய்த்து அமிழ்தம் நிறையும். நிறைந்து வாட்டிடுதலால் நிலை பெற்று நிற்கும்". என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**802. சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்**

**சொல்லலு மாகு மண்ணீர்க் கடினமுஞ்**

**சொல்லலு மாகும் இவையஞ்சுங் கூடிடிற்**

**சொல்லலு மாந்தூர தெரிசனந் தானே.**

"சிவனடியார்களே, உடலில் உள்ள ஐம்பூதங்களும் அகத்தே ஒருமுகப்பட்டுச் சோர்ந்தால் உயிர்ப்பு கைக்கடக்கமாகும். உயிர்பான பிராணவாயு வயப்பட்டால் பரவெளியில் அமர்ந்திருக்கும் சிவனை அருட் கண்ணால் கண்டு வணங்கலாம்".

"சிவனடியார்களே, ஒருமுறை குருவைக் கங்காதரன் என்ற சிவனடியான் கேட்டார். "குருவே தாங்கள் ஒவ்வொரு நாளும் உபதேசம் செய்யும் போது சிவபெருமானைக் காணலாம் என்கிறீர்கள். நீங்கள் கண்டீர்களா? நாம் எப்படிகாண்பது. அவர் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான். அதற்குக்குரு சொன்னார், " அடியவரே எமது உடல் ஐம்பூதங்களினால் ஆனது. அவை ஒவ்வொன்றும் மனம் அடங்காததால் பிளவு பட்டிருக்கும். மனதில் எழும் எண்ணங்கள் உடலைத் தன்வயப்படுத்தித் தாம் நினைத்தவற்றைச் செய்விக்கும். மனம் அடங்காததால் பிளவுபட்டிருக்கும். மனதில் எழும் எண்ணங்கள் உடலைத் தன்வயப்படுத்தித் தாம் நினைத்தவற்றைச் செய்விக்கும். மனம் அடங்கினால் உடல் அடங்கும். உடலில் உள்ள ஐம்பூதங்களும் ஒடுங்கும். உயிர்பான பிராண வாயு கைக்கடக்கமாகும். அப்படியான நிலை ஏற்பட்டால் பரவெளியில் அமர்ந்திருக்கும் சிவனை அகக்கண்ணால் பார்க்கலாம். இதற்கு மூச்சுப் பயிற்சி எடுத்தல்வேண்டும். அப்பயிற்சியால் தான் ஐம்பூதங்களும் ஒரு முகப்படும் என்று கூறினார் என்றார். சுந்தரமூரத்தி சுவாமிகள்.

**803. தூர தெரிசனஞ் சொல்லுவன் காணலாங்**

**காராருங் கண்ணி கடைஞான முட்பெய்திட்டு**

**ஏராருந் தீபத் தொழிற்சிந்தை வைத்திடிற்**

**பாரா ருலகம் பகன்முன்ன தாமே.**

"சிவனடியார்களே, பரவெளி வணக்கமான கும்பிடுதலைச் சொல்லப்புகின் மழைக்கண்போல திருகண்களை உடைய திருவருளால் முடிஞானம் எனப்படும் ஞானத்தின் ஞானம் எனப்படும். ஞானத்தின் ஞானம் ஏற்படும். திருவடியுணர்வை உணர்விற் கொண்டால் , அவ்வுணர்வு உள்ளத்தில் ஒளி வடிவாகும். அத் தன்மையானவர்களுக்கு உலகமும் உலகியல் இன்பங்களும் பகலில் காணப்படும்".

“சிவனடியார்களே, பரவெளியில் ஒளியாய்த் திகழும் சிவனைச் சாதாரணமாகக் கும்பிட்டால் அவர் உங்கள் உள்ளத்தில் ஒளியாகத் தோன்றுவார். இதை ஆச்சிரமத்திற்கு வரும் பலர் சொல்லக்கேட்டுள்ளேன். ரவீந்திரன் ஆசிரியரின் மாணவர்கள் பலர் அவருடன் ஆச்சிரமத்திற்கு வருவார்கள். திவாகரன் என்ற மாணவன் குறும்புகள் செய்பவன். அதனால் ரவீந்திரன் அவனைக் கண்டிப்பார். நான் அவனிடம் சொன்னேன் நீ தியானம் செய்ய வேண்டாம். அகத்தவமும் வேண்டாம். பஞ்சாட்சரத்தை ஓதிச் சிலகணங்கள் சிவனை வணங்கு என்றேன். சிலநாட்கள் வணங்கிய அவன் படிப்படியாகக் குறும்புத்தனத்தை விட்டு விட்டான். அதன்பின் சிவன் தரதர மனதில் ஒளிவட்டத்துள்த் தென்படுகிறார் என்று சொன்னான். பின் சொன்னான் இரவில் தான் காணும் பொருட்கள் தெளிவாகத் தெரிகின்றன. பரமசிவம் மாமாவின் உடலில் இருந்து அவர் இறந்தன்று இரவு ஓர் ஒளிவெளிப்பட்டுப் போனதைக் கண்டேன் என்றான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**804.முன்னெழு நாபிக்கு முந்நால் விரற்கீலே**

**பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்**

**நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்**

**தன்னெழு கோயில் தலைவனு மாமே**

“சிவனடியார்களே, கொப்பூழின் கீழ்ப் பன்னிரண்டு விரல் அளவினதான மூலத்திடத்து மறைகள் முதலில் ஓதும் ஓ மொழியுண்டாம். அப்போது நெஞ்சில் ஒளிச்சுடர் தோன்றும். அப்போது ஐந்தெழுத்தாகிய நமசிவயவை ஓதுதல் வேண்டும். ஒப்புவித்தால் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலாக அவ்வுடல் அமையும். அதுவே கேசரி யோகத்தின் பயனாகும்.”

“சிவனடியார்களே, சிவன்ஓர் உயிரை ஆட்கொண்டு அவனது உள்ளத்தில் குடியேற வயது தேவையில்லை. திருஞான சம்பந்தரின் உள்ளத்தில் மூன்று வயதில் கோவில் கொண்டார். அதுபோலத் திவாகரனின் இதயத்தில் பத்து வயதில் கோவில் கொண்டருளினார். இதுமுன்வினைப் பயனாகும். சிவநாதன் என்றொரு அடியவர் மிகவும் ஏழை. அவர் விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்லும் போதெல்லாம் அதிட்டலாபச் சீட்டொன்றை வாங்குவார். ஆனால் பரிசு கிடைப்பதில்லை. அன்று சந்தைக்குச் செல்லும்போது அவரது ஆறுவயது மகள் அபிராமி அவருடன் சந்தைக்கு வரப்போவதாக அடம்பிடித்தாள். அதனால் அவளை அழைத்துச் சென்றார். வழமைபோல அதிட்ட லாபச்சீட்டை வாங்கவிரும்பிய அவர் அன்று பணத்தை அபிராமியிடம் கொடுத்து வாங்குவித்தார். அடுத்தவாரம் அவள் எடுத்த சீட்டுக்கு முதல் பரிசு கிடைத்தது. அது போன்றது தான் சிவனின் செயலும் அதனால் திவாகரனைப் பஞ்சாட்சர மந்திரமான ‘நமசிவய’ என்பதை ஓதும்படி கூறினேன். இப்போது அவன் அடியவர்களுக்குச் சிவனைப்பற்றி உபதேசம் செய்கிறான். சிறுவன் என ஒதுக்காது மக்கள் அவனது பிரசாங்கத்தைக் கேட்கிறார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 19. பரியங்கயோகம்

**805. பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய**

**வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்**

**காயக் குழலி கலவி யொடுங்கலந்து**

**ஊசித் துளையுறத் தூங்காது போகமே.**

"சிவனடியார்களே, அகத்தவமாகிய யோகப்பயிற்சியைக் கைவிட்டு இன்பத்துறையாகிய போகத்தை அனுபவிக்கச் சென்றால் அது நிறைவு பெறமாட்டாது. மனதை மாற்றும் பெண்கள் மனதைக் கலைக்கும் தன்மையான பெண்கள் வயது சென்றாலும் கூந்தலுக்குக் கருமையான பூச்சுக்களைப் பூசி, வாசனைத் திரவியங்களையிட்டு. இனிய மொழிபேசி ஆண்களைக் கவர்வர். அப் பெண்களைக் காண்போரின் உள்ளம் அவளின் நினைவால் அல்லற்படும் அதனால் ஏற்படும் இன்பம் ஊசியின் தொளை போன்று மிகச் சிறியதாகும். ஆனாலும் வெறுப்பு ஏற்படாமல் மயக்கும்"

"சிவனடியார்களே, தமது கவர்ச்சியைக் காட்டி மயக்கும் பெண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களது நடை உடை பாவனையாவும் கண்டவர்களை மயக்கும். எமது ஆச்சிரமத்திற்குச் சிவலிங்கம் என்றொரு சிவனடியார் வருவார். அது போல மாலதி என்றொரு பெண்ணும் வருவார்கள். அவளது எண்ண் சிவலிங்கம் மீது இருந்தது. சிவலிங்கம் அதை உணர்ந்து கொண்டதால் அவளது வீட்டுக்குச் சென்றார். அவள் தடல்புடலாக அவரை வரவேற்றாள். சில நாட்கள் செல்ல வேறு சிலரும் அங்குவந்து சென்றனர். அவர்கள் எதற்காக வருகின்றனர் என்று தெரிந்தும் அவரால் அவளை மறக்கமுடியவில்லை. அதனால் ஏராளமான துன்பங்கள் வந்தும் அவர் திருத்தவில்லை. அது அவரது குடும்பத்தையும் அகத் தவத்தையும் பெரிதாகப் பாதித்தது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**806. போகத்தை யுன்னவே போகாது வாயுவு**

**மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தில்**

**சூதொத்த மென்முலை யாளுநற் சூதனுந்**

**தாதிற் குழைந்து தலைகண்ட வாறே.**

"சிவனடியார்களே, இன்பத்தைதரும் பெண்களை நினைத்தால் உயிர்ப்பு நடுநாடி வழியாகச் செல்லாது. பெண்ணின் வேட்கையால் வெற்றியாகிய விந்து வியாழமாகிய நாதத்தில் மீளும். சூதுக்காயை ஒத்த மென்மையான முலைகளை உடையவளும், நன்மைக்குரிய ஆடவனும் கூடி நாத விந்துக்களின் குழைவால் இன்பம் அனுபவித்தல் முறையாகும்"

"சிவனடியார்களே, ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் முறைப்படி கூடி இன்பம் அனுபவிப்பதே முறையாகும். ஓர் ஆடவன் பெண்ணை நினைத்தால் அவளின் நினைவாகவே மாறிவிடுவான். அதை எந்தச் சக்தியாலும் தடை செய்ய முடியாது. அவ்வேளையில் உயிர்ப்பு நடுநாடி வழியாகச் செல்லாது. அதனால் தியானம். அகத்தவம் என்பவை நினைவில் வராது. ஓர் ஆடவன் தனது மனைவியுடன் கூடி இன்பம் அனுபவித்தபின் அவளின் நினைவு வராது. வந்தாலும் பாவமில்லை. ஆனால் மனதை மயக்கத்திசை திருப்பும்

பெண்களுடன் கூடினால் அந்த நினைவே எந்நேரம் வந்து அவனது நாளாந்தக் கடமைகளைக்குழப்பும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**807. கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து**

**மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்**

**வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்**

**தண்டொரு காலுந் தளராது அங்கமே.**

''சிவனடியார்களே, காமத்தை ஞானமாகக் காணும் இயல்பு சைவ சமயத்திற்குரியது. சலந்திரத்தால் ஒடுக்கப்பட்ட கழுத்தை உடைய ஆடவானும் அவ்வாறு ஒடுக்கப்பட்ட கழுத்தையுடைய பெண்ணும் காதலித்துப் பயிலும் பரியங்க யோகப் பயிற்சியால் ஞாயிறு, திங்கள் மண்டிலங்களாகிய முறையே மிடற்றினிடத்தும் உச்சியினிடத்தும் உயிர்ப்பினைச் செலுத்தி உரிதாக்கிக் கொண்டால் இடமூக்கும் வலமூக்கும் ஆகிய வண்டியை மேற்கொண்டு மேலான தன்மை வாய்ந்த ஓசை ஒளி என்றும் நாத விந்துக்கள் திரண்டு உருண்டு வருமாறு செய்வர். அப்படிச் செய்தால் முள்ளம் தண்டு பாதிப்படைய மாட்டாது. அதனால் உடலுக்கு அழிவில்லை.''

''சிவனடியார்களே, சைவசமயம் காமத்தை ஞானமாக்கும் வழிமுறைகளை எடுத்துச் சொல்கிறது. ஆணும் பெண்ணும் இணைந்து கூடி மகிழ்வது ஓர் உயிரைப் படைப்பதற்காக. அவ்வுயிர் சமூகத்திற்கு உதவுவதாகவும் ஒழுக்கமுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகவே காமத்தை ஞானமாக்கியது. ஓர் ஆடவனும் பெண்ணும் திருமணமாகு முன் யோகப் பயிற்சியை மேற்கொள்ளல் வேண்டும். உயிர்ப்பான பிராண வாயுவை மிடற்றிலும் உச்சியிலும் செலுத்தவேண்டும். இடது மூக்கையும் வலது மூக்கையும் சமன் செய்து ஓசை ஒளி என்றும் நாதவிந்துக்களைத் திரண்டு வருமாறு செய்யவேண்டும். இது உடலுக்குப் பாதுகாப்பையும் உள்ளத்திற்கு அளவிட முடியாத இன்பத்தையும் கொடுத்து எதிர்காலத்தில் சமூகத்திற்குத் தேவையான நற்பிரசைகளை உருவாக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**808. அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவம்**

**அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்**

**பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்**

**தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.**

''சிவனடியார்களே, அங்கப்புணர்ச்சியாகிய பரியங்க யோகப் பயிற்சியால் உடம்பின் கண் அழிவடையாது தங்கும் நாதவிந்துக்கள், விந்து நினைவு உணர்வால் கீழ் நோக்கிச் சென்று வீணாகாமல் மேல்நோக்கிச் செல்லச் செய்து நெற்றியின் நடுவில் தங்கச் செய்தல் வேண்டும். அப்படி அமைத்தவர்கள் ஐம்பொறிகளையும் ஒரு நிலைப்படுத்துபவராவர்''.

“சிவனடியார்களே, ஐம்புலன்களையும் அடக்கி ஒரு நிலைப்படுத்தியவர்களின் விந்து கீழ் நோக்கிச் சென்றால் அழகான ஒரு பெண்ணைக் கண்டதும் உணர்ச்சி மேலீட்டால் ஒழுகிவிடும். யோகப் பயிற்சியின் மூலம் விந்தை மேல் நோக்கி எழச் செய்து அதை புருவ நடுவில் நிறுத்தினால் மேல்நோக்கிச் சென்ற விந்தால் சொல்லில் வடிக்க முடியாதளவு இன்பம் ஏற்படும். ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வருவதால் அவர்களது மனம் ஒரு நிலைப்படாது அல்லற்படும். அவற்றைக் குரு கேட்டு அதற்குத் தீர்வு சொல்வார். சிவனாந்தன் இளைஞன். இருபத்திநான்கு வயதுடையவன். திருமணமாகி ஒருமாதம் கூடக் கழியாதவன். அவனது மனைவி அவனுடன் தினமும் பலமுறை பிரச்சினைப்படுவாள். அதை அவளது பெற்றோரும் சகோதரர்களும் தீர்க்க முயன்று தோல்விகண்டனர். அவள் தனக்குச் சிவானந்தனை வேண்டாம் என்றாள். அவளது தயார் அவளை மருட்டி உள்ளவிடயத்தை அறிந்து தனது கணவனிடம் சொன்னாள். கணவன் தினமும் ஆச்சிரமத்திற்கு வருபவர். அவர் தனது மகளின் பிரச்சினையைக் குருவுக்குச் சொல்லக்குரு சிவானந்தனை அழைத்துச் சொன்னார், “மகனே, வாழ்க்கையைத் திருப்திப் படுத்தி முழுமையாக்குவது காமம். அது ஞானமமாகும். ஞானமான காமத்தை ஞானமுறைப்படி அனுபவிக்கவேண்டும். அதற்கு மூச்சுப்பயிற்சி செய்தல் வேண்டும். உனது விந்து விதைப்பையில் சேகர்க்கப்படுவதால் உணர்ச்சி வசப்பட்டதும் ஒழுகி விடுகிறது. இது வாழ்க்கையை அழிந்து விடும். யோகப் பயிற்சி மூலம் கீழ்நோக்கி வரும் விந்தை மேல்நோக்கிச் செல்லச் செய்து அதைப் புருவநடுவில் சேமித்தால் இல்வாழ்வு சிறக்கும். விந்து உணர்ச்சிவசப்பட்டுவதால் வெளிப்படாது. உரிய காலம் வரை தங்கி வெளிப்படும் போது பெரும் இன்பத்தைத் தரும். அதனால் உனது மனைவி என்றும் இல்லாது மகிழ்வாள். என்று சொன்னார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**809. தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்**

**தலைவனு மாயிடுந் தன்வழி போகந்**

**தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே**

**தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே.**

“சிவனடியார்களே, ஒருமைப் பயிற்சியால் புலன்களை அடக்கலாம். அடக்கியவர் புலன்களுக்கும் நுண் உடலுக்கும் தலைவராவர். அதன்பின் ஐம்புலன்களும் நுண்ணுடலும் அவரின் விருப்பப்படி இயங்கும். அதனால் போகமான உறவும் அவரின் நினைவுப்படி நடைபெறும். அத்துடன் மெஞ்ஞானமும் உண்டாகும்.”

“சிவனடியார்களே, குரு சிவனாந்தனுக்குச் சொன்னார், “ மகனே, நாம்செய்யும் செயற்பாடுகள் அனைத்தையும் எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும். அப்படி வைத்திருந்தால் மேலதிகாரி சொல்வதைக் கேட்டு நடக்கும் ஊழியனைப் போல எமது உடலும், உடலை ஆட்டிப்படைக்கும் புலன்களும் எமது சொற்படி நடக்கும். இதற்கு ஒருமைப் பயிற்சி செய்தல் வேண்டும் மூச்சுப் பயிற்சியின் ஒரு பிரிவு தான் ஒருமைப் பயிற்சி, பற்றுக்களை, ஆசைகளை அவாக்களை அகற்றினால் மனம் ஒரு நிலைப்படும். உணர்ச்சி வசப்படாது. தேவமகளிரைப் போல அழகான பெண் முன்னே வந்து நின்றாலும் மனம் சலனப்படாது. வந்தவள் தெய்வப்பெண் என்ற நிலை உருவாகும். தனது மனைவியோடு கூடும் வேளை அவனது உணர்ச்சிகளை முழுமையாகப் புரிந்து செயற்படும் தன்மை உண்டாகும். என்று சொன்னவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**810. அஞ்சு கடிகைமேல் ஆறாங் கடிகையில்**

**துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்**

**நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது**

**பஞ்ச கடிகை பரியங்க யோகமே.**

“சிவனடியார்களே, பரியங்க யோகம் பயில்வோர் ஐந்து நாழி அளவு நேரம் பயிற்சி செய்தல் வேண்டும். அதற்கு மேலும் பயில விரும்பினால் ஆறாவது நாழிகைகளில் துணைவி துணைவனோடு கொள்ளும் புலவியால் நெஞ்சு நிறைந்து வாய் சோர்ந்து விந்து வெளியாகும். அதனால் உறவு ஐந்து நாழிகைக்கு மேல் இருக்கக்கூடாது”.

“சிவனடியார்களே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியானவர்கள். நடை உடை பாவனை யாவும் வெறுபட்டிருக்கும். ஒருமைப் பயிற்சி பெற்றவர்கள் விந்தைத்தாம் விரும்பிய நேரம் வெளியேற்றுபவர்களாவர். அப்படியான சிவனடியாரான அழகேசன் என்பவரின் மனைவி உறவை விரும்புவதில்லை. அதனால் அழகேசனுக்கும் மனைவிக்கும் ஓயாத சண்டை. அது விவாகரத்துவரை சென்றது. இதை அறிந்த குருஅழகேசனை அழைத்துச் சொன்னார். “மகனே அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். நீ உனது மனைவியுடன் ஆறு நாழிகைக்கு மேல் உறவு கொள்கிறாய். அதனால் அவளது நெஞ்சு பலவீனமடைந்து வாய் சோர்ந்து விடும். அதனால் ஐந்து நாழிகைக்கு மேல் உறவை நீடிக்காதே” என்றவர். அதன்பின் அழகேசனின் மனைவி அழகேசனோடு மகிழ்வுடன் வாழ்ந்தாள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**811. பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை**

**அரியஇவ் வியோகம் அடைந்தவர்க் கல்லது**

**சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை**

**உருவித் தழுவ ஒருவற் கொண் ணாதே.**

“சிவனடியார்களே, ஐந்து நாழிகை அளவு இப்பரியங்க யோகத்தில் ஈடுபடுபவரே திருவருளின் பேற்றைப் பெற்றவராவர். ஏனையோர்க்கு அப்பேறு கிட்டாது. திருவருளை இங்கு பெண்ணாக உருவகித்தார். சரி வளை முன்கை அகத்தவமாகிய யோகப் பயிற்சி சந்தணக் கொங்கை தவப்பயனாம் விந்து எனப்படும் ஒளிய முதுகையை உடையவள்.”

“பரியங்கயோகத்தை ஐந்து நாழிகை செய்தல் வேண்டும். அதற்குக் கூடினால் அதனால் பயன்இல்லை” என்றார் சுந்தரமூர்த்திநாயனார்.

**812. ஒண்ணாத யோகத்தை உற்றவ ராரென்னில்**

**விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்**

**பண்ணார் அமுதினைப் பஞ்ச கடிகையில்**

**எண்ணா மெனஎண்ணி இருந்தான் இருந்ததே.**

“சிவனடியார்களே, பெரியவர்களல்லாமல் ஏனையோரால் செய்யமுடியாத யோகம் இது. சீகண்ட முனிவர் தான் இவ் யோகத்தைப் பயின்று வெளிப்படுத்தியவர். இவர் நடப்பாற்றலாகிய கங்கையைத் திருச் சடையில் வைத்தவர். எதையும் எண்ணாது ஐந்து நாழிகைகள் பயின்று இருந்த படியே இருந்து இன்புற்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**813. ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்**

**வாய்ந்த சூழலிக்கு மன்னர்க்கு மானந்தம்**

**வாய்ந்த சூழலியோ டைந்து மலர்ந்திடச்**

**சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே.**

“சிவனடியார்களே, இப்பரியங்கயோகப் பயிற்சியை பெண்கள் இருபது வயதிலும், ஆண்கள் முப்பது வயதிலும் பயிலலாம். இவ்யோகம் கை வந்தவர் பெரும் பேரின்பத்தை இடையறாது அடைவர். இவர்களுடன் உடனிருக்கும் ஐம்புலன்களும் மலர எண்ணம் நிறைவேறினாலும் அதனால் விந்துக்குப் பழுதில்லை” என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**814. வெள்ளி யுருகிப் பொனவழி ஓடாமே**

**கள்ளத்தட் டானார் கரியிட்டு மூடினார்**

**கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று**

**வள்ளியுண் ணாவில் அடக்கிவைத் தாரே.**

“சிவனடியார்களே, பரியங்க யோகப் பயிற்சி கைவராத சிலர் அது கை வந்தது போல நடிப்பார்கள். அவர்கள் கள்ளத் தட்டார் எனப்பெயர் பெறுவர். அவர்களுக்கு வெள்ளியாகிய விந்து உருகி நாத வழியே ஓடும். இதனை அவர்களது மனம் நன்கு உணர்த்தும். எனினும் அவர்கள் வஞ்சனையாகக் கொண்ட அக் கொள்கை வெளிப்பட்டுக் குறிவழியே சென்று ஒழுகிவிழும். அதை அவர்கள் வெளிப்படுத்தாது தமது நாவில் அடக்கி வைப்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**815. வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்**

**சித்தங் கலங்காது செய்கின்ற ஆனந்தம்**

**பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்**

**வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே.**

“சிவனடியார்களே, பரியங்க யோகப் பயிற்சி கைவந்த இருவரும் மனம் சிறிதும் கலங்காது வாழ்கின்ற வாழ்க்கை ஏனையோர்க்கு எடுத்துக் காட்டாக அமையும். அதனால் அவர்கள் பத்துப்புலன்களில் உள்ளவர்களுக்கும் பதினெட்டுக் குழுவில் உள்ளவர்களுக்கும் உதாரணமானவர்களாகத் திகழ்வர்’’

“சிவனடியார்களே, கதிரேசனையும் அவரது மனைனவியையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பரியங்க யோகம் கைவந்த இருவரும் வாழ்கின்ற வாழ்க்கை பேரின்ப மயமானது. மற்றவர்களால் வாழ முடியாதது. ஏனென்றால் உடலில் உள்ள பஞ்ச புதங்களையும் ஒருமைப்படுத்த வேண்டும். இதைப் பற்றுக்கள் முழுதையும் துறந்தவர்களால் தான் செய்யமுடியும். திருவருளாற்றல் இருவருக்கும் இருந்தால் தான் அது கைகூடும். இவர்கள் சமூகத்திற்கு முன்மாதிரியானவர்களாவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**816. வெங்கதி ருக்குஞ் சனிக்கும் இடைநின்ற**

**நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தந்**

**தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்**

**திங்களிற் செவ்வாய் புதைந்திருந் தாரே.**

“சிவனடியார்களே, கலவன் மண்டிலப் பண்ணவனாகிய சதா சிவனுக்கும் அவரின் கீழ்நோக்கிய பகுதியில் இருக்கும் சனிக்கும் இடையே நின்ற நங்கையாகிய மனோன்மணியைக் கண்டு கலந்தவர்களுக்கு ஒப்பில்லாத பேரின்பம் உண்டாகும். தங்களுள் நாதத்திலிருந்து விந்து கீழ் நோக்கி வருமுன் திங்களாகிய மணி மண்டபத்தின் கண் அவ்விந்து செவ்வாய் ஆகிய நாதத்துடன் கலந்து அங்கு தங்கப் பயின்றோரே இந் நிலையைடைவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**817. திருந்திப் புதனைத் திருத்தல்செய் வார்க்குக்**

**கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்**

**வருத்தமு தில்லையா மங்கைபங் கற்குந்**

**துருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே**

“சிவனடியார்களே, பரியங்கயோகத்தால் உள்ளத்தைத் தூய்மை செய்து அறிவைத் திருவடியில் வைத்தவர்களுக்கு உடலில் வருத்தங்கள் ஏற்பட மாட்டாது. சிவனருளால் துருத்தி போன்ற நெற்றியின் நடுவில் திங்களின் ஒளி எழுவதால் பேரின்பம் உண்டாகும்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**818. எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்**

**மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே**

**உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்**

**விழுகின்ற திலலை வெளியறி வார்க்கே.**

“சிவனடியார்களே, மெழுகு கைத்தீயின் அருகில் கொண்டு சென்றால் அது உருகுவது போல பரியங்க யோகப் பயிற்சி இல்லாதவர்களின் உடல் அழியும். அது எல்லோராலும் விரும்பப் படுவதில்லை. அருள் ஒளியைப் பயிற்சியின் மூலம் நெஞ்சத்துள் உணர்ந்தபின் பரவெளி தோன்றும். அவர்களுக்கு உடம்பு அழிவதில்லை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**819. வெளியை அறிந்து வெளியி னடுவே**

**ஒளியை அறியி னுளிமுறி யாமே**

**தெளிவை அறிந்து செழுநந்தி யாலே**

**வெளியை அறிந்தனன் மேலறி யேனே**

“சிவனடியார்களே, பரியங்கயோகப் பயிற்சியால் பரவெளியைக் கண்டு அருளை உணருதல் வேண்டும். அப்போது அவர்களின் உள்ளம் அவ்வொளிக்கு அடிமையாகும். அதனால் திருவடி உணர்வு உண்டாகும். அப்போது நந்தியின் அருளால் பேரின்பம் உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**820. மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்**

**மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்**

**நாலா நிலத்தி னடுவான வப்பொருள்**

**மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே**

“சிவனடியார்களே, அகத்தவத்தால் சிவஉலகை அடைந்தவர்கள் யாரென்றால் திருமால், நான்முகன், நந்தியெம் பெருமான் என்பவர்களாவர். திருவருளுக்கு முதல்வனான சிவன் பேருறக்கமாகிய துரிய நிலையில் தோன்றுவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**821. மின்னிடை யாளுமின் னாளனுங் கூட்டத்துப்**

**பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து**

**தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லாரேன்**

**மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே**

“சிவனடியார்களே, மின்னிடையாளாகிய திருவருளும் மின்னலாகிய சிவபெருமானும் இணைந்து ஆயிரமிதழ்பர வெளியில் எழுந்தருளுவர். அதற்கான தவப் பயிற்சியைக் கைக்கொண்டவர் தலைவனைக் கூடியவராவர். அத்தகையோர் பல ஊழிக் காலம் வாழ்வர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**822. வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய**

**வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை**

**வீங்க வலிக்கும் விரகறி வாளரும்**

**ஓங்கிய தன்னை உதம்பணி னாரே.**

“சிவனடியார்களே, உயிர்ப்பினை இழுத்தவாகிய பூரகமும் வெளிவிடுதலாகிய இரேசகமும் உள்ளடக்கலாகிய கும்பகமும் முறையாகச் செய்யும் முறைகளை அறிவாரில்லை. அம்முறைகளை அறிந்தவர்களே உய்யும் வழியை அறிந்தவராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**823. உதமறிந் தங்கே ஒருசுழிப் பட்டாற்**

**கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்**

**இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி**

**பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே**

“சிவனடியார்களே, உய்யும் வழியறிந்தவர்களுக்குச் சிவமும் சிவையும் தோன்றுவர். அப்படித் தோன்றினால் தலைகருமையாகும். திருவருள் அம்மையாகிய சிவை எப்போதும் கலந்திருப்பாள். அத்திருவருள் நிலைக்களங்களாகிய ஆதாரங்களைக் கடந்து ஆண்டருள்வாள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**824. பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு**

**தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது**

**ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு**

**கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே.**

“சிவனடியார்களே, ஐம்பூதங்களுள் நிலமும் நீரும் இல்லாதவிடத்து இவற்றிற்கப்பால் ஒரு தாமரை உண்டு. அது தான் ஆயிரம் இதழ்த் தோற்றமுடைய திருவருள். அதற்கு அரும்பும் இல்லை. வேரும் இல்லை. ஆனால் அத்தாமரை பரவெளியில் மலர்ந்துள்ளது. அங்கு ஓர் ஊரில்லை. கீழாகிய ஆதியும் மேலாகிய அந்தமும்

இல்லாத மெய்யுணர்வுள்ள தாமரையாகும். அப்பூவில் ஒப்பில்லாத சிவஒளி உண்டு'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 20. அமுரி தாரணை...

**825. உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்**

**கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்**

**உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்**

**நடலைப் படாதுயிர் நாடலு மாமே.**

''சிவனடியார்களே, திருவருளின் துணையினால் உடலில் சிவக்குடி நீர் ஊறும். அது கடலின் அருகில்தோன்றும். சிற்றூற்றுப் போல இனிமை உடையதாக இருக்கும். அந் நீரைத் திருவடியை மறவாது நினைத்துக்கொண்டிறைத்தால் நெஞ்சம் நிரம்பி உடலுக்குக் கலக்கம் ஏற்படாது.''

''சிவனடியார்களே, எனது குரு சொல்வார் சிவனை இடையறாது வணங்கிவந்தால் அது ஊற்று நீர்போல பெருகும். கடற்கரையின் ஓரத்தில் உள்ள நன்நீர் ஊற்றுப்போல இறைக்கும். அவ்வூற்றுப் பெருகப் பெருக உடலில் உள்ள கலக்கம் நீக்கும். ஒருநாள் சுந்தரம் என்றும் நடுத்தரவயதுடைய சிவனடியார் குருவிடம் வந்து சொன்னார், ''குருவே, எனக்கு இரண்டு பெண்பிள்ளைகள் உண்டு. அவர்கள் படிக்கிறார்கள். எனக்கு ஏதாவது நடந்துவிடுமோ எனப்பயப்படுகிறேன்'' என்றார். குரு சொன்னார், ''அன்ரே, சிவனை வணங்குங்கள். அகத்தவம் செய்யுங்கள். உங்கள் உள்ளத்தில் திருவருள் என்ற தூய்மையான சிவநீர் தோன்றும். அதை சிவனது திருவடியை நோக்கித் திருப்பிப் பாய்ச்சினால் அது இனிக்கும். அதனால் உடலில் உள்ள உபாதைகள் யாவும் நீங்கும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**826. தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்**

**ஒளிதரு மோராண்டில் ஊனமொன் றில்லை.**

**வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்**

**களிதருங் காயங் கனகம தாமே.**

''சிவனடியார்களே, இன்பத்தைத் தருகின்ற அந்தக் குடிநீரைப் பருகினால் ஓர் ஆண்டுப் பயிற்சியில் சிவஒளி மேலொங்கும், உயிர்ப்பும் ஒடுங்கும். சிவசேவைக்குரிய இவ்வுடல் பொன் மேனியாகும்.

''சிவனடியார்களே, குரு சுந்தரத்திற்குச் சொன்னார், ''அடியவரே, சிவனை வணங்க வணங்கத் திருவருளின் செறிவு அதிகரிக்கும். திருவருள் அதிகரித்தால் சிவனது திருவடிகள் தோன்றும். அதனால் நீர் ஒரு வருடத்திற்கு சிவனைப் பற்றின்றித் தொழும். அத்துடன் அகத்தவத்தையும் மேற்கொள்ளும்'' என்றவர் சுந்தரம்

குருவின் சொற்படி ஒரு வருடம் அகத்தவம் செய்து சிவனைப் பூசித்தார். சிவநீர் அவரது உடலில் சுரந்து பெருகியதால் அவரது நோய்கள் குணமாயின. அவர் இப்போது எவ்விதக் கலக்கமுமின்றி வாழ்கிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**827. நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்**

**மாறும் இதற்கு மருந்தில்லை மமாந்தர்கள்**

**தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்**

**மாறும் இதற்கு மறுமயி ராமே.**

''சிவனடியார்களே, நூறு மிளகளவு சிவ நீரைப் பருகினால் உடல் பொன்நிறமாகும். இதற்கு மேல் எந்தச் சாவாமருந்தும் இல்லை. மக்கள் இதைத் தெரிந்து இச் சிவநீரை உச்சித் தொளைக்கு கொண்டு சென்றால் உடல் ஒளியுடலாக மாறும். வெண்நிறமாயிருக்கும் நரை மயிர் கருநிறமாக மாறும்''.

''சிவனடியார்களே, சுந்தரம் இப்போ இளைஞராகி விட்டார். அவரது நரைத்த தலைமயிர் கறுத்து விட்டது. உடல் பொன்னாகப் பளபளக்கிறது அவர் சொன்னார், ''குரு ஒரு நாளைக்கு ஒரு மிளகு வீதம் நூறு நாளைக்கு நூறு நாளைக்கு நூறு மிளளை உண்ண வேண்டும். மிளகை உண்டபின் அகத்தவம் செய்தல் வேண்டும் என்றவர். அதன்படி எனது பற்றுக்களை நீக்கி விட்டு எனது உடல் பூரண சுகமடைய வேண்டும் என்ற நினைவுடன் சிவனைப் பிரார்த்தித்தேன். எனது நோய்கள் யாவும் நீங்கி விட்டன என்று மகிழ்ந்தவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**828. கரையரு கேநின்ற கானல் உவரி**

**வரைவரை என்பர் மதியிலா மமமாந்தர்**

**நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு**

**நரைதிரை மாறு நமனுமங் கில்லையே.**

''சிவனடியார்களே, கொப்பூழின் கீழ்க் கரையருகே தங்கி நிற்கும் சிறுநீரை பயிற்சியினால் உப்பை அகற்றி அமிழ்தாக்கி மேலேற்ற வல்லாருக்கு நரைதிரை ஏற்படாது. யமனும் அவரிடம் வரமாட்டான்''.

''சிவனடியார்களே, சைவசமயம் பயிற்சியால் எதையும் செய்யலாமென்று கூறுகிறது. அதை அறியாதவர்கள் தான் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகிறார்கள் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**829. அள கநன்னுத லாயோ ரதிசயங்**

**களவு காயங் கலந்தஇந் நீரிலே**

**மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்**

**இளகும் மேனி இருளுங் கபாலமே.**

“சிவனடியார்களே, திருமூலர் இப்பாடலில் அழகான பெண்ணை விழித்துக் கூறுகிறார். அழகான பெண்ணே வியக்கத்தக்க புதுமையொன்றைச் சொல்கிறேன் கேள். உடம்பினுள்ளே மறைந்து விரவிய இச்சிறு நீரிலே புறத்து மருந்து முறையாக மிளகு நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகியவற்றைக் கைக்கொண்டால் உடம்பு பொலிவடையும் . தலைமயிர் கருமையாகும்’’ என்கிறார்.

“சிவனடியார்களே, மேற்சொன்ன நான்கு பொருட்களையும் அரைத்து பாலில் கலந்து தலையில் தேய்த்து நிராடுவது கற்பமுறை. எமது ஆச்சிரமத்திற்கு வந்த ஒரு கன்னிப்பொண்ணுக்கு வயது பதினெட்டு அவளது தலைமயிர் முற்றாக நரைத்திருந்தது. அவளுக்கு எனது குரு இம்முறையைச் சொல்லி தியானப் பயிற்சி செய்யுமாறு கூறினார். ஒருவருடத்துள் அவளது நரைமுற்றாக நீங்கியது’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**830. வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்**

**நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்**

**ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்**

**சோதி மருந்திது சொல்லவொண் ணாதே.**

“சிவனடியார்களே, இம்மருந்தை சிறந்த மருந்தென்றும், தெய்வ மருந்தென்றும் திருவருள் மருந்தென்றும் நந்திப்பெருமான் கூறுகிறார். உண்மையை உணர்ந்தவர்கள் இதை ஆதி மருந்தென்றும், உடலொளி விளக்கென்றும், இம்மருந்தின் பெருமையை சொல்லில் சொல்லமுடியாது என்றும் சொல்கின்றனர்.”

“சிவனடியார்களே, அம்மருந்தை பாவித்த அப்பெண் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவளைப் பெண்பார்த்து விட்டு வேண்டாம் என்று கூறிய ஒருவன் அவளை விரும்பித் திருமணம் செய்தான்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 21. சந்திரயோகம்.

**831. எய்து மதிக்கலை சூக்கத்தி லேறிய**

**எய்துவ துலம் இருவகைப் பக்கத்துள்**

**எய்துங் கலைபோல ஏறி இறங்குமாம்**

**துய்யது சூக்கத்துத் துலத்த காயமே.**

“சிவனடியார்களே, சந்திரனது தேய்தலும் வளர்த்தலுமாகிய இரு வகையான கலைகள் நுண்மையில் இருந்து பருமனாய், பருமையில் இருந்து நுண்மையாகி ஒடுங்கி மறைவதற்கும் எடுத்துக் காட்டாக இருப்பன.

மனிதர்களின் உடம்பாகும். அது நுண்மையிலிருந்து பருமனாகிப் பின் பருமனில் இருந்து நுண்மையாக ஒடுங்கும்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**832. ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்**

**ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் டிரைந்துள்**

**ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி**

**ஆகின்ற யோகி அறிந்த அறிவே.**

''சிவனடியார்களே, சந்திரனுக்கு உரிய கலைகள் பதினாறு. சூரியனுக்குரிய கலைகள் பன்னிரண்டு. தீக்குரிய கலைகள் பத்து. இவைகளை அகமுகப் பயிற்சியால் நடுநாடியின் வழியாக மேல்நோக்கிச் செலுத்துபவர்களின் உடல் அழகுடன் பொலிவுறும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**833. ஆறாக தாங்கலை ஆதித்தன் சந்திரன்**

**நாறா நலங்கினார் ஞாலங் கவர்கொளப்**

**பேறாங் கலைமுற்றும் பெருங்காலில் ஈரெட்டு**

**மாறாக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடவே.**

''சிவனடியார்களே, சூரியனுடைய பன்னிரண்டு கலைகளையும் சந்திரனின் வெளியினூகச் செலுத்துப் பயின்றவர் உலகோர் போற்றும் பேற்றினை அடைவர். உயிர்ப்பினில் இடமூக்கு, வலமூக்குக்குரிய பதினாறு கலைகளும் தீயின் கலைகளுடன் கூடிப் புறத்தில் செல்லாது நடு நாடு வழியாகச் செல்லும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**834. பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை**

**பத்தினொ டாறும் உயர்கலை பான்மதி**

**ஒத்தநல் அங்கிய தெட்டெட் டுயர்கலை**

**அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் வீரே.**

''சிவனடியார்களே, சூரியனது கலைகள் பன்னிரண்டு. சந்திரனின் கலைகள் பதினாறு. தீயின் கலைகள் அறுபத்து நான்கு. இவை மூன்றும் முறையாக விளங்குவதை ஆராய்ந்து பாருங்கள்'' என்றார் சுந்தர மூர்த்திசுவாமிகள்.

**835. எட்டெட் டனலின் கலையாகும் ஈராறுட்**

**சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை**

**கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை**

**ஒட்டப் படாஇவை ஒன்றோடொன் றாவே.**

“சிவனடியார்களே, மேற்கூறியபடி அறுபத்துநான்கு கலையுடன் கூடிய தீயும் பன்னிரண்டு கலையுடன் கூடிய சூரியனும், பதினாறு கலையுடன் கூடிய சந்திரனும் தனித்தனியே ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. இவை ஒன்றுடன் ஒன்று சேருதல் கூடாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

836. **எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டுந் தீக்கதிர்**

**சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலையெனக்**

**கட்டப் படுந்தார கைக்கதிர் நாலுள**

**கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதியே.**

“சிவனடியார்களே, மேற்கூறப்பட்ட மூவகையான தீக்கதிர்களுள் அமாவாசையன்று சந்திரனின் கதிர் ஒடுங்கியிருப்பதால் அதைச் சுட்ட சோமன் என்று கூறப்படும். அன்று சந்திரனிடத்தில் விண்மீன்கள் போலக் காணப்படும் நான்கு கதிர்கள் உள்ளன. இவை அடங்கியிருப்பன. இவை தொண்ணூற்றாறு மெய்களுடன் கலந்து நிற்கும். இவை சூரியக்கதிர்கள் 12, சந்திரக்கதிர்கள் 16, தீயின் கதிர்கள் 64, அன்றைய நாட்கதிர் 04” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**837. எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்**

**சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்**

**செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்**

**நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே.**

“சிவனடியார்களே, இக்கலைகள் யாவும் இடநாடி, வலநாடி, நடுநாடு வழியாகக் கீழ் நோக்கிச் சென்று மூலத்திற்குச் செல்லாது மேலே எழும்பி உச்சிக்குச் செல்லுமாறு செலுத்தினால் அங்ஙனம் செலுத்துபவர் நல்லோராவர். அவர்கள் சிவபெருமானின் திருவடியை அடைவார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**838. அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்**

**தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு**

**வங்கிய தாரகை யாகும் பரையொளி**

**தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே.**

“சிவனடியார்களே, தீயில் இருந்து வெளிப்படும் நுண்கதிர்கள் இரண்டும் சூரியன் சந்திரன் விண்மீன்கள் ஆகிய எல்லாவற்றிலும் கலந்து விளங்கும். திருவருள்ப் பரவெளியில் திளைத்ததும், புதிய மறைவெளி ஆதலும் ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**839. தரணி சலங்கனல் கால்தக்க வானம்**

**அரணிய பானு அருந்திங்கள் அங்கி**

**முரணிய தாரகை முன்னிய ஒன்பான்**

**பிரணவ மாகும் பெருநெறி தானே.**

“சிவனடியார்களே, நிலம், நீர், தீ, காற்று என்ற நான்குக்கும் இடம் கொடுப்பது வானமாகும். சூரியன், சூரியனிடம் ஒளி பெறும் சந்திரன், வேள்வித்தீ, விண்மீன்கள், ஆகிய ஒன்பதும் பிரணவமாகிய ஓங்காரத்தின் உள் ஒளிகளாகும். அத்துடன் அவை சிவபெருமானின் சார்புருவமுமாகும். இவற்றை மேற்கொள்வது சித்தாந்த சைவப் பெருநெறியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**840. தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்**

**தாரகை மின்னாச் சசிவளர் பக்கத்துத்**

**தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்**

**தாரகைத் தாரகை தானாஞ் சொரூபமே.**

“சிவனடியார்களே, தேய்பிறைக்காலங்களில் விண்மீன்கள் பிரகாசிக்கும். ஆனால் வளர்பிறையின் போது பிரகாசிக்காது. உலக உயிர்கள் அனைத்தும் உடலெடுக்கும் பிறப்பு விண்மீனைக் கொண்டே காணப்படுகிறது. அதனால் உலகணைத்தும் விண்மீன்களின் உருவம் என்று உருவகம் செய்வது பொருந்தும் ஒவ்வொருவரின் பிறப்பும் நாள் நட்சத்திரத்திலேயே நடை பெறுகின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**841. முற்பதி னைந்தின் முளைத்துப் பெருத்திடும்**

**பிற்பதி னைந்திற் பெருத்துச் சிறுத்திடும்**

**அப்பதி னைந்துமத் அறியவல் லார்கட்குச்**

**செப்பரி யான்கழல் சேர்தலு மாமே.**

“சிவனடியார்களே, சந்திரனது கலைகள் முதற்பதினைந்து நாட்களும் பப்படியாக வளர்ந்திடும். அடுத்த பதினைந்து நாட்களில் படிப்படியாகத் தேய்த்து மறைத்திடும். இதைப்புரிந்து கொண்டவர்கள் உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் அழிபொருட்கள் என்ற உண்மையை உணர்வார்கள். இவர்கள் சிவனது திருவடியை உணர்வர்’’

“சிவனடியார்களே, கதிரேசனது சமூகசேவைகளைக் கருத்திற்கொண்ட அரசின் சைவசமயப் பேரவையினர் கதிரேசனுக்குக் கலாபூசனம் விருதை வழங்க விரும்பினர். கதிரேசன் சொன்னார் “நான் எந்தச் சமூக சேவைகளும் செய்யவில்லை. எனது கடமைகளைச் செய்தேன். சில சேவையைச் செய்தேன். நீங்கள் வழங்கும் விருதுகள் பொருத்த மில்லாதவர்களுக்கும், உங்களோடு நெருங்கியவர்களுக்கும் வழங்கப்படுவதாகப் பலரும் கூறுவதைக் கேட்டுள்ளேன். குமாரசாமி தனக்குக் கலாபூசணம் விருது வழங்காது எந்த நூலையும் எழுதாத. கணேசமூர்த்திக்குச் செல்வாக்குக் காரணமாக வழங்கியுள்ளதாகக் கூறித்திரிகிறான். அதில் உண்மையில்லாமல் இல்லை. வழக்கம்போல அவர்களுக்கே வழங்குங்கள். எனக்குச் சிவன் வழங்குவான் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**842. அங்கிஎழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்**

**தங்குஞ் சசியால் தாமம்ஐந் தைந்தாகிப்**

**பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்**

**திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே.**

“சிவனடியார்களே, மூலத்தீயை எழுப்பி மதிமண்டலத்துடன் காணப்படும். சந்திரனது கதிர்களுடன் இணைத்தால் அது ஐந்தாக விரியும். சந்திரனது கதிர்கள் விரிந்தால் விண் மீன்கள் மடங்குவது போன்று ஐம்புலங்களும் மடங்கும். இதற்கு யோகம் என்று பெயர்’’.

“சிவனடியார்களே, ஐம்புலன்களும் அடங்கினால் சிவ நினைவைத்தவிர வேறு எதுவும் மனதில் தோன்றாது. ஐம்புலன்களும் மடங்காதவர்கள் தான் புகழையும் விருதுகளையும் தேடிச் செல்கின்றனர். விருதைப் பெறுபவர் மக்களாலும் வெளிநாட்டவராலும் மதிக்கப்படல் வேண்டும். சிலர் தமக்குத் தாமே பெயர் வைக்கிறார்கள். குமாரசாமி கோவில். திருவிழாக்களில் பேசிவிட்டு “சொல்வேந்தர்’’ என்று தனக்குத்தானே பட்டம் சூட்டியுள்ளார். அதை மக்கள் கேலிசெய்கிறார்கள். அதனால் எனக்குப் பட்டமும் வேண்டாம். புகழும் வேண்டாம். அது வரவேண்டியிருப்பின் வரும்’’ என்று கதிரேசன் சொன்னவர். அது தான் உண்மை’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**843. ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற**

**நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்**

**கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்**

**சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.**

“சிவனடியார்களே, சந்திரனின் பதினாறு கலைகளையும் உடம்பினுள்ப் புகுத்தி நிற்கின்ற ஒளி நிலை கண்டு தாழ்வானவர்கள் உண்மையை அறிகின்றவர் அல்லர். அதனால் அவர்கள் காலனின் விருப்பப்படி பிறப்பு இறப்பு என்றும் மாறாத துன்பத்தில் அகப்படுவர். அவர்கள் மயக்கத்தில் இருந்து விடுபட மாட்டார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**844. அங்கி மதிகூட வாகும் கதிரொளி**

**அங்கி கதிர்கூடவாகு மதியொளி**

**அங்கி சசிகதிர் கூடவத் தாரகை**

**தங்கி யதுவே சகலமு மாமே.**

“சிவனடியார்களே, மூலத்தீயும் சந்திரனது கதிர்களும் கலந்தால் சூரியனது கதிரொளி விளங்கும். இரண்டும் விரவிய இடத்து மதியொளி திகழும். மூலத் தீயானது திருவடி உணர்வுடன் கலப்புற்றால் விண்மீனை ஒத்த ஆவிகளின் ஒரு நிலைத் தங்கல் ஏற்படும். அந்நிலை தான் சகலதும் நிறைந்த நிலை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

845. **ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை**

**பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து**

**நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்**

**ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.**

“சிவனடியார்களே, பெண்கலைகளாகிய சந்திரனது கலைகள் பதினாறும் ஆண் கலையாகிய சூரியனது கலைகள் பன்னிரண்டும் உயிர்ப்புப் பயிற்சியால் உடலை விட்டகலாமல் உடம்பினுள்ளே மூலத்தில் அடக்குதல் வேண்டும். அப்படி அடக்கினால் நிலையான திருவடியின்பம் நிலைத்துப் பேரின்பம் உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**846. காணும் பரிதியின் காலை இடத்திட்டு**

**மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்**

**பேணியிவ் வாறு பிழையாமற் செய்விரேல்**

**ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.**

“சிவனடியார்களே, வலது மூக்காகிய சூரியனது வழியில் இயங்கும் உயிர்ப்பை இடமூக்களால் உட் செலுத்தியும், இடமூக்காகிய சந்திரனின் வழி இயங்கும் உயிர்ப்பை வலமூக்கின் வழியாக உட்செலுத்தியும் தம் பயிற்சி பெற்றால் அளவில்லாத ஆண்டுகள் உயிர பலத்துடன் அவ்வுடலில் தங்கியிருக்கும்”

“சிவனடியார்களே, வலது மூக்குச் சூரியனது ஆதிக்கத்தில் உள்ளது. இடது மூக்குச் சந்திரனது ஆதிகாலத்தில் உள்ளது. ஆரோக்கியத்துடன் நெடுங்காலம் வாழ விரும்புவர்கள் இடது பக்க மூக்கால் காற்றை உள்ளே எடுத்துப்பின் இடமூக்கின் வழியாக உள்வாங்கும் காற்றை வலது மூக்கின் வழியாக உள்வாங்குபவர்கள் தான் ஆரோக்கியமமானவர்கள் என்று குரு கூறுவார். அதைக் கதிரேசனும் நல்லைநாதனும் பல ஆண்டுகளாகச் செய்து வருகின்றனர். அவர்கள் எண்பது வயதைக் கடந்தும் ஆரோக்கியமாக உள்ளனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**847. பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்**

**ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்**

**மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்**

**காலைக்குச் சங்கு கதிரவன் தானே.**

“சிவனடியார்களே, உடம்பில் ஒன்பது தொளைகள் உள்ளன. அதன் வழியாகத் தன்மையாகிய பறையோசை கேட்கும். அங்கே தேவர்களுக்கும் மூவர்களுக்கும் மற்றும் யாவருக்கும் மேலான சிவபெருமான் இன்பக் கூத்தாடுவன். திருவடிப்பேற்றை அருளும் மெய்யுணர்வு விளக்கொளியாக விளங்கும். அதனால் காலையில் தோன்றும் சூரியஒளி சந்திரனது ஒளிபோலவும் சங்கின் நிறம் போலவும் காணப்படும்”.

“திருவடி நிழலை அடைந்த மெய்யடியார்க்குச் சூரியனது செப்பமான ஒளிக்கதிர்கள் சந்திரனது ஒளிக்கதிர்களைப் போல குளிர்மையை அளிக்கும். அவர்களின் இதயத்தில் இனிமையான பறையின் ஒளி கேட்கும். அவ் ஒலிகேட்டுச் சிவபெருமான் கூத்தாடுவார்” என்று எனது குரு சொல்வார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**848. கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்**

**பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கும்**

**அதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப**

**எதிரவ னீச னிடமது தானே.**

“சிவனடியார்களே, ஓர்உயிரின் ஆயுளை அளப்பவர்கள் சூரியனும் சந்திரனுமாவர். சிவபெருமானுக்குள் திருவருள் மழை போலப் பொழிந்து கொண்டிருக்கும். அண்டங்களுக்கு அப்பாலும் சென்று திருவருளை

அள்ளிக் கொடுக்கின்ற சிவன், சிவனடியார்களது நெஞ்சத்தை நிரப்பி நின்றருளுவான். அதனால் சிவனது இருப்பிடம் நெஞ்சாகும்.''

''சிவனடியார்களே, நல்லைநாதன் பெரும்சிவபக்தன். அத்துடன் கதிரேசனது உயிர் நண்பன். கதிரேசனின் தங்கையின் மகள் மதிவதனி தன்னுடன் வேலைசெய்யும் சிவபலனைக் காதலித்தாள். சிவபாலன் மாமிசம் உண்பலன். அதனால் கதிரேசனது குடும்பம் அவர்களோடு தொடர்பை அறுத்துக் கொண்டது. மதிவதனியைத் தான் திருமணம் செய்யக் கதிரேசன் விட மாட்டார் என்று தெரிந்து கொண்ட சிவபாலனும் மதிவதனியும் நல்லை நாதனிடம் சென்று அவரது பாதங்களைப்பற்றி அழுதவாறு தமது காதலைக் கதிரேசனுக்கு வெளிப்படுத்தி தமது திருமணத்தை முடித்து வைக்குமாறு கேட்டனர். கதிரேசனுக்கு அது பெரும் துன்பத்தைக் கொடுத்தது.. எனினும் அவர்களது வற்புறுத்தலால் பேசாமல் இருந்தார். ஒரு நாள் கதிரேசன் நல்லை நாதனை அழைத்து மதிவதனி சிவபாலனைக் காதலிப்பதாக ஊரில் பேசிக் கொள்கிறார்கள். அது உனக்குத் தெரியுமா..?'' என்று கேட்டார். நல்லை நாதன் திகைத்துப் போனார். அதை உடனே வெளிப்படுத்த அவரால் முடியவில்லை. அதனால் தடுமாறியபடி'' தெரியாது'' என்று சொன்னார். மதிவதனியும் சிவபாலனும் நல்லைநாதனைச் சந்தித்த விடயம் கதிரேசனுக்குத் தெரியும். அவராகச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தார்.. சொல்லாததால் கேட்டார். ''நல்லைநாதா, சிவனின் இருப்பிடம் அடியவர்களின் இதயமாகும். கோவில்களைவிட அடியவர்களின் உள்ளங்களைச் சிவன் விரும்புவார். பொய்சொல்பவர்களின் உள்ளங்கைகளை விட்டுச் சென்று விடுவார் என்றதும் நல்லை நாதன் பதறியபடி உண்மையைச் சொன்னார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**849. உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை**

**அந்திக்கு மந்திர மாரும் அறிகிலார்**

**அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்**

**தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே.**

''சிவனடியார்களே, மூலம் முதல் புருவநடுவரை ஆறு நிலைக்களங்கள் உள்ளன. இவ் ஆறும் படைப்புடன் காத்தல் அழித்தல் என்பன மறைப்பருளாகும். கொப்பூழின் கண்தோன்றிச் சுவாலிக்கும் ஒளிப் பிழம்பை வணங்கிவழிபடும் முறையை யாரும் அறிந்ததில்லை. அவ்வழிபடும் முறையையே தந்தைக்கு முன் மகன் பிறந்தான் என்பதனைக் குறிக்கும். வழிபாட்டுக்குரிய மறை திருவைந்தெழுத்தாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**850. ஊதியம்ஏதும் அறியார் உரைப்பினும்**

**ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்**

**ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லிரேல்**

**வேதியன் அங்கே வெளிப்படுந் தானே.**

''சிவனடியார்களே, பகலில் கண் தெரியாத கோட்டானைப் போல அறிவில்லாதவர்கள் தாங்களாகத் திருவைந்தெழுத்தை ஓதியும் அறியார். பிறர் அதை ஓதி அடைந்த பேற்றையும் அறியார். உயிர்ப்பின்

தொடக்கமும் முடிவும் உணர்ந்து அதை அடக்கும் வல்லமை பெற்றவர்களே சிவபெருமானின் பெருமைகளை அறிவர். ஐந்தெழுத்தை முறைப்படி ஓதுவோர் முன் சிவபெருமான் அப்பொழுதே எழுந்தருள்வன்''

''சிவனடியார்களே, ரவீந்திரன் ஆசிரியருடன் குமாரசாமியும் கற்பிப்பவன். இருவரும் ஒரே பாடசாலையில் கற்பிப்பவர்கள். ஆசிரியர் வகுப்புக்கு வந்தால் ''நமசிவய'' என்று ஓதியபின் காலை வணக்கத்தைக் கூறும்படி நவீந்திரன் சொன்னமையால் மாணவர்கள் 'நமசிவய' என்று சொல்லிவிட்டு வணக்கம் சொல்வார்கள். இது குமாரசாமிக்குப் பிடிப்பதில்லை. மாணவர்களுக்கு அவ்வாறு சொல்லக்கூடாது என்பார். மாணவர்கள் கேட்காவிட்டால் தண்டிப்பார். மாணவர்களுக்குச் சிவனின் நாமத்தைச் சொல்வது மிகவும் பிடிக்கும். வெளிநாட்டில் உள்ள ஒரு தனவந்தர் பாடசாலைக்கு வந்தபோது எல்லா மாணவர்களும் 'நமசிவய' என்று கூறிவிட்டு அவரை வரவேற்றதால் மிக்க மகிழ்ச்சியடைந்த அவர் சொன்னார், ''நீங்கள் அறிவுள்ளவர்கள். அதனால் தான் சிவனின் நாமத்தைச் சொல்லி வரவேற்றீர்கள். சிவனது நாமக்கதைச் சொன்னால் குறைகள் யாவும் அகலும். உங்களுக்கு கட்டிட வசதியில்லாததால் பலர் மரநிழலில் கற்கிறீர்கள். நான் அக்குறையை நீக்குகிறேன். ஒரு மாடிக்கட்டிடத்தை கட்டித்தருகிறேன்'' என்றார். அது குமாரசாமிக்குப் பிடிக்கவில்லை. அதை அவர் சக ஆசிரியர் ஒருவருக்குச் சொல்ல அவர் சொன்னார், '' படித்தும் உலகைப் புரியாதவர்களுடன் பேசிப் பயனில்லை ஊரவர் முழுப்பேரும் கடவுளை நம்பும் போது நீங்கள் கடவுளை நம்பாது மற்றவர்களைக் கெடுக்க நினைப்பது பைத்தியக்காரத்தனம் சிவனது நாமத்தை உச்சரித்தமையால்பாடசாலையில் இருந்த கட்டிடப் பற்றாக்குறை நீங்கி விட்டது. இது சிவனைப்பற்றித் தெரியாத மூடருக்கு புரியாது என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**851 பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்**

**தீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்**

**பாம்பு மதியும் பகைதீர்த துடன்கொளீஇ**

**நீங்கல் கொடானே நெடுந்தகை யானே.**

''சிவனடியார்களே முதலிடமாகிய குண்டலினி புருநடுவாகி தியமிழ'வதைத் கீழுழுத்துத் தின்ன முயலும். வெப்பம் செய்கின்ற கதிரையு அவ் குண்டலித்தீ வாட்டும். இதைத் திருவருளின் துணையால் அவ்வவ் இடத்தில் மாறுபாடு இல்லாமல் அமையும் படிபயின்றால் சிவனும் மதியும் குண்டலினியும் பகை தீர்ந்து உறவு கொண்டு வாழும் படி செய்தருள்வான்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**852. அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்**

**பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று**

**நயந்தரு பூரணை உள்ள நடத்தி**

**வியந்தரு பூரணை மேவுஞ் சசியே.**

“சிவனடியார்களே, பாம்பினால் விழுங்கப்பட்ட சந்திரன் அப்பாம்பை விட்டு விலகும் வரையும் உறக்கமின்றி இருக்கும். விட்டு விலகியதும் பூரணையாகிய நடுநாடி வழியாக உயிர்ப்பப் பயிற்சியை பயின்று புறநாட்டமின்றி இருந்து மேற்கொள்பவர்களுக்கு புருவ நடுவின்கண் விளையும் திங்கள் அமுதும் கைகூடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**853. சசியுதித் தும்அள வுந்துயி லின்றிச்**

**சசியுதித் தானேல் தனதூண் அருந்திச்**

**சசிசரிக் கின்றள வுந்துயிலாமற்**

**சசிசரிப் பின்கட் டன்றுயில் கொண்டதே.**

“சிவனடியார்களே , புருவ நாடுவில் தோன்றும் மதியமிழ்து புலனாகும் வரை உயிர்ப்புப் பயிற்சியைத் தொடருதல் வேண்டும். மதியமிழ்து புலனானதும் அதை உணர்ந்து அதை உடம்பின் எல்லாப் பகுதிகளிலும் பரவுமாறு செய்தல் வேண்டும். அவ் மதியமிழ்து எல்லா இடங்களிலும் பரவிய பின்பு புறநாட்டம் முற்றாக நீங்கி விடும் “ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**854. ஊழி பிரியா திருக்கின்ற யோகிகள்**

**நாழிகை யாக நமனை அளப்பார்கள்**

**ஊழி முதலாய் உயர்வார் உலகினில்**

**தாழவல் லார்இச் சசிவன்ன ராமே.**

“சிவனடியார்களே, தாம் வாழும் கால அளவைப் பற்றிக் கவலை கொள்ளாது இருப்பவர்கள் அகத்தவத்தினர். அகத்தவம் செய்யாதவர்களின் காலம் நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு என அளக்கப்படுகிறது. அதனால் அவர்கள் விரைவாக யமனின் முன் செல்வார்கள். அகத்தவம் செய்வோர் காலத்தை அளக்காது யமனை அளப்பார்கள். அவர்கள் தாம் விரும்பிய நேரம் தம் உடலை விட்டு உயிரை நீக்குவார்கள்”

“சிவனடியார்களே, அகத்தவம் செய்வோர் மூச்சுப் பயிற்சியால் அவர்கள் அளவாக மூச்சை எடுத்து அதிக நேரம் தம் உடலில் அதை அடக்கி வைத்திருப்பதால் அவர்களால் நீருக்குள்ளும் நிலத்துக்குள்ளும் பலமணிநேரம் தங்கியிருக்க முடியும். எனது குரு நீருக்கடியில் பலமணி நேரம் தங்கியிருப்பார். அவர் மரணத்தைப் பற்றிக் கவலைை கொள்ளமாட்டார். விரைவாகச் சிவனை அடையவேண்டும். ஆனால் நெடுநாட்கள் சிவச்சேவை செய்யவேண்டும் என்பார். எனது குருவின் குருநாதர் சிவராத்திரியன்று தான் தனது உயிர்பிரியும் என்று கூறியவர். அவர் கூறியது போல சிவராத்திரியன்று உயிரை நீத்தார். அவர் காலனுக்குச் காலன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

855. **தண்மதி பானுச் சரிபூமி யேசென்று**

**மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு**

**வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்**

**தண்மதி வீழ்வள விற்கண மினறே.**

"சிவனடியார்களே, சந்திரனும், சூரியனும் உச்சி வழியாக நிலத்தே சென்று நிலைப்பின் உலகத்தோரால் மதிக்கப்படுகின்ற இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்றும் கால நிகழ்ச்சிகளையும் ஒரே நேரத்தில் ஒரு இடத்தில் இருந்து கொண்டே கண்டு கொள்ளலாம். பௌணமியன்று மதியமிழ்தம் விளையும். விளைந்தபின் அக்குளிர்ச்சியான மதியமிழ்தம் உடல் முழுவதும் நிறைந்து பரவும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

856. **வளர்கின்ற ஆதித்தன் தன்கலை யாறுந்**

**தளர்கின்ற சந்திரன் தன்கலை யாறும்**

**மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி**

**அலர்ந்து விழுந்தமை யாரறிவாரே.**

"சிவனடியார்களே, சூரியனின் ஒளிக்கலைகள் ஆறும், சந்திரனின் தேய்பிறைக் கலைகள் ஆறும் உயிர்ப்புப்புடன் பன்னிரண்டு விரளலுவு ஓடி விரிந்து உள்ளடங்கும் தன்மையை அறிந்தவர்கள் தான் நெடுங்காலம் வாழ்வர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

857. **ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து**

**போம்வழி எங்கணும் போகாது யோகிக்குக்**

**காமுற இன்மையிற் கட்டுண்ணு மூலத்தில்**

**ஓமதி யத்துள்விட் டுரையுணர் வாலே.**

"சிவனடியார்களே, உயிருக்கு மதியமிழ்தம் கீழ் நோக்கிச் செல்லுமானால் தேய்வு பக்கம் எனக் கூறுவர். அகத்தவமுடைவர்களுக்குக் காமவேட்கை இல்லை. ஆதலால் அமிழ்தாகிய விந்து வெளியே செல்வது கட்டுப்படும். அவ்வாறு கட்டுப்படுத்த மூலத்தில் தோன்றும் ஓ மொழி மறையினை இடையறாது புருவ நடுவில் எண்ணுதல் வேண்டும். அவ்வாறு எண்ணும் போது மதியமிழ்து நடு நாடி வழியாக மேற்செல்லும்"

“சிவனடியார்களே, ரவீந்திரன் மீது பல பெண்கள் காதல் கொண்டனர். அதை அவர்களிற் சிலர் நேரடியாகவும் வெளியிட்டனர். ரவீந்திரன் யாரோடும் எதுவும் பேசுவதில்லை. சிவகாமி என்ற பெண்ணின் சகோதரனுடன் ரவீந்திரன் நட்புக்கொண்டிருந்தான் அதனால் அவன் அடிக்கடி சிவகாமியின் வீட்டுக்குச் செல்வது வழக்கம். அதைப் பயன்படுத்திச் சிவகாமி ரவீந்திரன் தன்னைக் காதலிக்கிறான் என்று ஊர்முழுவதற்கும் சொன்னாள். அதை நம்பி சிவகாமியின் தந்தை கனகசபை ரவீந்திரனிடம் வந்து தனது மகளைத் திருமணம் செய்யுமாறு கேட்டார். அதற்கு ரவீந்திரன் சொன்னார்; “தாங்கள் ஒரு சிவனடியார். குரு சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அகத்துவமுடையவர்களுக்குக் காம வேட்டை எழாது. அவர்களது அமிழ்து நடுநாடி வழியாக மேற்சென்று விடும். பின் குடும்ப உறவுக்கு அவர்கள் தகுதியானவர்கள் அல்ல என்பது உங்களக்கு தெரியாதா..? என்று கேட்டவன். கனகசபை பதில் கூறாது சென்று விட்டார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**858. வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறொடுஞ்**

**சூறுற நான்குந் தொடர்துற வேநிற்கும்**

**ஈறிலி னன்கலை யீரைந்தொ டேமதித்**

**தாறுட் கலையுள் அகலுவா வாமே.**

“சிவனடியார்களே தீயினது கலை ஆறுடனும் கீழ்ப் பகுதியில் காணும் கலை நான்கும் தொடர்பு பட்டிருக்கும். அழிவில்லாத சூரியனின் கலைபத்துடன் சந்திரனின கலை அடங்கி நிற்கும். அந்நாள் தான் விரிந்த உவா நாள் ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**859. உணர்விந்து சோணி உறவினன் வீசும்**

**புணர்விந்து வீசுங் கதிரிற் குறையில்**

**உணர்வும் உடம்பும் உவையொக்க நிற்கில்**

**உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே.**

“சிவனடியார்களே உணர்விற்கு வாயிலாக இருக்கும் ஒளி விந்து நாதத்தோடு கலக்கச் சூரியனது ஒளி மிகுந்து காணப்படும் சூரியனின் கதிர்கள் குறையுமானால் விந்து மேலே விளங்கித் தோன்றும். ஒளியாகிய உடம்பும் உணர்வும் அழவாகத் தோன்றின் அ த்தகைய யோகிக்கு உடம்பு ஒரு காலத்தும் விட்டு நீங்காது.” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**860. விடாத மனம்பவ னத்தொடு மேவி**

**நடாவு சிவசங்கின் நாதங் கொளுவிக்**

**கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு**

**படாதன இன்பம் பருகார் அமுதமே.**

“சிவனடியார்களே ஒடுங்கிய மனமும் உயிர்ப்பும் ஒன்று கூடிப் பொருந்தி என்றும் பிரிப்பின்றி இயங்கும். சிவமறையான சிவ என்னும் அருளொலி முழக்கத்தை எழுப்பினால் கட்டுப்படாத ஐம்புலன்களும் கட்டுக்குள் அடங்கும் என்றும் நிலைத்திருக்கும். திருவடியின்பம் நிறைவான இன்பம் ஆகும்.”

“ஐம்புலன்கள் ஒருபோதும் கட்டுப்படுவதில்லை. அது மனதின் போக்கில் அலைந்து திரியும். அதைக்கட்டுப்படுத்தினால் மனம் அடங்கும். மனம் அடங்கினால் சிவபெருமானது திருவருளை அள்ளித் தரும். சிவ என்னும் மந்திரத்திற்கு ஐம்புலன்களும் அடங்கும். சிவகாமி நல்ல அழகி. பார்ப்பவர்களை அசத்தும் பேரழகி பெரும் தனவந்தனின் மகள் நன்றாகப் படித்து அரச நிறுவனமொன்றில் தலைவராக இருப்பவள். ரவீந்திரனது பெற்றோரும் இனத்தவர்களும் நண்பர்களும் சிவகாமியை திருமணம் செய்தால் வசதியாக வாழாலம் என்று கூறிவற்புறுத்தினார். ரவீந்திரன் சொன்னார், “னது ஐம்புலன்களும் அடங்கி விட்டன. பணம், பொருள் அழகென்றால் என்ன என்று அவை கேட்கின்றன.” என்ற பின் யாரும் அவனை வற்புறுத்வில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**861. அமுதப் புனல்வரு மாற்றங் கரைமேற்**

**குமிழிக் குட்சுட ரைந்தையுங் கூட்டிச்**

**சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு**

**நமன்இல்லை நற்கலை நான்இல்லை தானே.**

“சிவனடியார்களே, மதியமுதப்பெருக்கு பொங்கி வரும் ஆற்றங்கரையான புருவநடுவின் மேல் தோன்றும் குமிழியகத்து அறிவு ஆற்றல் ஓசை ஒளி முறையே சிவம், சக்தி, நாதம், விந்துடன் ஆவி என்னும் சுடர் ஐந்தினையும் ஒன்றாக்கி நடுநாடி வழியாக உயிர்ப்பினைச் செலுத்தி உறுதியுடன் நிற்க வல்லவர்களுக்கு பயம் இல்லை. வாழ்வில் நலிவு இல்லை. கலை நாள் முதலியவற்றால் வரும் பாதிப்புக்களும் இல்லை. சிவ நினைவோடு இன்புற்றிருத்தலே அவர்களின் பணியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**862. உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்**

**தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்**

**தெண்ணீர் சமாதி யமர்ந்துதீ ராநலங்**

**கண்ணாற் றொடேசென்று கால்வழி மாறுமே.**

“சிவனடியார்களே, உண்ணீர் அமுதாகிய மதியமிழ்தத்தில் பொருந்திய ஊற்றினைத் திருவருளின் துணையோடு திறத்தல் வேண்டும். திறந்தபின் திருவடியாகிய தாமரையை மறவாது எண்ணுதல் வேண்டும். அந்த நிலையில் நிட்டையில் இருத்தல் வேண்டும். நிட்டையில் இருந்தால் இன்பத்தரும் திருவடியுணர்வு ஏற்படும். அதன்பின் திருவடியுணர்வின் கருத்துப்படி சென்று நிலைக்க வேண்டும். நிலைத்தால் உயிர்ப்பானது பொதுவாகச் செல்லும் வலமூக்கு, இடமூக்கு வழியை விட்டு அகன்று நடு. நாடி வழியாகச் செல்லும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**863. மாறு மதியுமா தித்தனு மாறின்றித்**

**தாறு படாமல்தண் டோடே தலைப்படில்**

**ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்**

**பாறு படாஇன்பம் பார்மிசைப் பொங்குமே.**

“சிவனடியார்களே, உடம்பினுள்க் காணப்படும் ஞாயிற்று மண்டிலம், திங்கள் மணிடிலம் ஆகிய இரண்டும் இயற்கையில் மாறுபாடு கொண்டது ஆயினும் பயிற்சியின் மூலம் மாறுபடாது பிரிவின்றி இணைந்து நடுநாடியாகிய தண்டுடன் கூடினால் உடலுக்கு அழிவில்லை. வாழும் போது அழிவில்லாத திருவடிப்பேரின்பம் அளவின்றிப் பெருகி வரும். அதற்கான வழி இதுவாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**மூன்றாம் தந்திரம் முற்றும்.**